லெவ் ஷெய்னின்

புலனாய்வாளரின் குறிப்புகள்



C 2907

லெவ் ஷெய்னின்

புலனாய்வாளரின் குறிப்புகள்



ES 11
5/8123

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

BOOK

Rs 5 P 00

மொழிபெயர்ப்பாளர்கள்: க. சுப்பிரமணியம், நா. முகம்மது செரீபு, எம்.ஏ.
திருந்திய வடிவம்: நா. முகம்மது செரீபு, எம். ஏ.
ஓவியர்: பி. இவாஷென்கோ
பதிப்பாசிரியர்: எ. கனவாலவ்

ЛЕВ ШЕЙНИН
ЗАПИСКИ СЛЕДОВАТЕЛЯ
На тамильском языке

LEV SHEININ
DIARY OF A CRIMINOLOGIST
In Tamil

இரண்டாம் திருந்திய பதிப்பு, *1988*
© தமிழ் மொழிபெயர்ப்பு, முன்னேற்றப் பதிப்பகம், *1976*
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Ш $\frac{4702010200\text{-}548}{031(01)\text{-}88}$ 334-88

ISBN 5-05-002021-2

பொருளடக்கம்

என்னைப் பற்றி ஓர் அறிமுகம் 5
இரவு நோயாளி 16
தூளையிட்ட தினார் நாணயங்கள் 27
ஓநாய்க் கூட்டம் 72
திரு. குரோவரின் உண்மைக் காதல் 119
குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல் 134
வேட்டைக் கத்தி 141

என்னைப் பற்றி ஓர் அறிமுகம்

ஓர் எழுத்தாளனை இலக்கியத்திற்கு அழைத்துச் செல்லும் பாதைகள் பற்பல. என்னுடைய பாதை புலனாய்வுத் துறையில் தொடங்கியது.

இன்று, மார்ச் 25, 1956ஆம் ஆண்டு. அந்தோ! எனது ஐம்பதாவது பிறந்தநாள். அது எல்லாம் எப்படித் தொடங்கியது என்று நினைத்துப் பார்க்கிறேன். 1923ஆம் ஆண்டு பிப்ரவரியில் பனிபடர்ந்த மாஸ்கோவை எண்ணிப் பார்க்கிறேன். அப்போது நான் ப்ரூசோவ் இலக்கியக் கல்லூரி மாணவனாகவும், காம்ஸமோல் (கம்யூனிஸ்ட் இளைஞர் சங்க) உறுப்பினனாகவும் இருந்தேன். கிராஸ்னோப்ரேஸ்னேன்ஸ்கி மாவட்ட காம்ஸமோல் குழு அலுவலகத்தில் எதோ அவசரமாக வருகை தரும்படி அழைப்பு வந்தது.

1923ஆம் ஆண்டைய மாஸ்கோவே, எனது இளமைக்கால மாஸ்கோவே, உன்னை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்! ஆம், அது விசித்திரமான காலம். ஆகவே 1923ஆம் ஆண்டைய மாஸ்கோவும் விசித்திரமானதாகவே இருந்தது.

நான் எதற்காக அத்தனை அவசரமாக அழைக்கப் பட்டேன் என்பதை ஊகிக்க முடியாதவனாய், மாவட்ட காம்ஸமோல் குழு அலுவலகத்திற்குள் குறிப்பிட்ட நேரத்தில் நுழைந்தேன். அமைப்புப் பிரிவின் தலைவன் ஓஸிப விடம் கேட்ட போது, அவன் புதிரான முறையில் முறுவலித்து, மாவட்டக் காம்ஸமோல் செயலாளன் ஸாஷா கிராம்ப் அந்த வினாவுக்கு விடையளிப்பான் என்று கூறினான்.

© தமிழ் மொழிபெயர்ப்பு, ராதுகா பதிப்பகம், 1988

மாவட்டக் குழுவின் உறுப்பினனாகிய நான் ஸாஷாவை நன்கு அறிந்திருந்தேன். ஓஸிபவும் நானும் அவனது செயலகத்திற்குள் ஒன்றாக நுழைந்தோம்.

அவனுக்கு எதிராக அமர்ந்தேன். காம்ஸமோலின் நீண்ட கால உறுப்பினர் அமைப்பு ஒன்றை பொதுக் காரியத்தில் ஈடுபடுத்துவதென்று மாஸ்கோ காம்ஸமோல் குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாக என்னிடம் கூறினான். 1919ஆம் ஆண்டு தொடக்கம் நான் காம்ஸமோல் உறுப்பினனாக இருந்ததால், அந்தப் பட்டியலில் நானும் சேர்க்கப்பட்டேன்.

''வரிவசூல் அதிகாரிகளும் குற்றப் புலனாய்வாளர்களும் நமக்கு அத்தியாவசியத் தேவை,'' என்று கிராம்ப் தொடர்ந்தான். ''நெப்காரர்களிடமிருந்து* வரிகளை வசூலிக்க வேண்டிய பொறுப்பில் வரிவசூல் அதிகாரிகள் உள்ளனர். ஆனால் நெப்காரர்கள் எல்லாவகையான தில்லுமுல்லுகளையும் செய்கிறார்கள். முடிவில் வரவு செலவுத் திட்டம் பாதிக்கப்படுகிறது. புரிகிறதா?''

''புரிகிறது. ஆனால் எனக்கு என்ன தொடர்பு?'' எனத் தயக்கத்துடன் கேட்டேன்.

''வரவு செலவுத் திட்டத்தை நாம் பாதிக்கவிடலாகாது! வரிவசூல் அதிகாரிகளை விட புலனாய்வு அதிகாரிகளே நமக்கு மிகுதியும் தேவை. மாஸ்கோ மண்டல நீதிமன்றத்தின் மூன்றில் இரண்டு பேர் கட்சி உறுப்பினர்கள் அல்லாதவர்கள் என்பது உனக்குத் தெரியுமா? அதிலும் சிலர் ஜார் காலத்தில் அதே பணியில் இருந்தவர்கள். புரட்சிக்கென்று சொந்தமாக ஷெர்லக் ஹோம்ஸ்கள் வேண்டும். புரிகிறதா?'' என்றான்.

''ஆனால், ஸாஷா, வரிவசூல் அதிகாரியாகவோ, புலனாய்வு அதிகாரியாகவோ இருக்க நான் ஒருபோதும் விரும்பியதில்லை!'' என்று எச்சரிக்கையோடு மறுத்துரைத்தேன். ''எனக்குக் கணக்கே வராது; ஷெர்லத் ஹோம்ஸைப் பொருத்த வரை, அவனைப் பற்றி எனக்கு நினை

---

* நெப் (NEP)—புதிய பொருளாதாரக் கொள்கை என்பதன் சுருக்கம். இதன்படி, தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்தவர்கள் நெப்காரர்கள் என அழைக்கப் பட்டனர். (ப-ர்.)

விருப்பதெல்லாம் அவன் சுங்கான் புகைத்ததும், பேக்கர் தெருவில் வாழ்ந்ததும், வயலின் வாசித்ததுந்தான். எதோ வகையான துப்பறியும் முறையை அவன் கண்டுபிடித்தான் என்று நினைக்கிறேன். ஆனால் அதுவன்று முக்கிய விஷயம். நான் இலக்கியக் கல்லூரியில் படித்து வருகிறேன். மேலும் எனது வாழ்க்கையை இலக்கியத்திற்கு அர்ப்பணிக்கக் கருதுகிறேன், மேலும்...''

''மேலும் நீ ஒரு முட்டாள்!'' என்று குறுக்கிட்டான் கிராம்ப். ''உனது அற்ப ஆசைகளைப் பற்றிப் புரட்சிக்கு என்ன அக்கறை? அத்துடன், ஓர் எழுத்தாளனாக வேண்டும் என நீ முடிவு செய்திருந்தால், ஒரு வரிவசூல் அதிகாரியாகவோ, குற்றப் புலனாய்வு அதிகாரியாகவோ ஆவதைக் காட்டிலும் வேறு என்ன சிறந்ததாக இருக்க முடியும்? உனக்குத் தேவையான கதைக் கருக்களும், பாத்திரங்களும், மனித நடவடிக்கைகளும் கிடைக்கும், இலக்கியத்தைக் காண்பதற்கு அதுதான் இடம், என் நண்பனே! கேள்விகள் கேட்காதே! எங்கே பணிபுரிய உனக்கு விருப்பம்: மண்டல நிதித்துறையிலா, மண்டல நீதிமன்றத்திலா?''

''ஆனால், ஸாஷா...''

''தோழர் ஷெய்னின்,'' என்றான் கிராம்ப் பனிக்கட்டி போன்ற குரலில், ''இது கட்சியின் ஆள் திரட்டல். அதைத் தீர்மானிக்க உனக்கு மாலை வரை நேரமிருக்கிறது. பிறகு திரும்பி வந்து என்னிடம் சொல். இன்று மாலை உன்னைப் பார்ப்பேன், பைரன்!''

கிராம்ப் என்னைப் 'பைரன்' என அழைத்ததற்குக் காரணம் அப்போது எனக்கு அடர்த்தியான தலை முடி இருந்தன. அதன் பிறகு, அந்தோ, அவை மறைந்து போயின.

மாஸ்கோ மண்டல நீதிமன்றத்தில் நான் புலனாய்வு அதிகாரியாக ஆனது இப்படித்தான். உண்மையில், சட்டக் கல்வி எதுவுமின்றி பதினேழு வயது இளைஞன் எப்படிப் புலனாய்வு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்க முடியும் என்று புரிந்துகொள்வது கடினமே, ஆனால் நடந்தது என்னவோ இப்படித்தான். இதெல்லாம் சோவியத் அரசின்

ஆரம்ப காலத்தில் நடந்தது. வாழ்க்கையின் நிர்பந்தம் காரணமாக மக்களுக்குப் பயிற்சியளித்து உயர் பதவிகளில் நியமிப்பது அப்போது இன்றியமையாததாக இருந்தது.

வேலையில் நியமிக்கப்பட்டது பற்றி நான் மகிழ்ச்சியின்றி இருந்தேன். என்னுடைய புதிய பணி படிப்பில் குறுக்கிடும் எனவும், எல்லாவற்றுக்கும் மேலாக எழுத்தாளனாக வேண்டும் என்ற எனது முயற்சிக்குத் தடையாக அமையும் எனவும் பயந்தேன். ஓர் எழுத்தாளனுடைய சிறந்த பள்ளி வாழ்க்கை என்பதையும், எந்தக் கல்லூரிக் கல்வியோ, இலக்கியத்தில் பட்டமோ அதனது இடத்தை எடுத்துகொள்ள முடியாது என்பதையும் அப்போது நான் புரிந்துகொள்ளவில்லை.

ஓர் எழுத்தாளனுக்கும் ஒரு புலனாய்வு அதிகாரிக்கும் இடையே பொதுவானவை அதிகம் இருக்கின்றன என்பதையும், பல்வேறு பட்ட பாத்திரங்களோடும், சிக்கல்களோடும், துன்ப நிகழ்ச்சிகளோடும் புலனாய்வாளன் இடையறாது தொடர்பு கொள்கிறான் என்பதையும் அந்நேரத்தில் நான் புரிந்துகொள்ளவில்லை. மறு நாளே தனது மேசைமீது எத்தகைய வழக்கு வந்து விழும் என்பதை எந்தப் புலனாய்வாளனாலும் முன்கூட்டிக் கூற முடியாது. எப்படிப்பட்ட வழக்காக இருந்தாலும் சரி, இந்தக் குற்றத்தின் பின் இருக்கக் கூடிய மனிதர்களே முக்கியம். சம்பந்தப்பட்ட மனிதர்களின் மனோதத்துவத்தைப் புரிந்துகொள்ளாத வரை குற்றத்தின் பின்னணியில் இருப்பதை புலனாய்வாளன் ஒருபோதும் காண முடியாது. ஒவ்வொரு குற்றவாளியின் உள்ளார்ந்த கருவறையை, சிக்கலானதும் அடிக்கடி நிகழும் ஆர்வமூட்டும் நிகழ்ச்சிக் கோவைகளை, உடன் நிகழ்வுகளை, தீயொழுக்கங்களை, கெட்ட நடத்தைகளை, தொடர்புகளை, பலவீனங்களை, உணர்வுகளை ஊடுருவிப் பார்க்காத வரையிலும் புரிந்து கொள்வதற்குக் கடமைப்பட்டதை அவனால் ஒருபோதும் அறிந்துகொள்ளவே முடியாது.

ஆகவேதான் ஒரு புலனாய்வு அதிகாரியினுடைய பணி எப்பொழுதுமே மனோதத்துவத்தையும் மனித இயல்பையும் அவனது புரிந்து கொள்ளுவதையும் சார்ந்திருக்கிறது,

ஓர் எழுத்தாளனின் வேலையுடன் பங்கு கோட்டுக் கொள்வது மாதிரி தனது பாத்திரங்களின் ஆன்மாக்களுக்குள்ளாக அவசியம் நுழைந்து, அவர்களுடைய இன்பங்களையும் துன்பங்களையும், அவர்களுடைய வெற்றிகளையும் தோல்விகளையும், அவர்களுடைய பலவீனங்களையும் தவறுகளையும் அறிந்துகொள்ள வேண்டும்.

எந்த வாய்ப்பு புலனாய்வாளனாக என்னை ஆக்கியதோ அதுவே எழுத்தாளனாகவும் எனது விதியை நிர்ணயித்தது.

கிராம்ப் கூறியது முற்றிலும் சரிதான். மாஸ்கோ புலனாய்வு அதிகாரிகளில் கட்சிச்சார்பற்ற பலரும், ஜார் ஆட்சிக் கால நிபுணர்கள் பலருங்கூட இருந்தனர். இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்களில்இவான் ஸ்நிதோவ்ஸ்கி என்பவர் ஒருவர். அறுபதாண்டுகள் நிரம்பிய உக்ரேனியர், கட்டமைந்த உடல், குறும்புத்தனமும் அன்பும் விளங்கிய முகம், மகிழ்ச்சி நிறைந்த கரிய கண்கள். எல்லாரையும் விட அதிகமாக இவர் என்னைக் கவர்ந்துவிட்டார். நீதிமன்றத்தின் புலனாய்வு அதிகாரியாக முப்பதாண்டுகள் பணியாற்றியவர். புரட்சிக்கு முன் மாஸ்கோ நீதிக் குழுவில் பெரிய பெரிய வழக்குகளை விசாரணை செய்தவர். அவருடன் வேலை செய்த பல அதிகாரிகள் புரட்சிக்குப் பின் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். அவரோ, எங்கும் போகவில்லை. பிரபுவம்சத்தினர் ஆயினும் புரட்சியின் இலட்சியங்களை உறுதியாக நம்பி அவற்றை ஏற்றுக்கொண்டுவிட்டார். புலனாய்வுத் துறையில் பெரிய நிபுணர் அவர். தான் வாழ்நாள் முழுதும் நடத்தி வந்த தொழிலில் அவருக்கு மிகுந்த உற்சாகம். தமது இளந் தோழர்களுக்கு உதவுவதில் அவருக்குப் பெருத்த ஆர்வம், அவர்களோ, முன்னர் தொழிற்சாலை அல்லது கட்சியில் வேலை பார்த்தவர்கள்.

மண்டல நீதிமன்றத்தில் புலனாய்வு அதிகாரியாக நியமிக்கப் பெற்றபிறகு, ஸ்நிதோவ்ஸ்கியிடமும் மினாய்லாஸ்கின் என்ற மற்றோர் அதிகாரியிடமும் நான் வேலை பழகுவதென்று ஏற்பாடாயிற்று.

புரட்சிக்குச் சிறிது காலத்துக்குப் பின், அதாவது

1918இல் மாணவராயிருந்தபோதே புலனாய்வு அதிகாரியாக வேலை தொடங்கியவர் லாஸ்கின். அப்போது அவர் புரட்சி டிரிப்யூனல் ஒன்றில் நியமிக்கப்பட்டார். கட்டையான தோற்றமும், சுறுசுறுப்பும், புத்தி நுட்பமும் உடையவர். தமது தொழிலில் அவருக்கும் அளவுக்கு மீறிய ஈடுபாடு. மாஸ்கோ மண்டல நீதிமன்றத்தின் புலனாய்வு அதிகாரிகளில் மிகச் சிறந்த ஒருவராக அவர் விளங்கினார்.

சான்றிதழ் வழங்கும் கமிஷனுடைய தேர்வில் வெற்றி பெற்றதும், ஓரேகவோ-ஸுயெவோவிற்கு மக்களுடைய புலனாய்வாளனாக அனுப்பப்பட்டேன். இந்த மாஸ்கோ மண்டல நகரில் ஆறு மாதங்களைச் செலவிட்டு, எனது முதலாவது வழக்குகளை ஆராய்ந்தேன்: குதிரைத் திருட்டு, கூட்டுறவு சங்கத்தில் கையாடல், நிறைவேறாக் காதலால் ஏற்பட்ட தற்கொலை, கிராமத் திருமணத்தில் நடந்த கொலை ஆகியன. ஸ்நிதோவ்ஸ்கியும் லாஸ்கினும் கற்றுத்தந்த புலனாய்வாளனுடைய 'பத்துக் கட்டளைகளை' மனப்பூர்வமாகத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தேன். தஸ்தயேவ்ஸ்கி ஒரு முறை அந்தளவு உண்மையாகச் சொன்னது போல, நூறு முயல்களைச் சேர்த்தாலும் ஒரு குதிரையைக் கட்ட முடியாது. அது போலச் சிறியதும் தொடர்பற்றதுமான நூறு சாட்சியங்கள் சேர்ந்தாலும் அவை குற்றவாளியினுடைய தவற்றை மறுக்கும் எதிர்த்துவாதாட முடியாத நிரூபணம் ஆகாது.

ஆறு மாதங்களுக்குப் பிறகு எதிர்பாரா விதமாய் நான் மாஸ்கோவிற்கு மாற்றப்பட்டு, மண்டல நீதிமன்றத்தின் புலனாய்வுத் துறையில் திரும்பவும் நியமிக்கப்பட்டேன். சில நாள்களுக்குப் பிறகு என்னுடைய முதலாவது தவற்றை இழைத்தேன். அது எனக்கு மிகுந்த கவலையையும் வேதனையையும் ஏற்படுத்தியது. அது நகை வியாபாரி விஸோத்ஸ்கி வழக்குடன் தொடர்பானது.

அது 1924ஆம் ஆண்டின் இளவேனிற் காலம். அந்நேரத்தில் விஸோத்ஸ்கியின் வழக்கை ஸ்நிதோவ்ஸ்கி நடத்திக் கொண்டுவந்தார். அயல்நாட்டு நிறுவனத்திற்காக நகை வணிகன் விஸோத்ஸ்கி வைரங்களை வாங்கி நாட்டின் எல்லைக்கு அப்பால் கடத்த உதவினான். முடி

வில் அவனைக் கைது செய்யத் தீர்மானிப்பதற்கும்போதிய சான்று சேர்ந்து விட்டது. எனவே விலோத்ஸ்கியை வர வழைத்து, குறுக்கு விசாரணை செய்து, கைது உத்தர வைப் படித்துக் காட்டி, அவனைச் சிறைக்கு அனுப்பிவைக் குமாறு ஸ்நிதோவ்ஸ்கி என்னிடம் கூறினார்.

குறுக்கு விசாரணையைத் தொடங்கினேன். உயர்ந்த சமூகப் பாங்கு எனத் தான் கருதியதில் அந்த நகை வியா பாரி விருப்பங் கொண்டிருந்தான். அலங்காரச் சொற் றொடர்களால் இரண்டு மணிநேரம் பேசி எனக்கு அலுப் பூட்டினான்.

குறுக்கு விசாரணையை முடித்துக் கொண்டு, குற்றச் சட்டத் தொகுப்பின் 145ஆவது விதிப்படி, அவனைக் கைது செய்யப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைப் பத்திரத் தை அவனிடம் படித்துக் காட்டினேன். பின்னர் அவனது மறுப்புரைகளைப் பொறுமையுடன் கேட்டேன். தான் ''ஒரேயடியாகத் திடுக்கிட்டுப்'' போனதாகவும், ''முற் றிலும் பிரமித்துப்'' போனதாகவும் கூறினான்.

இருப்பினும், தான் கைதாவதை அப்படியாவது தவிர்த்துவிடலாம் என்ற நம்பிக்கையில் அநுபவமும் சாமர்த்தியமும் வாய்ந்த இந்தப் போக்கிரி மிகவும் அமைதியாக இருந்தான்.

தனது கைதுக்கான ஆணைப் பத்திரத்தைப் படித்த தற்கான காகிதத்தில் விலோத்ஸ்கி கையெழுத்திட்டான்; பிறகு அவ்வழக்குத் தொடர்பான ஆவணங்களை இரும் புப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டிவிட்டு, காவல்காரர் களையும் சிறைக்காரையும் வரவழைக்கச் சொல்வதற் காக நிர்வாகச் செயலாளனிடம் சென்றேன். செயலாள னுடைய அறைக்குள்ளாக நான் நுழைந்த போது, பல கணிக் குறட்டில் அவன் நின்று கொண்டிருப்பதைக் கண் டேன். அறைக்குள்ளாக ஓர் எலி குடுகுடுவென ஓடிக் கொண்டிருந்தது. நானே எலிகளை வெறுக்கக்கூடியவன், ஆனால் அவனது அலறல்கள் என்னைச் சிரிக்க வைக்கவே தேறுதல் கூறத் தொடங்கினேன். ஒரு பொந்துக்குள்ளாக எலி நுழைகின்ற வரை அவன் கீழே இறங்கவில்லை. பிறகு என்ன செய்யப்பட வேண்டும் என்பது குறித்து அவ னிடம் சொல்வதில் நீண்ட நேரத்தைச் செலவிட்டேன்.

என்னுடைய செயலகத்திற்கு நான் திரும்பிய போது

விஸோத்ஸ்கியையும், எனது புதிய கலோஷ்களையும்* காணவில்லை என்றது போது எனக்கு எத்தகைய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்...

எனது மேசையின் மீது கீழ்வரும் குறிப்பை விட்டுச் சென்றிருந்தான்.

> ''அன்புள்ள ஐயா, என் போன்ற நன்னடத்தை கொண்ட ஒருவன் உங்களுடைய கலோஷ்களைத் திருட முடியும் என நீங்கள் நினைக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். வெளியே ஒரே ஈரமாக இருப்பதால், அவற்றை நான் வெறுமனே இரவலாகப் பெற்றுக்கொண்டேன். ஏனென்றால் உங்கள் தயவால் நான் நீண்ட பயணம் செய்தாக வேண்டும்.
>
> இனிய வாழ்த்துகள்!
>
> **விஸோத்ஸ்கி.''**

திடுக்கிட்டு, ஸ்நிதோவ்ஸ்கியிடம் ஓடினேன்.

குறிப்பை மேலோட்டமாகப் பார்த்தவுடனே, ஸ்நிதோவ்ஸ்கி தொலைபேசியை எடுத்து மூரை** அழைத்தார். அவர் விஸோத்ஸ்கியினுடைய ஆசைநாயகியின் பெயரைக் கண்டுபிடித்து வைத்திருந்தார், நகை வியாபாரிக்கு இது பற்றி ஏதுவும் தெரியாது. அவளுடைய குடியிருப்பின் மீது ஒரு கண் வைத்திருக்குமாறு ஸ்நிதோவ்ஸ்கி மூரிடம் கேட்டுக்கொண்டார். மணமானவனான விஸோத்ஸ்கி தனது ஆசைநாயகியின் இருப்பிடத்தை ரகசியமாக வைத்துக்கொள்ள மிகவும் சிரமப்பட்டான். மாஸ்கோவை விட்டு வெளியேறு முன் தனது இனியவளிடம் விடைபெற்றுக் கொள்ள அவன் அவசியம் வருவான் என்பதை அவர் மிகச் சரியாக ஊகித்தார்.

பிறகு ஸ்நிதோவ்ஸ்கி என்னிடம் பேசினார்:

''நல்லது, லெவ், அந்தக் கயவன் கைது செய்யப்படுவான் என்பது நிச்சயம். ஆனால் உன்னுடைய கலோஷ்

---

* **கலோஷ்கள்**—காலணிகளுக்கான ரப்பர் மேலுறை. (மொ-ர்.)

** மூர்—மாஸ்கோ புலனாய்வுத்துறைப் பிரிவு.

களுடன் வந்த இந்தத் துயரமான அனுபவம் உனக்கு ஒரு பாடமாக இருந்து, ஒரு புலனாய்வாளன் எப்போதுமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதைக் கற்பிக்கும் என நினைக்கிறேன்.''

மாலையில் மூர் முகவர்கள் விலோத்ஸ்கியைக் கூட்டி வரும் வரை பகல் முழுக்க நான் நிலைகுலைந்துபோனேன்.

இவ்வாறு, எனது வாழ்வில் இருபத்தேழு ஆண்டு காலத்தைக் குற்ற வழக்குகளை விசாரிப்பதில் செலவிட்டேன். இயல்பாகவே, இதனது தாக்கம் நான் எழுத எடுத்துக்கொண்ட விஷயத்தைத் தீர்மானிக்கும் அமிசமாகத் திகழ்ந்தது. **கிரீல் லவ்ரினேன்கோவின் வரலாறு** என்ற எனது முதலாவது கதை 'நீதிமன்ற விசாரணைத் தொடர்' என்ற இதழில் வெளிவந்தது.

புலனாய்வாளரின் குறிப்புகள் என்று பின்னாளில் பெயர் பெற்ற கதைகளில் முதலாவது இது. இவை 'பிராவ்தா', 'இஸ்வேஸ்தியா' போன்ற பல இதழ்களில் வெளிவந்தன. புத்தக வடிவில் இத்தொகுதி 1938இல் வெளியிடப்பட்டது.

வெளியிடுவதற்காக இந்நூலைத் தயாரித்த போது, பழைய கதைகளில் பலவற்றைத் திரும்ப எழுத வேண்டும் என்ற எண்ணம் முதலில் உதித்தது; பிறகு அவற்றை உள்ளபடியே விட்டுவிட வேண்டும் என்ற ஓர் அழுத்தமான உள்ளுணர்வு எழுந்தது.

சுருக்கமாகச் சொன்னால், எல்லாக் கதைகளையும் அவை முதலில் எழுதப்பட்ட வடிவத்திலேயே வைத்திருக்கிறேன். ஒவ்வொன்றுக்கும் தேதியைக் குறிப்பிட்டும், பாத்திரங்களின் பெயர்களை மாற்றியும் இருக்கிறேன். ஏனெனில் உண்மையான வாழ்க்கையில் அவர்கள் தங்களுடைய தண்டனைக் காலத்தை முடித்துவிட்டு நேர்மையான குடிமக்களாய் வாழ்ந்துவருகின்றனர். அவர்கள் நன்றாக இருக்க வேண்டுமென்று நானும் நெஞ்சார வாழ்த்துகிறேன். ஆகவே கடந்த காலத்தைச் சேர்ந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து அவர்களது வாழ்க்கையை இருள்மயமாக்க விரும்பவில்லை, அவை அப்படியே போகட்டும்.

புலனாய்வு அதிகாரியாக பல்லாண்டுகள் இருந்ததில்,

ஒருவன் குற்றவாளியாக இருந்தாலுங்கூட, அவனது உயர்ந்த தன்மைகளைத் தூண்டிவிடுவதன் மூலம் ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொள்வதற்கேற்ற மன உறவை அநேகமாக ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பதை அறிந்துகொண்டேன். பல ஆண்டுகள் நான் ஆழ்ந்து கவனித்ததன் விளைவாக இந்த மன உறவுக் கொள்கை பிறந்தது. 'பரிமாற்ற நம்பிக்கை முறை' என இதை அழைத்தேன். தெளிவாகச் சொன்னால், இது ஒரே நாளில் கண்டுபிடிக்கப்பட்டதோ, எனது சொந்த அநுபவமோ அன்று, என்னுடன் பணியாற்றிய பலரது அநுபவங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

'பரிமாற்ற நம்பிக்கை முறை'யை விரிந்த அளவிற்குச் செயல்படுத்த முடியும் எனவும் அது மிகத் தீவிரமான கல்வி அமைப்பு எனவும் உறுதியாக நம்புகிறேன்.

பிரபலமான ருஷ்யக் குற்றவியல் நிபுணரான அகடமிஷியன் அ.பி. கோனி, தஸ்தயேவ்ஸ்கியைப் பற்றிய தமது நூலில், அவரது குற்றமும் தண்டனையும் என்ற நாவலைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''இந்த நாவலில் அவர் படைத்துள்ள பாத்திரங்கள், அவர்களுடைய கலைக்குரிய தாக்கத்தால் என்றைக்கும் உயிர் வாழ்வர். மிகமிகக் கரடுமுரடான, மிகமிக வறண்ட, மிகமிக அருவருப்பான வெளித்தோற்றத்திற்கு உள்ளேயும் 'உயிர்த் துடிப்புள்ள ஆன்மா'வை கண்டுபிடிக்க முடியும். அதனுள்ளே சில போது சுடர்விட்டு எரிவதுமான நல்லிணக்கம் என்னும் தழலைப் பரிவுடன் வெளிக்காட்டுவதற்கும் உயரிய ஆற்றல் வேண்டும்...''

அகடமிஷியன் கோனியின் குறிப்பிடத்தக்க இச்சொற்கள் நமது காலத்தில், நமது சோஷலிச சமூகத்தில் சிறப்பான அருத்தத்தைப் பெற்றிருக்கின்றன.

எதிர்ப்புரட்சிக்கு எதிரான போராட்டத்தின் கடுமையான ஆண்டுகளில் கூட, பெ.ஏ. த்ஸெர்ஷீன்ஸ்கி முதலாவது குழந்தைகள் மன்றங்களும், தொழிற்குடியிருப்புகளும், அநாதைக் குழந்தைகளுக்கான விடுதிகளும் நிறுவி, தண்டனை நிலையங்களில் வேலை மூலம் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் முறையை ஏற்படுத்தினர். இதற்கான நேரமும் விருப்பமும் அவருக்கிருந்தன.

சமூகவியல், உளவியல் தொடர்பான இந்தப் பெரும்

பிரச்சினைகளால் தூண்டப் பெற்றே அ. மக்காரென்கோ எழுதியவை போன்ற தலைசிறந்த சோவியத் நூல்கள் உருவாயின. இந்நூல்கள் உலகத்தையே கலக்கியுள்ளன என்றும், பூர்ஷ்வா இலக்கிய விமரிசகர்கள், கல்வியாளர்கள், குற்றவியல் நிபுணர்கள் ஆகியோரிடையே கூட மதிப்பும், ஆர்வமும், பெருஞ் சிறப்பும் பெற்றுள்ளன எனக் கூறின் மிகையாகாது. இந்த முறையின் வாயிலாக முன்னாளைய குற்றவாளிகளுக்கு, குறிப்பாக பிள்ளைப்பருவக் குற்றவாளிகளுக்கு திருத்தக் கல்வியளிப்பதன் பயனாகக் கிடைத்துள்ள மேலான விளைவுகள் குறித்து ம. கோர்க்கி அடிக்கடி வியந்தும் பாராட்டியும் எழுதியுள்ளார்.

நான் புலனாய்வாளனாக வேலை பார்த்துவந்த கடந்த ஆண்டுகளை மதிப்பிடுகையில், என் உள்ளத்தே நன்றி பொங்குகிறது. ஏனெனில் எனது கதைக் கருக்கள், சூழ் நிலைகள், பாத்திரங்கள், கதைத் திட்டங்கள் இப்படிப் பல இந்தக் காலங்களில் உருவானவையே.

இக்குறிப்புகள் குற்றவாளி மீண்டும் நல்லவனாக வாழ வழிகோலுமானால், இவற்றைப் படிப்பவர்கள் எனது நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்வார்களானால், சிரமமாயினும் மனநிறைவு தருவதான எழுத்துத் துறையில் நான் இறங்கியது வீணன்று என அறிந்து மகிழ்வேன்.

இரவு நோயாளி

1928ஆம் ஆண்டுக் கோடைக்காலத்தில் ரொட்டிக் கடைகளின் கொள்ளை லெனின்கிராடில் ஆரம்பமானது. ஒருவிதத்தில் அது தொடர்ச்சியாகச் செய்யப்பட்டது—ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு—வழக்கம் மீறிய துடுக்குத்தனத்துக்கும் அதுபோன்ற நுணுக்கங்களுக்கும் அது குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

கடை சாத்துவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னால், அதாவது இரவு பதினொரு மணியளவில், ஆயுதந்தரித்த மூன்று இளைஞர்கள் ரொட்டிக் கடைக்குள்ளாக நுழைவார்கள். அவர்களுக்குப் பின்னே கதவைச் சாத்திவிட்டு, அவர்களுடைய தலைவன் கட்டளையிடுவான்:

''தரையில் படுங்க, சீக்கிரம்! மக்களே, தயவுசெய்து விரைவாக...''

விற்பனைக்காரிகள், காசாளர் மற்றும் பிந்திய வாடிக்கையாளர்கள் ஒருவகையில் ஒழுங்கு செய்யப்பட்ட முறையில் உத்தரவை நிறைவேற்றுவார்கள்.

பிறகு கொள்ளைக்காரர்கள் கல்லாப்பெட்டியைச் சூறையாடி, எல்லாப் பணத்தையும் எடுத்துக்கொண்டு, கீழ்வரும் குறிப்பை விட்டு விட்டுச் சென்றுவிடுவார்கள்.

> ''ரசீது. கல்லாப்பெட்டியிலிருந்து குறிப்பிட்ட அளவு வங்கித்தாள்கள் கடன்வாங்கப்பட்டன. சரியான தொகை எண்ணிய பிறகு காசாளரால் அறிவிக்கப்படும்.''

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க குற்றவியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எந்தப் பய

© தமிழ் மொழிபெயர்ப்பு, ராதுகா பதிப்பகம், 1988

னையும் அளிக்கவில்லை. ரொட்டிக் கடைகளின் கொள்ளை தொடர்ந்தது.

ஆகையால் நகரத்தின் எல்லா ரொட்டிக் கடைகளிலும் பதுங்கிப் பாய்வோரை ஏற்பாடு செய்வதென முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி விற்பனையாளர்கள் போல மாறுவேடமணிந்த குற்றவியல் பிரிவு முகவர்கள் அங்கே பணியில் இருப்பார்கள்.

இவ்வாறு செய்யப்பட்டது, ஒரு குறிப்பிட்ட நாளில் வெண்ணிற முழு உடையில் இளைஞர்கள், உண்மையான விற்பனைக்காரர்களுக்கும், விற்பனைக்காரிகளுக்கும் அடுத்து கவுண்டருக்குப் பின்னே ரொட்டி விற்பனை செய்துகொண்டு நகரத்தின் எல்லா ரொட்டிக் கடைகளிலும் நிற்பதைக் காண முடியும்.

அன்றைய நாளில் கொள்ளையர்கள் வரவில்லை. ஆகவே மறுநாளுக்கும் பதுங்கிப்பாய்வோரை வைத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

சரியாக மணி பதினொன்றாகப் பத்து நிமிடங்கள் இருக்கும் போது, பஸ்லெய்னயா மற்றும் ஸினாமென்ஸ்கயா தெருக்களின் முனையில் இருந்த ரொட்டிக் கடையின் கதவானது தடாலென்று தட்டப்பட்டு, கைத்துப்பாக்கிகள் ஏந்திய மூன்று இளைஞர்கள் கடைக்குள் நுழைந்தார்கள்.

''கைகளை உயர்த்துங்க!'' அவர்களில் ஒருவன் கட்டளையிட்டான். ''தரையில் படுங்க, சீக்கிரம்!..''

''நீங்க எல்லாரும் கைகளை உயர்த்துங்க!'' என்று 'விற்பனையாளர்கள்' பதிலளித்து, துப்பாக்கிகளையும் எடுத்தார்கள். ''கைகளை உயர்த்துங்க அல்லது நாங்க சுடத் தொடங்குவோம்!..''

இந்நேரத்தில் தாமதமாக வந்த இரு வாடிக்கையாளர்களே —வயதான இரண்டு தடித்த பெண்கள்—ரொட்டிக் கடையில் இருந்தனர்.

நடுக்குற்ற பெண்களைப் பற்றிப்பிடித்து, அத்தகைய ஒரு சூழ்நிலையில் குற்றவியல் பிரிவின் முகவர்கள் சுடமாட்டார்கள் என்பதை அறிந்து, கொள்ளையர்கள் அவர்களைத் தங்களுக்கு முன்னால் மறைப்புப் போல வைத்துக் கொண்டனர். ஊமையாகிப் போன பெண்களின் பின்னிருந்து அவர்களே கவுண்டரை நோக்கிச் சுடத் தொடங்கி

னார்கள். முகவர்களில் ஒருவன், கவுண்டருக்கு மேலாகத் தாவி அவர்களை நோக்கி ஓடினான். ஆனால் உடனடியாக நேருக்கு நேராக அவன் சுட்டுக் கொல்லப்பட்டான். கொள்ளையர்களில் ஒருவன் ரொட்டிக் கடையில் தொங்கிக் கொண்டிருந்த சரவிளக்குச் சட்டத்தை நோக்கிச் சுட ஆரம்பித்தான். மின் விளக்குகள் ஒன்றன் பின் ஒன்றாக வெடிக்கத் தொடங்கின. இருளாகிப் போனது. இந்த இருட்டில் கொள்ளையர்கள் ரொட்டிக் கடையை விட்டு வெளியே ஓடினார்கள்.

முகவர்கள் அவர்களை நோக்கிச் சுட்டார்கள். ஒரு கொள்ளையன் தனது கையில் குண்டடி பட்டான்—கைத் துப்பாக்கியைக் கீழே போட்டு விட்டு, காயமுற்ற மணிக் கட்டைப் பற்றினான். அதை முகவர்கள் கவனித்தனர்.

தெருவிற்குள் ஓடி பிரிந்து போய், கொள்ளையர்கள் வெவ்வேறு திசைகளில் ஓடி மறைந்து போனார்கள்.

அப்போது மணி துல்லியமாகப் பதினொன்று.

நள்ளிரவு ஒரு மணிக்கு நகரத்தின் ஏராளமான கிளினிக்குகளும், மருத்துவமனைகளும், வெளிநோயாளிப் பிரிவுகளும், தனிப்பட்ட எல்லா மருத்துவர்கள் உள்பட, பயங்கரமான குற்றவாளியும்கொள்ளைக்காரனும் கொலைகாரனுமாகிய ஒருவன் குற்றவியல் பிரிவின் முகவர்களால் காயப்படுத்தப்பட்டு காணாமற் போய்விட்டது குறித்து அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டனர்.

> ''தனது கையில் குண்டுக்காயத்துடன் ஒரு மனிதன் மருத்துவ உதவிக்காக உங்களிடம் வந்தால்,'' அந்த அறிவிப்பில் சொல்லப்பட்டிருந்தது,''மிலீஷியாத் தலைமை நிலையத்தில் உள்ள அதிகாரியிடமோ அண்மையிலுள்ள முறை காவல் மிலீஷியாக்காரரிடமோ அதுபற்றித் தெரிவித்து, குற்றவாளியைப் பிடிக்க அவர்களுக்கு உதவ வேண்டியது உங்களுடைய கடமை.''

மற்ற ஆயிரக்கணக்கான மருத்துவர்களைப் போல அந்த அறிவிப்பு படிக்கப்பட்டு, படித்ததற்கான கை

யொப்பம், 25ஆவது அக்டோபர் மருத்துவமனையின் சர்ஜன் டாக்டர் அர்ஸுமானியானால் இடப்பட்டது.

நள்ளிரவுக்குப் பிறகு, மருத்துவமனையில் தனது முறைக் கடமையைச் செய்துவிட்டு, டாக்டர் அர்ஸுமானியான் வீடு திரும்பினான். அவன் மருத்துவமனையிலிருந்து அதிகத் தொலைவில் வசிக்கவில்லை—எழுச்சி தெருவில், என்பதால் நடந்தே வீட்டிற்குச் சென்றான்.

அவனுடைய மனைவி ஏற்கெனவே அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். அவர்கள் சமீபத்தில் தான் திருமணம் செய்து கொண்டார்கள், மிக்க அன்புடன் இருந்தார்கள், மேலும் வேரா—அதுதான் டாக்டர் மனைவியினுடைய பெயர்—வீடு திரும்பும் தன் கணவனை வரவேற்காமல் ஒருபோதும் படுக்கைக்குச் சென்றதில்லை.

தனது தேநீரைப் பருகிக் கொண்டிருந்த வேளையில், மருத்துவமனையில் பெற்ற குற்றவியல் பிரிவின் அவசர அறிக்கையைப் பற்றி டாக்டர் தனது மனைவியிடம் கூறினான்.

''அது அவசியப் மிக முக்கியமானதாக இருக்க வேண்டும், ''எனத் தொடர்ந்தான், அதே வேளை வேராவால் சொந்தமாகத் தயாரிக்கப்பட்ட, இன்னமும் வெதுவெதுப்பாக இருந்த இனிப்பு அப்பங்களை சுவையுடன் தின்று கொண்டிருந்த போது, ''நான் நினைக்கிறேன்... ம்ம்... நான் நினைக்கிறேன், ஒரு பயங்கரமான குற்றவாளியை அவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இல்லாவிடில் அவர்கள் அமளியைத் தொடங்கியிருக்க மாட்டார்கள்... மேலும் அந்தப் போக்கிரி யாரையோ கொன்று விட்டான்...''

''சொல்லுங்க, அன்பரே,'' திடீரென்று வேரா கேட்டாள், ''ஏதோ சந்தர்ப்பதால் நடக்கிறதா கற்பனை செய்வோம்... எதிர்பாராம அந்த மனிதன் உங்களிடம் வந்தா... நீங்க என்ன செய்வீங்க? உங்க நடவடிக்கைகள் எப்படி இருக்கும்?..''

டாக்டர் அர்ஸுமானியான் முறுவலித்துத் தன் மனைவியை பாசத்தோடு உற்றுப்பார்த்தான்.

''இது ரொம்ப வித்தியாசமான கேள்வி, வேரா,'' அவளது கண்களை நேராகப் பார்த்துக்கொண்டு பதிலளித்தான், ''என்னைத் தெரியாதா உனக்கு? இந்தக் கயவ

னின் கழுத்துப் பிடரியைப் பிடித்து மிலீஷியாவிடம் இழுத்துக்கொண்டு போவேன்...'' என்றவன் தனது கடிகாரத்தை உற்றுப் பார்த்து, ''படுக்கப் போக நேரமாகி விட்டது...'' என்றான்.

காலை மூன்று மணிக்கு டாக்டர் விழித்தெழுந்தான். யாரோ கதவில் மணியை அடித்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் அது யாராக இருக்கக்கூடும் என வியந்து, தனது மேலங்கியை அணிந்துகொண்டு கதவுக்குச் சென்றான். சங்கிலியைக் கழற்றி விட்டு, டாக்டர் கதவைத் திறக்க உயரமான இளைஞனை நேருக்கு நேராகக் கண்டான்.

''கிறிஸ்துவுக்காக என்னை மன்னியுங்க,'' அந்த அந்நியன் பண்போடு பேசினான், ''ஆனா இந்த அட்டையைக் கொண்டு பார்த்தா, நீங்க ஒரு டாக்டர்?''

''ஆம,'' என்று பதிலளித்தான் டாக்டர், ''நான் ஒரு சர்ஜன்...''

ஆனால், இதைச் சொல்லியதும், தன்னால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை என்பதை உணர்ந்தான். அறையில் அரையிருட்டாக இருந்த போதிலுங்கூட, தனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த அந்நியனின் வலக்கையில் கட்டுப் போடப்பட்டிருந்ததை முற்றிலும் தெளிவாக அவனால் பார்க்க முடிந்ததே இதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். அந்தளவுக்கு பயத்தால் டாக்டர் ஆட்கொள்ளப்படவே தடுமாற்றமுற்று விழுந்துவிடாமல் சுவரில் சாய்ந்தான்.

''நல்லது, டாக்டர்,'' என்று அமைதியாகத் தொடர்ந்தான் அந்நியன், ''உங்களிடம் மன்னிப்பைத் திரும்பவும் ஒருமுறை கேட்டுக்கிறேன், ஆனா நான் உதவிக்காக வந்திருக்கேன். விஷயம் என்னவென்றால் என்னுடைய கையிலே இலேசான காயம் பெற்றுட்டேன்... பாருங்க, அது அந்த மாதிரியான விசித்திரக் கதை. நான் காதலிக்கும் பெண், அவளுடைய கணவன்... ஒரே வார்த்தையிலே, நீங்க புரிந்துகொண்டிருப்பீங்க...''

''ஆமா... மிகவும் மகிழ்ச்சியாக... அதாவது... ஒரே வார்த்தையிலே,'' டாக்டர் முணுமுணுத்தான், தான் என்ன சொல்கிறோம் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியாது, ''அது எனக்கு மகிழ்ச்சியானது...'' என்றான்.

''நன்றி,'' அந்நியன் எடுப்பான முறையில் தனது தலையைக் குனிந்து, டாக்டருடைய முணுமுணுப்பு எதையும் மேற்கொண்டு கேட்காமல், தோளைப் பற்றி அவனைப் பக்கவாட்டில் இலேசாகத் தள்ளிக்கொண்டு, அறைக்குள் நுழைத்து கதவைச் சாத்தினான்.

''உங்களுடைய செயலக அறை எங்கே?''

உறுதியில்லாதபடி டாக்டர் தனது செயலக அறைக்கு உலைந்து நடக்க, இளைஞன் அவனைப் பின்தொடர்ந்தான்.

''நான் சொல்லியாகணும்,'' அவன் தொடர்ந்தான், ''உண்மையிலே எந்த ஒரு கிளினிக்கிற்கோ மருத்துவ மனைக்கோ நான் போக முடியும். ஆனா, நீங்க புரிந்து கொண்ட மாதிரி, இது குண்டுக் காயம். கேள்விகளைத் தொடுக்க ஆரம்பிச் சுருவாங்க, மிலீஷியா... அந்தப் பெண்ணோட பெயர் தெரியவரும், அவளது பெருமைக்குக் களங்கம் ஏற்படும்... ஆகவேதான் தனிப்பட்ட முறையில் செய்யணும்னு நான் முடிவு செய்தேன்... என்னைப் புரிந்துகொண்டீர்களா, டாக்டர்?''

''நிச்சயமா... பிரச்சினை இல்லை,'' தனது உணர்வுகளுக்குப் படிப்படியாக வந்து கொண்டிருந்த டாக்டர் அர்ஸ்மானியான் அவசரமாக ஒப்புக்கொண்டான்.

வேரா திடீரென்று விழித்துக்கொண்டாள். தன் கணவனுடைய செயலக அறையில் ஓர் அறிமுகமில்லாத குரலைக் கேட்டாள். ஆடை அணிந்துகொண்டு, நடைக்கூடத்திற்குச் சென்று தன் கணவனை அழைத்தாள்.

''என்ன நடந்தது?'' வினவினாள் வேரா. ''யார் அங்கே?''

''அந்தக் கொள்ளைக்காரன் வந்திருக்கிறான்,'' தடுமாற்றத்தோடு முணுமுணுத்தான் அர்ஸ்மானியான்.

வேரா வெளிறிப் போனாள், தன்னைக் காட்டிலும் தன் கணவன் மிகவும் சங்கடப்பட்டுப் போனதைக் கண்டாள். ஒருவகையில் அது அவளை அமைதிப்படுத்தியது.

''அவனிடம் திரும்பிப் போங்க,'' அவள் கிசுகிசுத்தாள், ''நான் கீழே வார்டனுடைய அலுவலகத்துக்குப் போய், அங்கிருந்து மிலீஷியாவை அழைக்கிறேன்...''

சோர்வான பார்வையுடன் அர்ஸுமானியான் தன் மனைவியை உற்றுப்பார்த்தான், பிறகு வேதனையோடு அவளுடைய கையைப் பற்றிக் கோபத்துடன் கிசுகிசுத் தான்:

''உனக்குப் பைத்தியமா? நமக்கென்ன அக்கறை! முட் டாள்தனமாப் பேசுவதை நிறுத்து. அவனை நாம் ஒப்ப டைத்தால், நாளைக்கு அவனுடைய உடந்தைக்காரர்கள் கோழிகுஞ்சுகளைப் போல நம்மை வெட்டிச் சாய்ப்பார் கள். அந்தக் குற்றவாளிகள் பற்றி உனக்குத் தெரியாது...''

கடுகடுப்போடு திரும்பி தனது செயலக அறைக்கு மீண்டும் சென்றான். இரவு நோயாளி அவனைச் சந் தேகத்தோடு பார்த்தான்.

''எதைப் பற்றி இதெல்லாம்? யாரிடம் பேசிக்கிட் டிருந்தீங்க?'' டாக்டர் மீது உற்றுப்பார்வையைச் செலுத்தி யவாறு கேட்டான். ''பாருங்க, டாக்டர்...''

''என் மனைவி விழித்துக் கொண்டாள்,'' என்றான் அர்ஸுமானியான் குற்ற உணர்வோடு. ''அவளை நான் அமைதிப்படுத்த வேண்டியிருக்கிறது...''

அந்த மனிதனின் கையில் இருந்த காயத்தை டாக்டர் கழுவித் துடைத்து, குண்டை வெளியே எடுத்து, வழக்க மான முறையில் கட்டுப்போட்டான்.

''சரி, அவ்வளவு தான்,'' என்றான், ''ஆனால் வீக் கம், புண் அல்லது காய்ச்சல் இருந்தால் உடனடியாக நீங்க ஒரு டாக்டரைப் பார்க்க வேண்டும். தொற்று நோய்க்கு வாய்ப்பு இருக்கிறது.''

''மிக்க நன்றி,'' தனது குரலை மகிழ்ச்சியானதாக மாற்றிக்கொண்டு அந்நியன் மெதுவாகச் சொன்னான், ''அம்மாதிரி நிலையில் உங்களைத் திரும்பவும் வந்து பார்ப்பேன். இதோ...''

டாக்டருக்குப் பணத்தை நீட்டினான். அர்ஸுமானி யான் பணிவோடு அதை எடுத்துக்கொண்டான்.

இரவு நோயாளிக்குப் பின்னே எப்போது கதவு சாத் தப்பட்டதோ அப்போது முதலாவது குடும்பச் சச்சரவு ஆரம்பமானது. வேரா தன் கணவனிடம் சத்தம் போட் டாள், அழுதாள், கோழைத்தனத்துடன் அவனைக் கடிந் துரைத்தாள். டாக்டர் குற்றத்தை விளக்கிச் சொல்ல

முயன்றதன் மூலம் வேராவை மேலும் எரிச்சலடையும் படி செய்தான்.

''நீங்க வெட்கப்படணும்,'' என்றாள், ''ஒரு சுயநலக் காரனைப் போல, ஒரு பண்பற்றவனைப் போல, ஒரு கோழையைப் போல நீங்க நடந்துகொண்டீங்க! இந்த மாதிரி கணவனைப் பெற்றிருப்பதற்காக நான் வெட்கப் படுகிறேன்! உங்களால் எப்படி இதுபோல செயல்பட முடிந்தது?..''

தம்பதி ஒத்துப்போன போது ஏற்கெனவே விடிந்து விட்டிருந்தது. இரண்டாவது தடவை அந்த மனிதன் வந் தால் அவனைத் தடுத்து நிறுத்திவிடுவதாகத் தன் மனைவி யிடம் டாக்டர் மனப்பூர்வமாக உறுதி கொடுத்திருந் தான் (''அவன் வருவான், அவசியம் வருவான், நீயே பார்ப்பாய்,'' என்றான் டாக்டர்).

''சத்தியமாக நான் பயப்படவில்லை,'' தொடர்ந் தான் அர்ஸுமானியான், ''இல்லை... ஆனால் ஒவ்வொன் றும் அம்மாதிரி எதிர்பாராமல் நடந்து விட்டது, ஆகவே நான் திகைப்புற்றுப் போனேன். தயவு செய்து, வேரா, புரிந்துகொள்ள முயல்...''

மறுநாள் மாலை அந்த அந்நியன் திரும்பவும் வந் தான். அந்த முறை கதவை வேரா திறந்தாள்.

''மன்னிக்கணும், டாக்டர் வீட்டில் இருக்கிறாரா?'' எனக் கேட்டான்.

அவனுடைய கட்டுப்போடப்பட்ட கையைப் பார்த்து வேரா எல்லாவற்றையும் புரிந்துகொண்டாள்.

''ஆமா, வீட்டில் தான். உள்ளே வாங்க,'' என்றாள்.

தன் கணவனுடைய செயலக அறைக்கு நோயாளியை அழைத்துச் சென்றாள். பிறகு உணவறைக்குச் சென்று அர்ஸுமானியானிடம் மெதுவாகச் சொன்னாள்:

''அவன் வந்திருக்கிறான். நான் வார்டனிடம் போ கிறேன், சரியா?''

''கவலைப்படாதே,'' என்றான் அர்ஸுமானியான். ''அவனுடைய கட்டுத்துணியை மாற்றிய பிறகு அவ னுடன் நானும் வெளியே போய் பாராவில் உள்ள மிலீஷி யாக்காரரிடம் அவனை ஒப்படைப்பேன்.''

வேரா ஒப்புக்கொண்டாள். டாக்டர் தனது செயலக அறைக்குச் சென்று, காயத்தை மறுபடியும் கழுவி, துணி

யை மாற்றி, தனது நோயாளியுடன் வீட்டை விட்டுக் கிளம்பினான். அவனுடைய வருகைக்காக வேரா ஆவலோடு காத்திருந்தாள். இறுதியில் அவன் திரும்பி வந்து தன்னுடைய சாவியினால் கதவைத் திறந்தான்.

''என்னாச்சு?'' எனக் கேட்டாள்.

''இதோ பார்...'' அர்ஸுமானியான் முணுமுணுத்தான், ''விஷயம் என்னவென்றால்... ம்ம், அந்த மாதிரியான கெட்ட அதிருஷ்டம்... ஒரே வார்த்தையில், மிலீஷியாக்காரர் தன்னுடைய இடத்திலே இல்லை. அவர் எங்காவது போயிருக்கணும்...''

தன்னுடைய மேல் கோட்டின் கழுத்துப்பட்டையை டாக்டர் முற்றாகச் சுத்தம் செய்யத் தொடங்கினான். எனினும் அதைச் செய்வதற்கு அவனுக்கு அவசியமே இல்லாதிருந்தது: கழுத்துப்பட்டை முற்றிலும் சுத்தமாக இருந்தது.

காலையில், என்னுடைய அலுவலகத்தில், ஓர் இளம் பெண், காத்திருக்கும் அறையில் இருப்பதைக் கண்டேன். அவள் என்னிடம் வந்தாள்.

''தலைமைப் புலனாய்வாளரை நான் அவசியம் பார்க்க வேண்டும்,'' என்றாள்.

''சொல்லுங்க, கேட்கிறேன். என்னுடைய செயலகத்துக்கு வாருங்கள்.''

அவளுடைய பெயர் அர்ஸுமானியான் என்றும், அவளது கணவன் ஒரு டாக்டர் என்றும் அந்தப் பெண் என்னிடம் கூறினாள், மேலும் கோழைத்தனத்தின் காரணமாக உண்மையாகவே ஒரு குற்றவாளியை மறைத்து வைத்த அவளது கணவனின் குற்ற இயல் நடத்தையைப் பற்றி நகர அரசு வழக்குரைஞருடைய அலுவலகத்திற்கு ஓர் அறிக்கைத் தர வந்திருப்பதாகக் கூறினாள்.

கடந்த இரண்டு நாள்களின் நிகழ்ச்சிகளைப் பற்றி முழு விவரத்துடன் வேரா கூறினாள்.

''என் கணவரிடம் ஒரு வார்த்தையும் சொல்லாமல் நான் உங்களிடம் வந்திருக்கிறேன்,'' என மேலும் தொடர்ந்தாள். ''இந்த மனிதன் என் கணவரிடம் மீண்டும் ஒரு

முறை வரலாம் என நினைக்கிறேன், அவனைத் தடுத்து நிறுத்த அது உங்களுக்கு ஒரு வாய்ப்பைத் தரும்.''

வேரா சொன்ன எல்லாவற்றையும் நான் எழுதிக் கொள்ள, ஆவண முதற்குறிப்பில் அவள் கையெழுத்திட்டாள்.

''தயவு செய்து எனக்குச் சொல்லுங்கள்,'' என்றாள், ''என் கணவருக்கு என்ன நேரும்?... அவர் குற்றமுடையவர் என்பதை நான் புரிந்துகொள்கிறேன், ஆனால்... ஆனால் நான் இன்னமும் அவருக்காக வருத்தப்படுகிறேன்...''

அதே நாளின் மாலையில் வலக் கையில் கட்டுடன் கூடிய அந்த மனிதன், டாக்டர் அர்ஸ்மானியான் வசித்த வீட்டின் நுழைவாயிலில் கைது செய்யப்பட்டான். மூன்றாவது முறையாக டாக்டரைப் பார்ப்பதற்காக அவன் போய்க் கொண்டிருந்தான்.

இந்த மனிதன் பயங்கரமான முன்னைய குறிப்புகளுடன் கூடிய நாள்பட்ட கொள்ளைக்காரனாக இருந்தான். அவனுடைய பெயர் திமஃபேயெவ், அவனுடைய தெருப் பெயர் லியோன்கா பெரிகாவோய். ரொட்டிக் கடைகளை அவனுடன் கொள்ளையடித்த உடந்தைக்காரர்கள் யார் என்பதைத் தெரியப்படுத்தினான்.

அவர்களுடைய வழக்கு நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதே வழக்கில் டாக்டர் அர்ஸ்மானியானுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. வழக்குமன்றக் கூடத்திலிருந்த ஒவ்வொருவரும் கிளர்ச்சியடையுமாறு தலைவர் அறிவித்தார்:

''தோழர் கமான்டெண்ட், சாட்சி வேரா அர்ஸ்மானியானைத் தயவு செய்து அழையுங்கள்.''

கூடத்தில் கிசுகிசுப்புகள் தொடங்கின. பிரதிவாதி அர்ஸ்மானியான் தன்னை வசைப்பாங்கோடு பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்களிடமிருந்து அப்பால் திரும்பிக்கொண்டான். சாட்சி வர வேண்டிய கதவுப் பக்கம் லியோன்கா பெரிகாவோய் உற்றுப்பார்த்தான். வாதிக்கான வழக்குரைஞர் அவசரமாக எதையோ எழுதிக் கொண்டிருந்தார். அரசு வழக்குரைஞர் அடக்கமான முறையில் முறுவலித்துக் கொண்டிருந்தார்.

வேரா உள்ளே வந்தாள். அவள் அமைதியாக வழக்கு

மன்றத்தை நோக்கினாள், ஆனால் கையுறையை மடக்கிச் சுருட்டிக்கொண்டிருந்ததையும், தனது கால்களை அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்ததையும் மதிப்பிட்டு அவள் கலவரமடைந்திருந்ததைப் புரிந்துகொள்வது சுலபமாக இருந்தது.

''உங்களுடைய குடும்பப்பெயர், பெயர், தந்தைவழிப் பெயர்?'' வழக்கமான முறையில் தலைவர் கேட்டார். ''உங்களுடைய வயது என்ன?''

''அர்ஸுமானியான் வேரா இவானொவ்னா, வயது இருபத்துமூன்று,'' சாட்சியின் சுருக்கமான பதில் இது.

''பிரதிவாதி அர்ஸுமானியான் உங்களுடைய கணவரா?''

''ஆமாம்.''

''நகர அரசு வழக்குரைஞருடைய அலுவலகத்திற்கு ஓர் அறிக்கைத் தருவதற்கான உங்களுடைய காரணங்களை வழக்குமன்றத்திற்கு நீங்கள் விளக்க முடியுமா?''

''நான் ஒரு சோவியத் பெண் தான்,'' என்று எளிமையாக பதிலளித்தாள் வேரா.

''வழக்குமன்றத்திற்கு எல்லாம் தெளிவாக இருக்கிறது, மேற்கொண்டு கேள்விகள் இல்லை,'' என்று முடித்தார் தலைவர்.

1930

துளையிட்ட தினார் நாணயங்கள்

எனது பணிக்காலத் தொடக்கத்தில் நடந்த இந்த விசித்திரமான வழக்கைப் பற்றிக் கூறுவதற்கு முன்னால், ஒரு குற்றவாளியினுடைய ஆன்மாவிலும் சில நேரம் எதிர்பாராத பிரதிபலிப்பு ஏற்படும் என்ற நம்பிக்கையை நான் யாரிடமிருந்து அறிந்துகொண்டேனோ அந்தத் திருடனால் ஒரு கதை எனக்குச் சொல்லப்பட்டது என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவனோ நன்கு வளர்ந்து, கட்டான உடல் கொண்டவன். இலேசான தூக்கக் கலக்கத்தையும், தனது தொழிலுக்கான அசாதாரணமான அன்பையும் அவன் முகம் காட்டியது. எப்போதும் ஆச்சரியத்தோடு உலகை நோக்குவது போல அவனது வட்டமான கண்கள் தோன்றின. ஏற்கெனவே பலமுறை தண்டனைகள் பெற்றவன், திருடர் சமூகத்திலும் ஏன், மூர் நிறுவனத்திலும் கூட 'சீல்' என்று அவனுக்குப் பெயர் வழங்கியது.

அன்று விசாரணை முடிந்த பிறகு, என்னிடம் 'சீல்' ஒரு சிகரெட் கேட்டு வாங்கி, அதைப் பற்றவைத்துவிட்டுச் சொன்னான்:

''சிகரெட் தந்ததுக்கும், நமது அருமையான பேச்சுக்கும் நன்றி. நல்லதுக்குப் பதில் நல்லது செய்யணும்னு உலகத்திலே சொல்வாங்க... உங்களோட அனுமதியோட நானும் அது போல என் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி உங்களுக்குச் சொல்றேன். அது ரொம்பவும் விந்தையானது என்றுதான் நான் சொல்வேன்.''

''தயவுசெய்து சொல்லுங்க,'' என்ற நான், 'சீல்' ஏன் திடீரென்று கலவரமடைந்தான் என வியந்து ஒப்புக் கொண்டேன்.

''நீண்ட காலமாகவே நான் திருட்டுத் தொழிலை நடத்தி வருகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும்,'' எனக் கூறிய அவனது கலக்கம் அதிகமாகியது. ''ஆனா கொலை வழிக்கு நான் போனதில்லை, போகவும் மாட்டேன். நான் தொழில் செய்வதெல்லாம் ராத்திரியிலே தான்: இருண்ட சந்துகளிலே நின்று யாராவது கடந்து போகட்டும் எனக் காத்திருப்பேன், பெண்ணாக இருந்தால் நல்லது. அவளிடம் போய் 'ஹலோ' என்பேன், மென்மயிர் அங்கியோ, கடிகாரமோ, பையோ எது கிடைத்தாலும் பிடுங்கிக் கொள்வேன். ஆனா நான் எப்பொழுதுமே இதைப் பெரியமனிதத் தன்மையுடனேயே செய்றேன், ஏன்னா நான் பண்பாடு மிக்கவன், திரைப்படத்தை விரும்புறேன், ஆபாசத்தையே என்னால் பொறுத்துக்கிற முடியாது, அதைப் பழைய உலகத்தின் சுக்கல் என்று கருதுறேன்... ஆகவே யார் மீதும் இதுவரை நான் ஒரு விரலைக் கூட வைத்தது கிடையாது என்பதை நீங்க நம்பலாம். அம்மாதிரி விஷயங்களிலிருந்து தள்ளி இருக்கக் கூடிய கைகள் என்னுடையவை என்பதை நீங்களாகவே பார்த்துக் கொள்ளலாம்...''

'சீல்' முறுவலித்து விட்டு தனது பெரிய வலிமை வாய்ந்த உள்ளங்கையை நீட்டினான். பிறகு பெருமூச்சு விட்டுத் தொடர்ந்தான்:

''பொய் சொல்றதிலே பயன் இல்லை, என்னோட மனசாட்சி என்னை வருத்தியதே கிடையாது, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்தேன். எதிலும் சிக்கிக் கொள்ளாமல் இருந்தேன், ஒரு பெண்ணோட மாட்டிக் கொள்கின்றவரை...''

''காதலா?'' எனக் கேட்ட நான், முன்னர் குற்றவாளிகளிடமிருந்து கேட்ட மற்ற பிறவற்றைப் போல முற்றுப் பெறாத காதல் கதையை எதிர்பார்த்தேன்.

''ஐயோ, அப்படி இல்லை என் மனசாட்சிதான்,'' என்றான். ''இது தெவிச்சே போல்யேயின் பக்கத் தெரு ஒன்றில் ராத்திரியில் நடந்தது. இரையை எதிர்பார்த்தவாறு ஓர் இருண்ட மூலையில் நின்றேன். விறைப்பது மாதிரி ராத்திரி, நல்ல இருட்டு, பார்வையில் யாருமே படலே. திடீரென்று கதவைச் சாத்தும் ஓசை கேட்டது, ஒரு வீட்டிலிருந்து இளம் பெண் ஒருத்தி விரைந்து வெளி

யே வந்தாள். நல்ல இளமையான தோற்றம், மெலிந்த உடம்பு, மென்மயிர் அங்கி அணிந்திருந்தாள். ஒருகால் சுற்றிலும் கறுமையான வெறுமை காணப்பட்டதால் பயந்து போயிருக்கலாம், அங்கியின் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு, தன்னை யாரேனும் துரத்திக்கொண்டு வருகிறார்களா எனப் பின்னுக்குத் திரும்பிப் பார்த்த வாறு நடைபாதையில் உயர்ந்த குதிங்கால் செருப்புகள் ஒலியெழுப்ப ஓடத் தொடங்கினாள். நல்லது, உண்மையான அதிருஷ்டமின்னு நினைத்தேன். அந்த அங்கியை தேசியமயமாக்குவது என்னைப் பொருத்ததுதான். வெளிவாயிலை விட்டுப் புறப்பட்டு அவளை நோக்கிச் சென்றேன். நான் வருவதைப் பார்த்த அவள் என்னிடம் ஓடி வந்தாள். பிறகு, கற்பனை செய்து பாருங்க, எனது கையை இறுகப் பற்றி இரங்கத்தக்க குரலில் கத்தினாள்: 'ஐயா, என்னை மன்னிச்சுறுங்க, நான் ரொம்ப பயந்து போயிட்டேன்! பார்வைக்கு யாருமே படலே. வாடகை வண்டிக்கு நீங்க என்னைக் கூட்டிப்போக மாட்டீங்களா?..' அவள் என்னைக் கத்தியால் குத்தியிருக்கலாம்! என்ன நடந்தது என்பதை இன்னமும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை, ஆனால் அவளுக்குக் கைலாக்குத் தந்து, முணுமுணுத்தேன்: 'கவலைப்பட வேணாம், உன்னை நான் பாதுகாக்கிறேன்'. 'ஆ,' என்றாள், 'நான் உங்களுக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன்! உண்மையிலேயே நீங்க பெரிய மனிதர் என்பதை பார்த்த மாத்திரத்தில் புரிஞ்சுக்கிட்டேன்.' நாங்கள் புறப்பட்டோம்... என் இதயம் சுக்குநூறாக நொறுக்கிக் கொண்டிருந்தது, உடம்பெல்லாம் சுடுவதாக உணர்ந்தேன். எனக்கு என்ன நடந்தது என்பது தெரியாது. ஆனா என் வேலையைத் தொடங்க என்னால முடியலே, என்னால முடியலேன்னு உங்ககிட்ட உண்மையைச் சொல்றேன்... என்ன மாதிரி நிலைமை! எப்படியும் அவளை ஸ்லேட்ஜ் வண்டிக்கு அழைத்துப் போய், உள்ளே ஏறுவதற்கு உதவி செய்தேன். மயிர்த் தோல் போர்வையால் அவளைப் போர்த்தி விட்டு, பயணம் நன்றாக அமைய வாழ்த்தினேன்...நம்பிக்கை ஒரு மனிதனை என்ன செய்கிறதென்று பாருங்க!''

''ஆனா அதற்குப் பிறகும் உங்களோட 'பறிமுதல்

தொழிலைத்' தொடர்றீங்க, இல்லையா?'' என்றேன்.

''மூனு நாள்கள் என்னால வேலை செய்ய முடியலே, பிறகு மறுபடியும் தொடங்கினேன். ஆனா உங்களுக்குச் சொல்றேன், என் உள்ளமே உடைந்து போனது மாதிரி ஆச்சு...பெண்களிடம் என்னால் திருட முடியாமப் போச்சு, எல்லாமே சலித்தும் போச்சு... என்னிடமிருந்த நம்பிக்கையே இல்லாமப் போச்சு... இப்பத் தண்டனைக்குப் பிறகு நான் ஒழுங்கா வாழ்வேன், பட்டது எல்லாம் போதும்! அன்றைக்கு ராத்திரி குண்டு அதிர்ச்சிக்கு ஆளானவன் போல ஆயிட்டேன்...''

அவனுடைய கண்களில் அந்தளவு துயரம் இருந்தது, அவன் சொன்னவற்றை நான் நம்பினேன்.

அந்நேரத்தில் மாஸ்கோவில் கிராஸ்னோப்ரேஸ்னேன்ஸ்கி மாவட்டத்தில் நான் மக்களுடைய புலனாய் வாளராக இருந்தேன். கோர்க்கி தெரு, கிராஸ்னாயா ப்ரெஸ்னியா, அதன் அருகிலுள்ள தெருக்கள் மற்றும் சந்துகள் ஆகியன எனது மாவட்டத்தில் அடங்கியிருந்தன. அப்போது மூர் அலுவலகமும் எனது மாவட்டத்திற்குள் இருந்தது. இதன் விளைவாக அதன் ஊழியர்களில் பலரோடு நான் நெருக்கமான நட்புக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டது, குறிப்பாக மூரின் முதல் பிரிகேடின் தலைவனாகிய நிக்கலாய் ஓஸிபவுடனும், அவனது உதவியாளனாகிய கியோர்கி தில்நேருடனும் ஏற்பட்டது. அவர்கள் இருவரும் முப்பதுகளில் இருந்தார்கள்.

கொலைகள் மற்றும் ஆயுதங்களுடன் நடத்திய கொள்ளைகள் பற்றிய புலனாய்வுக்கு மூரின் முதல் பிரிகேடு பொறுப்பாயிருந்தது, குற்றப்புலனாய்வுப் பிரிவின் இதயமாகவும் விளங்கியது. அந்நேரத்தில் தொழில்முறைக் குற்றவாளிகள் எத்தனை பேர் இருந்தனர் என்பதை ஒருவர் நினைவுகூர்வாரானால், இரவு பகல் எந்நேரமும் எனது நண்பர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்ததன் காரணம் தெரியும்.

அவர்கள் இருவரும் திறமைவாய்ந்த குற்றப்புலனாய் வாளர்கள், தங்களுடைய கடினமான பணியை அவர்கள்

விரும்பியதோடு, அதை நன்கு அறிந்தும் இருந்தார்கள். ஓலிபவ் மெலிந்தவன், இளம்பொன் நிற முடியினன், எப்போதுமே தூய்மையாக உடையணிந்தான், அவனுடைய புத்திசாலித்தனமான சாம்பல் நிறக் கண்கள் விரைவும் கூர்மையும் படைத்தவை. மனித இயல்பை நன்கு தீர்மானிக்கக்கூடியவன். குற்ற உலகத்தினரின் மனப் போக்குகளையும் குழூஉக்குறிகளையும் நன்கு அறிந்தவன். மேலும் மோட்டர் சைக்கிள் ஓட்டுவதில் திறமை சாலி.

நான் மிகவும் இளமைப் பருவத்தினனாகவும், எனது பணியை அப்போதுதான் தொடங்கியிருந்ததனாலும், அவர்களுடனான எனது நட்பு மகிழ்ச்சியாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. அவர்களிடமிருந்து நான் நிறையக் கற்றுக் கொண்டேன், குற்றங்கள், விபத்துகள், கண்டுபிடிப்புகள் பற்றிய அவர்களது கதைகளை ஆர்வத்தோடு செவிமடுத்தேன்.

ஓலிபவோ தில்நேரோ ஒரு குற்றவாளியை விசாரித்த போது அடிக்கடி நானும் உடனிருந்தேன். ஆரம்பத்தில் அவர்கள் பேசியதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கேள்விகளிலும் பதில்களிலும் குற்ற உலகினரின் கொச்சைப் பேச்சும், தொழில் சார்ந்த சொற்களும் அந்தளவு அதிகமிருந்ததால் அவர்கள் எனக்குத் தெரியாத ஏதோ அந்நிய மொழில் பேசுவதாக நான் பெரும்பாலும் நினைத்தேன்.

இந்த இருவரையும் பற்றி மாஸ்கோ குற்ற உலகம் நன்கு அறிந்திருந்தது. பொதுவாகக் குற்றவாளிகள் மூர் அதிகாரிகளை வெறுத்தார்கள், ஆனால் ஓலிபவையும், தில்நேரையும் மரியாதையோடு கருதினார்கள், அவர்களுக்காக ஓரளவு விருப்பம் கொண்டது கூட விநோதமாகக் காணப்படலாம்; அவர்கள் இருவரும் தகுதிபெற்றவர்கள் என ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள், அவர்களுடைய நேர்மையும் துணிவும் எல்லாரும் அறிந்தவை.

இத்துடன், இந்த விநோதமான உலகை நன்கு அறிந்திருந்த ஓலிபவ் கைதிகளை இகழ்ச்சியாக நடத்தியதோ, அவர்களுக்குத் தொல்லை தந்ததோ இல்லை; சட்டப்படி நடந்தான், கூடுதலாக எந்தச் சலுகையும் காட்டியதில்லை, ஆனால் எப்போதுமே அவர்களிடம் மனிதனுக்கு

மனிதன் பேசிக்கொள்வது போல மிக நெருக்கமாகப் பேசினான்.

தில்நேர் பண்பாடு மிக்கவன், நல்ல பழக்க வழக்கங்கள் கொண்டவன், அழகானவன், தனது தனிச்சிறப்பான நினைவாற்றலுக்குப் பெயர் பெற்றவன். மூரில் உள்ளவர்கள் சொன்னது போல, மாஸ்கோ குற்ற உலகம் முழுவதையும் அவன் 'தனது தலையில்' வைத்திருந்தான், எல்லாப் பெயர்களையும், குறிப்பெயர்களையும், அடையாளக் குறிகளையும், திரும்பத்திரும்பக் குற்றம் செய்த மாஸ்கோ குற்றவாளிகளின் முன்னாளைய தண்டனைகளையும் நினைவு வைத்திருந்தான். இது குற்றவாளிகளுக்கு நன்கு தெரிந்திருந்ததால், 'தில்நேருடைய பார்வையிலிருந்து விலகி இருப்பதும், அவரிடம் ஆள்மாறாட்டம் செய்யாமல் இருப்பதும் நல்லது' என்று அடிக்கடி பேசிக் கொண்டார்கள். அவனைப் பொருத்தமட்டில் ஆள்மாறாட்டம் செய்வது கஷ்டமானது என்பது இதன் பொருளாகும்.

அரசு அதிகாரிகளின் குடும்பங்கள் வழக்கமாக வசித்த கவர்ச்சியான, ஓட்டு வீடு இன்னமும் பிளகவேஷின்ஸ்கி தெருவில் இருக்கிறது. அதனது பழைய குடியிருப்பாளர்களில் ஒருவர் மக்கள் கமிஸார் எஸ். என்பவர்.

ஜூலை மாதத்து இரவில் எஸ். அவரது குடும்பத்தினருடன் கோடை இல்லத்தில் இருந்த போது, திருடர்கள் அவருடைய வீட்டை உடைத்து உள்ளே சென்று பல்வேறு வீட்டுச் சாமான்களுடன், பல ஆண்டுகளாக அவர் சேகரித்து வைத்திருந்த தொன்மையான நாணயங்கள் இருந்த ஒரு பெரிய தோல் பையை எடுத்துச் சென்றார்கள்.

மட்டுமீறிய பரபரப்பு ஏற்பட்டது. களவுக் குற்றங்களுக்குப் பொறுப்பான மூரின் இரண்டாவது பிரிகேடைச் சேர்ந்த ஆட்கள் திருடனைப் பிடிப்பது சிரமமானதென்றும், வழக்கைப் பொருத்தவரை சிக்கலைத் தவிர வேறு எதுவும் இல்லையென்றும் உணர்ந்தார்கள். உயரமும், எடுப்பான தோற்றமும், மிகுந்த மரியாதையும், சிறந்த ராஜதந்திரமும் உடைய இரண்டாம் பிரிகேடின் தலைவராகிய ஸ்தெபானவ் மிகவும் நிலைகுலைந்து போய், முறை வருமுன்பே சிகரெட் புகைத்தார். (அவருடைய

வாழ்க்கை முழுதுமே கவனத்தோடு திட்டமிடப்பட்டது. அவர் ஒருபோதும் பரபரப்புற்றதில்லை, அவசரப்படுவது உடல் நலத்திற்குக் கேடு என்று கருதி, அதைப் பெரிதும் மதித்தார். குற்ற உலகினருக்கு 'நத்தை' என அறிமுகமாகி இருந்தார்.) தனது பளபளத்த கைநகங்களைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த அவர், தனது துணை யதிகாரி க்ரோதவிடம் மெதுவாகச் சொன்னார்:

''இது அபாரமான திருட்டு, சாதாரணமானது அன்று, அப்படித்தானே?''

கூர்மதிவாய்ந்த க்ரோதவ் தனது தலைவரை வியப்புடன் உற்று நோக்கினான், ஆனால் நொடிப் பொழுதில் சூழ்நிலையைப் புரிந்துகொண்டான். (குற்றப் பிரிவின் 108 ஆவது விதிப்படி, சாதாரணத் திருட்டுகள் மூரால் புலனாயப்பட்டன, அதே வேளை அபாரமான திருட்டுகள் மக்கள் புலனாய்வாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.) எனவே உடனடியாக தனது வாழ்வில் இத்தகைய அபாரமான திருட்டை தான் பார்த்ததில்லை என்றும் அதைச் சத்தியம் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறத் தொடங்கினான்.

சட்ட வாசகத்தின் படி, வீட்டை உடைப்பதற்கான திருட்டுக் கருவிகள் உபயோகிக்கப்படும் களவுகளும் திருட்டுகளும் அபாரத் திருட்டுக்களாகக் கருதப்பட்டன. ஆனால் இதுவோ அம்மாதிரிக் கருதப்படக்கூடியது அன்று, ஏனெனில் திருடனோ திருடர்களோ சன்னல் வழியாக உள்ளே நுழைந்திருக்கிறார்கள். ஆகவே சந்தேகமில்லாமல் 'சன்னல் போர்வழிகள்' என்ற வகையைச் சேர்ந்ததாகும். அதன் காரணமாகத்தான் க்ரோதவுடைய மறுப்புரைக்கு ஸ்தெபானவ் முகஞ்சுளித்தபடி பார்த்து வஞ்சகமாக வினவினார்:

''விதி 162இல் அபாரத் திருட்டைப் பற்றி க்ரோதவின் சிறப்பான விளக்கம் எதுவும் எனக்கு நினைவிருப்பதாகத் தோன்றவில்லை. அது சன்னல் வேலை, தம்பி, இல்லையா?''

க்ரோதவ் கணநேரம் நிறுத்திவிட்டு, தனது கண்களைத் தாழ்த்தினான், ஆனால் விட்டுக் கொடுக்கவில்லை.

''ஆமாம், ஆனா விசேடமான கருவிகளைக் கொண்டு அவர்கள் சன்னலைத் திறந்திருக்கிறார்களே,'' என்று

குறிப்பிடத்தக்க முறையில் கூறினான், அவனுடைய துலக்கமான கண்கள் தலைவர் மீது பதிந்திருந்தன.

''அப்படியா? எந்தவகையிலும் நினைவு படுத்தக் கூடியதாக எனக்குத் தெரியவில்லை,'' என்று பதிலளித்தார் ஸ்தெபானவ். ''நிச்சயமாக, மனித விரல்கள் விசேடமான கருவிகள் என்று நீங்கள் நிரூபிக்க முடியாதவரை, என் நண்பரே.''

''விரல்களுக்கு எந்தச் சம்பந்தமும் கிடையாது,'' என்று க்ரோதவ் உணர்ச்சி வயப்பட்டுச் சொன்னான். ''உளியினால் சன்னல் திறக்கப்பட்டதும், பூட்டு உடைக்கப்பட்டதும் தெளிவாகத் தெரிகின்றன. விசேடக் கருவியுடன் உடைத்து உள்ளே போவதும் இதைவிட வேறு என்ன?''

''அப்படியா? சரி. அது ரொம்ப மோசம். இந்தளவு ஆர்வமூட்டக் கூடிய வழக்கை விட்டுவிடுவது நிச்சயமாக வருந்தத்தக்க விஷயமாகும், ஆனா சட்டம் முதலாவதாக வருகிறது, இல்லையா?'' என்று கூறிப் பெருமூச்சு விட்ட ஸ்தெபானவ் முறை வருமுன்பே மற்றொரு சிகரெட்டைப் பற்றவைத்தார். ''இல்லை, நண்பரே, நம்மால் செய்யக் கூடியது எதுவுமில்லை... வழக்கை 108 ஆவது விதிப்படி மக்கள் புலனாய்வாளரிடம் அனுப்புங்க, காகிதங்களைத் தயார் செய்யுங்க.''

மறுநாள் மிகவும் ஆற்றோட்டமான நடையில் எழுதப்பட்ட குறிப்புடன் இந்த வழக்கைப் பெற்றேன். அதில் க்ரோதவ் மிகுந்த உணர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் விவரித்திருந்தான்: ''உளி போன்ற விசேடக் கருவிகள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதை, சன்னலைப் பார்வையிட்டது குறித்த ஆவணத்திலிருந்தும், உடன் அனுப்பப்பட்டிருக்கும் உடைந்த சன்னல் தாழ்ப்பாளிலிருந்தும் அநுமானிக்க முடியும்.''

நான் வழக்கைப் பெற்றுக்கொண்ட ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, ஸ்தெபானவ் என்னைத் தொலைபேசியில் அழைத்து என் உடல் நலம் பற்றியும் என் வேலை பற்றியும் மிகவும் அடக்கத்தோடும், மனத்தைத் தொடுமாறும் விசாரித்தார். பருவநிலையைப் பாராட்டினார், 'சில்வா' என்ற இசைநாடகத்தில் தத்தியானா பாக் பாடுவதைப் புகழ்ந்து, அதைப் பார்க்கும்படி எனக்குப் பலத்த சிபாரிசு

செய்தார். பிறகு, எங்களுடைய நீண்ட நேரப் பேச்சின் முடிவில் தற்செயலாகக் கூறுவது போலச் சொன்னார்:

''இதற்கிடையில், ஒரு சின்ன வழக்கை உங்களிடம் நாங்க அனுப்பியிருப்பதைப் பொருட்படுத்த மாட்டீங்கன்னு நம்புறேன். அது எங்களைப் பொருத்தது அன்று, இது சட்டபூர்வமானது. எங்களால் முடிந்த எல்லா உதவியையும் செய்வோம் என்று நீங்க உறுதியா நம்பலாம்... இந்த வழக்கை நீங்க ஏற்றுக்கொண்டதாகக் கூறும் சிறு குறிப்பு ஒன்றைத் தங்களால் தயவுசெய்து அனுப்ப முடியுமா? எனது கோப்புகளுக்கு அது தேவைப்படுகிறது. அதை வாங்கி வருவதற்கு க்ரோதவை அனுப்புகிறேன்.''

நான் ரிசீவரைத் தொங்க விடுகையில், எனது தலையில் அந்தக் கூர்மதியான 'நத்தை' எதைச் சுமத்திவிட்டார் என்பதை, அந்தோ, நான் புரிந்துகொள்ளவில்லை. அவர் கேட்ட ரசீதை எழுதி, வியப்புறுமாறு விரைந்து வந்த க்ரோதவிடம் அதைக் கொடுத்தனுப்பினேன்.

மறுநாள் காலை, ஜார் ஆட்சியில் அரசியல் கைதியாக இருந்தவரும், விவேகமும் அன்பும் கொண்டவருமான மண்டல அரசு வழக்குரைஞரான ஷெவேர்தின் என்னைத் தொலைபேசியில் அழைத்து, பிளகவேஷின்ஸ்கி தெருத் திருட்டுப் பற்றிய கோப்புகளுடன் உடனடியாக அவரது அலுவலகத்தில் வந்து பார்க்குமாறு கூறிய போதுதான் எனக்கு எல்லாமே தெளிவாகியது.

புறப்பட்டுப் போவதற்கு முன், வழக்கை முழுதும் கவனமாகப் படித்துப் பார்த்து, 'அபாரமான திருட்டு' என்பதற்கான ஆதாரங்கள் எப்படி உறுதியற்றவை என்பதைக் கவனித்தேன். எனினும் அதற்குள்ளாக வழக்கை ஏற்றுக்கொண்டதன் மூலமும், ஆட்டுக்குட்டியை ஓநாய் தூக்கிச் சென்றது போல எனது ரசீதை க்ரோதவ் எடுத்துச் சென்றதன் மூலமும் கையும் காலும் கட்டப்பட்டது போலானேன்.

என்னுடைய அறிக்கையை ஷெவேர்தின் கேட்டுவிட்டு, வழக்கை முற்றாகப் படித்துப் பார்த்தார். அதன் பெரும்பாலான ஆவணங்கள் மூர் ஆட்கள் எப்படி அந்த வழக்கை எனக்குக் கடத்தி விட்டிருக்கிறார்கள் என்பதையே காட்டின. அவர் புன்னகை செய்துவிட்டுச் சொன்னார்:

''சரி, சரி, இது மிகவும் ஆர்வமூட்டக்கூடியது... ஸ்தெபானவ் ஒன்னும் முட்டாள் அன்று. தனக்கு வந்த தைக் கை கழுவி விட்டுட்டார். நீங்க, பாவம் சிறு பிள்ளை, மிகுந்த அவசரத்தோடு அதை ஏத்துக்கிட்டீங்க. இப்ப உங்களுக்கு மகிழ்ச்சியான, ஆனா ஆபத்தான வயசு, **என்ன செய்யணும்** என்பதை நீங்க ஏற்கெனவே கற்றுக் கொண்டிருக்கீங்க, ஆனா **என்ன செய்யக்கூடாது** என்பதைக் கற்றுக் கொள்ளவில்லை... ஸ்தெபானவோ இரண்டை யுமே கற்றுக் கொண்டிருக்கிறார், குறிப்பா இரண்டாவ தை... இப்ப நாம என்ன செய்வது? நடைமுறையில் சன்னல் திருடனைக் கண்டுபிடிப்பது சிரமமானது... எஸ். வாயிலே நுரையாத் தள்ளுறார், சிங்கத்தைப் போல கர்ஜிக்கிறார், அவருக்கு நாம் அறிக்கை கொடுக்கணும்னு வற்புறுத்துறார்... நாம் புறப்படலாம், தம்பி. மகிழ்ச்சி யின்மையைத்தான் நான் அவதானிக்கிறேன்! களவு கொடுத் தவருடைய இயல்பு எனக்கு மிக நன்றாகத் தெரியும்.''

நாங்கள் எஸ். என்பவரின் அலுவல் அறைக்குப் போய்ச் சேர்ந்த போது இந்த வழக்கிற்குப் பொறுப் பிலுள்ள ஆய்வாளர் என்று ஷெவோர்தின் என்னை அவ ருக்கு அறிமுகம் செய்தார். சிறிய, தடித்த உருவமும், நரைத்த முடியும் கொண்ட எஸ். மிகவும் எரிச்சலுற்ற நிலையில் இருந்தார்.

''ஓகோ, இவர்தான் ஆய்வாளரா?'' என உறுமினார். ''அப்படியே, ஏன் எல்லாவகையான திருடர்களும் மக்கள் கமிஸார்களின் குடியிருப்புகளுக்குள்ளாக நுழைந்து பொரு ளோட போறாங்கன்னு இப்பத் தெரியுது! தோழர் ஷெ வோர்தின், நீங்க நடத்துறது கிண்டர்கார்டனா அல்லது அரசு வழக்குரைஞருடைய அலுவலகமா?''

நான் இளைஞன் என்றாலும் மேல்நிலைக்கு வரக் கூடிய தகுதியுள்ள புலனாய்வாளன் என்றும், நன்கு வேலை செய்கிறேன் என்றும் ஷெவோர்தின் கண்ணியமாக ஆனால் மதிப்புடன் பதிலளித்தார். மேலும் கமிஸாருடைய கேள் விக்குப் பதில் தரும் முறையில் கமிஸாரின் ஆய்வாளர் களுடைய வயதுகளைப் பற்றிக் கேட்பது தனக்கு நோக் கம் இல்லை என்றார்.

எஸ். முன்னிலும் அதிகமாகச் சீறியெழுந்து கத்தத் தொடங்கி, மூன்று நாள்களுக்குள்ளாகக் குற்றவாளி கைது

செய்யப்படவில்லை என்றால் தான் அரசுக்குப் புகார் செய்யப் போவதாக மிரட்டினார். திருடு போன பிற பொருள்களைப் பற்றி அவர் கவலைப்படவில்லை, ஆனால் நாணய சேகரிப்பாளரான அவர், தொன்மை நாணயங் களைச் சேகரிப்பதில் தனது வாழ்க்கையைச் செலவிட்ட வர், அவரது அசாதாரணமான நாணயத் தொகுப்பில் மகா அலெக்சாந்தர் காலத்திய துளையிட்ட தினார் நாண யங்கள் இருந்தன, இது வேடிக்கையானது அன்று, மண் டல அரசு வழக்குரைஞருடைய சோம்பேறித்தனத்தை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை, தொட்டியி லிருந்து இப்போதுதான் வந்துள்ள புலனாய்வாளர்களிடம் அவர் எந்த நம்பிக்கையும் கொண்டிருக்கவில்லை, பொது வில், அப்போதிலிருந்து நேரத்தைக் கணக்கிட்டு மூன்று நாள்களுக்கு மேல் அவர் காத்துக் கொண்டிருக்கப் போவ தில்லை...

ஷெவேர்தினும் கூட கோபத்தின் உச்சத்தை அடைந்து விட்டார், ஆனால் ஓர் இளம் புலனாய்வாளரின் முன் னிலையில் உரையாடலைத் தொடர்ந்து நடந்துவது இய லாது என்பதைக் கண்டு, அவருக்காக வெளியே காத் திருக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். அரை மணி நேரம் கழித்து கோபத்தால் முகஞ்சிவந்தவாறு வெளியே வந்து அவருடைய அலுவலகத்திற்கு என்னை அழைத்துச் சென்றார்.

வழியிலும், பிறகு அலுவலகத்திலும் எஸ். உடைய 'தான் தோன்றித்தனமான போக்கை'யும், 'சோஷலிச மற்ற அகந்தையை'யும் திட்டித் தீர்த்தார். உண்மையாக வே, சில ஆண்டுகளுக்குப் பிறகு பதவிக்குத் தகுதியற்ற வர் என மக்கள் கமிஸார் பதவியிலிருந்து எஸ். நீக்கப் பட்டார்.

ஷெவேர்தின் சரியாகக் குறிப்பிட்டது போலவே, வீடு களுக்குக் கன்னம் வைக்கும் களவுகளை விசாரிப்பது மிக வும் சிரமமானதென்றும், கண்டுபிடிக்கப்பட்டவற்றின் விழுக்காடு மிகக் குறைவு என்றும், அத்துடன் புலனாய் வாளனான என்னிடம் உளவாளிகளோ, முகவர்களோ கிடையாது என்பதால் வெறும் புலன் விசாரணை மூல மாக மட்டும் இந்தக் களவின் சிக்கலை விடுவிப்பது என் னால் இயலாது என்பதைப் பதற்றத்துடன் நாக் குழற,

கூர்மதி வாய்ந்த ஸ்தெபானவையும், எனது சொந்தக் கவனக்குறைவையும் உள்ளூறத் திட்டியவாறு அவரிடம் சொன்னேன்.

நான் மூர் அலுவலகம் சென்று, பாழாய்ப் போன இந்த வழக்கைத் துலக்குவதற்கு உதவியாகத் தமது ஆட்கள் எல்லாரையும் ஈடுபடுத்துமாறு ஸ்தெபானவுடன் பேசி ஏற்பாடு செய்துகொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு வீணான நம்பிக்கை! ஸ்தெபானவிடம் நான் பேசிய போது, இம்முயற்சியின் விளைவு பற்றித் தமக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை என்று அவர் என்னிடம் வெளிப்படை யாகவே கூறினார்.

''அருமை நண்பரே, நீங்க புரிந்துகொள்ளணும்,'' என்றார், ''அது ஒரு சன்னல் தொழில், யாரிடம் திருடு றோம் என்று திருடனுக்கு எந்த எண்ணமும் இருந்திருக் காது. திறமைவாய்ந்த தொழில்முறைக் கள்ளன் அந்த வீட்டில் கால் வைத்திருக்கவே மாட்டான்!.. திருடன் புதி யவனாக இருக்க வேண்டும், நிச்சயமா திரும்பத்திரும்பக் குற்றம் செய்றவனாக இருக்க முடியாது... உங்களால் அவனைக் கண்டுபிடிக்கவே முடியாது! இந்த வழக்கை உங்களிடம் தள்ளிவிடுவதற்கு முன்னால் க்ரோதவும் நா னும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்துவிட்டோம்...''

இப்படிச் சொல்லிவிட்டு, இனிய, மிகவும் பரிவுமிக்க புன்னகை செய்தார் ஸ்தெபானவ்.

முற்றிலும் மனம் உடைந்தவனாக முதல் பிரிகேடில் இருந்த எனது நண்பர்களைப் பார்க்கச் சென்றேன். நெருக் கமாக என்னிடம் கேள்விகள் கேட்ட ஓஸிபவ் தனது தலை யை அசைத்தான்: ''நத்தை நாசமாய்ப் போக! தனக்கு வரும் சிரமங்களை எப்போதுமே யார் தலையிலாவது கட்டி விடுகிறார்.''

முதல் பிரிகேடின் இளம் அதிகாரிகளுக்கு ஸ்தெபான வையும், அவருடைய 'ராஜதந்திர முறைகளையும்' பிடிக்க வில்லை. நான் சிரமத்தில் இருப்பதைக் கண்ட ஓஸிபவ் உதவி செய்ய விரும்பினான், ஆனால் அநுபவமுள்ள புல னாய்வாளன் என்ற வகையில், அவனுங்கூட, செயல்பூர் வமாக அந்த வழக்கின் நம்பிக்கையின்மையைக் கண் டான். ஸ்தெபானவுடன் அவனும் ஒத்துப்போக நேர்ந் தது: 'உண்மையான, தொழில்முறைத் திருடன்' கமிஸா

ருடைய வீட்டிற்குள்ளாகத் தன் உயிரைப் பணயம் வைத்து நுழைந்திருக்க மாட்டான்!

''உனக்கு எப்படி உதவி செய்வதென்று எனக்குத் தெரியலே, தம்பி,'' என்றான். ''எல்லாவற்றையும் வைத்துத் தீர்மானிக்கிற போது அந்த நாணயச் சேகரிப்பாளர் உன்னை நிம்மதியாக இருக்கவிட மாட்டார். சேகரிப்பாளர்களுடன் சம்பந்தப்படுத்திக் கொள்வதை விட மோசமானது எதுவுமில்லை. வழக்கமாக அவர்கள் எல்லாருமே வெறிபிடிச்சவுங்க. துளையிட்ட தினார் நாணயங்கள்! அவற்றிற்குத் துளைகள் இல்லாமல் இருந்திருந்தால் உனக்கு நன்றாக இருந்திருக்கும், ஆனா துளையுள்ளவைகளால் உனக்கு அதிருஷ்டமில்லாமல் போச்சு!''

அக்கணத்தில் ஓலிபவின் பெண் செயலாளர் உள்ளே வந்து ஒதெஸ்ஸாவிலிருந்து வந்த சங்கேதத் தந்தி ஒன்றை அவனிடம் ஒப்படைத்தாள். தந்தியைப் படித்த அவன் சிந்தனைவயப்பட்டவனாகக் காணப்பட்டான், பிறகு திடீரென்று முகமலர்ச்சியடைந்து, இயலாத சூழ்நிலை போலக் காணப்பட்ட நிலையில் எதிர்பாரா நம்பிக்கை ஒளி கண்டவனைப் போன்ற உணர்வுடன் அதை என்னிடம் ஒப்படைத்தான்.

''இதைப் படி, தம்பி,'' என்றான். ''உனது வழக்குத் தொடர்பானது இதில் இருக்கு. நீ அதிருஷ்டக்காரன் தான்!''

நான் தந்தியை வாங்கி இரு முறை அதைப் படித்தேன், ஆனால் நான் அதிருஷ்டக்காரன் என்பதைக் காட்ட எதையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதில் இருந்தது இதுதான்:

> ''மூர் தலைவர் யெமெல்யானவுக்கு பிரசித்திபெற்ற பூட்டுடைப்பான் 'அட்மிரல் நெல்சன்' இன்று மாஸ்கோ எக்ஸ்பிரசில் சர்வதேசத் தூங்கும் பெட்டியில் புறப்பட்டிருக்கிறான். பெரும்பாலும் முக்கியமான காரியமாக இருக்க வேண்டும். போன ஆண்டு பொதுமன்னிப்பின்படி விடுதலையானவன். அவனைக் கைதுசெய்ய எங்களிடம் எந்தக் காரணமும் இல்லை. புரட்சிக்கு முந்திய காலப் புனைபெயர்

கள்: யாஸ்தர்ஜெம்ப்ஸ்கி, ரொமனேஸ்கு, ஷூல்ட்ஸ்.

நிக்கலாயெவ்,
ஒதெஸ்ஸா புலனாய்வுத்துறைத் தலைவர்.''

''இதற்கும் துளையிட்ட தினார் நாணயங்களுக்கும் என்ன தொடர்பு?'' எனத் தயக்கத்துடன் ஓஸிபவைக் கேட்டேன்.

''நிறைய இருக்கு. எனக்கு 'அட்மிரல் நெல்சனை' நல்லாத் தெரியும். இரும்புப் பெட்டகங்களைத் துளையிட்டுத் திறப்பதில் அபாரமான திறமைசாலி, ஜார் காலத்திலேயே தனது தொழிலைத் தொடங்கியவன். ஐரோப்பா முழுக்கவும் அவனைத் தெரியும். பழங்காலத்துப் பக்காத் திருடர்களில் கடைசியானவன் என்று கூட நீ சொல்லலாம். திருடர்கள் உலகத்தின் மன்னன், அவனுடைய வார்த்தை சட்டம் போன்றது. அவன் நமக்கு உதவிசெய்வான்... நாளைக் காலையில் இங்கே இரு, ரயில் நிலையத்தில் அவனைச் சந்திக்கிறதுக்கு நாம் போவோம்.''

மறுநாள் காலையில் ஒதெஸ்ஸா-மாஸ்கோ எக்ஸ் பிரசை எதிர்பார்த்துக்கொண்டு நாங்கள் ரயில் நிலையத்தில் இருந்தோம். இரயில் நின்றதும் சர்வதேசத் தூங்கும் பெட்டியை நெருங்கி 'அட்மிரல் நெல்சனு'க்காகக் காத்திருந்தோம். வைக்கோல் தொப்பியும், கையில் நேர்த்தியான மழைக் கோட்டும், தந்தத்தால் செய்த பெரிய சிங்கத் தலை பிடி வைத்த பார்வையான பிரம்பும் கொண்டு வெளியே வந்தான். 'அட்மிரல்' நடுத்தர வயதினன், ஒடிசல் தேகம், அடர்த்தியற்ற சிவந்த முடி, தன்னம்பிக்கையும் சிரிப்பும் மிளிரும் ஒற்றைக் கண், மற்றொரு கண் கரிய பட்டுத் துண்டால் மூடப்பெற்றிருந்தது. பார்ப்பதற்குச் செல்வம் மிகுந்த வணிகனோ, அனுபவம் வாய்ந்த காப்டனோ, அயல்நாட்டுச் சலுகைக் கம்பெனிக்காரனோ, திரைப்படங்களில் வரும் சர்வதேச வில்லனோ என்று எண்ணும்படி இருந்தது அவனது தோற்றம்.

''ஹலோ, 'அட்மிரல்'!'' என்றான் ஓஸிபவ். ''தலைநகர வருகையை வரவேற்கிறோம்!''

''எப்படி, ஓஸிபவ், என்ன காரியமா நீங்க இங்கே

வந்தீங்க!'' என்று மகிழ்ச்சியால் வியந்து கூவிய 'அட்மிரல்' அவ்வளவு அழுத்தமாகக் கை குலுக்கத் தொடங்கியது, இந்தச் சந்திப்பை எதிர்நோக்கி தூங்காதிருந்த வனைப் போலக் காணப்பட்டது. ''இவ்வளவு காலமும் எங்கே இருந்தீங்க? ஆக, நமது புலனாய்வாளர்கள் என் வருகை பற்றி உங்களுக்குத் தெரிவித்து விட்டார்கள் போலும். மும்முரமாகச் சுற்றும் ஒரு மனிதனைப் பற்றிக் கவலைப்படுவதைத் தவிர செய்வதற்கு அவர்களுக்கு வேறு எதுவுமே இல்லையா? அய்... ஒரு குழந்தையைப் போல நிர்வாணமா வந்திருக்கேன்—பை எதுவுமில்லை, கருவிகளும் கிடையாது. ஆக எது அவர்களை அலற வைக்குது?.. சும்மா ஒரு மாற்றத்துக்காக நான் இங்கே வந்தேன், சுற்றிப் பார்த்துத் திரும்பத்தான், ஆனா இந்த முட்டாள்கள் உங்களை அலைக்கழிக்கிறாங்க! வேறு வழியில் சொன்னால், அவர்கள் செய்ததற்காக நன்றி சொல்றேன், ஏன்னா அது உங்களைச் சந்திக்கிற வாய்ப்பை எனக்குத் தந்தது...''

'''அட்மிரல்', உங்களுடன் விவாதிப்பதற்கு ஒரு முக்கியமான விஷயமிருக்கு,'' என்று இடைமறித்தான் ஓஸிபவ். ''நாம் ரெஸ்டாரெண்டுக்குப் போய் பேசலாம்.''

''ஒதெஸ்ஸாவில் அவர்கள் சொல்வது போல,'போலீஸ்காரர் உட்காரச் சொன்னால் நிற்பது மரியாதை அன்று','' என்று முறுவலிப்புடன் சொன்னான் 'அட்மிரல்'. ''நாம் போய் பீர் பருகியபடியே வாழ்க்கையைப் பற்றிப் பேசலாம். இந்த அருமையான இளைஞர் யார்?'' என்று என்னைச் சுட்டிக்காட்டிக் கேட்டான்.

''இவர் என்னோட அருமை நண்பர். இதெல்லாம் எதைப் பற்றி என்பது அவருக்குத் தெரியும்,'' என்று விடையளித்தான் ஓஸிபவ்.

ரெஸ்டாரெண்டில் துளையிட்ட தினார்கள் பற்றி ஓஸிபவ் கூறியதைக் கேட்ட 'அட்மிரலு'க்கு சொல்ல முடியாத ஆத்திரம் ஏற்பட்டது.

''உங்க தலைநகரத்தில் என்ன நடக்குது?'' என்று சிறினான். ''மாஸ்கோ திருடர்கள் கெட்டுப் போயிட்டாங்க என்று நான் உங்களுக்குச் சொல்றேன்! கமிஸாருடைய வீட்டிற்குள் நுழைவதற்கு எவ்வளவு தைரியம்! அவர்களுக்கு நெப்காரர்களும், தனிப்பட்ட அலுவலகங்

களும், வெளிநாட்டுக் கம்பெனிகளும் போதலியா? அவர் களுடைய கைகள் சோவியத் அரசுக்கு எதிரா உயர்ந்து விட்டது! சோவியத் குடிமகன் என்ற முறையில் இது எதிர்ப்புரட்சிக்கு வழிவகுக்கும் என்று கூறுகிறேன்! ஓஸிபவ், என்னோட curriculum vitae—வாழ்க்கை நடை முறை அல்லது அதை எப்படி வேண்டுமானாலும் சொல் லுங்க உங்களுக்குத் தெரியும், ஏன்னா எனக்கு லத்தீன் மொழி அவ்வளவு நன்றாகத் தெரியாது,—உங்களுக்கு எல்லாமே தெரியும், உங்களைக் கேட்க விரும்புறேன்: மாபெரும் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, அரசிற்கோ கூட்டுறவுக் கழகத்திற்கோ சொந்தமான இரும்புப் பெட்டகம் ஒன்றிலாவது 'அட்மிரல் நெல்சன்' கை வைத் ததுண்டா? ஆமாம் அல்லது இல்லை என்று சொல்லுங்க?''

''எதிலும் கை வைத்ததில்லை, 'அட்மிரல்'!'' என்று ஓஸிபவ் ஒப்புக்கொண்டான். ''அது உண்மை.''

''உண்மையா? உண்மை அன்று, ஆனா உலகப் பொது நோக்கைப் பற்றிய விஷயம். பிரெஞ்சுக்காரர்கள் சொல் வது போல, எனது profession de foi—உள்ளார்ந்த கோட் பாடு இது. கவனமாக் கேளுங்க, இளைஞரே. நீங்க இப் பத்தான் வாழ்க்கையைத் தொடங்கியிருக்கீங்க, இந்த விவரம் உங்களுக்கு உபயோகமா இருக்கும். என்னோட உலக நோக்கு! என் கைகளைப் பாருங்க! ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதின்மூன்றாம் ஆண்டில் வியன்னா வில் நடந்த புலனாய்வாளர்களின் அகில உலக மாநாட்டில், பெர்லின் 'பொலித்ஸை-ப்ரெஸிதெந்த்' இந்தக் கைகள் அசாதாரணமான படைப்பு என்று அழைத்தார். அவர் இப்ப என்ன சொன்னார் என்பதைக் கேட்டீங்களா? 'Meine lieben Herren, das ist wunderlich und artistisch.' (என் அன்பார்ந்த கனவான்களே, இவை வியப்பூட்டுபவை, கலைநுட்பம் வாய்ந்தவை.) இப்ப, இந்தக் கைகளால் ஏதாவது சேமிப்பு வங்கியிலிருந்தோ, அரசு வங்கியின் கிராமக் கிளையிலிருந்தோ நான் எதையேனும் எடுத்த துண்டா? இல்லவே இல்லை... எனக்கு நானே எப்போதும் சொல்லிக்கொண்டேன்: 'ஸெமியோன், மக்களது பொது உடைமையிலிருந்து ஒரு காசு திருடுவதை விட கைகளை வெட்டி எறிவதே மேல்!' ஆகவே தான் எனக்கு அவ்வளவு கோபம் வருது!''

''சரி, இனி நாம் என்ன தீர்மானத்திற்கு வருவது,'அட்மிரல்'?'' என்று கேட்ட ஓலிபவ், அவனது ஆத்திரப் பெருக்கிற்கு அணை போட்டான்.

'அட்மிரல் நெல்சன்' அவனைப் பொருள் பொதிந்த வாறு நோக்கித் தணிந்த குரலில் கூறினான்:

''உங்களுக்குத்தான் என்னோட கோட்பாடுகள் தெரியுமே, இல்லையா? நாணயங்கள் அகப்பட்டு விடும், நபர் அகப்படமாட்டான்... புரியுதா?''

''புரியுது,'' என்று பதில் அளித்த ஓலிபவ், பேச்சு வார்த்தை நடத்திய இரு தரப்பாரும் உடன்படிக்கைக்கு வந்துவிட்டார்கள் என்பதைக் காட்டும் தோரணையில் எழுந்தான்.

ஓலிபவின் தொலைபேசி எண்ணைக் குறித்துக்கொண்ட 'அட்மிரல்' அவசியமான ஆட்களை உடனே சந்தித்து, 'முறையான நடவடிக்கை எடுத்து, இறுதி எச்சரிக்கை விடுப்பதாக' வாக்களிக்கவே நாங்கள் அவனிடம் விடை பெற்றுக்கொண்டு மூருக்குக் காரில் திரும்பினோம்.

''இந்த ஒதெஸ்ஸா போக்கிரி ஏதாவது செய்வான் என்று உண்மையாகவே நம்புறாயா?'' என்று ஓலிபவைக் கேட்டேன்.

''இந்த நாணயங்களைத் திருடியது மனிதன் தான், பிசாசு இல்லை என்றால், அதிக அளவாக இரண்டு நாளைக்குள் அவை நம் கைக்கு வந்து சேர்ந்துவிடும்,'' என்று ஓலிபவ் நிதானமாக மறுமொழி சொன்னான். ''தம்பி, அவனை உனக்குத் தெரியாது! இவனோட மாஸ்கோ வருகையே குற்றவாளிகள் சமூகத்துக்குப் பெரிய நிகழ்ச்சியாகும். அவன் ஆத்திரமடைந்தது வெறும் பாசாங்கு அன்று. திருடர்கள் கும்பலைப் படாதபாடு படுத்திவிடுவான்! 'அட்மிரல் நெல்சன்' யாரையும் ஒரு போதும் போலீசுக்குக் காட்டிக் கொடுத்ததுமில்லை, காட்டிக் கொடுக்கப் போறதுமில்லை என்பதற்கு நான் அத்தாட்சி கூற முடியும். ஆனா மனிதனுக்கு மனிதன் பேசுற மாதிரி அவனிடம் பேசினால், உயிரே போவதானாலும் கொடுத்த வாக்கை நிறைவேற்றாமல் விட மாட்டான்.''

''என்னைப் பொருத்தவரை, அவன் பயங்கரமான தற்பெருமைக்காரனாத் தோனுது,'' என்றேன். ''உதா

ரணமா, பெர்லின் 'பொலித்ஸை-ப்ரெஸிதெந்த்' அவனைப் பற்றி பரவசமடைந்ததாகச் சொன்னானே ஒரு கதை...''

''கதையா?'' என்று ஓஸிபவ் உறுமினான். ''அலுவல கத்துக்குப் போவோம். அது எந்த மாதிரிக் கதை என் பதை உனக்குக் காட்டுறேன்... உண்மையாகவே அவ னுக்கு அபாரமான கைகள்...''

அரைமணி நேரங் கழித்து, மாஸ்கோ போலீஸ் படை யிடம் இருந்த குற்றவாளிகள் வரலாற்றின் பழுப்பேறிய பக்கங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்; அதன் அட்டை மீது இவ்வாறு பொறிக்கப்பட்டிருந்தது:

''யாஸ்தர்ஜெம்ப்ஸ்கி கஸிமீர் ஸ்தானிஸ்லாவவிச் என்றும், ஜான் ரொமனேஸ்கு என்றும், வில்ஹெல்ம் ஷூல்ட்ஸ் என்றும் புனைபெயர்கள் கொண்டவன்—மிக வும் பயங்கரமான பெட்டகம் உடைக்கும் சர்வதேசப் புள்ளி, பேரரசிலும் வெளிநாடுகளிலும் தொழில் நடத்தி வருபவன்; சென்ட் பீட்டர்ஸ்பர்க், ஒதெஸ்ஸா, மாஸ்கோ, ரஸ்தோவ்-தோன், நகிச்சேவான் ஆகிய நகர்களிலும், போலிஷ் அரசிலும் போலீஸ் படைகளின் பதிவுப் புத்த கங்களில் இவனைப் பற்றிய தகவல்கள் குறிக்கப் பட்டுள் ளன.''

பிடிபடாமல் தப்பித் திரியும் 'அட்மிரல் நெல்சனது' பெருஞ் செயல்களை விவரிக்கும் போலீஸ் படைகளின் எண்ணற்ற அறிக்கைகளும் விசாரணைக் குறிப்புகளும் அந்த வழக்கு வரலாற்றில் அடங்கியிருந்தன.

இவை அனைத்தையும் விட அதிக விவரங்கள் கொண் டது, உள்நாட்டு அமைச்சக போலீஸ் துறைத் தலைவர் எஸ். பெலேத்ஸ்கி என்பவர் எழுதியிருந்த நினைவறிக்கை ஆகும். மார்ச் 12, 1913 ஆம் தேதியிட்ட அது, 'மாண்பு மிகு உள்நாட்டு அமைச்சர் என். மக்லகோவ் அவர் களுக்கு' என முகவரியிடப்பட்டிருந்தது. அமைச்சரின் தீர் மானப்படி, ருஷ்யப் பேரரசைச் சேர்ந்த பெரிய நகரங் களிலுள்ள போலீஸ் புலனாய்வுத் துறைகளின் தலைவர் களுக்கு 'தகவலாகவும் வழிகாட்டியாகவும் இருக்கும் பொருட்டு' அறிக்கையின் பிரதிகள் அனுப்பப்பட்டிருந் தன.

அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

''இரும்புப் பெட்டகங்களை நெம்பியும் உருக்கியும்

திறந்து திருடுவதில் பெயர் பெற்ற நிபுணனும், ஒதெஸ்ஸா வாசியும், யாஸ்தர்ஜெம்ப்ஸ்கி, ரொமனேஸ்கு, ஷூல்ட்ஸ் என்ற புனைபெயர்கள் கொண்டவனும், மேலே குறிப்பிட்ட குற்றங்களுக்காகப் பல முறை தண்டனை பெற்றவனுமாகிய நபரின் குற்ற நடவடிக்கைகள் பற்றி, மாட்சிமை பொருந்திய தங்கள் உத்தரவுப்படியே இவ்வறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

''பேரரசின் பல நகர்களில் வங்கிகளின் இரும்புப் பெட்டகங்கள் துணிகரமாகச் சூறையாடப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றி, முந்தைய ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் போலீஸ் துறைக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. நீஷ்னி நோவ்கரத், சமாரா ஆகிய இரு நகரங்களிலும் நடந்த கொள்ளைகள் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை.

''ஆகஸ்டு 12, 1912 ஆம் தேதி இரவில், இனந்தெரியாத ஒருவன் வோல்கா-காமா வங்கியின் நீஷ்னி நோவ்கரத் கிளைக் கட்டடத்திற்குள் புகுந்து, வங்கிகளுக்கான இரும்புப் பெட்டகங்கள் தயாரிப்பதில் பெயர் பெற்ற லைப்ஸிக்கில் உள்ளே 'ஓட்டோ க்ரில் கம்பெனி'யால் தனிப்பட்ட அமைப்பில் தயாரிக்கப்பட்ட இரண்டு இரும்புப் பெட்டகங்களைத் திறந்து விட்டான்.

''நீஷ்னி நோவ்கரத் ஆளுநர் அலுவலத்தைச் சேர்ந்த தனி அதிகாரி ஒருவரின் உதவியுடன் நீஷ்னி நோவ்கரத் புலனாய்வுப் பிரிவினர் இது குறித்து விசாரணை நடத்தினார்கள். வங்கியின் இரவுக் காவல்காரன் இவான் கொஸொலுப் முப்பது நிமிடங்களுக்கு மேற்படாத நேரம் தனது காவலிடத்தை விட்டு அப்பால் போயிருந்ததாகவும், இந்த இடைவேளைக்குள்ளாகவே குற்றவாளி வங்கியில் இருந்திருக்க வேண்டும் என்பதுவும் இந்த விசாரணையின் மூலம் உறுதியாயிற்று; மேற்படி காவல்காரன் வங்கியில் பல ஆண்டுகள் களங்கமற்ற சேவை செய்தவன்; உள்ளூர்ப் போலீஸ் நிலையத்தினர், நீஷ்னி நோவ்கரத் ருஷ்ய மக்கள் சங்கத்தினர், வார்சனோபிய் பாதிரியார் ஆகியவர்களிடமிருந்து பரிந்துரைகள் பெற்றவன். இந்தக் காரணங்களால் அவனைப் பற்றிச் சந்தேகம் கொள்வதற்கு இடமில்லை.

''கொஸொலுப் கூறிய விவரம் இதுதான்: அதிகாலை ஒரு மணிக்கு மேலிருக்கும் போது, வெளியே வண்டிப்

போக்குவரத்து நின்று, தெருக்கள் வெறிச்சோடிப் போய், 'ருஷ்யா' ரெஸ்டாரெண்டில் விளக்குகள் அணைக்கப்பட்டு விட்டன என்பதைக் கவனித்திருக்கிறான். அவனது வீடு வங்கிக்கு மிக அருகிலேயே இருந்ததால், இரவில் கண்விழித்திருக்கும் பொருட்டு, ஒவ்வோர் இரவும் இடையிடையே வீடு சென்று ஒரு கோப்பைத் தேநீர் அருந்திவிட்டுத் திரும்புவது வழக்கம். அன்றிரவும் அதே போலச் சிறிது நேரத்திற்குக் காவலிடத்தை விட்டுப் போகலாம் எனத் தீர்மானித்து, வாயில் கதவைப் பூட்டிவிட்டு வெளியே சென்றான். டெர்பித் தொப்பி அணிந்து எதிர்ப்பட்ட இளைஞன் ஒருவன் அவனிடம் சிகரெட் பற்றவைக்க நெருப்புக் கேட்டான்.

''சுமார் முப்பது நிமிடங்களுக்குப் பின்னர், தனது இடத்திற்குத் திரும்பி வந்த கொஸொலுப் வெளிக்கதவின் பூட்டு திறந்து கிடப்பதையும் இரும்புப் பெட்டகங்கள் இருந்த நிலவறைக்குச் செல்லும் வழியில் உள்ள இரும்புக் கதவுகள் திறந்து இருப்பதையும் கண்டான். அவன் உடனே போலீசாருக்குத் தகவல் கொடுத்து வரவழைத்ததோடு, வங்கியின் தலைவரும், நகர்மன்ற உறுப்பினரும், கௌரவக் குடிமகனுமான கலஷ்சோகினைத் தேடலானான். அவர் இருக்கும் இடமே காலை நான்கு மணிவரை தெரியவில்லை. பிறகு மிகுந்த சிரமத்துடனும், உள்ளூர் போலீசார் உதவியுடனும் திருவாட்டி ஸ்கரகோதவா என்பவள் நடத்திவந்த விபசாரவிடுதியில் அவர் இருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது.

''மிகச் சிக்கலான இரகசியப் பூட்டுகள் அமைந்த இரண்டு இரும்புப் பெட்டகங்களைக் குற்றவாளி குறிப்பிடத்தக்க திறமையுடனும் கூர்ந்த தொழில்நுட்ப அறிவுடனும் திறந்து விட்டான் என்பது பின்னர் உறுதிசெய்யப்பட்டது. இரும்புப் பெட்டகங்களிலிருந்து நோட்டுகளாகச் சுமார் லட்சம் ரூபிள்களை எடுத்துக்கொண்டு குற்றவாளி எங்கோ மறைந்துவிட்டான்.

'''ஓட்டோ க்ரில் கம்பெனி', தனிப்பட்ட இரகசியப் பூட்டுகளைக் கொண்ட தங்களது இரும்புப் பெட்டகங்களை அவற்றின் அமைப்பை அறியாத எவரும் ஒருகாலும் திறக்க முடியாது என்று வோல்கா-காமா வங்கியின் நிர்வாகக் குழுவிற்கு உத்தரவாதம் அளித்திருந்தனர். ஆகவே

திரு. கலஷ்சோகின் அக்கம்பெனியின் தலைவர் ஓட்டோ க்ரிலுக்கு உடனே தந்தியடித்து, களவைப் பற்றித் தெரி வித்தார். எல்லாச் செலவுகளுக்கும் கொடுத்து, கம்பெனி யின் தலைமை என்ஜினியராகிய திரு.ஹான்ஸ் ஷ்மெல்ட்ஸ் என்பவரை நீஷ்னி நோவ்கரதுக்கு அனுப்பி இருப்பதாக அன்றைய தினமே அவர் பதிலும் அளித்தார். சில நாள் களுக்குப் பின் மேற்படி ஷ்மெல்ட்ஸ் நீஷ்னி நோவ்கர திற்கு வந்து சேர்ந்தார். வங்கித் தலைவர், போலீஸ் அதிகாரிகள் ஆகியோர் முன்னிலையில் இரு பெட்டகங் களையும் மிக நுட்பமாகச் சோதித்துப் பார்த்தார். அவர் தான் அந்த இரகசியப் பூட்டுகளைக் கண்டுபிடித்தவர், இரும்புப் பெட்டக நிபுணர், ஆயினும் முப்பது நிமிடங் களில் அவற்றைத் திறப்பது தனக்கு இயலாது என்றும், குறைந்தது ஐந்து மணி நேரமாவது பிடிக்கும் என்றும், அதுவும் தனிப்பட்ட கருவிகள் இருந்தால் மட்டிலுமே முடியும் என்றும் எல்லார் முன்னிலையிலும் அவர் அறி வித்தார்.

''பிறகு, நீஷ்னி நோவ்கரத் போலீஸ் தலைவருடன் தனிப்பட்ட முறையில் பேசிய போது, மேற்படி குற்ற வாளி கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனை பெற்றால் தண் டனைக் காலம் முடிந்த பின்பு அவனை உயர்ந்த சம்பளத் தில் வேலைக்கு வைத்துக்கொள்ள 'ஓட்டோ க்ரில் கம் பெனியார்' மகிழ்ச்சி அடைவார்கள் என்றும் ஷ்மெல்ட்ஸ் சொன்னார். தமது வார்த்தைகளை உறுதிப் படுத்தும் பொருட்டு, அந்தக் குற்றவாளியுடன் பேச்சு வார்த்தை நடத்தும் பொறுப்பை அந்த அதிகாரியே மேற்கொள் வாரானால் அவருக்கு விலையுயர்ந்த பரிசு தருவதற்கு முன்வந்தார். இயல்பாகவே, போலீஸ் தலைவர் அப்பரி சை மறுத்து விட்டார்—என்பதையாவது நீஷ்னி நோவ் கரத் ஆளுநருக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் அவர் கூறி யிருந்தார்.

''இதற்கிடையில், எடுப்பான உடையும் செம்பட்டைத் தலையும், டெர்பித் தொப்பியுமாகக் காணப்பட்ட அறி முகமற்ற இளைஞன் ஒருவன், வோல்கா நதியின் கீழ்ப் புறமாக செல்லவிருந்த, வோல்கா கப்பல் கம்பெனியாரின் 'இளவரசி தத்தியானா' என்ற கப்பலில் முதல் வகுப்புப் பயணச் சீட்டுடன் ஆகஸ்டு பதின்மூன்றாம் தேதி ஏறி

னான் என்று உள்ளூர்ப் போலீசார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளால் உறுதிப்படுத்தப்பட்டது. அதே மாலையில், முதல் வகுப்பு ஓய்வெடுக்கும் கூடத்தில் மற்ற பயணிகளுடன் சீட்டு விளையாட்டில் அவன் சேர்ந்து கொண்டான். பின்னர் கிடைத்த தகவலின் படி, நீஷ்னி நோவ்கரத் சந்தையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த பெயர்பெற்ற சீட்டு விளையாட்டு மோசடிக்காரனான ஸிக்மூன்ட் ப்ஷெதேட்ஸ்கி அவர்களில் ஒருவன் என்பது தெரியவந்தது. அங்கு அவன் போலிஷ் கவுன்ட் லான்கேவிச் என்று தன்னைக் காட்டிக்கொண்டு, பெருந்தொகைகள் வைத்து விளையாடும் பற்பல சூதாட்ட விடுதிகளுக்குச் சென்றுவந்தான். சந்தையிலிருந்து திரும்பி வரும் பல ருஷ்ய, பாரசீக வணிகர்கள் கப்பலில் இருந்ததைக் கண்ட ப்ஷெதேட்ஸ்கி பெருந்தொகைகளைப் பணயம் வைக்கும் ஆட்டத்தைத் துவக்கலானான். இதில் மேற்குறித்த டெர்பித் தொப்பிக்கார இளைஞனும் கலந்து கொண்டான்.

''இந்த ஆட்டக்காரர்களுக்குத் தின்பண்டங்களும் வெறியூட்டும் மதுவகைகளும் பரிமாறியவன் கப்பல் ஸ்டூவர்ட் முர்ஸாயெவ் என்ற தாத்தாரியனது வாக்குமூலப்படி, ஆட்டத்தில் பெருந்தொகைகள் பணயம் வைக்கப்பட்டன. அவர்கள் ஆயிரக்கணக்கில் ரூபிள் வைத்து ஆடிக்கொண்டிருந்திருக்கிறார்கள். மேலும் புகழ்பெற்ற சமாராமாவு வணிகன் ப்ரோகரவ், இரு பாரசீக வணிகர்களான ஹுசேன் ஹட்ஜார் மற்றும் சுலைமான் ஐரோம், க்வாலின்ஸ்க் மாவட்ட பிரபுக்களின் தலைவர் கவுன்ட் குஷெலெவ் ஆகிய அனைவரையும் ப்ஷெதேட்ஸ்கி விரைவிலேயே துடைத்துவிட்டான். மொத்தத்தில் நூறாயிரம் ரூபிளுக்குக் குறைவில்லாமல் அவன் ஜெயித்துவிட்டான். முர்ஸாயெவின் வாக்குமூலப்படி, டெர்பித் தொப்பிக்கார இளைஞனும் நிறையப் பணத்தை இழந்திருக்கிறான். தன் அருகிலேயே எப்போதும் வைத்துக் கொண்டிருந்த ஒரு பெரிய தோல் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டிருந்தான். அதில் நோட்டுகள் பிதுங்கப்பிதுங்க ஏராளம் இருந்ததை முர்ஸாயெவ் எப்படியோ பார்த்து விட்டான்.

''ஆட்டம் முடிந்து, பயணிகள் அவரவர் அறைகளுக்குச் சென்ற பிறகு, ஓய்வெடுக்கும் கூடத்தைத் துப்புரவு

செய்து கொண்டிருந்த மூர்ஸாயெவ் மூன்றாவது அறையிலிருந்து சப்தம் வந்ததைக் கேட்டு, கதவருகே விரைந்து சென்று, சாவித்துவாரம் வழியாக உள்ளே பார்த்தான். ப்ஷெதேட்ஸ்கி அறைக்குள்ளே, அவனும் டெர்பித் தொப்பிக்கார இளைஞனும் இருந்ததைக் கண்டான். இளைஞன் ப்ஷெதேட்ஸ்கியின் சட்டைக் காலரைப் பற்றி உலுக்கிய வாறே, 'கயவாளிப் பயலே, தொகையில் பாதியைக் கொடுத்து விடு, அல்லது உன்னைத் தொலைத்துவிடுவேன்!' என்று கத்திக் கொண்டிருந்தான். அதற்கு ப்ஷெதேட்ஸ்கி அந்த இளைஞன் இழந்துள்ள பணத்தை மட்டும் திரும்பத் தருவதாகக் கூச்சலிட்டான். பிறகு அவர்கள் சண்டையிடத் தொடங்க, இளைஞன் மிதப்பு வளையத்தால் ப்ஷெதேட்ஸ்கியின் தலையில் படபடவெனச் சாத்திவிட்டான். தான் ஜெயித்துள்ள தொகையில் பாதியை இளைஞனுக்குக் கொடுத்துவிடுவதாக ப்ஷெதேட்ஸ்கி ஒப்புக் கொள்ளும் வரை அவனை அடித்து நொறுக்கினான். ஆகவே, அகாலமான நேரத்தையும் பொருட்படுத்தாது ப்ஷெதேட்ஸ்கி எதிர்ப்பட்ட முதலாவது சிறிய கப்பல் துறையில் கைப்பெட்டியுடன் குதித்துச் சென்றுவிட்டான். அப்போது டெர்பித் தொப்பிக்கார இளைஞன் கப்பல் மேல் தளத்திலிருந்து மகிழ்ச்சியோடு கத்தினான்: 'இப்ப உனக்கு அன்னை ஒதெஸ்ஸாவைக் காட்டுவேன், சோதாப் பயலே! நீ வெறும் பிலுக்கன், சீட்டாட்டக்காரன் அன்று!'

''சில நாள்களுக்குப் பிறகு, 'இளவரசி தத்தியானா' சமாரா ஆற்றுத் துறையை அடைந்ததும் தொப்பிக்கார இளைஞன் இறங்கிச் சென்றுவிட்டான். அடுத்த இரவு இனந்தெரியாத ஒரு குற்றவாளி சமாரா வணிகர் வங்கியின் இரு இரும்புப் பெட்டகங்களைத் திறந்து நூற்று ஐம்பத்து ஆறு ஆயிரம் ரூபிளைத் துணிகரமாகத் திருடிப் போய்விட்டான். நீஷ்னி நோவ்கரதில் போலவே இங்கும் குற்றவாளி வியக்கத்தக்க அளவு மிகக் குறுகிய நேரத்தில் தனது வேலையை முடித்துவிட்டான் என்பது கவனத்திற் குரியது.

'''இளவரசி தத்தியானா' சமாரா ஆற்றுத் துறை சேர்ந்த அன்று மாலையில் செம்பட்டைத் தலையும் டெர்பித் தொப்பியுமாக விளங்கிய இளைஞன் ஒருவன் 'வோல்கா' ஓட்டலில் நுழைந்து கலிமீர் யாஸ்தர்ஜெம்ப்ஸ்கி

என்பவனுக்கு அளிக்கப்பட்டிருந்த பாஸ்போர்ட்டைக் காட்டி, ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டான் என்பது போலீஸ் விசாரணை மூலம் உறுதியானது. மறு நாள் இரவு சுமார் மூன்று மணி அளவில் ஒரு சூட்கேசுடன் நகரத்திலிருந்து திரும்பி வந்த அவன், தனக்குக் கதவைத் திறந்துவிட்ட வேலைக்காரி அக்ரபீனா கோரினாவுக்கு ஐந்து ரூபிள் இனாம் கொடுத்தான். அவளை விசாரித்த போது, அவன் நிதானத்தோடு இருந்த போதிலும் மிகக் களைப்போடு இருந்தது போலத் தெரிந்தது எனக் கூறினாள்.

''இத்தகவல்கள் விஷயத்தை ஓரளவு தெளிவாக்குகின்றன. ஷூல்ட்ஸ்-ரோமனேஸ்கு என்ற பிரபலமான இரும்புப் பெட்டகத் திருடன், யாஸ்தர்ஜெம்ப்ஸ்கி என்ற மாற்றுப் பெயருடையவன் என்பது கார்கவ் போலீசாருக்குத் தெரிந்திருந்தது.

''ஆனால் இந்தத் தகவல்கள் கிடைத்து, உறுதிப்படுத்திக் கொள்வதற்குள் ஷூல்ட்ஸ்-யாஸ்தர்ஜெம்ப்ஸ்கி சமாராவிலிருந்து மறைந்துவிட்டான்.

''எட்டு மாதங்களுக்குப் பிறகு ஜெர்மன் போலீசாரின் கவனத்தை ஈர்த்த கீழ்க்கண்ட நிகழ்ச்சியை பெர்லின் பொலித்ஸை-பிரெஸிடியம் வெளியிட்டபோது, அவன் பெர்லினில் இருப்பது தெரியவந்தது.

''1913ஆம் ஆண்டு பிப்ரவரி பெர்லினில் நடைபெற்ற தொழில் பொருட்காட்சி ஒன்றில் ஜெர்மானியக் கம்பெனிகளும் இதர ஐரோப்பிய கம்பெனிகளும் தங்கள் பொருள்களைக் காட்சியில் வைத்திருந்தன. 'வங்கி மற்றும் வியாபாரச் சாதனங்கள்' என்ற பவில்யெனில் பல கம்பெனிகள், இரகசியப் பூட்டுகள் அமைந்த தங்கள் புதிய இரும்புப் பெட்டகங்களைக் காட்டியிருந்தன. அவற்றில் 'ஓட்டோ க்ரில் கம்பெனி'யின் இரும்புப் பெட்டகங்களும், 'சீமென்ஸ்-ஷூக்கெர்ட்' என்ற ஜெர்மானிய மின் சாதன உற்பத்திக் கம்பெனியாரின் இரகசிய மின்னியக்க அறிவிப்புக் கருவிகள் அமைந்த இரும்புப் பெட்டகங்களும் இருந்தன. பார்வையாளர்களில் எவரேனும் முதலாவதாகத் தங்களது இரும்புப் பெட்டகங்களைத் திறந்துவிட்டாலும், இரண்டாவதாக அபாய அறிவிப்புக் கருவியைத் தொடாதவாறு திறக்க முடிந்தாலோ, அவ

ருக்குப் பெரும் பரிசுகள் கொடுப்பதாக அந்த இரு கம்பெனியாரும் விளம்பரம் செய்திருந்தனர்.

''பிப்ரவரி ஏழாம் தேதி, பார்வையாளர்களின் பெருங் கூட்டத்திற்கிடையே, டெர்பித் தொப்பி அணிந்த செம்பட்டைத் தலை இளைஞன் ஒருவன், பவில்யென் மேலாளரிடம் லைப்ஸிக் 'ஓட்டோ க்ரில் கம்பெனி'யின் இரும்புப் பெட்டகம், 'சீமென்ஸ் -ஷூக்கெர்ட்' இரும்புப் பெட்டகம் ஆகிய இரண்டையுமே தான் திறக்க முயல்வதாகத் தெரிவித்தான். அவனது பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டு, கம்பெனிப் பிரதிநிதிகள் பிரமிப்புடனும், பார்வையாளர்கள் பரபரப்புடனும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, இரு பெட்டகங்களையும் இரு பத்து ரண்டு நிமிடங்களில் அவன் திறந்து விட்டான்; இரண்டாவது பெட்டகத்திலிருந்த இரகசிய அபாய அறிவிப்புக் கருவியின் மின்விசையை எப்படியோ அகற்றிவிட்டான்.

''அந்த இடத்திலேயே அவனுக்குப் பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டன. அங்கிருந்த அனைவரையும் 'வாக்னர் பீர் கார்டன்' என்ற கடைக்குத் தன்னுடன் வந்து, தன் செலவிலேயே மது அருந்துமாறு கொச்சை ஜெர்மன் மொழியில் அழைத்தான். மிதமிஞ்சிக் குடித்தபின் நடனமாடினான், 'ஒதெஸ்ஸா அன்னை' எனக் கூறி ஒதெஸ்ஸா நகரை வாழ்த்தி மது அருந்த முன்மொழிந்தான்.

''இதற்கிடையே, 'ஓட்டோ க்ரில் கம்பெனி'யின் தலைமை என்ஜினியரான மேலே குறிப்பிடப்பட்ட ஹான்ஸ் ஷ்மெல்ட்ஸ், இந்த அந்நியன் இரும்புப் பெட்டகத்தைத் திறந்த மாதிரியானது வோல்கா-காமா வங்கியின் நீஷ்னி நோவ்கரத் கிளையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைவுபடுத்துவதாக உள்ளது என்று பெர்லின் போலீசுக்குத் தொலைபேசியில் தெரிவித்தார்.

''பெர்லின் பொலித்ஸை-பிரெஸிடியத்தின் பிரதிநிதிகள் உடனே 'வாக்னர் பீர் கார்டனு'க்கு விரைந்து சென்று அந்த இளைஞனுடைய ஆவணங்களைக் கோரினர். யாஸ்தர்ஜெம்ப்ஸ்கி என்ற பெயரிலிருந்த ருஷ்யப் பாஸ்போர்ட்டையும், கனதோப் மாவட்டப் போலீஸ் அதிகாரியால் கொடுக்கப்பட்டிருந்த விசாவையும் அவர்களிடம் அவன் காட்டினான். எனினும், பெர்லின் போலீசார், அவன் தங்களுடன் வந்து, பாஸ்போர்ட்டில் கண்டுள்ள ஆள்

தானே தான் என நிரூபிக்கும்படி உத்தரவிட்டனர். யாஸ் தர்ஜெம்ப்ஸ்கி அதை முற்றாக மறுத்ததுடன், தன் செல வில் குடித்துக் கொண்டிருந்த கூட்டத்தினரைத் தனது பாதுகாப்பிற்கு அழைத்தான். அவர்கள் அனைவரும் ஒன்று போலக் கிளம்பி, போலீஸ் அதிகாரிகள் அவனை அணுக விடாதவாறு தள்ளி, அவன் தப்பித்துச்செல்ல உதவினர்.

''மேற்கண்ட விவரங்களை மாட்சிமைமிக்க உங்களிடம் அறிவித்துக் கொண்டு, அயல்நாட்டு அமைச்சர், மாட்சிமைமிக்க சலோனவை அணுகி, மேற்படி யாஸ்தர் ஜெம்ப்ஸ்கி-ஷூல்ட்ஸ் பயங்கரமான குற்றவாளியாகையால் அவனது இருப்பிடத்தை அறிந்து, அவனைக் கைது செய்து, ஒப்படைக்கும்படி உரிய முறையில் ஜெர்மன் போலீசுக்கு வேண்டுகோள் விடுக்கும்படி அவரைக் கேட்டுக்கொள்ள வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

எஸ். பெலேத்ஸ்கி,
உள்நாட்டு அமைச்சக போலீஸ் துறைத் தலைவர்.''

இதன் பிறகு சுமார் ஓராண்டு வரையில், உள்நாட்டு அமைச்சகம் வெளிநாட்டு அமைச்சகத்தின் மூலமாக ஜெர்மன் போலீசாரோடு தொடர்பு கொண்டிருந்ததையும், ஜெர்மன் போலீஸ் 'அட்மிரல் நெல்சனை'த் தேடிக் கொண்டோ, தேடுவதாகப் பாசாங்கு செய்துகொண்டோ இருந்ததையும் இவ்வழக்குத் தொடர்பாக மேற்கொண்டு நடந்த கடிதப் போக்குவரத்து காட்டியது. இந்த உருக்கமான கடிதப் போக்குவரத்து முதல் உலகப் போரினால் தடைப்பட்டுப் போய்விட்டது.

இந்த வழக்குப் பற்றிய பழுப்பேறிப்போன பக்கங்களை நான் படித்து முடிக்கும் போது மாலையாகி விட்டது. ஆர்வமூட்டக்கூடிய சில பகுதிகளை நான் படி எடுத்துக்கொண்டேன். பின்னர் ஓஸிபவும் நானும் 'ஆர்ஸ்' திரைப்படத்துக்குப் போனோம்.

நாங்கள் இரண்டு சீட்டுகள் வாங்கிக் கொண்டு, காட்சி தொடங்க இன்னும் ஏறத்தாழ ஒரு மணி நேரம் இருந்ததால் உலாவிவரத் தீர்மானித்தோம்.

''இந்த 'அட்மிரல் நெல்சனி'ன் முடிவு என்னவாகும் என்று நினைக்கிறாய்?'' என ஓஸிபவிடம் வினவினேன்.

''அவனையும் அவனைப் போன்ற பிறரையும் பற்றி நான் அடிக்கடி நினைப்பதுண்டு,'' என்று ஓஸிபவ் பதிலளித்தான். ''இது சிக்கலான வினா, என் நண்பரே. கடந்த காலம், பெரும் எண்ணிக்கையிலான திருடர்களின் கூட்டத்தை நம் தலையில் கட்டியிருக்கு. இந்தக் கூட்டத்திற்கென்று தனியான பழக்கங்கள், வழக்கங்கள், வேறுபாடுகள், 'சம்பிரதாயங்கள்', தொழில்பாகுபாடுகள் எல்லாம் இருக்கு. புதிய பொருளாதாரக் கொள்கையாகிய 'நெப்' நடைமுறையில் உள்ள இந்த ஆண்டுகளில் இக்கூட்டம் நன்கு செழுமையடையுறதுக்கு மேலும் வாய்ப்புகள் கிடைச்சு இருக்கு. உயர்தர ரெஸ்டாரெண்டுகள், குதிரைப் பந்தயத் திடல்கள், தனியார் கடைகள், தனியார் வியாபாரம், 'காபரே'க்கள் போன்றவையும், நெப்காரர்கள் தங்களது குற்ற நடவடிக்கைகளைப் பெருக்குவதற்குத் தூண்டுகோல்கள். கன்னம் வைக்கிறவர்கள், திருடர்கள், சட்டவிரோதமான பலவகை விடுதிகளின் சொந்தக்காரர்கள் போன்ற பழங்காலத்தைச் சேர்ந்த விதவிதமான 'நிபுணர்கள்' இன்னும் வளைய வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலாரை சீக்கிரமாக அல்லது கொஞ்சம் பிந்தி நாம் பிடித்துச் சிறைக்கு அனுப்புவோம் என்று நம்புறேன். இவர்களில் சிலர் உழைத்து நேர்மையான வாழ்வை மேற்கொள்ளக் கூடும். 'அட்மிரல்' என்ன செய்வான் என்பதைச் சொல்றது கடினம். ஆனா, அரசுக்கோ, கூட்டுறவுக் கழகத்துக்கோ சொந்தமான இரும்புப் பெட்டகங்களிலிருந்து அவன் பணமே திருடலே என்பது மட்டும் உண்மை... அது மட்டும் தான் என் மனசுக்குக் குறிப்பிடும்படியாத் தோனுது... எப்படியோ, காலம் பதில் சொல்லும்.''

மறுநாள் காலை எஸ். என்பவரின் செயலாளரது தொலைபேசித் தகவலுடன் தொடங்கியது. அவளுடைய தலைவர் இன்னும் மிகுந்த கலக்கத்தில் இருப்பதாகவும், இரண்டு நாள்கள்தான் மீதியுள்ளன என்பதை எங்களுக்கு நினைவுபடுத்தும்படி கூறியதாகவும் அறிவித்தாள். அது என்னை உற்சாகத்துடன் இருக்க விடவில்லை. இரண்டு மணிக்கு ஓஸிபவ் என்னைத் தொலைபேசியில் அழைத்து, வேலை மும்முரமாக நடந்துவந்த போதிலும், நாணயங்

கள் இன்னும் தட்டுப்படவில்லை என்று 'அட்மிரல் நெல்சன்' தனக்குத் தெரிவித்ததாகச் சொன்னான்.

அன்று அலுவல் முடியும் தருவாயில் ஷெவேர்தின் போன் செய்தார். வழக்கு எப்படிச் செல்கிறது என விசாரிப்பதில் அந்தப் பரிவுள்ள கிழவர் காட்டிய கவலையிலிருந்து, அவர் மனச் சஞ்சலமடைந்திருப்பதையும், நாணயங்கள் அகப்படாவிட்டால் நான் தொல்லைக்குள்ளாவேன் என்று அவர் கருதுவதையும் புரிந்துகொண்டேன். மூர் தோழர்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இதுவரை பயனொன்றும் விளையவில்லை என்பதையும் நான் பொதுப்படையாக அவருக்கு அறிவித்தேன்.

''அது மகா மட்டம்,'' என்று அவர் பெருமூச்சு விட்டார். ''பறிகொடுத்தவரோ வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கிறார்... தீவிரமா முயற்சி செய்யுங்க, என்னருமை இளைஞரே, தீவிரமா முயற்சி செய்யுங்க. இல்லாவிட்டால் நம் எல்லார் தலைக்குமே வினை வந்துவிடும்.''

அதே தினம் மாலை என் அறைச் சன்னலுக்கு வெளியிலிருந்து ஓஸிபவுடைய காரின் பழக்கமான ஹார்ன் ஒலியைக் கேட்டதும் நான் எத்தகைய கிளர்ச்சியடைந்தேன் என்பதை நீங்கள் ஊகித்துக்கொள்ள முடியும். வீட்டை விட்டு விரைந்து வெளியே சென்ற நான், நண்பனின் புன்னகை பொலியும் முகத்தைத் தூரத்திலிருந்தே பார்த்தேன்; அவனுடைய மிகத் திறமையுள்ள உதவியாளர்களில் ஒருவனான நோஷ்நித்ஸ்கி அவன் அருகே இருந்தான்.

''ஏறிக்கொள்!'' என்று கத்தினான் ஓஸிபவ். '''அட்மிரல்' அழைத்து 'பண்பாட்டுப் பண்ணை'க்கு உடனே வந்து தன்னைக் காணும்படி சொன்னான்.''

நான் ஏறிக்கொண்டேன். கோர்க்கி தெருவில் உள்ள ஒரு வீட்டிற்கு விரைந்து சென்றோம். அவ்வீடு வெகு நாளைக்கு முன்னரே இடிக்கப்பட்டு, அந்த இடத்தில் புதியதொரு பெரிய வீடு கட்டப்பட்டிருந்தது. அங்கே 'பண்பாட்டுப் பண்ணை' என்ற பெயரில் ஒரு பீர் கடை இருந்தது. அது பண்பாட்டுக்காகப் பெயர் பெறாவிட்டாலும், பீருடன் கொடுக்கப்பட்ட அருமையான வெந்த இறால், அபூர்வமான ஹெர்ரிங், உப்பிட்ட பச்சைப்

பட்டாணி ஆகியவற்றிற்காகப் புகழ் பெற்றிருந்தது.

எங்களுக்காக 'அட்மிரல் நெல்சன்' மூலையிலிருந்த ஒரு மேசையின் அருகே காத்துக் கொண்டிருந்தான். எப் போதும் போலவே எடுப்பாக உடை அணிந்திருந்தான். அவன் முகத்தில் பெருமிதம் திகழ்ந்தது.

''வணக்கம்!'' என்று மரியாதையுடன் வரவேற்றான். ''நல்ல வேலையைத்தான் சுமத்தியிருக்கீங்க, ஆண்டவன் காப்பாத்துவான்! நல்ல ஓய்வும் இடமாற்றமும் கிடைக் கும் என்று நம்பிக் கொண்டிருந்தேன்! காலஞ்சென்ற என் அப்பா வழக்கமாச் சொல்வார்: 'இந்த மாதிரி இளைப்பாறினால், திரும்பாப் பயணம் புறப்பட வேண் டியது தான்'. அவரைப் போல ஓர் அறிவாளி இனி ஒதெஸ் ஸாவில் இருக்கப் போவதில்லே... அத்துடன், அந்த மாநக ரத்திலேயே சிறந்த ஃபிட்டரும், மெக்கானிக்கும் ஆவார்; என்னோட விரல் நுட்பமெல்லாம் அவரிடமிருந்து பெற்ற மரபு உரிமைதான். பரம்பரைக் குணம் பற்றிய விதிகள் போலி விஞ்ஞானிகளின் கட்டுக் கதையில்லை என்பதற்கு என் சொந்த அநுபவமே அத்தாட்சி... ஒரு தரம் என்ன நடந்தது தெரியுமா? இது மட்டும் பொய்யின்னா இந்த இடத்திலேயே என் உயிர் போகட்டும்...''

''காரியத்தைப் பற்றிப் பேசுவோமா?'' என்று ஓலிபவ் அவனை இடைமறித்தான். ''காலஞ்சென்ற உங்க அப் பாவைப் பற்றித்தான் 1921ஆம் ஆண்டிலேயே எனக்குச் சொல்லியிருக்கீங்களே...''

''என்னை மன்னிக்கணும், நான் மறந்து போயிட் டேன்,'' என்றான் 'அட்மிரல்'. ''நல்லது, காரியத்துக்கு வரலாம்... நேற்று ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டவன் நேரே போய், வேண்டியவர்களைப் பார்த்து பிளேனரி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன். கூட்டத்தில் நான் பேசியதைக் கேட்டு எல்லாரும் அழுதுட்டாங்க...'ஏன்டா, கேடு கெட்ட எதிர்ப்புரட்சிக்கார ஆயிரந்தலைப் பாம்பு களா,' என்று சொன்னேன். 'ஒரு கமிஸார் வீட்டுக்குள் தங்குதடையில்லாமல் புகுந்து, பாசிபிடித்த, உபயோக மற்ற நாணயங்களைத் திருடி, அவரோட உபயோகமான வாழ்வைக் குறுக்க எப்படி உங்களுக்கு மனசு வந்துச்சு! ஒன்னுக்கும் உதவாத, துளையிட்ட தினார்களுக்காக அரசு உறுப்பினர் ஒருவர் முக்கியமான அரசுக் காரியங்

களைக் கவனிக்க விடாதபடி செய்துட்டீங்களே, பாழாய்ப் போனவர்களே! இதைக் கேட்டதுமே ஒதெஸ்ஸாவில் இருந்த எல்லா வேலைகளையும் அப்படியே போட்டு விட்டு ஒரே பாய்ச்சலில் இங்கு வந்திருக்கிறேன். ஏன் தெரியுமா? 'சீ' என்று உங்களைத் திட்டுவதற்கு... எதிர்ப் புரட்சிக்காரப் பதர்களா, உங்க இழிசெயலைப் பற்றிக் கேள்விப்பட்டதும் மொல்தவான்கா வீதி இரகசிய விடுதி யிலுள்ள நம்மவர்களெல்லாம் மூனு நாள்கள் காறித் துப்பி னார்கள், தெரியுமா? உங்களோட கீழ்மையை வரு ணிக்க வார்த்தைகளே கிடையாது!' என்று அரை மணி நேரத்துக்குக் குறையாமல் விளாசித் தீர்த்தேன். எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தில் தொண்டை வறண்டு போய், மூனு தரம் தண்ணீர் குடிக்க வேண்டியதாயிற்று... அதற்கு அப்புறம் தான் மாஸ்கோ திருடர்களின் மன்னன் எழுந் தான். உங்களுக்கு அவனைத் தெரியுமே?'' என்று ஓலி பவை நோக்கிக் கேட்டான் 'அட்மிரல்'.

''ஆமாம், எனக்குத் தெரியும், சேன்கா பார்ஸ் தானே,'' என்று ஓலிபவ் பதிலளித்தான்.

''அவனே தான். அது தன்னோட வேலையில்லை என்று அவன் கண்ணீரும் கம்பலையுமாகச் சத்தியம் செய்தான். சரி, பேசுறதிலே என்ன பயன்? மாஸ்கோவின் மணிகள் எல்லாரும் அங்கே குடியிருந்தனர்! நம்மவர் அனைவரையும் அவமானத்துக்கு உள்ளாக்கியிருக்கும் இந்தப் பாழாப்போன நாணயங்களைக் கண்டுபிடிக்கிற வரை தொழிலை நிறுத்தி வைப்பதாக அத்தனை பேரும் சபதம் செய்தார்கள்... அந்த வாக்குறுதியை அவர்கள் காப்பாற்றினார்கள் என்பது உங்களை விட வேறு யாருக்கு நல்லாத் தெரிய முடியும்?''

''சரிதான்,'' என்றான் ஓலிபவ். ''பல ஆண்டுகளில் முதல் தடவையா கடந்த இருபத்து நான்கு மணி நேரத் தில் ஒரு திருட்டுக் கூட நடக்கலே...''

''திருட்டா?'' என்றான் 'அட்மிரல்' மிகவும் ஆத்தி ரத்தோடு. ''திருட்டுன்னா என்ன அருத்தம்? இந்த இரு பத்து நான்கு மணி நேரமாக ஒருத்துனுமே தொழில் நடத்த வில்லை என்கிறேன், நீங்க என்னன்னா திருட்டு என் கிறீங்க!.. உங்க வேலைக்காக எங்க ஆள்கள் எல்லாரை யும் ஒன்று திரட்ட வேண்டி வந்துருச்சு! ஒரு நெப்கார

னாவது கொள்ளை கொடுத்ததுண்டா, எந்தப் பெண் ணின் கைப் பையாவது பறிக்கப்பட்டதுண்டா, ஏதாவது ஒரு பணப்பை காணாமல் போனதுண்டா? நகரம் பூராவும் முற்றுகைக் காலச் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது என் றால் பிறகு பேசுவதற்கு என்ன இருக்கு? இந்தத் துளை யிட்ட தினார்கள் எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற நஷ்டம் ஏராளம்! எங்க ஆள்களில் ஒருவனாவது பத்து நிமிடம் தூங்கியிருப்பான்னு நினைக்கிறீங்களா? அப்படி நீங்க நினைச்சா நான் உங்களை மதிக்கிறதை விட்டுறுவேன்...''

''இல்லே, நான் அப்படி நினைக்கலே,'' என்று ஓஸிபவ் அவசரமாக அவனுக்கு உறுதி கூறினான்.

''ஏன்னா நீங்க கெட்டிக்காரர்!.. இன்னொரு விஷயம் —ராத்திரிப் பூரா நானே தலைமை ரகசிய விடுதியில் கழித்தேன்...''

''சோவோலகீசெஸ்கி தெருவில் தானே?'' என்று ஓஸிபவ் புன்னகையுடன் கேட்டான்.

''உங்களிடமிருந்து நான் இதை எதிர்பார்க்கலே,'' என்று 'அட்மிரல்' சுடுப்புடன் சொன்னான். '' 'அட்மிரல் நெல்சன்' வாழ்நாளில் ஒருபோதும் எந்த இரகசிய விடுதி யையும் காட்டிக் கொடுத்ததில்லே. இம்மாதிரியான கேள்விகள் முறையில்லாதவை... இதற்கு மேலே நான் ஒன்னும் சொல்லமாட்டேன்...''

''சரி, சரி, மறந்துறுங்க. நம்மோடதைத் திரும்பவும் தொடரலாம்.''

''நல்லது. காலை வரையில் இரகசிய விடுதியில் தங்கி யிருந்தேன். நகரத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் அரை மணிக்கு ஒரு தரம் ஆட்கள் வந்து தகவல் சொல்லி விட்டுப் போனபடி இருந்தார்கள். ஒவ்வொருத்தனும் 'இல்லை!' என்று தான் சொன்னான். காலை ஏழு மணி வாக்கில் நான் ஒரேயடியாகச் சோர்ந்து போயிட்டேன். அந்த நிலையில் நான் பிழைப்பேன் என்று உலகத்தில் எந்த டாக்டரும் துளிகூட உறுதி சொல்லியிருக்க மாட் டார். எட்டு மணி ஆவதற்குள் உயிர் தொண்டைக் குழிக்கு வந்துவிட்டது, சவக் கிடங்கின் துர்நாற்றம் மூக் கில் உறைக்கிறது மாதிரியிருந்தது—இதயத் துடிப்பு அநே கமா நின்று போச்சு, நாடி விழுந்துருச்சு. விடுதித் தலைவி 'தெள்ளுப் பூச்சி' மான்கா, என்னோட நிலையைப் பார்த்து

விட்டுக் கண்ணீர் விட்டுக் கதறினாள். 'அருமை 'அட்மிரல்'! துளையிட்ட உதவாக்கரை தினார்களுக்காக நீ உயிரையே விட்டுவிடுவாயோ? கடவுளே, ஒதெஸ்ஸாக் காரங்களுக்கு நாங்க என்ன சொல்லுவோம்? உன் உயிரைக் காப்பாத்த முடியாமப் போனது ஏன் என்று அவர்களுக்கு எப்படிச் சமாதானம் கூறுவோம்? என் விடுதியைச் சுட்டுச் சாம்பலாக்கி விடுவாங்களே,' என்று கதறி அழுதாள்... கடைசியில் என் உயிரைக் காப்பாத்தியது யார் தெரியுமா? சேன்கா பார்ஸ். ஒன்பதரை மணிக்கு அவன் ஒரே ஓட்டமா ஓடிவந்தான். எனக்கு அநேகமா மூச்சே நின்று போச்சு என்பதைப் பார்த்ததுமே, என்ன செய்யணும் என்பதை உடனே புரிஞ்சுக்கிட்டான். அவன் நல்லாப் படிச்சவன்! ஷ்மெரீன்கா மருத்துப் பள்ளியில் அநேகமாப் படிச்சு முடிச்சிருந்தான். அவன் மட்டும் திருட்டுத் தொழிலுக்கு வராம இருந்திருந்தால் பெரிய டாக்டர் ஆகியிருப்பான் என்று கடவுள் சாட்சியாச் சொல்றேன்... எப்படியோ, பக்கத்திலிருந்த ஒரு மருத்துவமனைக்கு ஒரே பாய்ச்சலில் ஓடிப்போய், எவனோ ஒரு நோயாளிக்கு வைத்திருந்த ஆக்ஸிஜன் பையைப் பட்டப் பகலில் தூக்கிக் கொண்டுவந்து எனக்கு உதவினான்... கடவுள் அவனைக் காப்பாத்துவாராக—அன்னைக்கு நடந்த ஒரே திருட்டு அதுதான்... எப்படியிருக்கு பாருங்க நான் மாஸ்கோவில் ஓய்வு எடுக்கிற அழகு? ஹூம், ஓஸிபவ்?''

''விஷயத்துக்கு வாங்க, 'அட்மிரல்', '' என்று ஓஸிபவ் விடாப்பிடியாக வற்புறுத்தினான்.

''இப்பத்தான் விஷயத்துக்குள்ளாக வந்து கொண்டிருக்கோம். இதோ நங்கூரம் போட்டு விடுகிறேன்,'' என்று பதிலளித்துவிட்டு 'அட்மிரல்' மேலே தொடர்ந்தான். ''எனக்குச் சிறிது நினைவு வந்ததும், மர்யீனா ரோஷ்சாவிலிருந்து வந்திருந்த 'குழிமுயல்' கோல்யா திடீரென்று உள்ளே நுழைந்தான். துருக்கிச் சுல்தானின் கழுமரத்திலிருந்து எப்படியோ தப்பி ஓடிவந்து விட்டானோ அல்லது 'பி' டிராமிலிருந்து பிரிட்டிஷ் அரச மகுடத்தைக் களவாடி வந்து விட்டானோ என நினைக்கிற மாதிரி அவனோட தோற்றம் இருந்தது. தொண்டை கிழியக் கத்திக்கொண்டு வந்தான். 'டேய் முட்டாளே, என்ன கத்திக்கிட்டிருக்கே?' என்று கேட்டேன். சேன்கா பார்ஸ்

அவனை உலுக்கி விஷயத்தைக் கக்க வைக்கிற வரை அவன் கூச்சல் போடுறது ஓயலே. விஷயம் இதுதான்: அந்தப் பாழாய்ப்போன திருடனை பயல்கள் கண்டுபிடிச்சுட்டானுங்க. முதலாவதா, அவன் மாஸ்கோக்காரன் அன்று; இரண்டாவதா, இது ரொம்ப முக்கியமானது, அவன் ஒதெஸ்ஸாக்காரனும் அன்று; மூனாவதா அவன் உண்மையான திருடனும் அன்று, தூலா நகரத்திலிருந்து வந்த ஒரு கற்றுக்குட்டி... கதை எப்படியிருக்கு? இந்தப் பைத்தியக்கார உலகத்தில் வாழ்வது சாத்தியமா? சொல்லுங்க!''

''நாணயங்கள் எங்கே?'' என்று ஓஸிபவ் 'அட்மிரலி'ன் கண்களையே குத்திட்டு நோக்கியபடி அமைதியாக வினவினான்.

''சொந்தக் கற்பனை எனக்குக் குறைவானபடியால் நானும் இதே கேள்வியைத்தான் 'குழிமுயல்' கோல்யாவிடம் கேட்டேன்,'' என்று 'அட்மிரல்' குத்தலாக விடையளித்தான். ''நாணயங்கள் தூலாவில் இருக்கு, அந்தப் பயல் அங்கே எப்படியோ போய்ச்சேர்ந்துட்டான். அவற்றைக் கொண்டுவருவதற்கு மிகப் பெரிய தூதுக் குழு ஒன்னை அனுப்பியிருக்கோம். அக்குழுவினர் படுத்துகிற அமர்க்களத்தில் தூலா நகரின் புகழ்பெற்ற ஆயுதத் தொழிற்சாலையாவது உருப்படியாக மிஞ்சியிருக்குமானால், நகரசபையினர் நன்றி விழா கொண்டாடிக் கொள்ளலாம்... சீக்கிரமா நாணயங்களை இங்கே கொண்டுவந்து விடுவாங்க.''

இதைக் கேட்டு ஓஸிபவ் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. நோஷ் நித்ஸ்கி சிரித்த சிரிப்பில் அவன் கண்களிலிருந்து பெருகிய நீர் கன்னங்களில் வழிந்தோடியது.

அப்பொழுது யாரோ ஒருவன் சன்னலில் ஒரு சிறு கல்லை விட்டெறிந்தான். 'அட்மிரல் நெல்சன்' உடனே குதித்தெழுந்து, ''தூதர்கள் வந்துட்டாங்க, வாத்தியம் முழங்கட்டும்!'' என உரக்கக் கூவிவிட்டு பீர்க் கடையிலிருந்து வெளியே பாய்ந்தோடினான்.

சில நிமிடங்களில், முகத்தில் வெற்றிப் பெருமிதம் திகழ, பித்தளைச் செருகு பூட்டுகள் அமைந்த பெரிய தோல்பை ஒன்றைக் கையில் ஏந்தியவாறு திரும்பி வந்தான்.

''இதோ அவை,'' என்றான். அவனது ஒற்றைக் கண் அசுரச் செருக்குடன் சுடர் விட்டது. ''பெர்லின் பொலித் ஸை-ப்ரெஸிதெந்த் எனது கைகளை அவ்வளவு உண்மை யாகவும் உற்சாகமாகவும் புகழ்ந்து பேசிய, வியன்னாவில் நடந்த சர்வதேசத் துப்பறியும் நிபுணர்கள் மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளுடன் சேர்ந்து உலகத்தில் உள்ள போலீஸ் படை அத்தனையும் இங்கே திரண்டு வந்து இந்த நாணயங்களைத் தேடியிருந்தாலுங்கூட, அவமானம் தாங்க முடியாமல் மாஸ்கோ ஆற்றில் ஓட்டு மொத்தமா மூழ்கித் தற்கொலை செய்து கொண்டிருப்பார்களே தவிர நாணயங்களைக் கண்டுபிடித்திருக்க மாட்டார்கள் என்று என்ன பந்தயம் வேண்டுமானாலும் கட்ட நான் தயார்...'' என் பக்கம் திரும்பி, ''இளைஞரே, நீங்க இப்பத்தான் வாழ்க்கைப் பாதையில் அடி எடுத்து வச்சிருக்கீங்க. உங் களை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. கூர்ந்து கவ னிங்க, என்ன பார்த்தோம் என்பதை நினைவில் வச்சுக் கங்க: தங்கள் கௌரவத்துக்கு இழுக்கு வருவதாயிருந் தால் திருடர்களால் எதுவும் சாதிக்க முடியும்... இது தான் 'அட்மிரல் நெல்சனு'ம் அவனோட பிரமாதமான செல்வாக்கும் உங்களுக்கு அளிக்கிற படிப்பினை!''

செருகுப் பூட்டுகளை நெகிழ்த்தித் தோல்பையை விரியத் திறக்க, தனித்தனிப் பிரிவுகளில் கூண்டுப் புறாக் கள் போல அமர்ந்திருந்த நாணயங்கள் கண்ணுக்குப் புல னாயின.

நாங்கள் அவற்றைக் கவனமாகப் பார்வையிட்டோம். சுமார் இரு நூறு நாணயங்கள் வரை இருந்தன. எல்லாமே நாள்பட்டுத் தேய்ந்து, பாசிபிடித்த, சிறிதும் பெரிது மான செப்புக் காசுகள். காளைகள், நாகங்கள், கழுகு கள், செம்மறியாடுகள், நரமுகச் சிங்கங்கள், கொக்குகள் ஆகியவற்றின் உருவங்கள் அவற்றில் பதிந்திருந்தன.

''எழுந்து நின்று தொன்மைக்கு வணக்கம் தெரிவிப் போம்!'' என்று கம்பீரத்துடன் கூறிய 'அட்மிரல்' உண் மையிலேயே எழுந்து நின்றான். ''இதோ, துளைகள் இருப்பதைக் கவனிக்கும் போது, இத்தகைய அமளி ஏற் படக் காரணமான தினார்கள் இவைதாம் என்பது உறுதி யாகுது... அட கடவுளே! 1915இல் போலீஸ்காரர்கள் கடைசியில் ஒருவகையா என்னைப் பிடித்துவிட்ட சமயத்

தில் என் சார்பாக வழக்காடிய ஒதெஸ்ஸா பாரிஸ்டர் நிக்கலாய் ஷ்னேயெர்ஸன் வழக்கமாகச் சொல்வது போல, வாழ்க்கையின் எத்தகைய விகாரம்! உண்மையிலேயே ஒரு விகாரம்—அவற்றை தொடவே எனக்கு அருவருப்பா இருக்கு... இந்த மாநகரத்து தலைசிறந்த மனிதர்கள், சாராயத்தை முகர்ந்துவிட்ட பூனைகள் போலக் குறுக்கும் நெடுக்கும் ஓடியது எல்லாம் இந்த வெறும் குப்பைகளுக்காகத் தானா? இந்தத் துருப்பிடித்த செப்புத் துண்டுகளுக்காக ஏன்தான் கமிஸார் இப்படி தவித்தாரோ!.. உண்மையாகவே, பெரிய மனிதர்கள் கூட முட்டாள்கள் தாம் என்று தத்துவாசிரியர் ஸ்பினோஸா சொன்னது போல, அல்லது ஒருகால் அவர் இதைச் சொல்லவே இல்லையோ என்னவோ!..''

'அட்மிரலி'ன் பேச்சுக்கு முடிவே இல்லாமல் இருந்தது. சில கிளாஸ்கள் வோட்கா குடித்து, பெரிய குவளை நிறைய பீரும் பருகியிருந்த அவன் தனது அலங்காரப் பேச்சு வெள்ளத்தில் எங்களை மூழ்கடித்தான். எனினும், எங்களுக்கு உதவி செய்தவன் ஆகையால் அவன் பேச்சில் குறுக்கிடுவது மரியாதைக் குறைவு என்று நாங்கள் பொறுத்துக் கொண்டோம். ஓஸிபவுக்கு இத்தகைய வெட்டிப் பேச்சே பிடிக்காது. அவன் பொறுமை இழந்தான். இரும்புப் பெட்டகத் திருடனான அந்தப் பழம் பெருச்சாளி, தத்துவச் சூத்திரங்களையும், தற்பெருமை பொங்கும் நினைவுகளையும், பொருத்தமற்ற கவிதைப் பெருக்குகளையும், ஒதெஸ்ஸா நகர திருடர்களிடையே வழங்கும் கதைகளையும் வளவளவென்று பொழிந்து தள்ளினான்.

முடிவில் விஷயம் வறண்டதாலோ, களைத்துப் போனதாலோ 'அட்மிரல்' ஒருவகையாக ஓய்ந்தான். இந்த இடை நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாங்கள் விடை பெற்றுப் புறப்படவிருந்தோம். அவனோ எதிர் பாராவிதமாகச் சொன்னான்:

''இந்த விநோதமான வழக்கில், எல்லாவற்றிலும் விநோதமானது என்ன தெரியுமா? 'அட்மிரல் நெல்சன்' சட்டத்தின் சார்பில் இருப்பது, வாழ்க்கையிலேயே இதுதான் முதல் தடவை. புலனாய்வாளனாக இருப்பது மிகவும் ஆர்வமூட்டக்கூடியது என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும்! அநுபவம் வாய்ந்த இரும்புப் பெட்டகத் திருடனான

நான் சத்தியமாகச் சொல்ற வார்த்தைகளை நம்புங்க,— இந்த இருபத்து நான்கு மணி நேரமும் என் வாழ்விலேயே மிக இன்பகரமானது.''

திடீரென 'அட்மிரல்' நிதானமடைந்து, துயரந் தோய்ந்த கண்களால் எங்களை நோக்கினான். வாழ் நாளை வீணாக்கிவிட்டோம் என எதிர்பாராவிதமாக அறிந்துகொண்ட இளமை கடந்த மனிதனின் சோகப் பார்வை அது.

ஓனிபவ் நிமிர்ந்து உட்கார்ந்து அவனைக் கூர்மை யாகக் கவனித்தான்.

''நீங்க இன்னைக்கு எங்களுக்குச் சொன்ன எல்லாவற் றிலும் மிகமிக விவேகமானதும், முக்கியம் வாய்ந்தது மான செய்தி இது தான், ஸெமியோன் மிகாய்லவிச்,'' என்று 'அட்மிரலை' முதன் முறையாக அவனது உண் மைப் பெயரால் விளித்துப் பேசினான். ''இந்த நாணயங் களைக் கண்டுபிடித்த கையோடு வாழ்க்கையில் ஒரு புது வழியும் உங்களால் வகுத்துக்கொள்ள முடியுமானால், நான் உதவி செய்யத் தயார். மண்டையிலிருப்பது களிமண் இல்லாமல் மூளையாக இருக்குமானால், மார்புக்குள் இருப் பது அழுகல் முட்டையில்லாமல் மனித இதயமாக இருக்கு மானால், புது வழி வகுத்துக்கொள்வது ஒருவனுக்கு எப்ப வும் சாத்தியமாகும். இந்த முறையில் நமது கணக்கைத் தீர்த்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைவேன்,'' என்று ஆழ்ந்த குரலில் சொன்னான்.

'அட்மிரலி'ன் முகம் குப்பெனச் சிவந்ததிலிருந்து ஓனி பவின் சொற்கள் எப்போதும் போலவே இலக்குப் பார்த் துத் தைத்துவிட்டன எனக் கண்டுகொண்டேன். மௌனம் குடி கொண்டது. சிறந்த சொற்களைக் காட்டிலும் அதிக வன்மையுடன் உணர்ச்சிகளை வெளியிடும் மௌனம் அது.

'அட்மிரல்' குனிந்த தலை நிமிராமல், சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தான்.

ஓனிபவ் வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த் துக் கொண்டிருந்தான். மனிதத்தன்மை நிறைந்த அநு தாபம் அக்கண்களில் ஒளிர்ந்தது. புலனாய்வாளனின் குறு கிய மனப்பான்மையையும் குருட்டுத்தனத்தையும் தவிர்க்க வேண்டுமானால் மக்கள் மீது நம்பிக்கை அவனுக்கு எவ் வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது இத்தகைய

அநுதாபமும். இம்மாதிரிக் குருட்டுத்தனத்தால் இடருற்று, அதன் காரணமாகவே தேவையற்ற துன்பம் இழைத்த புலனாய்வு அதிகாரிகளைப் பிற்காலத்தில் நான் அடிக்கடி எதிர்ப்பட நேர்ந்தது!..

நீண்ட நேர மௌனத்துக்குப் பின் 'அட்மிரல்' தலையை நிமிர்த்தி, தணிந்த குரலில் அநேகமாக கிசுகிசுப்பது போலச் சொன்னான்:

''நெம்புகோலை வைப்பதற்கு மட்டும் இடம் கிடைக்குமானால் உலகத்தையே தலைகீழாக மாற்றிவிடுவேன் என்று ஆர்க்கிமிடிஸ் சொன்னார் என்று நம்புறேன்... நான் ஆர்க்கிமிடிஸ் இல்லை, உலகம் என் உதவி இல்லாமலேயே மாறிவிட்டது... ஆனா அது சரியான திசையில் தான் மாறி இருக்கு என்று எனக்குப் படுது, ஆகவே என் உள்ளேயும் ஏதோ ஒன்னு அடியோட மாறிப் போச்சு... எனக்கு நிறைய வயசாச்சு, ஓஸியவ், என்னோட வயதில் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குறது கடினம். ஆனா, நீங்க என்மீது காட்டிய நம்பிக்கை இருக்கே, இதுவும் ஆர்க்கிமிடிஸ் கனவு கண்டது போல, வைப்பதற்கான இடந்தான்... எனது சிதைந்த பழைய உலகை மாற்றி அமைக்க முயன்று பார்க்கிறேன். உள்ளுக்குள்ளாகவே சுமந்து திரிகிறேனே, துருப்பிடித்த இரும்புப் பெட்டகத்தை உருக்கித் திறக்க முயல்றேன். இதற்குள்ளாக மதிப்புள்ள ஏதேனும் மிஞ்சியிருக்கலாம்... யாருக்குத் தெரியும்?..''

மேலும் திடீரென எழுந்து போய்வருவதாகச் சொல்லிக் கொள்ளாமல் வெளியே ஓடிப் போனான்.

ஷெவேர்தினிடம் வந்து நடந்தவற்றைத் தெரிவித்த போது, கிழவர் ஒரேயடியாக உரக்கச் சிரிக்க ஆரம்பித்தார். பிறகு நான் சற்றும் எதிர்பாராத விதத்தில் கடுமையான குரலில் பேசினார்:

''ஆனாலும் பாருங்க, சக அதிகாரிகளை நான் இது பற்றிக் கலந்துஆலோசித்ததில்,வட்டார நீதிமன்ற ஒழுங்குமுறைக் குழுவின் முன் நீங்கள் சாட்சியமளிக்க வேண்டும் என்று நாங்கள் ஒரு முகமாகத் தீர்மானித்திருக்

கிறோம். இதுதான் விஷயம்! ஆகவே விளக்கம் எழுதித் தாங்க...''

ஒரே குழப்பத்துடன் ஷெவேர்தினின் அலுவலகத்தை விட்டு வெளியேறி, எனது முதல் ஆசிரியர்களான ஸ்நிதோவ்ஸ்கியையும் லாஸ்கினையும் காண ஓடினேன். அவர்கள் இருவருமே உற்சாகமற்று இருந்தார்கள். லாஸ்கின் விரல்களால் மேசைமேல் தாளம் போட்டுக்கொண்டே 'வாங்க' என்று வேண்டா வெறுப்பாக முனகினார். ஸ்நிதோவ்ஸ்கியின் முகத்தில் எரிச்சல் காணப்பட்டது. புலனாய்வுகளுக்குப் பொறுப்பதிகாரியான உதவி அரசு வழக்குரைஞர் ஓஸ்த்ரகோர்ஸ்கியும் அங்கிருந்தார். இந்த உயரமான அழகிய மனிதர், அடர்ந்த பொன் முடியும் பெரிய பழுப்பு விழிகளும் வாய்ந்தவர். அவரது கண்கள் இப்போது கடுகடு வென்றிருந்தன.

''சின்னக் குழந்தைகள்—சின்னத் தொல்லைகள், பெரிய குழந்தைகள்—பெரிய தொல்லைகள்,'' என்று தொடங்கினார் ஸ்நிதோவ்ஸ்கி. ''தோழர் ஷெய்னின் (இதற்கு முன் அவர் ஒருபோதும் என்னை இவ்வாறு அழைத்ததில்லை), நான் உண்மையாகவே வருத்தப்படுறேன். உங்களோட விசித்திரமான நடத்தைக்காகக் கவலைப்படுறேன். நன்றாக இல்லை, ஐயா, நன்றாக இல்லை. வெட்கக் கேடானது என்று கூடத் துணிந்து சொல்வேன். உங்களுக்கு நாங்கள் சொல்லித் தந்தது இது தானா, ஐயா?''

''ஆனா என்னைப் பேச அனுமதியுங்க...'' என்று நான் முனகினேன்.

''இல்லை, மாட்டேன்!'' என மேசைமேல் ஓங்கிக் குத்தி இடைமறித்தார் ஸ்நிதோவ்ஸ்கி. ''அனுமதிக்க மாட்டேன்! சே, சே, புலனாய்வு அதிகாரி, பீர்க் கடையில் எவனோ ஒரு பரம்பரைக் குற்றவாளியுடன் உட்கார்ந்து இருப்பதா! பயங்கரம், பயங்கரம்!..''

''கேள்விப்பட்டிராதது,'' என்று சீறினார் லாஸ்கின்.

''இதை என்னால புரிஞ்சுக்க முடியலே,'' என்று ஓஸ்த்ரகோர்ஸ்கி முனகினார்.

''என்ன நடந்தது என்று ஷெவேர்தின் எங்களிடம் சொன்ன போது, இதை இலேசாக விட்டுவிடக் கூடாது என்று நாங்கள் நினைத்தோம். இது உங்களுக்கு ஒரு பாட

மாக இருக்கட்டும்... ஆமாம், நமது தொழிலுக்குக் கறை ஏற்படுத்தாமல் இருக்கப் பாடமாக...''

ஒரு வாரத்துக்குப் பின் ஒழுங்குமுறைக் குழுவின் முன்பாக நின்றேன். கனத்த பச்சைத் துணி விரித்திருந்த பெரிய மேசையின் ஒரு புறம் வட்டார நீதிமன்ற ஒழுங்கு முறைக் குழுவின் எல்லா உறுப்பினர்களும் அமர்ந்திருந் தார்கள். ஏக்கத் தோற்றமும் தாடியுமாக தெக்தியாரேவ் தலைமை பீடத்தில் வீற்றிருந்தார்.

இதற்கிடையில் எனது அருமை ஆசிரியர்கள் நான் மன்னிக்க முடியாத பெருங் குற்றத்தைச் செய்துள்ளேன் என்பது எனக்குப் புலப்படும்படி செய்துவிட்டனர். நடந் தது என்ன, எப்படி, ஏன் என்று நான் குழுவினருக்கு உள்ள படியே எடுத்துரைத்தேன். ஐயோ, எத்தகைய அவல நிலையில் இருந்தேன் நான்!

தெக்தியாரேவ் எனது ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டார். சொன்னால் விந்தையாகப்படும், ஆனால் அவரது அச்சுறுத்தும் பெரிய பழுப்புக் கண்களுக் குள் எங்கோ ஆழத்தில் கனிவு ததும்பும் ஒளி—மகிழ்ச்சி பொங்கும் ஒளி எனக் கூடச் சொல்வேன்—மின்னிடக் கண் டேன். அதனால் தான் போலும், அவர் தாடியை உக்கிர மாகச் சுவைத்து, அவ்வப்பொழுது உறுமினார்:

''விவரமாச் சொல்லுங்க, எல்லாத்தையும் ஒன்று விடாமச் சொல்லுங்க!... எத்தகைய சாமர்த்தியசாலி! ஆக, ஷெர்லக் ஹோம்ஸ் ஆகிற விரும்புறீங்க!..''

இவை எல்லாம் பிறகுதான் என் நினைவுக்கு வந்தன. எனினும் அந்தச் சமயத்தில் நான் எதையும் பகுத்தறியும் நிலையில் இல்லை. பதற்றத்தில் எதையாவது சொல் லாமல் விட்டுவிடக் கூடாதே என்ற ஒரே கவலைதான் எனக்கு. ஆகவே அவர்களிடம் சொல்ல வேண்டியது அனைத்தையும் சொல்லிவிட்டேன்.

நீதிபதிகள் கலந்து பேசிய நேரம் இருபது நிமிடங் களே என்றாலும், எனக்கு அது ஒரு யுகம் போலிருந்தது. அவர்களது தீர்ப்பை தெக்தியாரேவ் படித்தபோது அதன் முக்கிய சாரம் என் குழம்பிய அறிவுக்கு மிகுந்த சிரமத் தின் பேரில் தான் எட்டியது: நான் வேலையிலிருந்து வெளி யேற்றப்படப் போவதில்லை, எனது இளமையைக் கருதி யும், நான் மனப்பூர்வமாக வருத்தம் தெரிவித்தது கரு

தியும், கடுமையான இடித்துரையுடன் நிறுத்திக்கொள் வதாக ஒழுங்குமுறைக் குழு முடிவு செய்தது.

தீர்ப்பைக் கேட்டதும்—இது என்றோ நடந்து போன விஷயம்—நான் வாய்விட்டு அழுதேன். இதைக் கண்ட தெக்தியாரேவ், தனது இயல்புக்கு மாறான தனிந்த குரலில் கூறினார்:

''பரவாயில்லை, வெட்கப்படத் தேவையில்லை. நன் றாக அழுங்க, இதுவே உங்க வாழ்க்கையில் கடைசியான துயரமாக இருக்கட்டும்...''

பல ஆண்டுகளுக்குப் பின், முப்பதுகளின் இடைக் காலத்தில் 'அட்மிரல் நெல்சனை' மீண்டும் சந்தித்தேன். அப்போது நான் சோவியத் யூனியனின் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகத்தில் புலனாய்வுத் துறைத் தலைவனாகப் பணியாற்றி வந்தேன். ஒருநாள் தலைமை அரசு வழக்குரைஞர் அகுலோவின் அலுவலகத்திற்குள் நுழைந்த நான், அவர் மிகவும் கலவரமுற்றிருந்ததைக் கண்டேன்.

''என்ன நடந்துவிட்டது என்பதைப் பாருங்க,'' என் றார். ''இன்னும் இரண்டு மணி நேரத்தில் அரசுக்கு நான் அறிக்கை செய்தாகணும். அதற்கு வேண்டிய கோப்புகள் எல்லாம் இரும்புப் பெட்டகத்துக்குள் இருக்கு. சாவி யைத் தொலைச்சுட்டேன். இதுவோ சிக்கலான இரும்புப் பெட்டகம். இதனோட பூட்டு ரகசிய எண்கள் கொண்டது. ஆகவே நமது பூட்டுக்காரன் அதைத் தொட மாட்டேன் என்கிறான். அதைத் திறக்க ஒருநாள் முழுக்கப் பாடு படணுமாம்...''

அந்தக் கனத்த இரும்புப் பெட்டகத்தின் மீது பார் வையைச் செலுத்தினேன். 'அட்மிரல் நெல்சன்' தனது பழைய தொடர்புகளை முற்றிலும் அறுத்துக்கொண்டு விட்டதாகவும், மாஸ்கோவிற்கு வந்து உலோகத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் தலைமை மெக்கானிக் காக நிம்மதியாக வேலை செய்து வருவதாகவும் ஓஸிபவ் சில ஆண்டுகளுக்கு முன் என்னிடம் சொன்னது நினைவுக்கு வந்தது.

''ஒரு நிமிடம் பொறுங்க,'' என்றேன். ''நான் உங்க

ளுக்கு உதவி செய்ய முடியுமென்று நினைக்கிறேன்.''

உடனே ஓஸிபவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடந்தவற்றைத் தெரிவித்தேன்.

''மேற்கொண்டு எதுவும் சொல்ல வேணாம், நண்பனே. உனக்காக ஸெமியோன் மிகாய்லவிச்சைத் தேட முயல்வேன். ஆள் அகப்பட்டால் நானும் அவனோடு வருகிறேன். ஆனால் ஒரு விஷயம். இந்த ஓராண்டாக நான் அவனைப் பார்க்கவே இல்லை. உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பது கூட எனக்குத் தெரியாது...''

''நீங்க என்னிடம் சொல்லியிருந்தீங்களே, அந்த 'அட்மிரல் நெல்சன்' தானே?'' என்று கேட்டார் குறிப்பிலேயே விஷயங்களைக் கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த அகுலோவ், நான் ரிசீவரைக் கீழே வைத்ததும்.

''ஆமாம்.''

''நல்லது, பழையதை வைத்து மதிப்பிட்டால், நம்ம வேலைக்கு இலாயக்கானவன். பழங்காலத்துப் பேர்வழிகள் ஒருபோதும் கைவிட்டுவிட மாட்டார்கள், இல்லையா?''

இவ்வாறு கூறி, தமக்கே உரிய மென்மையும் தந்திரமும் மிளிரும் புன்னகை புரிந்தார் அகுலோவ். அவரது சக ஊழியர்களுக்கு நன்கு பழக்கமான புன்னகை அது.

அரை மணி நேரத்திற்குள்ளாக ஓஸிபவ் வந்து சேர்ந்தான். அவனுக்கு மூச்சு விடுவது சிரமமாக இருந்தது. எனினும் வலிவுடன் இருந்தான். நன்கு உடையணிந்த முதியவன் ஒருவன் ஒரு சிறிய சூட்கேசுடன் அவனுடன் வந்தான். அவன் ஒற்றைக் கண்ணன். அவனது மறு விழியைச் சிறு கண்பட்டை மூடியிருந்தது. கடந்து போன ஆண்டுகள் அவனது மினுமினுப்பைப் பறித்துச் சென்றிருந்தன. 'அட்மிரலை' அடையாளம் கண்டுகொள்வதே கடினமாயிருந்தது,—அந்தளவு முதுமை அடைந்து காணப்பட்டான். முதல் சந்திப்புக்குப் பின் என் நினைவில் பதிந்திருந்த ஜீவ ஒளி, அவனது ஒற்றைக் கண்ணின் ஆழத்தில் எங்கோ மட்டுமே மின்னியது.

அகுலோவ் 'அட்மிரலு'க்கு முகமன் கூறிப் பேசினார்:

''வணக்கம். தயவுசெய்து உட்காருங்க. நீங்க சிறந்த... மெக்கானிக்குகளில் ஒருவர் என்று சொன்னாங்க. அப்படித்தானா?'' என்றார்.

''ஐரோப்பாவிலுள்ள போலீசார் எல்லாருமே அப்படி நினைத்த காலம் ஒன்று இருந்துச்சு,'' என்று 'அட்மிரல்' பெருமையோடு பதிலளித்தான். ''போலீஸ்காரர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அடிக்கடி தவறு செய்யுறாங்க என்பது உண்மைதான்... ஆனாலும் எனக்கு இரும்புப் பெட்டகங்களைப் பற்றி உண்மையாகவே கொஞ்சம் தெரியும்... நீங்க சொன்னது இது தானே?'' என்று கேட்டுக் காளான அந்த இரும்புப் பெட்டகத்தைச் சுட்டிக்காட்டினான்.

''ஆமாம். எனக்குத் தெரிந்த மட்டில் இது ஜெர்மன் பெட்டி.''

''ஆம், லைப்ஸிக்கில் செய்தது,'' என்ற 'அட்மிரல்' பெட்டகத்தை மேலுங்கீழும் சோதனை செய்தான். ''ஆனா ஜெர்மானியர்கள் சொல்றது போல இது 'ப்ரிமா' இல்லை. இது 'ஓட்டோ க்ரில் கம்பெனி'யின் தயாரிப்பு. இந்தக் கம்பெனி செய்த பெட்டகங்களில் எனக்குக் கொஞ்சம் பழக்கமுண்டு. துருப்பிடிக்காத எஃகில் செய்த இரட்டைப் பூட்டு இதில் இருக்கு. அதோடு உள் ஸ்ப்ரிங்கும், தானாக இயங்கும் பக்க பிரேக்கும்—இதோ, இடப் புறத்தில் இருக்கு. இந்த பிரேக் பூட்டை நகர விடாமல் பிடித்து வைத்துக் கொள்ளுது—அதாவது, நமக்கு அதன் மர்மம் தெரியாவிட்டால்... இதோ இருக்கு மர்மம்—இது இசைமயமானது. என்ன செய்வது? ஜெர்மானியர்கள் இசைப் பிரியர்கள், அல்லவா?..''

பின்பு 'அட்மிரல்' பூட்டைப் பொருத்தி வைத்திருந்த ஐந்து பித்தளைக் குமிழாணிகளில் ஒன்றின் குமிழை அழுத்தினான். குமிழ் உடனே படிந்து கொடுத்து இனிய ஒலியுடன் ஒரு புறம் விலகியது.

''ரொம்ப சரி,'' என்று புன்னகையுடன் கூறினார் அகுலோவ். ''போலீஸ்காரர்கள் கூட எப்போதும் தவறு செய்வதில்லை என்று தெரிகிறது, செமியோன் மிகாய்லவிச்—அது தானே உங்க பெயர்? நீங்க உண்மையிலேயே கைதேர்ந்த நிபுணர்தாம்.''

''வேலை முடியும் முன்பே என்னைப் பாராட்டாதீங்க. கண்பட்டுவிடப் போகிறது,'' என்று 'அட்மிரல்' பதிலளித்தான். ''இப்ப இந்த 'ஜெர்மானி'டம் நான் மிக நெருக்கமாகி அறிந்துகொள்ளப் போறேன்.''

பிறகு 'அட்மிரல்' சூட்கேசிலிருந்து மெல்லிய எஃகுக் கம்பியையும், அசையும் முனை பொருந்திய நீண்ட சாவியையும் எடுத்து, அவற்றைக் கொண்டு ஓசையின்றி வேலை தொடங்கினான்.

''இரும்புப் பெட்டகப் பூட்டுகள் முரட்டுத்தனத்தைத் தாங்க மாட்டா,'' என்று வேலை செய்தவாறே 'அட்மிரல்' பேசிக்கொண்டு போனான். ''இவற்றை வெகு நுட்பமாகக் கையாள வேணும். இவை பெண்களைப் போன்றவை, முரட்டுப் பலத்தை விட அன்பைத்தான் அதிகம் மதிக்கும். என்னைப் போன்ற கிழட்டுப் பயல் பெண்களைப் பற்றிப் பேசுறது வேடிக்கையாகத் தோனலாம். ஆனா இந்த 'அட்மிரல் நெல்சன்' வாலிபப் பருவத்தில் இரும்புப் பெட்டகங்களை மட்டுமே குடைந்து கொண்டிருக்கலே. ஒற்றைக் கண்ணன் என்றாலும் பல வற்றையும் பார்த்து அறிந்தவன். ஒற்றைக் கண்ணன் என்றதும் நினைவுக்கு வருது: எனக்கு 'அட்மிரல் நெல்சன்' என்ற பட்டப்பெயரே இதனால்தான் ஏற்பட்டது. அட்மிரல் நெல்சனும் ஒற்றைக் கண்ணன் தானே...ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐந்தாம் ஆண்டில் நான் ஆம்ஸ்டர்டாமில் ஒரு காரியமாக இருந்தேன். பழைய செய்தி, சொன்னால் கெடுதல் இல்லை, அங்கே மிக அருமையான இரும்புப் பெட்டகம் ஒன்றில் கைவைத்தேன்... மறுநாள் பத்திரிகையில், அடுத்த வாரம் இங்கிலாந்தில் ஹொராஷியோ நெல்சனின் நூறாவது மரணதின விழா கொண்டாடப் போவதாகப் படித்தேன். டிரபால்கர் போரில் நெல்சன் பிரெஞ்சு, ஸ்பானியக் கடற்படையை முறியடித்த போது அக்டோபர் இருபத்தோறாம் தேதி கொல்லப்பட்டான் என்பது உங்களுக்குத் தெரியும். என்னோட பெயரில் உள்ளவனுக்கு நானும் மரியாதை செலுத்தணும் என்று ஆசைப்பட்டேன்... என்ன செய்தேன் தெரியுமா? புகழ்பெற்ற டச்சு ட்யூலிப் மலர்களை ஏராளமாக வாங்கிக் கப்பலில் ஏற்றிக்கொண்டு இங்கிலாந்துக்குப் புறப்பட்டேன். நான் கொண்டுபோன ட்யூலிப் மலர்களை மூன்று லாரிகள் கல்லறைக்குக் கொண்டுவந்தன. நானும் புத்தம் புது கோட்டும், உயரமான தொப்பியும் அணிந்திருந்தேன்... உங்களுக்குச் சத்தியமாச் சொல்றேன், நான் கொண்டுவந்த ட்யூலிப் மலர்களைப் பார்த்த மக்கள்

கடற்படை மந்திரியை விட என் மீது அதிகக் கவனம் செலுத்தினாங்க. பிறகு அங்கே உரை நிகழ்த்தினேன். 'சீமாட்டிகளே, சீமான்களே,' என்றேன். 'எத்தனையோ தலைசிறந்த கவிகள், இசைஞர்கள், மாலுமிகள், குற்ற வாளிகள் ஆகியோரை உலகிற்கு அளித்திருப்பதும், ஈடு இணையற்றதுமான ஒதெஸ்லா நகருக்குப் பிரதிநிதியாக வரும் பெருமையும் மகிழ்ச்சியும் எனக்கு ஒருங்கே வாய்த் திருக்கின்றன. உங்களது ஒற்றைக் கண் அட்மிரல் தன் வேலையில் நிபுணராகத் திகழ்ந்தார். இந்த நிபுணத்து வம் பல ஒற்றைக் கண்ணர்களுக்கு இயல்பான குணம் என்பதையும் இதே பேச்சோடு சொல்லிவிடுகிறேன்,' என் றேன். என் பேச்சு மிக அருமையாகப் பாராட்டப்பட்டது. ஆமாம், கான்ட்* சொன்னது போல, 'முதுமையில் நம் மிடம் எஞ்சி நிற்பவை நினைவுகள் மட்டுமே.' ஆனா அது சரியோ, இல்லையோ, எனக்கு நிச்சயப்படலே...''

''நினைவுகள் மட்டுமே எஞ்சி நிற்குது என்பதா, அல்லது இந்தச் சொற்களை கான்ட் சொன்னார் என் பதா?'' என அகுலோவ் விரைந்து கேட்டார்.

''நான் குறிப்பிட்டது கான்ட் விஷயமாகத்தான் என் பதைத் தோழர் ஓஸிபவ் உறுதிப்படுத்துவார். என்னிடம் எஞ்சியிருப்பவை நினைவுகளைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதைக் குற்றவியல் துறை என்னை விட நன் றாக அறியும்,'' என்றான் 'அட்மிரல்'.

''உண்மைதான்,'' என்றான் ஓஸிபவ்.

அதே கணம் 'அட்மிரல்', ''அப்பாடா, மிக்க நன்றி, என் கண்ணே,'' என்று இரும்புப் பெட்டகத்தை நோக்கிக் கூறியவாறே அதைத் திறந்துவிட்டான்.

'அட்மிரலு'க்கு நன்றி தெரிவித்த அகுலோவ் அவ னுக்குத் தான் எவ்வளவு கொடுக்க வேண்டும் எனக் குறிப்பாக வினவியதுமே, 'அட்மிரல்' ஒரேயடியாக ஆத் திரமடையவே அந்தப் பேச்சு அத்துடன் நின்றுவிட்டது.

''திரும்பவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், செமியோன் மிகாய்லவிச்,'' என ஆழ்ந்த உணர்ச்சியுடன் கூறிய அகுலோவ், ''கடினமான, வாழ்க்கையிலேயே மிகக்

---

* கான்ட், இம்மானுவேல் *(1724-1804)*—பிரபல ஜெர் மானியத் தத்துவஞானி. (ப-ர்.)

கடினமானதென்று சொல்லக் கூடிய சோதனையில் நீங்க தேறியபின்பு, இப்ப உங்களைச் சந்தித்ததில் எனக்கு உண்மையாகவே மகிழ்ச்சி. சோதனை என்று நான் குறிப் பிட்டது இரும்புப் பெட்டக விஷயமாக அன்று...''

''நீங்க சொன்னது எனக்குப் புரியுது, தோழர் அகு லோவ்,'' என்று 'அட்மிரல்' மெதுவாகப் பேசினான். ''நீங்க பெட்டகத்தைத் திறந்தவனைப் பற்றி நினைக் கிறீங்க. உண்மையைச் சொல்லப் போனா, இந்தச் சோதனைக்கு நான் வெகு காலமாகவே, துளையிட்ட தினார்களைத் தேடிச் சென்ற காலந்தொட்டே தயார் செய்து வந்தேன்... இப்ப ஒவ்வொர் ஆண்டும் பூஷ்கின் அருங்காட்சியகத்துக்குச் சென்று பார்த்து வருகிறேன். பழங்கால நாணயங்கள் வைக்கப்பட்டுள்ள ஒரு பிரிவு அதில் இருக்கு. அங்குள்ள இந்த தினார்களைப் பார்த்து, எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னே அவற்றை வார்த்துவிட்டு மறைந்துபோன இன்னாரென்று தெரியாத கம்மியருக்கு வணக்கம் செலுத்துறேன். நமது அற்புத மான காலத்தை வார்த்தளிக்கின்றவர்களும், என்னைப் போல தேய்ந்த காசுகளைப் புதுக்கி வார்ப்பவர்களும், நம்மிடையே வாழ்பவர்களும், புகழ் பெற்றவர்களுமான கம்மியர்களுக்கோ, இன்னும் அதிக நன்றி பாராட்டு றேன்... தோழர் அரசு வழக்குரைஞரே, நமது காலமும் நமது மக்களும் என்றென்றும் வாழ்க!..''

''எங்கே, உங்க கையை இப்படிக் கொடுங்க!'' என 'அட்மிரலு'டன் கைகுலுக்க விழைந்தார் அகுலோவ். முதல் பார்வைக்குப் பொருத்தமற்றது போலக் காணப் பட்ட அந்தச் செயல், உண்மையில் 'அட்மிரலி'ன் வார்த் தைகளுக்கு ஏற்ற பதிலாக அமைந்தது.

1956

ஓநாய்க் கூட்டம்

1927ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், லெனின்கிராடிற்கு நான் மாற்றப்பட்டிருந்த சமயத்தில், அந்நகரத்தில் குற்ற நடவடிக்கைகள் கணிசமான அளவில் பெருகியிருந்தன. லெனின்கிராட் புலனாய்வாளர்களிடம் வழக்குகள் வந்து குவிந்தன. நெப் தழைத்தோங்கி வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால் மாஸ்கோ நெப்பிற்கும் லெனின்கிராட் நெப்பிற்கும் அவற்றின் தரத்தில் மட்டுமே வேறுபாடு. லெனின்கிராட் நெப்காரர்களில் பெரும்பான்மையோர் புரட்சிக்கு முந்திய பெரும் வணிகர்கள், தலைநகரத்தின் முந்திய பிரபுக்களில் மீதியிருந்தவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். சிற்றரசர்கள், கவுண்டுகள் குடும்பங்களிலே லெனின்கிராட் நெப்காரர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பெண் கொண்டார்கள். தங்கள் வாழ்க்கை முறையிலும் நடையுடை பாவனைகளிலும் பழைய பீட்டர்ஸ்பர்க் 'உயர் சமூகத்'தையே பெரிதும் பின்பற்றி வந்தார்கள்.

அரசுத் தொழில் நிலையங்கள், கம்பெனிகளின் பிரதிநிதிகளுடன் பலவகை ஒப்பந்தங்கள், உடன்பாடுகளைச் செய்து நெப்காரர்கள் அடிக்கடி மோசடி செய்து வந்தார்கள். தங்களுடன் பழகிவரும் சோவியத் அலுவலர்களைக் கெடுக்கும் நோக்கத்துடன், அவர்கள் லஞ்சங்கள், சிறு சலுகைகள், விருந்துகள், 'பரிசுகள்' ஆகியனவற்றை அவர்களுக்குக் கொடுத்து 'சுகவாழ்க்கை' விரும்பும் ஆசையைக் கிளப்பப் பெரிதும் முயன்று வந்தார்கள். ஆசை காட்டி மயக்குவதற்கு எத்தனையோ விஷயங்கள் இருந்தன. நகீம்ஸன் வீதியில், அலங்காரத் தூண் முகப்பு வாய்ந்த சிங்கார மாளிகையை இடமாகக் கொண்ட பிரபலமான 'விளாதீமிர் கிளப்'பில் சொகுசான சூதாட்ட அரங்கு

இருந்தது. எடுப்பாக உடையணிந்த சூதாட்ட அரங்கப் பொறுப்பாளர்களும் பெருந்தொகை வாங்கும் விலைமகளிரும் அங்கே இருந்தனர். புரட்சிக்கு முன்பு புகழ்பெற்ற உணவு விடுதிக்காரனான ஃபியோதரவ் — கண்காட்சிப் பறங்கிப்பழம் போன்ற முகமும் பூதாகாரமான உடலும் வாய்ந்தவன்—மீண்டும் தனது ரெஸ்டாரெண்டைத் திறந்து சுவையூண் விரும்பிகளான வாடிக்கைக்காரர்களைப் பிரமிக்கச் செய்தான். 'சான்-சுசி', 'இத்தாலியா', 'யானை', 'பலெர்மோ', 'குவிஸிஸானா', 'மறதி', 'களிப்பு' போன்ற உணவு விடுதிகள் அவனுடன் போட்டியிட்டன.

'ஐரோப்பிய ஓட்டலி'ன் நிலவறையிலிருந்த பெயர் பெற்ற குடிக்கடையில் விடியும் வரை லாபகரமான வியாபாரம் ஒரே ஆரவாரத்துடன் மும்முரமாக நடந்தது. குடிக்கடையின் மூன்றடுக்குக் கூடத்தில் மூன்று ஆர்க்கெஸ்ட்ராக்களும் எண்ணற்ற மேசை நாற்காலிகளும் இருந்தன. வேசிகளும் கூட்டிக்கொடுப்பவர்களும், ஓவியர்களும் நெப்காரர்களும், ஜேப்படித் திருடர்களும் கொள்ளைக்காரர்களும், முன்னாள் சிற்றரசர்களும் சிற்றரசிகளும், சிவந்த முகத்தினரான மாலுமிகளும் மாணவர்களும் அந்த மேசைகளைச் சுற்றிலும் அமர்ந்து, குடிப்பதும், உண்பதும், பாடுவதும், சிரிப்பதும், விவாதிப்பதும், காதல் புரிவதுமாகப் பொழுது போக்கினர். குலுக்கி மினுக்கும் அழகிய பூக்காரிகளும்—இவர்கள் விற்பது பூக்கள் மட்டுமல்ல—வெள்ளை உடுப்பு அணிந்த வெயிட்டர்களும் ஆரவாரம், இசையொலி, முகங்கள், பகட்டுடைகள் ஆகியவற்றால் மயங்கிய மதியினராய், மேசைகளுக்கு இடையே வளையவந்தனர்.

லெனின்கிராடில் நெப் மன்னர்களாகிய விளங்கிய க்யூன், மகீத், சிமனோவ், சால்மன், க்ராப்ட், ஃபியோதரவ் போன்ற பலரும் மிகச் சிறந்த ரெஸ்டாரெண்டுகளில், அதாவது சதோவயா தெருவிலுள்ள 'முதல் கூட்டுறவு', ஃபியோதரவின் உணவுவிடுதி, 'அஸ்தோரியா' அல்லது 'ஐரோப்பிய ஓட்டலி'ன் 'மாடித் தோட்டம்' ஆகிய இடங்களில் குடித்துக் களித்தனர். கோடைகாலத்தில் இவர்கள் விரும்பிச் சென்றது ஸெஸ்த்ரோரெத்ஸ்க் நல்வாழ்விடத்தில் இருக்கும் ரெஸ்டாரெண்டாகும். அதன்

விசாலமான வெளிமுற்றம் கடலை நோக்கியிருந்தது. அப்போது புதுப் பாணியாயிருந்த 'ஜாஸ்' இசைக்குழு அங்கே எப்போதும் முழங்கியது. இரவில் உத்யோஸவின் 'சுதந்திரத் தியேட்டரி'லோ, மியூசிக்-ஹாலிலோ, நகைச்சுவை நாடகமன்றத்திலோ முதன்முறை நிகழ்ச்சிக்குச் சென்று விட்டு கார்களில் இந்த ரெஸ்டாரெண்டுக்கு வருவது பணக்காரர்களுக்குப் பிரியமான பழக்கம்.

இதமான ஒளி நிறைந்த குளுமையான வெளிமாடம். இருண்ட கரையிலே மடிந்து விழும் அலைகளின் மெல்லோசை. இதன் பின்னணியில், அருமையான உணவுப் பண்டங்கள் ஆடம்பரமாகப் பரிமாறப்பட்ட மேசைகளைச் சுற்றி அமர்ந்து, நெப் மன்னர்கள் கோடிக்கணக்கான ரூபிள் மதிப்புள்ள வியாபார ஒப்பந்தங்களை முடித்தார்கள், பேரம் பேசினார்கள், வியாபாரக் கூட்டுகள் அமைத்துக் கொண்டார்கள், உடன்பாடுகள் செய்து கொண்டார்கள்; இவற்றோடு, 1928ஆம் ஆண்டில் ஓரளவு கவலைக்கிடமானதாய் இருந்ததாக அவர்கள் கருதிய 'பொது நிலைமை' பற்றியும் மிக நுணுக்கமாக விவாதித்தார்கள்.

தற்காலிகமாக நெப் ஏற்பாடு முடிவை நெருங்கிவிட்டது என்பதையும், இளமைப் பருவத்திலிருந்த போதிலும் அதற்குள்ளாகவே திண்மை பெற்றுவிட்ட அரசாங்கத் தொழில், கூட்டுறவு சங்கங்கள், வாணிபம் ஆகியவை தனியார் தொழில் முயற்சிகளை ஆக்கிரமிக்கத் தொடங்கி விட்டன என்பதையும் இவர்களில் தொலைநோக்கு வாய்ந்தவர்கள் புரிந்துகொள்ள ஆரம்பித்திருந்தனர். தங்களுடைய லாபத்தின் மீது விதிக்கப்பட்ட வரிகளைக் குறித்தே, நெப்காரர்கள் கவலைப்பட்டனர். லெனின்கிராட் மாவட்ட நிதித்துறையின் வரிவிதிப்பு அலுவலகத் தலைவர் செர்கேய் தேர்-அவனேசவ் என்பவரை அவர்கள் வாய் ஓயாது திட்டிவந்தனர். இவன் வருவாய் அலுவலர்களுக்குப் பொறுப்பு அதிகாரி, 'அணுக முடியாதவன்' எனப் பெயர் பெற்றவன்.

சாய உற்பத்தியாளனான க்யூனும், சாக்லேட் உற்பத்தியாளனான க்ராப்டும் ஏதோ மர்ம வழியில் தேர்-அவனேசவின் கருணைக்குப் பாத்திரமாகி விட்டார்கள் என்றவதந்தி 1927ஆம் ஆண்டின் இறுதியில் பரவியதென்னவோ

உண்மை. எனினும், மற்ற 'மன்னர்'களிடையே அவர் களது நண்பர்கள் இதுபற்றிக் கேட்ட போது க்யூனும் க்ராப்டும் அம்மாதிரி ஒன்றும் இல்லை என்று தீவிரமாக வும் மனப்பூர்வமாகவும் மறுக்கவே, அவர்கள் சொன் னதை மற்றவர்கள் முடிவில் நம்பிவிட்டார்கள்.

பிறகு, திடீரென்று 1928ஆம் ஆண்டு தொடக்கத்தில் அச்சந்தரும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன: தேர்-அவனேசவ், பத்துப் பன்னிரண்டு வருவாய் அலுவ லர்கள், க்ராப்ட், சால்மன், மகீத், ஃபியோதரவ் உள்பட செல்வாக்குள்ள பல நெப்காரர்கள் மற்றும் பலரும் ஒரே நாளில் கைது செய்யப்பட்டனர். நெப்காரர்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளைக் குறைப்பதற்காக அவர்களிட மிருந்து வருவாய் அலுவலர்கள் லஞ்சம் பெற்றுள்ளனர் என்ற வதந்தி உலாவியது. பெயர்பெற்ற க்யூன் தப்பி விட்டான். அவனுடைய சாயத் தொழிற்சாலை அதிகாரி களால் முடக்கி வைக்கப்பட்டது. பழங்காலத் தட்டுமுட் டுச் சாமான்கள் விற்பனைத் தலைவனாகிய, ஒதெஸ்ஸா வைச் சேர்ந்த கிரேக்கன் யானாக்கியும் க்யூன் தலைமறை வாகிவிட்ட இரவிலேயே கண்காணாமல் போய்விட்டான். பழைய வருவாய் அலுவலர்களுக்குப் பதில் புதியவர்கள் வந்தனர்; அவர்களை நெருங்குவது முடியாத காரியம் ஆயிற்று.

அரசக் குடும்பத்தினரின் அந்தரங்க வாழ்க்கை பற்றிய இகழ்ச்சியான கதை தொடர்ச்சியாக வெளிவந்தமையால் 'மாலைச் செஞ் செய்தி' என்ற பத்திரிகை அவ்வாண்டு மிகப் பெருந்தொகை விற்பனையாகி வந்தது. அந்தப் பத்திரிகையில் பெரிதும் மூடுமந்திரமானதும் கலவரமூட் டக் கூடியதுமான கட்டுரை ஒன்று வெளிவந்தது. நெப் காரர்கள் மீது விதிக்க வேண்டிய வரியைச் சட்டவிரோத மாகக் குறைத்த வருவாய் அலுவலர்களின் வழக்கு விரை வாகப் புலனாகி வருவதாகவும், இதில் தொடர்பு கொண்ட மேலும் பலர் அம்பலப்படுத்தப் பட்டிருப்பதாகவும் அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஸெஸ்த்ரோ ரெத்ஸ்கிற்கு இரவுப் பயணங்களும், 'அஸ்தோரியா', 'மாடித் தோட்டம்' போன்ற ரெஸ்டாரெண்டுகளில் களி யாட்டங்களும் நின்றுவிட்டன. பல தனியார் கடைகளும் சங்கங்களும் மூடப்பட்டன. வாடகை வண்டிகள் என்பதற்

கான மஞ்சள் வளையக் குறிகளிட்ட குதிரை வண்டி களும், கார்களும் சவாரிகள் கிடைப்பது அரிதாகிவிட்ட படியால் நிறுத்தங்களில் சோம்பி நின்றன.

நெப்பின் 'அரண் வரிசைகள்' பல இடங்களில் சிதைக் கப்பட்டுவிட்டன என்பது துலக்கமாகத் தெரிந்தது.

இலஞ்சம் கொடுத்த நெப்காரர்கள், அதை வாங்கிக் கொண்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர் பற்றிய இந்த முக்கியமான கூட்டுவழக்கு என்னிடம் ஒப்படைக்கப்பட் டது. டஜன் ணக்கான நிகழ்ச்சிக் குறிப்புகள், ஆயிரக் கணக்கான கோப்புகள், நிபுணர் குழுக்களின் எண்ணற்ற கருத்துகள் ஆகியன அடங்கிய வழக்கு விவரங்கள் பல தொகுதிகள் கொண்டவை. வேலை மிகக் கடுமையாயிருந் தது. பொதுமக்கள் இவ்வழக்கில் மிகுந்த ஆர்வம் காட் டியதால் வழக்கிற்குப் பொறுப்புள்ள மாவட்ட அரசு வழக்குரைஞர் எங்களைத் தூண்டிக் கொண்டிருந்தார்.

பொருளாதாரம் மற்றும் நிர்வாகம் விவகாரங்கள் தொடர்பான வழக்குகளை ஆராயும் புலனாய்வாளனுக்கு மனித வாழ்க்கையின் துன்ப நிகழ்ச்சிகள், மனப் போராட் டங்கள், தீவிர உணர்ச்சிகள் ஆகியவற்றை அரிதாகவே எதிர்ப்பட நேர்கிறது என்னும் தவறான கருத்து விரி வாகப் பரவியிருக்கிறது. இது அப்படி அன்று. பொறாமை காரணமான கொலை, தற்கொலை, கெடுத்தல் முதலிய பொதுக் குற்றங்களின் தன்மையே, காதல், பொறாமை, பழிவாங்கல், தந்திரம், ஏமாற்று, வல்லந்தம் ஆகியன பற்றிய உளவியல் பிரச்சினைகளைப் புலனாய்வாளன் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. இத்தகைய வழக் குகளில் இந்தப் பிரச்சினைகள் யாவுமே தலைமையான முக்கியத்துவம் வாய்ந்தவை. குற்றத்தின் நோக்கங்களை, அதாவது குற்றம் புரியும் எண்ணம் உண்டாவதற்கும், அதைப் புரிவதற்கும் தூண்டுகோலாயிருந்த காரணங்களை யும் சூழ்நிலைகளையும் இவை விளக்கமாக எடுத்துக் காட்டுகின்றன. எனவே இவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமல் புலனாய்வைப் பூர்த்தி செய்வது இயலாத காரியம்.

இலஞ்ச வழக்கில் இக்கேள்விகளுக்கு இடமில்லை என்

பது உண்மை. லஞ்சம் கொடுக்கப்பட்டது, வாங்கப்பட்டது என்ற கூற்றை உறுதிப்படுத்திக் கொண்டபின், ஏன் அவ்வாறு நடந்தது என்று விளக்கிக் காட்டும் காரணத்தையும் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். வேறு குற்ற வழக்குகளில் போலவே, இதிலும் இருதரப்பாரின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மட்டுமே போதா. குற்றவாளியின் ஒப்புதல் வாக்குமூலத்தைத் 'தலையாய சான்று' எனக் கருதி அதை மட்டுமே நம்பியிருப்பது, சட்ட விஷயங்களிலும் உளவியல் விஷயங்களிலும் புலனாய்வாளனுக்குப் போதிய அறிவில்லை என்பதையோ, தனது கடமையைத் தக்கபடி நிறைவேற்ற விருப்பமோ, திறமையோ அவனுக்கில்லை என்பதையோதான் காட்டுகிறது. வருவாய் அலுவலர்களையும் நெப்காரர்களையும் பற்றிய வழக்கில் அநேகமாக எல்லாப் பிரதிவாதிகளுமே ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுத்திருந்தார்கள். ஆயினும் இது சட்ட விரோதமான வரிக்குறைப்புச் சம்பந்தப்பட்ட வழக்காகையால் அவர்களது வாக்குமூலங்களைக் கோப்புகளுடனும் புள்ளிவிவரங்களுடனும் ஒப்பு நோக்குவது அவசியமாயிருந்தது.

ஆகவேதான், வழக்கின் பல தொகைப்பட்ட நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும், சட்டவிரோதமான வரிக்குறைப்புச் செய்யப்பட்டது என்ற உண்மையையும், ஒவ்வொரு லஞ்சம் காரணமாகவும் நிகழ்ந்த வரிக்குறைப்பு எவ்வளவு என்பதையும் துல்லியமாக நிலைநாட்டுவது எனது கடமை எனக் கருதினேன்.

இதோடு, சமூக உளவியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்று நான் கருதிய ஒரு பிரச்சினையும் எனது கவனத்தை ஈர்த்தது. எமது நிதி வருமானப் போர்முனையில் முக்கியமான பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்த பெருந்தொகையான மனிதர்கள்—இவர்களிடையே கம்யூனிஸ்டுகளும் இருந்தார்கள் — சிலர் கோட்பாட்டிலிருந்து வழுவியும், மற்றவர்கள் எதிரிகளின் கையாட்களாக வேலை செய்தும், தேசத் துரோகத்துக்கு ஒப்பான குற்றங்கள் புரிந்தது எவ்வாறு நிகழ்ந்திருக்க முடியும் என்பதே அப்பிரச்சினை. இதற்கு விடை காணும் பொருட்டு, வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த ஒவ்வொரு வருவாய் அலுவலரின் வாழ்க்கை வரலாற்றையும் தன்மைகளையும் விவரமாக

ஆராய்ந்தேன். படிப்படியாய், வழக்கின் இந்த அமிசம் தெளிவு பெறத் தொடங்கியது. பெரும்பாலும் குடி, ஒழுக்கத்தில் உறுதியின்மை, திடசித்தமும் கோட்பாடுகளும் இல்லாமல் போனதால் அவசியமாய் ஏற்பட்ட சீர்குலைவு, பேராசை, சுலப வழியில் பணம் பெறும் விருப்பம் ஆகியவையும், நெப்காரர்கள் அவர்களைத் தந்திரமாகச் சிக்க வைத்ததுமே அவர்களது செயல்களுக்குக் காரணமாயிருந்தன. ஆழ்ந்த நம்பிக்கை, திட்டமான கருத்துகள், ஒருவன் எந்த இலட்சியத்திற்குச் சேவை செய்து வந்தானோ, அந்த இலட்சியத்தில் விசுவாசம் ஆகியவை ஒருபொழுதும் இல்லாது போனமையால், லஞ்சம் வாங்கும் நிலைக்குத் தாழ்ந்து விட்டான். மற்றொருவன் குடிக்கத் தொடங்கி, பெருங்குடியனாகி, அபாயத்தை உணர்ந்துகொள்வதற்கு முன்பே, தனது கௌரவத்தையும் எதிர்காலத்தையும் குடியில் தொலைத்து விட்டான். எப்பொழுதும் நேர்மையுடன் இருந்து வந்த மூன்றாமவன், கெட்ட சகவாசத்தின் விளைவாக, தன்னைத் தந்திரமாக அணுகிய நெப்காரர்களின் பரிசுகளையும், சிறிய சலுகைகளையும் ஏற்பதில் தொடங்கி, தேர்ந்த கைக்கூலிக்காரனாக மாறி, ''அட, யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?'' என்ற உலகறிந்த கோட்பாட்டுக்கு ஒரேயடியாக ஆட்பட்டுவிட்டான். நான்காமவன், பேராசை பிடித்த மனைவிக்கு வசப்பட்டவன். எல்லாரும் நன்றாக வாழ்வதாகவும், அவள் ஒருத்திதான் துன்பப்படுவதாகவும், மென்மயிர் அங்கிகூட வாங்க முடியவில்லை எனப் புலம்பித் தன் கணவனை ஓயாது தொந்தரவு செய்தாள். எனவே வரிசெலுத்த வேண்டிய ஒருவனிடமிருந்து மென்மயிர் அங்கியைப் பரிசாக வாங்கிக் கொடுத்து, சைத்தானின் கையில் வசமாக மாட்டிக்கொண்டான்.

இந்த வழக்கோடு தொடர்பு கொண்ட ஒரு சுவையான நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. பிளத்தோனவ் என்ற வருவாய் அலுவலருக்குத் தன் அழகிய இளம் மனைவி மேல் அளவு கடந்த அன்பு. அவளோ எப்போதும் நச்சரிக்கும் இயல்புடையவள். மிகுந்த சாமர்த்தியமும் தந்திரமும் வாய்ந்த கீர்ஸ் என்ற நெப்காரன் இதைக் குறிப்பாகத் தெரிந்துகொண்டு, ஸீல் தோல் அங்கி ஒன்றைப் பரிசாக ஏற்குமாறு பிளத்தோனவை வற்புறுத்தி இணங்

கச் செய்துவிட்டான். அதன் பிறகு அவன் பிளத்தோன வின் பெயரால் மற்ற நெப்காரர்களிடம் லஞ்சம் வாங்கு வதும், அதில் பெரும்பகுதியைத் தனக்கு வைத்துக்கொள் வதும், தான் சொன்னபடியெல்லாம் பிளத்தோனவ் நடக் குமாறு செய்வதுமாக அவனைப் பம்பரமாக ஆட்டி வைக்கத் தொடங்கினான். இளைஞனாகிய பிளத்தோன வின் நீலக் கண்கள், பொன்மயிர், பெருந்தன்மை ததும் பும் முகம், அவனது மென்மையான திரண்ட உதடுகள், அவன் திடசித்தமற்றவன், உணர்ச்சிவசப்பட்டவன் என் பதைக் காட்டின. இந்த வாலிபன் கீர்ஸை எதிர்க்கப் பலமுறை முயன்றான். ஆனால் அவன் தன் கைக்குள் அடக்கம் என்பதை நன்கு அறிந்திருந்த கீர்ஸோ, புருவங் களைச் சற்றே உயர்த்தி அவனை அருத்தத்தோடு நோக்கி எரிச்சலூட்டும் குரலில் சொன்னான்: ''அருமை ஐயா, நீங்க எனக்குக் கடமைப்பட்டவர் என்பதை மறந்து விடு கிறீர்கள் போலிருக்கே!'' அவன் இதைச் சொல்லுகிற அச்சுறுத்தும் தோரணை, அவன் உறுத்துப் பார்க்கும் பார்வை இவற்றால் பிளத்தோனவ் உடனடியாகத் துவண்டு போய் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். நெஞ் சுக்குள் மட்டும் இந்தச் சைத்தானையும், தன் அழகிய மனைவியையும், தன்னை அடிமையாக்கிய நாசமாய்ப் போன ஸீல் தோல் அங்கியையும் சபித்தான்...

முதலில் நல்லவர்களாயிருந்தும், திடசித்தமும் உறுதி யும் இல்லாமையால்; தீய, குற்ற இயல்பு கொண்ட பிறரது சித்தத்திற்கு முற்றிலும் ஆட்பட்டு விட்டவர்களை அப்பொழுதும் புலனாய்வாளனாக நான் பணியாற்றிய பிற்காலத்திலும் பல முறை காண நேர்ந்தது. பேசா விலங்குகள் போன்ற மடத்தனமான, இகழத்தக்க கீழ்ப் படிவின் காரணமாகவே இவர்கள் அடிமைப்பட்டனர். எனினும் இத்தகையவர்களுக்காக நான் எப்போதுமே வருந்துவதுண்டு. திடசித்தமின்மை குற்றத்தின் சகோதரி. இந்தக் கேடு விளைக்கும் உறவுமுறையை நான் எத்தனை யோ தடவைகள் காண நேர்ந்தது!

பொறி

காதலும் திடசித்தமின்மையும் சேர்ந்து, முதலில் நேர் மையாளனாயிருந்த மனிதனைக் கொடிய, அபாயகரமான

குற்றவாளியாக மாற்றி, அதுவரை களங்கமற்று இருந்த அவனது வாழ்க்கையை எப்படிப் பாழடித்துவிட்டன என்பதற்குத் தெளிவான உதாரணம் இந்த வழக்கை ஆராய்கையில் எனக்குக் கிடைத்தது. இப்படிப் பாழான மனிதன் செர்கேய் தேர்-அவனேசவ்.

புரட்சி தொடங்கிய ஆரம்ப நாள்களிலிருந்தே அவன் லெனின்கிராட் மாவட்ட வரிவசூல் அலுவலகத்தில் வேலை செய்து வந்தான். பொருளாதாரத்தில் கற்றுத் தேர்ந்தவன், சந்தேகமின்றிப் பெரிய நிதியாதார நிபுணன், சிறந்த உழைப்பாளி. அவன் கட்சி உறுப்பினனாக இல்லாவிடினும், அக்காலத்தில் வழக்கமாகச் சொன்னது போல ''சோவியத் அரசை உறுதியாக ஆதரித்தவன்''.

இளமை கடந்த பின்பும் பிரம்மச்சாரியாகவே இருந்தான். முதலில் படிப்பும், அதன்பின் வேலை மும்முரமும் அவனது நேரத்தைக் கவர்ந்துகொண்டன. கடைசியாக ஐம்பதாவது பிறந்த நாளன்றுதான், தனது வாழ்நாள் அநேகமாக முடிந்துவிட்ட நிலையில், குடும்பமோ, குழந்தைகளோ, ஆழ்ந்த காதலோ கூட இல்லாமல் காலந்தள்ளி விட்டது அவன் மனத்தை உறுத்தியது.

தேர்-அவனேசவ் என்னிடம் சொன்னான் :

''அன்றைய தினம் நான் நிலைக்கண்ணாடிக்கு எதிரில் நின்றுகொண்டு, மிகக் கவனமாக, மற்றவர்கள் பார்ப்பது போல, என்னை உற்றுப்பார்த்துக் கொண்டேன்... வழுக்கை விழுந்த தலையும், ஊதிய கன்னங்களும், பருத்த தொப்பையும், சிறிய உடலுமாகக் காட்சியளித்த முதிய மனிதனை எனக்குப் பிடிக்கவே இல்லை. கண்ணாடிக்குள்ளிருந்து அவன் ஏக்கத்துடன் என்னை நோக்கிப் பின் வருமாறு பேசுவது போலிருந்தது: 'ஏய், தம்பி, உன்னை எக்கதிக்குக் கொண்டுவந்து விட்டாய் பார்த்தாயா? நீ கிழவன், படுகிழவன். முதுமையில் நினைத்து மகிழ்வதற்குக் கூட உன்னிடம் ஒன்றுமில்லையே! நிதியாதாரப் புத்தகப் புழுவே! வரவு செலவுத் திட்டத்தின் பத்திகள், விதிகள், உபரி வரிகள், வரி மதிப்பீடுகள், இவற்றைத் தவிர நீ வாழ்விலே எதையேனும் கண்டதுண்டா? கிழடே! தக்க பெண்ணுடன் நீ எப்போதாவது உண்மையான காதல் செய்ததுண்டா? அந்தக் காதலினால் உன் நெஞ்சம் துடித்த

துண்டா? தூக்கம் பிடிக்காமல் போனதுண்டா? பொறாமையால் வேதனையுற்று நீ வெதும்பியதுண்டா? வெள்ளை இரவுகளிலே, காதலி பராமுகமாயிருந்த போதெல்லாம் நம்பிக்கையிழந்து மறுகியும், அவள் முடிவாக 'ஆகட்டும்' என மொழிந்ததுமே பேருவகையில் மெய்மறந்து நேவா ஆற்றின் கரையில் நீ சுற்றி அலைந்ததுண்டா?.. மொத்தத்தில் அது துன்பகரமான பழங்கணக்குப் பார்வையிடும் துன்பகரமான முடிவுகளும் நிகழ்ந்த கரிநாள்...''

தேர்-அவனேசவ் பெருமூச்சு விட்டு ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து, யோசனையில் ஆழ்ந்தான். ஃபந்தான்கா நதிக்கரைச் சாலையைப் பார்த்தவாறிருந்த எனது அறையின் திறந்த சன்னல்களின் வழியே வெளிலொளி நிறைந்த மே நாளின் குதூகல ஒலி கேட்டது. தொலைவில் செழுமையும் பசுமையுமான 'கோடைத் தோட்டத்'தில் விளையாடும் குழந்தைகளின் மகிழ்ச்சிக் குரல்கள் காற்றில் மிதந்து வந்தன.

''எனது வழக்கிற்கும் இதற்கும் உண்மையில் ஒரு தொடர்பும் இல்லை,'' என்று தேர்-அவனேசவ் திடுமெனக் கூறினான். ''கயூன், க்ராப்ட் ஆகியவர்களிடமிருந்து லஞ்சம் பெற்றுக் கொண்டு அவர்களின் வரிகளைக் குறைத்தேன் என்ற எனது குற்றத்தை ஒப்புக் கொண்டுவிட்டேன். மற்றவை வெறும் வார்த்தைகளே. சிறைக்குள் சிந்திப்பதற்கு ஏதாவது வேண்டுமல்லவா?''

''இதற்கு முன்னே நீங்க எப்பவாவது லஞ்சம் வாங்கியதுண்டா?''

''ஒருபோதும் இல்லை! 1927ஆம் ஆண்டு இலையுதிர்காலம் வரை வெட்கப்படத்தக்க காரியம் எதையும் நான் செய்ததில்லை! சத்தியமாச் சொல்றேன்!..''

இதை அவன் ஒரே ஆவேசத்துடன் மனப்பூர்வமாகக் கூறியபடியால், அதை நம்புவதைத் தவிர எனக்கு வேறொன்றும் இல்லை. அத்துடன் நிதித் துறையில் தேர்-அவனேசவ் சேவை செய்துவந்த அத்தனை நீண்ட காலத்தில் ஒரு தவறுதலான காரியம் செய்தான் என்பதற்கு எவ்விதமான அறிகுறியும் இல்லை. அதற்கு மாறாக, தனது அலுவல் தொடர்பான கடமைகளில் அவனது போக்கு அப்பழுக்கற்றதாயிருந்தது. இதை எல்லாரும் அறிந்திருந்தார்கள்.

நன்கு படித்தவனும், முன்னர் நேர்மையாக இருந்தவனும், முதிர்ந்த அநுபவம் பெற்றவனுமான இந்த மனிதனை, இத்தனை ஆண்டுகளாக அவன் உறுதியுடன் பின்பற்றிவந்த பாதையிலிருந்து பிறழச் செய்தது எதுவாக இருக்கக் கூடும்?

அவன் ஒருவன்தான் இக்கேள்விக்கு விடையளிக்கக் கூடியவன். ஆனால் அதைச் செய்ய அவன் விரும்பவில்லை என்பது நன்கு தெரிந்தது. பலமுறை வழக்குப் பற்றிய கேள்விகளைக் கேட்டு முடிந்ததும், இந்த விஷயத்தில் பேச்சைத் திருப்புவதற்காகத் தூண்டித் துருவிப் பார்த்தேன். வழக்குப் பற்றிய குறிப்புகளில் பதிந்து கொள்வதற்காக நான் இதைக் கேட்கவில்லை என்றும் சொல்லிப்பார்த்தேன். அவனோ வருத்தம் தோன்றச் சிரித்து மழுப்பினானே தவிர, பதிலே சொல்லவில்லை.

இதற்கிடையில், வழக்கு விசாரணை முடிவிற்கு வந்து கொண்டிருந்தது. பிரதிவாதிகளின் மனைவிகள் வாரம் ஒரு முறை அவர்களைப் பார்க்க அநுமதிக்கப்பட்டனர். ஒவ்வொரு வியாழக்கிழமையும், அநுமதிச் சீட்டிற்காக அவர்கள் என்னிடம் வருவார்கள். அவர்களில் தேர்-அவனேசவின் மனைவியும் ஒருத்தி. இரண்டாண்டுகளுக்கு முன்னால் அவளைத் திருமணம் செய்து கொண்டிருந்தான். அவள் கவர்ச்சி மிகுந்த இளநங்கை, பெரிய பசு நிறக் கண்கள்; அழகான, மேல் எடுப்பான மூக்கு; சபல சித்தத்தைக் காட்டும் குமிழ் இதழ்கள். மற்றவர்களுடைய மனைவிகளைப் போலவே அவளும் தனது கணவனின் உடல் நலனைப் பற்றி அக்கறையுடன் விசாரித்து விட்டு, அநுமதிச் சீட்டைப் பெற்றதும், தலையசைத்துக் கொண்டு மறைந்துவிடுவாள். எப்போதுமே அவள் ஏறக் குறையத் தன் வயதுள்ள நாகரிகமான பொன்மயிர் கொண்ட ஓர் அழகிய இளைஞனோடு வருவாள். நடைபாதையில் நின்றுகொண்டு அவளுக்காகக் காத்திருப்பான். ஒவ்வொரு தடவையும் அவர்கள் இருவரும் சேர்ந்தே போவார்கள். ஓரிரண்டு தடவைகள் நான் சன்னல் வழியே பார்த்த பொழுது அவர்கள் கைகோர்த்துக் கொண்டு ஃபந்தான்கா நதிக்கரைச் சாலையோரமாக நடந்து செல்வதைக் கவனித்தேன். அவன் அவளுக்கு ஏதோ வேடிக்கையாகச் சொல்லிக்கொண்டு போனான், அவள் சிரித்

தாள். வழக்கமாக அவள் தின்பண்டங்கள் அடங்கிய, துணி சுற்றிய சிப்பம் ஒன்றைக் கொண்டுவந்து, அதைத் தனது கணவனிடம் சேர்க்குமாறு அலுவலனிடம் கொடுத்து விட்டுச் செல்வாள். அந்தச் சிப்பங்களின் மீதுள்ள கையெழுத்து நீலப் பென்சிலால், சுயநம்பிக்கையும் உறுதியும் தோன்ற ஒரு தொழில் வல்லவன் எழுதிய எழுத்துப் போலவே இருக்கும், இதை நான் எப்போதும் கவனித்தேன்.

''இந்தச் சிப்பங்களின் மீது இத்தனை அழகாக எழுதுவது யார்?'' என்று ஒரு நாள் சிப்பத்துடன் அவள் என் அறைக்குள் நுழைந்த போது கேட்டேன்.

''எங்களோட நண்பன் ஒருத்தன் எழுதினான்,'' என்று முகம் சிவக்கச் சொன்னாள்.

''வழக்கமா உங்களோட வருகிறானே, அவனா?''

''ஆமாம்,'' என்று விருப்பமின்றி பதிலளித்தாள்.

அதற்குமேல் அவளிடம் நாம் கேட்கவில்லை, ஏனென்றால் இது வழக்கோடு சம்பந்தப்பட்டது அன்று. இருப்பினும் தன்னை விட இருபத்தைந்து வயது இளையவளான பெண்ணை மணம் செய்து கொண்டதற்கு, தேர்-அவனேசவ் அபரிமிதமான தண்டம் செலுத்தி வருகிறான் என்று எனக்குள் எண்ணிக் கொண்டேன். எல்லாம் சரியாகயிருந்தாலே இந்த நிலைமை கவலைக்கிடமானது. போதாததற்கு இந்தப் பெண்ணின் கணவனோ சிறையிலிருந்தான். அவனுக்குக் குறைந்தது பத்து ஆண்டுகளாவது சிறை முகாமில் இருக்கும்படி தண்டனை கிடைக்கும் என்பதும் அவளுக்குத் தெரியும். இதனால் நிலைமை இன்னும் மோசமாகி விட்டது.

பிரதிவாதிகளின் மனைவிகள் தங்களின் கணவர்களிடம் விசுவாசமாயிருப்பது அரிது என்பதை, புலனாய்வாளனாக இருக்கும் போது துரதிருஷ்டவசமாக நான் அடிக்கடி காண நேர்ந்தது. விசாரணை ஆரம்ப நிலையில் இருக்கும் போது கூட சில சமயங்களில் இந்த இளம் பெண்கள் 'ஆபத்துக் காலத்திற்கான இறங்குமிடம்' ஏதாவது தென்படுகிறதா எனக் கவலையுடன் தேடத் தொடங்கிவிடுவதுண்டு. இத்தகைய பெண்களில் ஒருத்தி, என்னிடம் முற்றிலும் வெளிப்படையாகவே குற்றம் காணும் முறையில் இப்படியே சொன்னாள்.

எந்த மனைவியின் பொருட்டாக ஸீல் தோல் அங்கிக்கு ஆசைப்பட்டு பிளத்தோனவ் கேட்டுக்கு ஆளானானோ அதே மனைவி, எடுப்பான தோற்றமும், திரண்ட மார்பும், பழுப்புக் கேசமும் வாய்ந்தவள். எப்போதும் வாசனைப் பொருள்கள் உபயோகித்தாள். ஒயிலாக முடியலங்காரம் செய்து கொண்டாள். குலுக்கி மினுக்கும் இயல்பு கொண்டிருந்தாள். சேர்ந்தாற்போல இரண்டு முறை பார்ப்பதற்கு அவள் வராமல் போகவே, பிளத்தோனவ் ஒரே பதைபதைப்புடன் எனக்குக் குறிப்பெழுதி அனுப்பினான். எனவே நான் அவளை அழைத்து ஏன் இரண்டு தடவை கணவனைப் பார்க்கவோ, அவனுக்கு ஏதேனும் அனுப்பவோ இல்லை என்று கேட்டேன்.

''அவராலே புரிஞ்சுக்க முடியலியா?'' என்று பதிலளித்தாள், தனது பெரிய அழகிய சாம்பல் நிறக் கண்களை என் பக்கம் திருப்பியவாறு. ''என்னைப் பத்தியும் நான் யோசிக்கணும், இல்லையா? எப்படியானாலும், ஒரு சிறைப் பறவையின் மனைவியாக இருந்து கொண்டு, வாழ்க்கை பாழாய்ப் போயிருச்சே என்று நான் அழுது கொண்டிருக்க முடியாது! நான் ஒன்னும் குழந்தை இல்லே. எனக்கு வயசு இருபத்து எட்டு ஆகுது. நல்ல கணவனைத் தேடுறது சுலபமானது இல்லே. கடவுளுக்கு நன்றி, எனக்குக் குழந்தைகள் கிடையாது. அது வேறு இருந்துட்டா, மறு மணம் ஆனாற்போலத்தான்.''

''கணவன் விஷயமா உங்களுக்குப் பொறுப்பு இல்லையின்னு நீங்க நினைக்கிறீங்களா? பார்க்கப் போனா அவர் சிறையிலிருக்க நேர்ந்ததற்கு உங்க குற்றமும் தானே காரணம், இல்லையா?'' என்று என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவாறு கேட்டேன்.

''என்னோட குற்றமின்னு இப்பச் சொல்லாதீங்க! அவன் ஒரு மக்கு, சாமர்த்தியம் போதாது. பொறுப்பு என்பதற்கு ஓர் எல்லை உண்டு. என்னோட இளமை, அழகு, முதல் காதல் எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுத்தேன்... ஆகவே என்னோட வாழ்க்கையை இனிமையாக்க வேண்டியது அவனோட கடமை. அதுக்கு அவன் தகுதியில்லை என்றால் அது அவனோட கெட்ட காலந்தான்.''

மணம் புரிந்து கொள்வது வாழ்க்கையில் 'மேலே

செல்வதற்கான படி' என்றும், தங்கள் 'இளமை, அழகு, முதல் காதல்' இவற்றிற்கு விலையாகத் தங்களுக்கு வசதியான வாழ்க்கையை அமைத்துத் தருவது கணவன்களின் கடமை என்று கருதும் ஒரு குறித்த வகையைச் சேர்ந்த பெண்களின் முடிவாகத் தீர்ந்துபோன 'தத்துவம்' இந்தப் பெண்ணின் வாயிலாக மீண்டும் எனக்கு எதிர்ப்படுகிறது எனப் புரிந்துகொண்டேன். இவர்களுடைய கணவன்களும் இளமையையும், பெரும்பாலும் முதல் காதலையும் தங்களுக்கு அளித்திருக்கிறார்கள் என்பது இப்பெண்களுக்கு ஏன்தான் ஒருபோதும் புலப்படாமல் போகிறதோ, எனக்கு இன்றளவும் புரியவில்லை. ஒரு சாராரின் 'முதலீட்டை' மட்டும் ஏன் குறிப்பிடுகிறார்கள், மற்றதை ஏன் சொல்வதில்லை?

சிறையிலிருப்பவர்களின் அழகிய இளம் மனைவிகளை ஆட்டுக் கிடையில் ஓநாய்கள் பாய்வது போலப் பாய்ந்து கவ்விக்கொள்ளும் சில ஆண் விலங்குகள், அபூர்வம் என்றாலும், இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிடுவது நியாயமாகும். சிறைப்பட்டவனின் மனைவி தனது கஷ்டத்தின் காரணமாக எளிதில் மசிந்துவிடுவாள் என்பது இவர்களின் எண்ணம். இத்தகைய கயவன், இம்மாதிரிப் பெண்களிடம் அளவுகடந்த பரிவு காட்டுவது போலவும், அவர்களது அழகைப் பாராட்டுவது போலவும் நடிப்பான். இத்தகு பரிவும் பாராட்டும் எப்போதும் பெண்களுக்குத் தேவை. இக்கட்டில் இருக்கும் போதோ, கேட்கவே வேண்டாம். ஆகவே, முடிவில் கயவனின் காரியம் கைகூடி விடும். அத்துடன், அந்தப் பெண் வேலை பார்த்தாலோ, கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருந்தாலோ, இந்த ஓட்டுண்ணி காதலின்பம் பெறுவதுடன் நின்றுவிடுவதில்லை.

சிறையில் கணவனைக் கண்டு பேசுவதற்கு அநுமதிச் சீட்டைப் பெறும் பொருட்டு தேர்-அவனேசவின் மனைவி என்னிடம் வந்தபோது, அவளுடன் இருந்த பொன்மயிரும் வெளிறிய கண்களும் கொண்ட நாசூக்கான இளைஞன் இம்மாதிரி ஒட்டுண்ணிதான். நான் ஆரம்ப முதலே அவனைக் கவனித்து வந்தேன், ஆனால், இந்தக் குடும்பத்தின் வாழ்வில் அவனது காரியங்கள் என்ன என்பது, விசாரனை முடிந்து விட்டது என தேர்-அவனேசவுக்கு

அறிவிக்கப்பட்ட அன்றுதான் எனக்குத் தெரியவந்தது. வழக்குத் தொடர்பான கோப்புகளைப் படித்துத் தெரிந்து கொண்டு விட்டதாகவும், மேற்கொண்டு அறிவிக்கத் தன்னிடம் எதுவும் இல்லை என்று எழுதியிருந்த காகிதத்தில் கையெழுத்திட்ட பின்பு தேர்-அவனேசவ் திடீரென்று சொன்னான்:

''எனது வாழ்க்கை, கருத்துகள், நம்பிக்கைகள் ஆகியவை எல்லாம் சிறந்தவையாய் இருந்துங் கூட, நான் ஏன் லஞ்சம் வாங்கும் நிலைக்கு வந்துவிட்டேன் என்று பல தடவை என்னைக் கேட்டிருக்கீங்க. ஒவ்வொரு முறையும் பதில் தராது, தட்டிக் கழிச்சு வந்திருக்கிறேன். நாம் இருவரும் இங்கே சேர்ந்து உட்கார்ந்திருப்பது இதுவே கடைசி முறை. அடுத்து நீதிமன்றம். அது எப்படியோ? மரண தண்டனையாக முடியலாம். விடை பெறுவதற்கு முன்பாக, நீங்க என்னிடம் காட்டிய பரிவுக்காக உங்களுக்கு நன்றி சொல்ல விரும்புறேன். உண்மையாச் சொல்றேன், என் நிலையில் இருக்கிறவனுக்குத்தான் இதன் அருமை புரியும். அதோட, தேர்-அவனேசவ் குற்றவாளியானது எப்படி என்பதை விளக்க விரும்புறேன். சொல்ல அனுமதிப்பீங்களா?''

''நிச்சயமா, இதை அறிய எனக்கு எப்பவுமே விருப்பம்.''

''நல்லது, அப்படியானால் கேளுங்க. இப்ப குற்ற விசாரணை முடிந்ததனாலே நான் சொல்றது இனிமேல் வழக்குப் பற்றிய குறிப்புகளில் பதிவாகாது, அது அதற்குரியதும் அன்று. ஆகவே, எல்லாத்தையும் உங்களிடம் சொல்லத் தீர்மானிச்சிருக்கேன்...''

''எனது ஐம்பதாவது பிறந்த நாளுக்கு ஆறு மாதங்களுக்குப் பிறகு,—ஒரு முறை அது பற்றி உங்களிடம் சொல்லத் தொடங்கினேனே நினைவிருக்கா?—மாஸ்கோவிற்கு ஓர் அவசர அறிக்கை அனுப்பும் பொருட்டு அலுவலகத்தில் வெகு நேரம் வரை தங்க நேர்ந்தது. அப்ப மே மாதக் கடைசி. லெனின்கிராடில் வெள்ளை இரவுகள் ஆரம்பமாகும் காலம். இந்த இரவுகளைப் பற்றி மிகப் பலர் ஏன் தான் பரவச உணர்ச்சி அடைகிறாங்களோ,

எனக்கு எப்பவுமே புரிவது இல்லை. இரவும் பகலும் சேர்ந்த இந்த இரண்டுங்கெட்டான கலப்பு, மக்களின் தூக்கத்திற்குக் கேடாக இரவெல்லாம் நகரத்தில் படர்ந் திருக்கும் இந்தப் போலி அந்தி மங்கல், வெளிறிச் சோகை பிடித்த கதிரவன், வெளிறிய உதய நேரத்தில் மெல்ல மெல்ல மேலே எழுவது, இதெல்லாம் எனக்குக் கட்டோடு பிடிக்காது, என் வேலைக்கும் குந்தகம் விளைக்கும். இந்த வெள்ளை இரவுகளில் உடல்நலத்தைக் கெடுப்பதும் தீங்கி ழைப்பதுமான ஏதோ தன்மை இருக்கு என்று விஞ்ஞானி கள் என்னைக்காவது கண்டறிவாங்க என்று நான் உறுதி யாச் சொல்றேன்; ஆகவே என்னோட துயரமெல்லாம் ஒரு வெள்ளை இரவில்தான் தொடங்கின என்பதில் அதி சயம் இல்லை. சுருக்கமாச் சொன்னா, அன்று அவசர அறிக்கை தயாரித்து அனுப்ப வேண்டியிருந்தது. என் அலுவலகத் தட்டச்சுக்காரிகள் எல்லாரும் ஏற்கெனவே வீட்டுக்குப் போயிட்டாங்க. அகவே முறை அலுவலில் இருந்த தட்டச்சுக்காரியை அழைத்து வரச் சொன்னேன். சில நிமிடங்களில் அழகே உருவான இளம் பெண் ஒருத்தி உள்ளே வந்தாள். வேலையாள் அவளோட தட்டச்சுப் பொறியைத் தூக்கி கொண்டுவந்து வைத்தான். நான் சொல்லத் தொடங்கினேன்...''

சிகரெட் பற்றவைத்துக் கொள்வதற்காக தேர்-அவ னேசவ் கதையை இடையில் நிறுத்தினான். நிறையத் தீக் குச்சிகளை உரசினான். ஆனால் அவனது கைகள் நடுங்கிய தால் ஒவ்வொரு தடவையும் சிகரெட் பற்றுவதற்கு முன் தீ அணைந்துவிட்டது. அவன் பதற்றமடைந்தது, என்னிட மிருந்து அதை மறைக்க முயல்கிறான் என்பது நன்கு தெரிந்தது. ஆகவேதான், அவன் பற்றவைக்கத் திணறு வது இயல்பானது என்பது போலப் பாசாங்கு செய்தேன்.

''தீக்குச்சிகள் ஈரமாகிப் போயிருக்கும்,'' என்று இறுதி யில் சொன்னேன். ''என்னோட பெட்டியைப் பொறுதிப் பார்க்கிறீங்களா?''

ஒரு குச்சியை உரசினேன். பல முறை புகையை ஆழ இழுத்துவிட்டான். பிறகு, சட்டென என்னைப் பார்த்துச் சொன்னான்:

''கதையைச் சுருக்கமாச் சொன்னால், இரண்டு மாதங் களுக்குப் பிறகு அந்தப் பெண்ணை மணந்துக்கிட்டேன்.

நான் ரொம்ப மகிழ்ச்சியா இருந்தேன். ஆனா தலைக்கு மேல் வேலை. இரவில் வெகு நேரங்கழித்தே வீட்டுக்கு வருவேன். என் மனைவி தனியாகத்தான் இருப்பாள். இந்த விஷயத்தில் பெரிய அதிகாரி மனைவியின் பாடு பரிதாபமானதுதான். உங்களிடம் உண்மையாச் சொல் றேன், இந்த இரவு வேலை, முடிவற்ற ஆலோசனைக் கூட்டங்கள், அலுவலகத் தலைவர்களுக்கு இரவு நேர அழைப்புகள், இதெல்லாம் யார் மூளையில் உதித்ததோ, எதற்கோ எனக்குப் புரியலே. கால்யா தனிமையில் ஏங்கத் தொடங்கினாள். ஒரே களைப்பாகவும் சோர்வாகவும் நேரங்கழிச்சு வீடு திரும்புற நான், ஏதாவது கொஞ்சம் கொறித்து விட்டு, அடித்துப் போட்டது போலப் படுக் கையில் விழுந்து தூங்கிப் போவேன். ஒரு தடவை, நீண்ட நேரப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, இந்த வாழ்க்கை தனக்குப் புளிச்சுப் போச்சுன்னு முற்றிலும் வெளிப்படை யாகவே சொன்னாள். சில நண்பர்களை அறிமுகம் செய்து கொண்டு, அவர்களுடன் அரங்குகளுக்குப் போய் வரும் படி அவளுக்கு ஆலோசனை சொன்னேன். எனக்கு வேறு வழி இல்லை... பிறகு, ஒருநாள் இளைஞன் ஒருத்தனை எனக்கு அறிமுகம் செய்து வைத்து, சிநேகிதியின் வீட்டில் அவனைச் சந்தித்ததாகச் சொன்னாள். அவன் ஓவியன், ஆனா வெளிப்படையா ரொம்பத் திறமையில்லாதவன். லெனின்கிராட் விளம்பர அலுவலகம் ஒன்றில் வேலை செய்தான். அங்கே அவன் சொந்தமாகப் படம் வரைந் தது கொஞ்சந்தான். கணக்குகளையும் அலுவலகத்திற்கு வரும் ஆர்டர்களையும் கவனித்ததுதான் அவன் அதிக மாகச் செய்த வேலை. அவனைப் பார்த்தால் தன்னோட வாழ்க்கையில் ரொம்பவும் திருப்தி கொண்டவனைப் போலத் தெரிந்தது... சீக்கிரமே அவன் எங்க வீட்டுக்கு நாள்தோறும் தவறாது வரத் தொடங்கினான். நான் வீடு திரும்பிய நேரமெல்லாம் அந்த கியோர்கியை அங்கே பார்த்தேன். அவன் இங்கிதம் தெரிந்தவன், அடக்க ஒடுக்க மாயிருப்பான். ஆனா சர்க்கரை மாதிரி ஒரே தித்திப்பான வன். புலன்களைப் பாதிக்கிற அவனோட விழிகள் வெளி றிய நீல நிறமானவை; எப்போதும் எதையோ மோப்பம் பிடிக்கிறது போல மூக்கு முன் துருத்தியிருக்கும்... வெளிப் படையாச் சொல்றேன், அகராதிப் பேச்சும், அலி போன்ற

மினுக்கும், கெட்டழிந்தவன் என்பதைக் காட்டும் சொத்தைப் பற்களும் கொண்ட அந்தப் பயலைக் கண்டாலே எனக்குப் பற்றிக்கொண்டு வரும். எப்பப் பார்த்தாலும் அடிமைத்தனமா குழைவான். அவன் வேலை செய்யுறதாகச் சொல்லிக் கொள்ளும் 'புனிதக் கலை'யைப் பற்றி உற்சாகத்துடன் பிரமாதமா அளப்பான்... இவன் வேசித்தனமான நடத்தையுள்ள துரர்த்தன் என்பதை நான் கண்டு கொண்டேன், ஆனா எத்தனையோ காரணங்களை முன்னிட்டு எதையும் என் மனைவியிடம் சொல்லலே. அவள் எனக்குத் துரோகம் செய்வாள் என்று நான் நினைக்கவே இல்லை. அம்மாதிரி எனக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை!''

இவ்வாறு தேர்-அவனேசவ் நெடுநேரத்திற்குத் தன் கதையைச் சொல்லிக்கொண்டு போனான். அதைக் கேட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். மனிதன் எவ்வளவு இழிசெயலில் இறங்க முடியும் என்பதை அதிசயிக்கும் வகையில் காட்டியது அக்கதை. எனினும், தேர்-அவனேசவைச் சிக்க வைப்பதற்காக நெப்காரர்கள் தந்திரமாக அமைத்த பொறி அதில் அடங்கியிருப்பதை நான் அப்போது தெரிந்து கொள்ளவில்லை. தேர்-அவனேசவுக்கும் இது தெரியாது. அவன் அறிந்தவை எல்லாம் என்னிடம் சொன்ன விவரங்கள் மட்டுமே.

தேர்-அவனேசவின் மனைவி கியோர்கியுடன் அளவளாவ ஆரம்பித்த ஆறு மாதங்களுக்குப் பின் ஒருநாள் அவன் கண்ணீரும் கம்பலையுமாக அவளிடம் வந்து, தான் 'விளாதீமிர் கிளப்'பில் சீட்டாடி, அரசாங்கப் பணம் பத்தாயிரம் ரூபிள்களைப் பறிகொடுத்து விட்டதாகவும், தன்னால் 'இந்த அவமானத்தைத் தாங்க முடியாது' தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்து விட்டதாகவும், 'கடைசியாக விடை பெற்றுப் போகவே' வந்ததாகவும் ஓலமிட்டு அவல நாடகமாடியிருக்கிறான்.

அன்றிரவு, நேரங் கழித்து, தேர்-அவனேசவ் வீட்டிற்கு வந்ததும் தன் மனைவி துயரமே வடிவாய் விம்மி அழுது கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறான். பெரும் சிரமத்துடன் அவளைத் தேற்றியிருக்கிறான். அவளோ தான் கியோர்கியைக் காதலிப்பதாகவும், அவனுக்கு நேர்ந்திருக்கும் துன்பத்தைத் தன்னால் தாங்க முடியாது எனவும்

கூறியிருக்கிறாள். தன் மனைவி தனக்குத் துரோகம் செய்து விட்டாள் என்பதும், காதலனைக் காப்பாற்றாவிட்டால் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அச்சுறுத்தினாள் என்பதும் ஏக காலத்தில் தேர்-அவனேசவைத் தாக்கவே அவன் நிலைகுலைந்து போயிருக்கிறான்.

''அந்தப் பயங்கரமான இரவில், தற்கொலை செய்து கொள்ளுவேன் என்று கால்யா அச்சுறுத்தியது, அவள் எனக்குத் துரோகம் செய்துவிட்டாள் என்பதை அறிந்ததால் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியின் வேகத்தைத் தணித்து விட்டது என்பது இப்பப் புரியுது. அவள் துரோகமிழைத்த செய்தி மட்டுமே தெரிந்திருந்தால் எனக்குக் கடுமையான அதிர்ச்சி உண்டாகியிருக்கும். இது விநோதமாத் தோன்றினாலும் உண்மை தான்... கியோர்கியை நான் காப்பாற்றாவிட்டால், தன்னோட உயிரை மாய்த்துக்கொள்ளப் போறதா அவள் உறுதியாகச் சொன்னதுமே, இவள் எனக்கு அருமையானவள் என்பதைத் தெரிந்துகொண்டேன்...''

இவ்வாறு கூறிய தேர்-அவனேசவ் எழுந்து அறையில் சிறிது நேரம் நடந்துவிட்டு நான் உட்கார்ந்திருந்த மேசையருகே திரும்பி வந்து தொடர்ந்து பேசினான்:

''கியோர்கியைத் தான் நெஞ்சாரக் காதலிப்பதாகவும், அவன் இல்லாமல் தான் உயிர்வாழ முடியாது, எப்படியாவது அவனைக் காப்பாற்றியாகணும் எனத் துயரம் பொங்க அவள் கெஞ்சிப் புலம்பவே எனக்கு மனம் இளகிவிட்டது. எப்படியாவது அந்தத் தொகையைத் திரட்டித் தருவதாக முடிவில் வாக்களித்தேன். ஆனா பணம் எங்கேயிருந்து வரும்? என்னோட சிறிய சேமிப்போ கல்யாணத்துக்குப் பிறகு வியக்கத்தக்க வேகத்தில் கரைஞ்சு போச்சு. எங்களுக்குச் செலவு ரொம்ப அதிகம். கால்யா விரும்பிய எதையும் மறுக்க எனக்கு மனசு வராது. இந்த நிலையில், அலுவலகத்திலிருந்து அதிகமாப் போனா ஒரு மாதச் சம்பளத்தை முன் பணமாப் பெறலாம். இவ்வளவு பெரிய தொகை கடன் தரக்கூடிய நண்பன் எவனும் எனக்குக் கிடையாது... அடுத்த நாள் அலுவலகத்திற்குச் சென்றபின், இந்தப் பாழாய்ப் போன பணத்தை எப்படித் திரட்டுறது என்று மண்டையை உடைத்துக் கொண்டிருந்தேன். அந்நேரம் பார்த்து லெனின்கிராடிலுள்ள பெரும்

பணக்கார நெப்காரர்களில் ஒருவனான வர்ணத் தயாரிப் பாளன் க்யூன், தனக்கு அதிக வரி விதிக்கப்பட்டு விட்டது என்று புகார் செய்வதற்காக வந்து சேர்ந்தான். நான் கவலையோடு இருந்ததை இந்தச் சைத்தான் எப்படியோ கண்டுகொண்டான். எல்லா நெப்காரர்களையும் போலவே இவனுக்கும் என்னைப் பல ஆண்டுகளாத் தெரியும்... ஏன் ஏதோ மாதிரி இருக்கீங்க என்று பரிவோடு விசாரித்தான். களைப்பா இருப்பதாகச் சொன்னேன். வழக்கத்திற்கு மாறா எனக்கு ஏதோ நேர்ந்திருக்கு என்பதை அவன் புரிஞ்சுக்கிட்டான். அப்பத்தான், என் வாழ்க்கையில் முதன் முதலாக ஒரு பயங்கர எண்ணம் உதித்தது: கேட்ட துமே, வற்புறுத்தல் இல்லாமல், பத்தாயிரம் ரூபிள் களை மகிழ்ச்சியோட கொடுக்கக்கூடிய ஆள் இவன்; இந்தப் பேரம் ரகசியமாக இருக்கணும் என்பதில் எனக்கு எவ்வளவு அக்கறையோ அவ்வளவு அக்கறை அவனுக்கும் இருக்கும் என்பதால், இந்த உலகத்தில் எங்க இருவரை யும் தவிர வேறு யாரும் இதைத் தெரிஞ்சுக்கவே முடி யாதுன்னு நினைச்சேன். அந்த நாசமாப் போற பால்டிக் ஜெர்மானியனான க்யூன் வெளியேறுகிற வழியைக் காணோம். நான் ஏதோ இக்கட்டில் சிக்கிக் கொண்டிருப் பதையும், அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் அவன் புரிந்துகொண்டு விட்டான் என்பது போல இருந்தது.

''நான் உங்களை விட இரண்டு மடங்கு வயசானவன். இருந்தாலும் மூத்த புலனாய்வாளர் என்ற முறையில் நாள்தோறும் குற்றவாளிகளை விசாரித்து வருவதனால் உங்களுக்கு என்னைக் காட்டிலும் அதிக அநுபவம் உண்டு. அதனால் தான் கேட்கிறேன், ஒருத்தனது ஆன்மா பிண மாகிருச்சு என்று இந்தக் கழுகுகளுக்கு எப்படி மூக்கில் வியர்த்து விடுது? உண்மைதான், பிணம், அன்னைக்கு என் ஆன்மா உண்மையாகவே பிணமாகிருச்சு! 'இலஞ்சம் வாங்காத தேர்' என்று என்னைப் பற்றி க்யூன், க்ராப்ட், சிமனோவ், சால்மன் போன்றோர் சொல்றது வழக்கம். அத்தகையவன் 'கைநீட்டத் தயாராகிட்டான்' என்று, புலனுக்கெட்டாத எந்த நுண்ணிய குறிகளால் இவர்கள் மோப்பம் பிடித்தார்கள்? சொல்லுங்க! நான் க்யூனிடம் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படலே. அவனாகவே

பணத்தை எனக்குக் கொடுக்க முன்வந்தான். வெட்கத்தாலும், அவமானத்தாலும், இழிவுணர்ச்சியாலும் மனசு வெதும்பி, நேவ்ஸ்கி தெரு வேசியைப் போல நான் என்னையே அவனுக்கு விலை கூறிட்டேன்!..

''நள்ளிரவு வாக்கில் வீடு திரும்பி, மனைவியிடம் பணத்தைக் கொடுத்ததுமே அவள் ஆனந்த மிகுதியால் கண்ணீர் பெருக என்னைக் கட்டியணைத்துக் கொண்டு, இந்த உதவியை ஒருபோதும் மறக்கவே மாட்டேன் என்றாள். பிறகு நிச்சயமற்ற நிலைமையைச் சகிக்க முடியாமல் கியோர்கி என்ன செய்துவிடுவானோ என்று பயந்தவளாய், உடை மாற்றிக்கொண்டு, பணமும் கையுமாக அவனிடம் சென்றாள்... சத்தியமாச் சொல்றேன், என் வாழ்க்கையிலேயே மிகப் பயங்கரமான இரவு அது—சிறையில் நான் கழித்த முதல் இரவைக் காட்டிலும் பயங்கரமானது!

''செலவைச் சுருக்கிக்கொண்டும், அதிகமாக வேலை செய்தும், உடைமைகளை விற்றும், இயன்ற எல்லா வகையாலும் முயன்று க்யூனுக்கு எப்படியும் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவது என்று சபதம் செய்துகொண்டேன் என்பது உண்மை. ஆனாலும், அவனுக்கு விதித்த வரியைக் குறைக்கத்தான் வேண்டியிருந்தது...

''சரியாக ஒரு மாதம் போனதும், திரும்பவும் என் மனைவி கதறி அழுது துடிக்கிறதைப் பார்த்தேன். இழந்த பணத்தை மீட்பதற்காக கியோர்கி மறுபடியும் சீட்டாடி, மேலும் பதினைந்தாயிரம் ரூபிள்களைத் தொலைத்து விட்டானாம்... தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அவளிடம் திரும்பவும் சொல்லியிருக்கிறான். அவளோ வேண்டாம் என்று கெஞ்சியிருக்கிறாள். 'அந்தத் தொகையை நீ கொண்டுவந்து கொடுக்காமல் கியோர்கி இறந்து போனால், நானும் நேவாவில் மூழ்கி உயிரைப் போக்கிக் கொள்வேன்' என்று என் மனைவி கூச்சல் போட்டாள்... கொடுக்கிறதா நான் மறுபடியும் வாக்களித்தேன்.

''நானே க்யூனுக்கு ஃபோன் செய்தேன். அவன் உடனே வந்து சேர்ந்தான். மேற்கொண்டு பதினைந்தாயிரம் கடன் கொடுக்க முடியுமா என்று தயக்கத்தோடு கேட்டேன். அவன் என்னை ஒரே வியப்போடு நோக்கினான். 'எங்களுடைய முந்திய கணக்கு முடிஞ்சு போச்சு' என்று

தான் கருதுவதாகவும், என் மீதுள்ள மரியாதையால் உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறினான். நான் ரொம்பவும் மகிழ்ந்து போனேன். இந்தத் தொகையை எனக்குக் கொடுக்கும்படி தன்னோட நண்பனான சாக்லேட் தயாரிப்பாளன் க்ராப்டிடம் கேட்டுக்கொள்ளப் போகிறான் என்பது பின்னர்தான் தெரியவந்தது. ஒரு மணி நேரத்தில் அவன் க்ராப்டுடன் திரும்பி வந்து ஆட்டை விற்பது போல என்னை அவனுக்கு வித்துட்டான்... இந்த முறையும் என் மனைவி என்னை முத்தமிட்டாள், இந்த உதவியை என்னைக்கும் மறக்க மாட்டேன் என்று உறுதி சொன்னாள். ஆக, திரும்பவும் பணத்தோட தன் அருமை கியோர்கியிடம் பறந்து சென்றாள். மறுநாள் காலையில் தான் அவள் அமைதியும், இன்பமும், மகிழ்ச்சியும் ததும்பத் திரும்பிவந்தாள்.''

தேர்-அவனேசவ் இன்னொரு சிகரெட் பற்றவைத்தான். ஃபந்தான்கா நதிக்கரைச் சாலை விளக்குகள் எல்லாம் எரியத் தொடங்கின. நதியில் படகு வலித்துச் சென்ற இளைஞர்களின் சிரிப்பும் கூச்சலும் கேட்டன. மார்ஸ் ஃபீல்டில் முழங்கிய வாத்தியக் குழுவின் இசையொலியும் கேட்டது.

அவனைச் சிறைக்குத் திரும்பக் கூட்டிப் போவதற்காக காவலாளியை தொலைபேசியில் அழைத்தேன்.

பிரியும் போது, மெதுவாக அவன் என்னிடம் சொன்னான்:

''கடைசியா ஒரு வேண்டுகோள்: என் மனைவி எனக்குச் சிறு சிப்பங்கள் அனுப்புறதை அநுமதிக்காதீங்க. அந்தச் 'சித்திரக்' கையெழுத்துடன் காணப்படும் சிப்பம் எனக்குக் கிடைக்கிற போதெல்லாம் நான் வெறி கொள்கிறேன்!.. அது எனக்கு எந்தளவுக்கு வெறுப்பையும், துன்பத்தையும் தரும் என்பதை அந்தக் கயவன் புரிந்து கொள்ளாமலா இருப்பான்? இதுதான் என்னோட ஒரே வேண்டுகோள்.''

தேர்-அவனேசவ் இவற்றை என்னிடம் கூறிய பின்னர், தப்பியோடிவிட்ட க்யூனைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு முன்னிலும் வலுத்தது. க்யூனுக்கு

இரண்டு குடும்பங்கள் உண்டு என்பது எனக்குத் தெரியும்: ஒன்று அவனுடைய வயதான மனைவி—அவளுடன் உள்ள உறவைத் துண்டித்துக்கொள்ள அவன் விரும்பவில்லை; இரண்டாவது மனைவி—உண்மையில் வைப்பாட்டி—கருங்கூந்தல் அழகியான இளம் பெண் மரீயா. அரண்மனை நதிக்கரைச் சாலையிலிருந்த மேல்தட்டு வீடு ஒன்றின் ஆடம்பரமான குடியிருப்பில் இவள் வசித்து வந்தாள் என்பது தெரியவந்தது. க்யூன் திடீரென்று தலைமறைவாகிவிட்ட போதிலும், மரீயாவுக்குப் பணத் தட்டுப்பாடே ஏற்படவில்லை. முன்போலவே எதிலும் குறை வைக்காமல் தாராளமாகச் செலவு செய்துகொண்டு வாழ்ந்து வந்தாள். வேலை தேடவும் அவள் முயலவில்லை, ஆகவே க்யூனுடன் தொடர்பு கொண்டிருந்தாள் என்பது புலப்பட்டது.

எனது அலுவலகத்திற்கு அவளை அழைத்தேன். க்யூன் எங்கே இருக்கக் கூடும் என்பது பற்றித் 'தனக்கு எதுவும் தெரியாது' என்றும், அவனிடமிருந்து தனக்குக் கடிதங்கள் வருவதில்லை என்றும், இது குறித்து தான் எவ்விதத்திலும் உதவி செய்வதற்கு இல்லை என்றும் அவள் அமைதியுடன் அழுத்தமாகப் பேசினாள்.

மாநிறமும், கரிய விழிகளுடனும் காணப்பட்ட இந்த இளம் பெண் மிகவும் கமுக்கமானவள். இவளிடமிருந்து ஒரு தகவலும் கிடைக்காது என்பது துலங்கியது. அவளுடன் பேசிக் கொண்டிருந்த போது, மற்றொரு பிரதிவாதியின் மனைவி அவளுக்குச் சிநேகிதி என்பதையும், அவளும் இளம் பெண் என்றாலும், கவர்ச்சியில் மரீயாவுக்கு ஒப்பாக மாட்டாள் என்பதையும் தெரிந்துகொண்டேன்.

இன்னும் நான் இளமைவாய்ந்த புலனாய்வாளன் தான், எனினும் இந்த மாதிரியான இரண்டு பெண் சிநேகிதிகள் இருந்து, அவர்களில் ஒருத்தி மற்றவளை விட அழகில் குறைந்தவளாய் இருந்தால், அநேகமாய் அப்பெண் அழகாய் இருப்பவளைத் தன் மனத்தில் உள்ளூற வெறுத்து, அவளிடம் கடுமையாகப் பொறாமைப்படுவாள் என்பதை நான் அறிந்திருந்தேன். நான் லெனின்கிராடிற்கு மாற்றப்படும் முன்னால் நிகழ்ந்த ஒரு சம்பவம் என் நினைவுக்கு வந்தது. என்னுடைய வழக்குகள் ஒன்றில் ஒரு முதிய வளைக் கேள்வி கேட்க வேண்டியிருந்தது. அவள் நாகரிக்

மிகுந்த சந்தில், பல ஆண்டுகளாகத் தொப்பிக்கடை வைத்திருந்தவள். குறிப்பிட்ட இரு பெண்களுக்கிடையே யான நட்பு எப்படிப்பட்டது என்று விசாரணையின் போது கேட்டேன். அதற்கு அவள் கிண்டலாகச் சிரித்து, என்னை வியப்புடன் பார்த்தாள். சிகரெட் புகையை இழுத்து விட்டுக்கொண்டு சொன்னாள்:

''தோழர் புலனாய்வாளரே, நானும் முப்பது ஆண்டு களாகத் தொப்பிகள் விற்றுக் கொண்டுவருகிறேன். தோழி இல்லாமல் எந்தப் பெண்ணும் தொப்பி வாங்க வந்ததுமில்லை, ஒரு தோழியாவது சரியான யோசனை சொன்னதும் இல்லை. பெண்களுக்குள் உள்ள நட்பைப் பற்றி நான் சொல்றது இவ்வளவு தான்...''

வழக்கு விசாரணை நடத்தும் போது, பெண்களின் நட்புப் பற்றிய பிரச்சினை எதிர்ப்பட்ட போது, தொப் பிக்காரக் கிழவியின் கருத்து அதற்குப் பொருந்துவதை நான் பல முறை காண நேர்ந்தது. ஆனால் இதோடு இன் னொரு விஷயத்தையும் சேர்த்துச் சொல்ல வேண்டியிருக் கிறது. அதாவது புலனாய்வாளன் என்ற முறையில் என் கவனத்துக்கு வந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரான பெண்களே. அவர்களுடைய வாழ்க்கை அநுபவமும், அதன் காரணமாக அவர்களது மனப்போக்கும் தனி வகை யானவை.

மரீயாவும் அவளுடைய சிநேகிதியும் இந்த வகையைச் சேர்ந்தவர்கள். ஆகவே அவளுடைய சிநேகிதி சிறையில் கணவனைக் காண அநுமதிச் சீட்டு வாங்க வழக்கம் போல வியாழக்கிழமை என்னிடம் வந்த போது, பேச்சோடு பேச்சாக மரீயாவைப் பற்றிக் கேட்டேன். அவள் என்னை ஒரு முறை சட்டெனப் பார்த்தாள். கணப்போது அவள் கண்களில் சந்தேகம் நிழலாடியது. பின்னர் காதோடு காதாய் என்னிடம் சொன்னாள்:

''அம்மாடி, அவளுக்கென்ன கவலை! தேனும் பாலும் ஓடுது. க்யூனை வீட்டிலேயே வைத்திருக்கிறாள் என்றால் துணிச்சலுக்குக் கேட்பானேன்! இன்னைக்கு அவளே என் னிடம் சொன்னாள்: 'இப்ப எங்க வீட்டில் புதுமண இன் பம் பொங்குது' என்று.''

அரைமணி நேரத்தில், ஒரு சோதனை வாரண்ட் எடுத்துக்கொண்டு, மரீயா வசித்துவந்த மாளிகைக்கு

வண்டியில் சென்றேன். மாவட்ட நீதிமன்றக் காவல் காரத் தலைவனும் அவனது உதவியாளனும் என்னுடன் வந்தனர். பின்புறத்தில் வெளியேற வழி எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, முன்வாயில் அழைப்பு மணியை அழுத்தினோம். நீண்ட நேரத்திற்குப் பிறகு இலேசான காலடி ஓசை கேட்டது. அழகிய 'ஏப்ரன்' அணிந்த ஓர் இளம் பணிப்பெண் எங்களை உள்ளே அனுமதித்தாள். எசமானி வீட்டில் இருக்கிறாளா என்ற கேள்விக்கு 'ஆம்' என்று பதிலளித்தாள். அதே வேளை வீட்டில் அணிந்து கொள்ளும் 'கவுன்' அணிந்தவாறு, மரீயா முன்னறையில் நுழைந்தாள். அவளிடம் வாரண்டைக் கொடுத்து, 'தண்டனைக்குப் பயந்து ஒளிந்து திரியும் நிக்கலாய் க்யூனின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதற்காகவே' இந்தச் சோதனை என்பதை விளக்கினேன். நான் சொன்னவற்றை அமைதியாகக் கேட்ட அவள் புன்னகை செய்து கூறினாள்:

''அப்படியா, தயவுசெய்து உள்ளே வாங்க! என் குடியிருப்பை நீங்க தாராளமாப் பார்த்துக்கலாம். ஆனா க்யூன் இங்கே இல்லை. அவன் எங்கே இருக்கிறான் என்பதும் எனக்குத் தெரியாது. தோழர் புலனாய்வாளரே, நீங்க பெண்களை நம்பாதது பரிதாபத்துக்குரியது...''

அது நாகரிகமான குடியிருப்பு: ஏழு அறைகள், விலையுயர்ந்த வீட்டுச் சாமான்கள். அந்தக் காலத்தில் பெரும்பாலான நெப்காரர்களின் வீடுகளில் விலையுயர்ந்த ஆடம்பரப் பொருள்கள் அழகோ ஒழுங்கோ இல்லாமல் நிறைந்து கிடப்பது போல மரீயாவின் குடியிருப்பு காணப்படவில்லை. சாமான்கள் அனைத்தும் மிகுந்த கவனத்துடன் பாங்குற வைக்கப்பட்டிருந்தன. அறை அறையாகச் சோதனையிட்டோம். எங்குமே க்யூன் காணப்படவில்லை. மரீயாவின் சிநேகிதி என்னிடம் பொய் சொல்லிவிட்டாள் என்று நினைக்கத் தொடங்கினேன். முடிவில் கடைசி அறையாகிய படுக்கை அறைக்கு வந்து சேர்ந்தோம். அதில் வெண்கல வேலைப்பாட்டுடன் சிறந்த கரேலியன் பிர்ச் மரத்தால் செய்யப்பட்ட, தாழ்வான அகன்ற கட்டில் கிடந்தது. அதன் மீது விரிப்பு ஏனோ அகற்றப்பட்டிருந்தது. இரண்டு தலையணைகளும் சுருங்கிக் கிடந்தன. கட்டிலின் அருகிலிருந்த சிறு மேசை மேல் ஆண்கள் பயன்படுத்தும் பைக்கடிகாரம் ஒன்று அலட்சியமாக 'டிக்-டிக்'

என்று அடித்துக் கொண்டிருந்தது. மரீயாவின் கையைப் பார்த்தேன் — அவளுடைய கடிகாரம் அவள் கையில் கட்டப்பட்டிருந்தது. சாம்பல் தட்டு ஒன்றில் எரிந்த பல சிகரெட் துண்டுகள் கிடந்தன. அவற்றின் அடிப்பகுதி சவைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு சிகரெட்டின் அடிப் பகுதியைச் சவைப்பது ஆண்களுக்கே வழக்கம்.

துண்டுகளை நான் கவனிப்பதைப் பார்த்த மரீயா, 'ஸாப்போ' மார்க் பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டைச் சட்டென உருவிப் புகைக்கலானாள். இந்த மௌன சாட்சியத்துக்கு மறுப்புச் சொல்வதென்று தீர்மானித்த நான், அவள் புகைத்து முடிக்கும் வரை காத்திருந்தேன். பிறகு அந்தச் சிகரெட் துண்டைக் கொடுக்கும்படி கேட்டேன். வியப்பே வடிவாக அதை என்னிடம் நீட்டினாள். நான் எதிர் பார்த்தபடியே, அந்தத் துண்டு சவைக்கப்படவில்லை. அவளுக்கு இதைக் காட்டிவிட்டு, அதே கையோடு, ஆடவன் புகைத்த சிகரெட் துண்டு ஒன்றைச் சாம்பல் தட்டிலிருந்து எடுத்தேன்.

''பாருங்க, மரீயா, இந்தச் சிகரெட்டுகள் நீங்க புகைத்தவை அல்ல, நிக்கலாய் க்யூன் புகைத்தவை. அத்துடன் இந்தப் பைக்கடிகாரமும் அவனுடையது என்றுதான் நினைக்கிறேன். ஏன்னா இது இந்த அழகிய படுக்கையறைக்குக் கொஞ்சங்கூடப் பொருந்தலே. இத்துண்டுகளைப் பார்த்தா அவன் இங்கே ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் இவற்றைப் புகைத்திருக்கணும் என்று புலப்படுது... அதனால்தான் கேட்கிறேன், எங்கே அவன், க்யூன்?'' என்றேன்.

''என்னால் திரும்பவும் சொல்ல மட்டுந்தான் முடியும்,'' என்று அடக்க முடியாத எரிச்சலுடன் அவள் பேசினாள், ''க்யூன் எங்கே இருக்கான் என்று எனக்குத் தெரியாது. எத்தனையோ நாளாக நான் அவனைப் பார்க்கலே. உங்க சந்தேகங்களுக்கு ஆதாரமே இல்லை. சிகரெட் துண்டுகள் சவைக்கப்பட்டிருப்பதாக நீங்க சொல்றதைப் பொருத்தமட்டில், கோனன் டாயிலின் துப்பறியும் நாவல்களை நான் படித்து ரொம்பக் காலமாகிவிட்டதால், உங்களோட அநுமான முறை—அப்படித்தானே இதற்குப் பெயர்?—சரியா தப்பா என்று என்னால் சொல்ல முடியாது.''

அவள் எரிச்சலோடு புன்னகை செய்தாள். எங்களது தேடுதலைத் தொடர்ந்து நடத்தினோம். உடை அலமாரியில் க்யூனுடைய சூட் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் பைகள் ஒன்றில் மாஸ்கோ-லெனின்கிராட் எக்ஸ் பிரஸ் பயணச் சீட்டு ஒன்று இருந்தது. அதில் கண்ட தேதி இரண்டு நாளைக்கு முன்புதான் அவன் மாஸ்கோவிலிருந்து வந்திருக்கிறான் என்பதைக் காட்டியது. அதை அவளிடம் காட்டி இதுவும் அநுமான முறையைச் சேர்ந்தது தானா எனக் கேட்டேன்.

''இந்த சூட்டும் பயணச் சீட்டும் க்யூனுக்குச் சம்பந்தப்பட்டவை அல்ல—எனது இன்னொரு நண்பருடையவை. அவனோட பெயரைச் சொல்ல வேண்டிய கட்டாயம் எதுவும் எனக்கு இல்லை; ஏன்னா அது என்னோட சொந்த வாழ்க்கையைப் பற்றியது. நீங்க என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள்ளுங்க!''

மேலும் தேடிய போது, ஓர் ஆடவனின் மழையங்கி, தொப்பி, காலணிகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்தோம். அவையும் தனது மர்ம நண்பனுடையவை என்று மரீயா சாதித்தாள்.

நாங்கள் சமையலறைக்கு வந்த போது, ஒரு பக்கச் சுவர் முழுவதையும் மறைத்துக் கொண்டிருந்த ஒரு பெரிய வெண்ணிற அலமாரியை நான் கவனித்தேன்; அதற்குப் பின்பக்கம் என்ன இருக்கிறது என்று மரீயாவிடம் கேட்டேன்.

''வெறுஞ் சுவர்தான்,'' என்று சொல்லிவிட்டுச் சோதனைக்குச் சாட்சியாக உடனிருந்த காவல்காரனை விநோதமாக உற்றுப்பார்த்தாள். வெள்ளை 'ஏப்ரன்' அணிந்திருந்த, வயதுசென்ற, தடித்த மனிதனாகிய காவல்காரன் இந்தப் பேச்சுக் காதில் விழவில்லை என்பது போல ஒரு பக்கமாக ஒதுங்கினான். என்னுடன் வந்தவர்களை அலமாரியை நகர்த்தும்படி கேட்டுக்கொண்டேன். அதற்குப் பின்னே ஒரு கதவு இருந்தது. அதைத் திறந்து ஓர் இருண்ட சாமான் அறையைக் கண்டோம். மரீயா உதட்டைக் கடித்துக்கொண்டாள். பழைய கைநாற்காலிகள், உடைந்த நாற்காலிகள், பெட்டிகள் போன்றவை உயரமாகக் குவிந்து கிடந்த அச்சாமான் அறைக்குள் நுழைந்தேன். அறை காலியாகத் தோன்றியது. ஆனால் ஓர்

அலமாரியின் அருகே சென்றதும், யாரோ ஆழ்ந்து மூச்சு வாங்குவது கேட்டது.

''க்யூன் அவர்களே, எங்களிடம் வரமாட்டீங்களா?'' என்றேன் கதவைத் தட்டியபடி.

''இதோ,'' என்று உள்ளே ஒளிந்து கொண்டிருந்த ஆள் கனத்த குரலில் பதிலளித்துவிட்டு உடனே வெளியே வந்தான். உயரமும் பருமனுமான உடல், சிவந்த கன்னங்கள், வழுக்கைத் தலை, சிறிய தாடி—க்யூனே தான்.

''அப்படி வா!'' என்று மரீயாவிடம் சொன்னான். ''என்னிடம் வா, முத்தந் தருகிறேன், என்னிடம் வா, முத்தந் தருகிறேன் என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தாயே. பார்த்தாயா, நீ முத்தம் கொடுத்த அழகை!..'' பிறகு என் பக்கமாகத் திரும்பி, ''நீங்கதான் என்னைத் தேடிக்கிட்டிருந்த மூத்த புலனாய்வாளரா?''எனக் கேட்டவன் அதிசயத்தோடு, சற்றும் பதற்றமடையாமல் என்னை நோக்கினான். ''அட... எவ்வளவு இளைஞர் நீங்க! எனக்குப் பொறாமையா இருக்கு. சத்தியமா எனக்குப் பொறாமையா இருக்கு. ஒரு பழமொழி சொல்றது போல ஆகிவிட்டது: 'துள்ளிக் குதித்ததாம் பல்லி, கழனிப்பானையில்'. அராபியப் பழமொழியும் இந்த இடத்துக்குப் பொருந்தி வரும்: 'பெண்ணோட யோசனையைக் காது கொடுத்துக் கேட்டுவிட்டு, அதற்கு நேர்மாறா நட'. ஐயோ, அராபியர்கள் சொன்ன மாதிரி நடக்காததால் நான் தண்டிக்கப்பட்டு விட்டேன். நான் லெனின்கிராடுக்குப் போக வேணாம் என்று என்னிடம் கூற முயன்ற புத்திசாலி யானாக்கியின் பேச்சை மட்டும் நான் கேட்டிருந்தால்! என்ன நடக்கும் என்பது அந்தக் கிழட்டு நரிக்குத் தெரிந்து இருக்கு போல. 'நிக்கலாய், குற்றம் நடந்த இடத்துக்குப் போவானேன்? இந்த மாதிரி செய்து உலையில் மாட்டிக் கொண்டவர்கள் ஏராளம் பேர்!' என்றான்...''

''அப்படியானால் யானாக்கி மாஸ்கோவில் தான் இருக்கிறானா?'' என்று கேட்டேன்.

''இரண்டு நாளைக்கு முன்னே அங்கேதான் இருந்தான். ஆனா இப்ப எங்கே இருக்கிறான் என்று தெரியாது... அவனை மட்டும் நீங்க பிடிக்கவே முடியாது. என்ன வேணுமானாலும் பந்தயம் கட்டுறேன்!''

க்யூன் உடை மாற்றிக்கொண்டான். மரீயா மலங்க விழித்தவளாய் அவனோடு ஒட்டிக்கொண்டாள். அவளிடம் விடை பெறுகையில் க்யூன் முகத்தில் புன்னகை படர்ந்தது.

''போனாப் போகுது, மரீயா, என் கண்ணே, ஒன்னும் வருத்தப்படாதே. நீதான் எனக்கு முத்தம் கொடுத்துட்டியே, அது ஒன்னுக்காகவே நான் எதுக்கும் துணியலாம்! அதிகமாப் போனா, எனக்கு ஐந்தாண்டு தண்டனை கிடைக்கும். நான் லஞ்சம் கொடுத்தவனே தவிர வாங்கினவன் அல்ல... போய் வாறேன்!'' என்றான்.

க்யூன் கெட்டிக்காரன், தன் நிலைமையை நன்றாக அறிந்திருந்த அவன், நகைச்சுவையை விடவே இல்லை. நாங்கள் அலுவலகத்தில் வசதியாய் அமர்ந்ததும், தேர்-அவனேசவிற்கு லஞ்சம் கொடுத்ததையும் க்ராப்டை லஞ்சம் கொடுக்கச் செய்ததையும் பற்றி ஒன்றுவிடாமல் விவரித்தான்.

'''லஞ்சம் வாங்காத தேரைக்' கைக்குள் போட்டுக் கொள்வதற்குப் பதின்மூன்றாயிரம் செலவு ஆச்சு. பதின்மூன்று அதிருஷ்டமற்ற எண் என்பது அப்ப எனக்குப் புலப்படலே, போதாத காலம்...''

''கொஞ்சம் பொறுங்க! ஏன் பதின்மூன்றாயிரம்?'' என்று கேட்டேன்.

''தேருக்குப் பதினாயிரம்—தரகனுக்கு மூவாயிரம். அவனை எப்படிக் கூப்பிடுறது என்று எனக்குத் தெரியலே.''

''தேர்-அவனேசவ் மனைவியோட காதலனைத் தானே சொல்லவாறீங்க?''

''ஆமாம், அந்தப் பயல் கியோர்கியைத் தான். எனக்காகக் காத்துக்கொண்டிருந்த நேரத்தை நீங்க வீணாக்கலேன்னு தெரியுது. அவன் ஐயாயிரம் கேட்டான். முடிவில் நாங்க மூவாயிரத்துக்கு ஒப்புக்கொண்டோம்...''

தேர்-அவனேசவை அணுகுவதற்குச் சரியான வழி கிடைக்கும் என்ற நம்பிக்கையே தனக்கு அற்றுப் போகும் தறுவாயில், தேர்-அவனேசவின் மனைவிக்கு ஒரு காதலன் இருப்பது தெரியவந்ததாக க்யூன் விளக்கினான்.

''Cherchez la femme* என்று பிரெஞ்சுக்காரர்கள் சொல்வது போல. இப்ப அவனை அணுகும் வழியைக்

* பெண்ணைத் தேடிப்பிடியுங்கள்.(பிரெஞ்சு.)

கண்டுபிடிக்க வாய்ப்புக் கிடைத்துவிட்டது என்பதைத் தெரிந்துகொண்டேன். ஒரு வாரத்திற்குப் பின்பு அந்தப் பெண் பித்தனை அறிமுகம் செய்துகொண்டேன். அவன் ஒரு ரோமியோவோ, ஹாம்லெட்டோ அல்ல, மிகச் சாதாரணமான கயவன், தூர்த்தன், எந்த இழிசெயலுக்கும் தயாரானவன் என்பதைத் தெரிந்துகொண்டேன். இருவரும் சேர்ந்து, பெருந்தொகையான அரசுப் பணத்தைச் சூதாடி இழப்பது, தற்கொலை செய்துகொள்ளப் போவதாகப் பாசாங்கு செய்வது போன்ற நாடகக் காட்சிகளை ஒரு நாள் மாலை முழுக்க ஆலோசித்து முறைப்படுத்திக் கொண்டோம். இந்த மாதிரியான நிலைமை ஏற்பட்டதும் தேர்-அவனேசவின் மனைவி தன் கணவனோட கோட் பாடுகளை எல்லாம் குலைத்துவிடுவாள் என்பதில் எனக்குச் சந்தேகமே ஏற்படலே. இந்த நாட்கம் நடந்த மறு நாளே தேர்-அவனேசவைப் பார்க்கப் போனேன். தோழர் புலனாய்வாளரே, அவன் இருந்த பயங்கர நிலையைப் பார்த்ததும், ஏன் இப்படிச் சூழ்ச்சி செய்தேன் என்றுகூட வருத்தப்பட்டேன்... ஆனா வேறு வழியில்லை! பிரெஞ் சுக்காரர்கள் சொல்வது போல, 'C'est la vie', இது தான் வாழ்க்கை!''

அவனுடைய வாக்குமூலத்தை விவரமாக எழுதிக் கொண்டேன். தேர்-அவனேசவ் வாழ்வைப் பாழ்படுத்தியதில் இவ்வளவு கேவலமான பங்குகொண்ட அந்த அயோக்கியனைக் கைது செய்வதற்குச் சட்டபூர்வமான உரிமை எனக்கு இப்போது கிடைத்துவிட்டது. அதுபற்றி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். அதே நாள் மாலையில் 'கியோர்கி பையன்' என்ற கியோர்கி மெய்லோன் கைது செய்யப் பட்டான். இந்த வகை மனிதர்கள் எல்லாரையும் போலவே அவன் பெரிய கோழை. கேள்வி கேட்கையில் காய்ச்சலால் நடுங்குவது போல, அழுதுகொண்டே பொய் சொன்னான், பொய் சொல்லிக்கொண்டே அழுதான். முடிவில் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு விட்டான். காமக்கிழத்தியிடமிருந்து இரண்டு தடவைகளில் பெற்றுக்கொண்ட இருபத்தைந்தாயிரம் ரூபிள்களையும் அவன் மிக எச்சரிக்கையுடன் தனது வங்கிக் கணக்கில் போட்டிருந்தான். இத்தனை அழகிய தன்மைகளுடன், அவன் அபரிமிதமான பேராசையும், கஞ்சத்தனமும் கொண்டிருந்தான்.

பசப்பும் குழைவுமாகப் போலி இனிமை காட்டும் அவனது முகம், கெஞ்சுங்குரல், அடிமைத்தனமான சைகைகளும் மறுப்புரைகளும், நயமிக்க பேச்சு முறை என்று அவன் கருதிப் பேசிய தோரணை, மழுங்கச் சிரைத்த புருவங்கள், பகட்டான உடை ஆகிய அனைத்துமே அருவருப்பூட்டின. ஆனால் கெட்ட செயலையே தொழிலாகக் கொண்ட இந்தக் கயவனை நம்பி, தனது காதல், கௌரவம், துயரார்ந்த தன் கணவனின் வாழ்வு ஆகிய அனைத்தையும் இவன் காலடியில் கிடத்துவதற்கு தேர்-அவனேசவின் மனைவி எப்படித்தான் மனம் ஒப்பினாளோ, விளங்காத புதிராகவே இருக்கிறது...

இந்தப் போக்கிரிப் பயலுக்குச் சரியான தண்டனை கிடைக்கும் என்பதால் மனநிறைவுற்றேன். தவிரவும், அவனைக் கைது செய்ததன் மூலம், தேர்-அவனேசவ், க்யூன் இவர்களின் செயல்களைப் பற்றி இன்னும் சில முக்கியமான தகவல்கள் கிடைக்கலாம் என்று எண்ணினேன்.

மெய்லோனைச் சிறைக்கு அனுப்பியதில் பெருமகிழ்ச்சியடைந்தேன். இவனைக் காட்டிலும் எவ்வளவோ கொடிய குற்றங்களைச் செய்தவர்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் இதுவரையில் இவ்வளவு அருவருக்கத் தக்கவன் எவனையும் நான் கண்டதில்லை. கொலைகாரர்களை எனக்குத் தெரியும். கொடிய குற்றங்கள் புரிந்த போதிலும் அவர்களிடம் மனித்தன்மை ஓரளவுக்கு எஞ்சியிருக்கத்தான் செய்தது. எந்தக் குற்றங்களை அவர்கள் இழைத்ததாகக் கடமை காரணமாக நான் நிரூபித்தேனோ, அவற்றிற்கேற்ற தண்டனை அவர்களுக்குக் கிடைத்தது என்னவோ உண்மை. ஆனால் தன்னையே விலைகூறுபவனும், எந்த இழிசெயலுக்கும் தயாராக இருப்பவனுமான இந்தப் பசப்புக்காரன் மீது எனக்கு ஏற்பட்ட வெறுப்பும் அருவருப்பும் அவர்கள் மீது உண்டானதே கிடையாது. நானறிந்த சில கொள்ளைக்காரர்கள் கூட மெய்லோனைப் பற்றி நான் அறிந்த விவரங்களைத் தெரிந்துகொண்டால் அவனைத் தொடவே அருவருப்புற்று விலகிவிடுவார்கள். நரி புலியாகாதுதான். ஆயினும் புலியைக் காட்டிலும் அது எவ்வளவு கடைகெட்டது!

தேர்-அவனேசவ் செய்த குற்றமும் இகழ்ச்சிக்குரியவையே. எனினும் க்யூன், மெய்லோன் இருவரும் அமைத்த

பொறியில் அகப்பட்டு, சந்தர்ப்பங்களுக்குப் பலியாகிவிட்டவன். இதைக் கருத்தில் கொண்டு நீதிமன்றம் அவனுக்குப் பத்தாண்டு கடுங்காவல் தண்டனை விதித்தது.

சொல் ஓவியம்

க்யூன் கைது செய்யப்பட்ட பின்பு, பிரபலமான நெப்காரன் கிறிஸ்தோபர் யானாக்கியின் இருப்பிடத்தைக் கண்டறிய வேண்டியிருந்தது. லெனின்கிராடிலிருந்து தலைமறைவாகிப் போவதற்கு முன்பாக, முன்யோசனையுள்ள அந்த அயோக்கியன் தனது எல்லாப் புகைப்படங்களையும் அழித்து விட்டிருந்தான். ஆகவே அவனைத் தேடிப் பிடிப்பது மிகவும் சிரமமான காரியமாகப் போய்விட்டது.

யானாக்கி மாஸ்கோவில் இருக்கிறான், அல்லது மாஸ்கோவில் தங்கிவிட்டுப் போனான் என்பதையும், புனை பெயர் வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதையும், அந்தப் பெயர் க்யூனுக்குத் தெரியாது என்பதையும் க்யூன் சொன்னதிலிருந்து அறிந்துகொண்டேன்.

இப்பிரச்சினையைத் தெளிவுபடுத்துவதற்கு நான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின. இதற்கிடையில், யானாக்கி பெரும் லஞ்சக்காரர்களில் ஒருவன் என்றும், மோசடியான வழிகளில் பெருத்த செல்வம் திரட்டியிருந்தான் என்றும் தெரிந்துகொண்டோம்.

எனவே, லெனின்கிராட் நகர்ப்புறத்தில் யானாக்கி அவ்வப்போது காணப்படுவதாகத் திடீரெனத் தகவல் கிடைத்ததும் மிகவும் திருப்தி அடைந்தேன்.

அவனைத் தேடுவதற்கான முயற்சியைத் தொடர ஆலோசித்து, 'சொல் ஓவியம்' என வழங்கும் ஒரு முறையைக் கையாளுவது என்று முடிவு செய்தேன். பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற குற்றவியல் அறிஞரும், பாரிஸ் போலீஸ் துறையைச் சேர்ந்த அங்க அடையாள ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநருமான அல்ஃபோன்ஸ் பெர்த்தில்லோன் என்பவரால் இந்த முறை 1885ஆம் ஆண்டில் முதன்முதலாக வகுக்கப்பட்டது. பின்னர் சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த குற்றவியல் அறிஞர் ரெயிஸ் என்பவர் இந்த முறையை விரிவுபடுத்தினார். 1912இல் ஜார் ஆட்சியின் கீழ் நீதி அமைச்சகம், ருஷ்ய நீதித்துறை புல

னாய்வாளர்கள், குற்றவியல் நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை கற்றுவருவதற்காக அவரிடம் அனுப்பிவைத்தது.

ஒரு மனிதனுடைய தோற்றத்தை (அவனது உடல், தலை, முகம் ஆகியவற்றை) விசேடக் குறிச்சொற்களால் வருணிப்பதைக் குற்றவியல் நிபுணர்கள் 'சொல் ஓவியம்' எனக் குறிப்பிடுகிறார்கள். மற்றொருவனின் தோற்றத்தை வருணிக்கும் ஒவ்வொரு மனிதனும், சொற்களின் மூலமாகவே அவனது உருவத்தைத் தீட்டுகிறான் என்பது உண்மையே. எனினும் பேச்சில் வழங்கும் சாதாரணச் சொற்களால் அவன் செய்யும் வருணனை, எவனது சொல் ஓவியம் தேவையோ, அவனது தோற்றத்தைத் துல்லியமாகச் சரிவரப் பதியவைப்பதில்லை. ஒரு குற்றவாளியைத் தேடுவதற்கோ, அவனது தோற்றத்தைப் பற்றிய மிகத் திட்டமான விவரம் இன்றியமையாததாகும்.

சொல் ஓவிய முறைப்படி, மனித முகத்தின் பக்கத் தோற்றம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை வருமாறு: தலை மயிர் முதல் மூக்குத் தண்டு வரையுள்ள நெற்றி, மூக்கு, மூக்கின் அடி முதல் மோவாய் விளிம்பு வரையுள்ள வாய்.

சொல் ஓவியத்தின் உதவிகொண்டு ஒரு குற்றவாளியைத் தேடும் போதோ, குற்றவாளியையோ பிணத்தையோ இன்னாரென்று அடையாளம் கண்டுகொள்ளும் போதோ புலனாய்வாளன் திட்டமான விசேடக் குறிச் சொற்களை பயன்படுத்த வேண்டும். சொல் ஓவியத்தின் தனிப்பட்ட அமிசங்களை நினைவில் கொள்ளவும், வகைப் படுத்திக் கொள்ளவும் வேண்டிய ஆற்றல் புலனாய்வாளனுக்குக் கைவருகிறது.

யானாக்கியின் சொல் ஓவியத்தைத் தயாரிக்கும் பொருட்டு பல சாட்சியங்களை வெகு நுணுக்கமாக நான் விசாரிக்க நேர்ந்தது. அவர்கள் பயனுள்ள பல தகவல்களை அளித்தனர். கடைசியில் யானாக்கியின் சொல் ஓவியம் தெளிவாயிற்று. நடுத்தர உயரம், கனத்த சரீரம், முட்டை வடிவமான முகம், வரவர வழுக்கையாகிக் கொண்டுவரும் தாழ்ந்த நெற்றி, நீண்ட கிளிமூக்கின் மீது இணைந்துள்ள வளைந்த செம்பட்டைப் புருவங்கள், இதழ்க் கோடிகளில் சரிந்த நடுத்தரமான வாய், தடித்த உதடுகள், பிதுங்கிய கீழ் உதடு, சதுரமான இரட்டை

நாடி, முக்கோண வடிவுடைய, கொஞ்சம் துருத்திய பெரிய காதுகள், உப்பிய, பசிய கண்கள், செம்பட்டைத் தலை.

அவனது சொல் ஓவியத்தை உருவாக்குவதில் நான் மிகவும் உழைத்திருந்தபடியால், என் வாழ்வில் ஒரு முறையேனும் அவனைக் காணாதிருந்துங்கூட, எனது மனக்கண்ணால் அவனை வெகு தெளிவாகக் கண்டுகொள்ள முடிந்தது. தப்பித் திரியும் யானாக்கியை விரைவில் பிடிப்பதற்கு இந்தச் சொல் ஓவியம் பயன்படும் என்று கருதி அதைப் பற்றிய விவரங்களைப் பற்பல துறைகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு சனிக்கிழமை ஸெஸ்த்ரோரெத்ஸ்கிற்குப் புறப்பட்டேன். அங்கே ஞாயிற்றுக்கிழமையைக் கழிக்க விரும்பினேன். அக்காலத்தில் ஒவ்வொரு ஞாயிறும் ஸெஸ்த்ரோரெத்ஸ்கிற்கு மக்கள் கூட்டங்கூட்டமாய் வருவதுண்டு. வெயில் சுள்ளென்று காயும் கோடை நாள்களில், குளிப்பவர்கள் எழிலார்ந்த கடற்கரையில் திரள் திரளாக மொய்த்துக் கிடப்பார்கள்.

மறு நாள், நீராடல் மும்முரமாக நடந்து கொண்டிருக்கையில், ரகின்ஸ்கி, பொதுனோவ் என்ற இரு சகாக்களுடன் கடற்கரையில் படுத்திருந்த போது, இரண்டு இளைஞர்கள் யாரையோ தேடிக்கொண்டு மெதுவாக நடந்துவருவதைக் கவனித்தேன்.

''இந்தப் பையன்கள் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறேன்,'' என்று திறமை மிகுந்த துப்பறிபவனும் எதையும் கூர்ந்து கவனிக்கும் இயல்பினனுமான பொதுனோவ் குறிப்பிட்டான். ''அவர்கள் யாரையோ தேடுகிறார்கள் போலிருக்கிறது...''

சில நிமிடங்களுக்குள் அவர்கள் எங்களிடம் வந்தனர்.

''தோழர் ஷெய்னின்,'' என்றான் அவர்களில் ஒருவன், ''நாங்க உங்களைத்தான் தேடி வருகிறோம். சொல் ஓவியம் பயனளித்துவிட்டது. தெத்ஸ்கோஸேல்ஸ்கி ரயில் நிலைய மிலீஷியா அலுவலகத்தில் யானாக்கியைப் பிடித்து வைத்திருக்கிறோம். எங்க தலைவர் உங்களை வருமாறு சொல்லியனுப்பினார். உங்க வீட்டுக்குப் போய்ப் பார்த்தோம். நீங்க இங்கே இருக்கிறதாச் சொன்னாங்க...''

நான் பெரு மகிழ்ச்சியுடன், விரைந்து உடைகளை அணிந்துகொண்டு லெனின்கிராடிற்கு விரைந்தேன். மிலீ

ஷியா நிலையத்தின் தலைவன், தெத்ஸ்கோஸேல்ஸ்கி ரயில் நிலையத்தில் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

''எங்களைப் படாதபாடுபடுத்தி விட்டீர்கள்!'' என்று மகிழ்ச்சியுடன் தொடங்கினான். ''இந்தச் சொல் ஓவியம் பிரமாதமான உத்தி. நான் முன்னர் பயன்படுத்தியது இல்லை. என் பையன்களும் இதற்கு முன்னால் இதைப் பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை. இன்றைக்குக் காலையில்தான் இவர்களையெல்லாம் கூட்டிவைத்து உங்க சொல் ஓவியத்தை விளக்கினேன். உடனே செம்பட்டைத் தலையனைத் தேடத் தொடங்கிவிட்டோம்.''

''ஆனா யானாக்கி எங்கே?'' என்று பொறுமையில்லாமல் கேட்டேன்.

''நல்லது, பத்துப் பன்னிரண்டு பேரை ஏற்கெனவே பிடிச்சுட்டாங்க,'' என்று மகிழ்ச்சியுடன் பதிலளித்த தலைவன் என்னை அலுவலக அறைக்குள் அழைத்துச் சென்றான். ''அவர்களில் ஒருத்தன் நிச்சயமா யானாக்கி, மற்றவர்கள் ஒருவேளை அவனோட சகோதரர்களாக இருக்கலாம்.''

எனக்குப் பகீரென்றது. பெர்த்தில்லோன், ரெயிஸ் ஆகிய இருவரது முறைக்கும் நேர் எதிரிடையாக அல்லவா இந்த தெத்ஸ்கோஸேல்ஸ்கி ரயில் நிலைய மிலீஷியத் தலைவன் செய்திருக்கிறான்!

''உங்களுக்குப் புரியலியா!'' என்று பதற்றத்துடன் கத்தினேன். ''சொல் ஓவியத்தின்படி ஒரே ஒருத்தனைத்தான் கைது செய்ய முடியும், அவனும் யானாக்கியைத் தவிர வேறு எவனாகவும் இருக்க முடியாது.''

''நான் விவாதிக்கப் போறதில்லே,'' என்று மகிழ்ச்சியுடன் அவன் பதிலளித்தான். ''அவர்களில் ஒருத்தன் நிச்சயமா யானாக்கிதான். மற்றவர்கள் மனத் தாங்கல் கொள்ள மாட்டார்கள். எல்லாரிடமும் நாங்க கிக மரியாதையாகவே நடந்துகொண்டோம். அவர்களை 'லாக்கப் பில்' வைக்கவில்லை. இரயில் நிலைய ஓய்வறையில்தான் இருக்காங்க. சிலர் தேநீர் அருந்துறாங்க, சிலர் தாயம் விளையாடுறாங்க. மற்றும் சிலர் சஞ்சிகைகள் வாசித்துக் கொண்டிருக்காங்க... பண்பாட்டில் ஒன்னும் குறைவில்லை!''

ஒரு செறுமலுடன் ரயில் நிலைய அறைக்கு விரைந்தேன். கருஞ்சிவப்பும், இளஞ்சிவப்பும், இரத்தச் சிவப்புமான செந்தலையர்களால் அறை முழுவதும் தகதகத்தது. அவர்களோ என்ன நிகழ்ந்தது என்று புரியாமல் மிரள மிரள வளைய வந்து கொண்டிருந்தார்கள். தெத்ஸ்கோ ஸேல்ஸ்கி நிலையப் 'பையன்கள்' மேன்மேலும் செந்தலையர்களைப் பிடித்துக் கொண்டுவர, இவர்களுடைய அச்சம் அதிகரித்துக் கொண்டே போனது. கொம்பு விளிம்பு கட்டிய மூக்குக் கண்ணாடியுடன் காணப்பட்ட இளைஞனாகிய உதவித் தலைவன், சொல் ஓவியத்தில் மிகுந்த ஆர்வம் காட்டினான். உண்மை, புதிதாக வந்த ஒவ்வொரு செந்தலையனையும் அவன் மரியாதையாக வரவேற்றான். ஆனால் அதே வேளை, வந்தவனின் காதுகள், மூக்கு, வாய் ஆகியவற்றையும், சொல் ஓவியத்தில் குறித்திருந்த மற்ற அமிசங்களையும் மற்றவர்கள் கண் முன்பே கவனமாக அளவிடுவதும், கூர்ந்து நோட்டமிடுவதும், தனது கைப்புத்தகத்தில் ஏதோ மர்மமான குறிப்புகளைக் கிறுக்குவதும், வாய்க்குள்ளாக முணுமுணுப்பதுமாக ஒரே கெடுபிடி செய்தான். இதெல்லாம் ஏதோ மர்மச் சடங்கு போலும் என செந்தலையர்கள் மருண்டார்கள். அத்துடன் அவர்களுடைய கேள்விகளுக்கு வெறுமையாக பதிலளித்தான்: ''பெர்த்தில்லோன், ரெயிஸ் ஆகிய இருவரது சொல் ஓவியம் பற்றியது. மூத்த புலனாய்வாளர் விரைவில் வந்து எல்லாவற்றையும் முடிவு செய்வார். அவர் வரும்வரை பொறுத்திருக்கணும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்''.

அங்கிருந்தவர்களில் எவருக்கும் பெர்த்தில்லோன், ரெயிஸ் இவர்களைப் பற்றியோ, சொல் ஓவியம் பற்றியோ எதுவும் தெரியாது. எவரும் தேநீர் அருந்தவோ, தாயம் விளையாடவோ, பத்திரிகை படிக்கவோ இல்லை. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவன் சென்னி சந்தையிலிருந்து வந்த முதிய கசாப்புக்காரன். உலகில் மற்ற எதைக் காட்டிலும் வருவாய் அலுவலர்களுக்கும் வரிகளுக்கும் பயந்த அவன் மற்றவர்களிடம் கிசுகிசுத்தான்:

''அதுதான் தெளிவாய்த் தெரியுதே—செந்தலை நபர்களுக்கு விசேட வரி போட்டிருக்காங்க... நாம் தொலைந்தோம்!''

''வரிகளுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம், முட்டாள்?'' என்று மற்றொருவன் மறுத்துரைத்தான். ''அதுதான் தெளிவாச் சொல்லிட்டாங்களே, புலனாய்வாளரை எதிர்பார்ப்பதாக! அதிலும் சாதாரண புலனாய்வாளர் இல்லையாம், மூத்த புலனாய்வாளராம்! அத்துடன் இந்தக் கண்ணாடிக்காரன் வேறு நம்மோட மூக்கு, காதுகளை அளவெடுத்துக் கொண்டிருக்கிறான்... ஒவ்வொரு வகை மூக்குக்கும் ஒவ்வொருவிதமான வரிப் போடுவாங்க என்று நினைக்கிறீங்களா?''

''நீங்க இரண்டு பேர் சொல்றதும் சிறுபிள்ளைத்தனமானது,'' என்றான் முன்னாளில் வங்கித்தரகனாக இருந்த மூன்றாமவன். ''ஏதோ புதிய திரைப்படத்திற்கு செந்தலை மனிதர்கள் தேவை போலிருக்கு. அதனாலேதான் காதுகளையும், மூக்குகளையும் அனந்துக்கிட்டிருக்காங்க... தேவைக்குப் பொருத்தம் தானா என்பதைப் பார்ப்பதற்காக.''

நான் வந்த நேரத்தில் அவர்களுடைய விவாதம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. கூட்டமாக என்னைச் சூழ்ந்துகொண்ட செந்தலையர்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். அவர்களுக்கு விஷயத்தை விளக்குவது என் கடமை எனக் கருதி, பெருத்த தவறு நேர்ந்து விட்டது என்றும், தப்பியோடிய செந்தலைக் குற்றவாளி ஒருவனை நாங்கள் தேடிக்கொண்டிருக்கிறோம் என்றும், தெத்ஸ்கோஸ்லெஸ்கி நிலைய அதிகாரிகள் இப்படி நடந்து கொண்டது துரதிருஷ்டம் என்றும் விவரித்தேன். அவர்களுடைய பதிவுச் சீட்டுகளைப் பரிசீலனை செய்தும், சொல் ஓவிய முறைப்படி ஆராய்ந்தும், அவர்களில் யாரும் யானாக்கி இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின், மறுபடியும் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, அவர்களைப் போக அநுமதித்தேன். இலையுதிர் காலத்தில் உதிரும் இலைகளைப் போல அவர்கள் பிளாட்பாரத்தில் சிதறிச் சென்றனர். ஒருவன் மட்டும் பின்தங்கினான். குறிப்புக் காட்டி என்னை ஒரு பக்கமாக அழைத்துச்சென்று காதில் கிசுகிசுத்தான்:

''அந்த மூன்று செந்தலை மூடர்கள் ஏதேதோ ஊகங்கள் செய்து கொண்டிருந்த போது, நான் உதவிப் புலனாய்வாளரை உற்றுக்கவனித்து எந்தவிதமான மூக்கு, காது

களில் அவர் அக்கறை காட்டினார் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர் தேடுற அந்த காதுகளுக்கும் மூக்குக்கும் சொந்தக்காரன் யானாக்கிதான், நான் பந்தயம் கட்டத் தயார்... இப்ப அவன் லெனின்கிராடில் இல்லை. மாஸ்கோவில் இருக்கிறான் என்று சொல்றாங்க. ஒன்னு சொல்ல விரும்புறேன்: இசை நாடகங்கள் பார்ப்பதில் அவன் விருப்பங் கொண்டவன். செந்தலையன் என்ற முறையில் உங்களுக்கு உதவுறது என்னோட கடமை. அதனாலேதான் இதைச் சொன்னேன். போய்வாறேன், தோழர் மூத்த புலனாய்வாளரே!''

குடிமகனுக்குரிய தனது கடமையைச் செய்துவிட்ட நிறைவுடன் அவன் நடந்து சென்றான்.

மற்றவர்கள் போன பிறகு, மிலீஷிய நிலையத் தலைவனிடம், அவனையும் அவனுடைய 'பையன்களை'யும் பற்றி நான் எண்ணியவற்றைச் சொன்னேன். அவன் திக்குமுக்காடிப் போய் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். ''நாளை முதற்கொண்டு குற்றவியலை ஆழ்ந்து கற்கத் தொடங்கி, சொல் ஓவியம் பற்றிய எல்லா விவரங்களையும் நன்கு தெரிந்துகொள்கிறேன்,'' என்றான். அவ்வாறே ஒரு மாதம் கழித்து என்னிடம் வந்த அவன், சொல் ஓவியத்தின் வரலாறு, அதற்குரிய விசேடச் சொற்கள், அதன் தயாரிப்புத் திட்டம், முறை ஆகியவை பற்றி ஒப்புவித்தான். பெர்த்தில்லோன், ரெயிஸ், வெயின்கார்த், யாகிமோவ் ஆகியவர்களின் மேற்கோள்களை எடுத்துக் கூறினான்.

''இப்போதெல்லாம் நான் கண்ணை மூடிக்கொள்ள வேண்டியதுதான், என்னை இத்தகைய அவக்கேடான நிலைக்கு ஆளாக்கிய, அந்த யானாக்கி அப்படியே எதிரே வந்து நிற்கிறான்... அந்தச் சிவப்புத் தலையர்களை எல்லாம் கூட்டி அடைத்ததற்காக எனது தலைவரிடமிருந்து கிடைத்த கண்டனத்தைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. என்னதான் சொல்லுங்க, இந்த பெர்த்தில்லோனின் மூளையே மூளை! அவர் உருவாக்கிய சொல் ஓவிய முறை அற்புதமானது!''

தெத்ஸ்கோஸ்லெஸ்கி நிலையத்தின் தலைவன், குற்றவியலில் தனது சாதனைகளை எடுத்துக் கூறிச் சென்ற மறுநாளே, எனது முகவரியிட்ட கடிதம் ஒன்று மாவட்ட

நீதிமன்றத்தில் பெறப்பட்டது. அனுப்பியவன் வேறு யாருமில்லை, யானாக்கியே. பின்வருமாறு எழுதியிருந்தான்:

> ''அன்புள்ள மூத்த புலனாய்வாளர் ஷெய்னின் அவர்களுக்கு,
>
> நீங்கள் என்னைக் காணத் துடிப்பதாகத் தெரிகிறது. நான் அவ்வாறு துடிப்பதாகக் கூறமாட்டேன். காதல் இன்பம் என்பது இருவர் மனமும் ஒத்திருந்தால் தானே! ஆமாம், எவனோ பேராசிரியன் ரெயிஸாம், சொல் ஓவியம் என்ற மடத்தனமான முறை ஒன்றை வகுத்திருக்கிறானாம், அதற்கேற்ப நீங்களும் என்னைத் தேட முயற்சி செய்கிறீர்களாமே? இதைக் கேட்டு எனக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. பேராசிரியன் ரெயிஸையும் அவனுடைய சொல் ஓவிய முறையையும் தூவென்று இகழ்ந்தேன். விடைபெற்றுக் கொள்கிறேன், யானாக்கி.''

இப்போது நான் உண்மையாகவே கோபமடைந்தேன். இந்தக் கயவாளி நெப்காரன் சட்டத்தை ஏமாற்றி வருவது மட்டுமன்றி, குற்றவியல் விஞ்ஞானத்தையே கிண்டல் செய்துவிட்டான்! மாவட்ட அரசு வழக்குரைஞரிடம் இந்த விசித்திரமான கடிதத்தைக் காட்டி, அதிலிருந்த 'மாஸ்கோ' அஞ்சல் முத்திரையை அவரது கவனத்திற்குக் கொணர்ந்து, அங்கு செல்வதற்கு அநுமதி வேண்டினேன். யானாக்கியைக் கண்டுபிடிக்க என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி என்னிடம் எந்தத் திட்டமும் இல்லை. ஆனால் இந்தக் காரியத்தில் மூரைச் சேர்ந்த எனது நண்பர்கள் பேருதவி புரிவார்கள் என்று முழு மனத்துடன் நம்பினேன். மாவட்ட அரசு வழக்குரைஞரும் கடிதத்தைப் பார்த்து மிகுந்த ஆத்திரம் கொண்டதால் உடனே என்னைப் புறப்பட்டுப் போகும்படி சொன்னார்.

நான் அடுத்த நாளே மூர் அலுவலகத்தில் ஓஸிபவின் அறையில் இருந்தேன். யானாக்கி பற்றிய சொல் ஓவியத்தால் நிகழ்ந்தனவற்றை அவனுக்கும், அங்கிருந்த பிறருக்கும் எடுத்துரைத்தேன். எனக்கு வந்திருந்த கடிதத்தைக்

காட்டினேன். ஓஸிபவின் முகம் கோபத்தால் குப்பென்று சிவந்துபோனது.

''லஞ்சக்காரனும் புரட்டனுமாகிய எவனோ வங்கு பிடித்த நெப்காரன் குற்றவியலையும், நீதியையும் ஏளனம் செய்ய விட்டுவிட்டு நாம் சும்மா இருக்கிறதா? என்ன செய்யலாம்? சொல்லுங்க,'' என்று தனது துணையதிகாரி களைப் பார்த்துக் கேட்டான்.

''என்ன செய்யலாமா?'' என்று எப்போதும் நிதான மும் மரியாதையும் தன்னடக்கமும் கொண்ட தில்நேர் கேட்டான். ''முதலாவதாக, அவனது சொல் ஓவியம் நம்மிடம் இருக்கும். பிறகு, பல நெப்காரர்களைப் போல வே யானாக்கியும் இசை நாடகங்களுக்கு அடிக்கடி போய் வருகிறான் என்பதும் நமக்குத் தெரியும். ஆகவே 'அக் வேரியம்', 'ஹெர்மிடேஜ்' ஆகிய அரங்குகளில் அவனைத் தேடிப் பார்க்க வேண்டும் என்றாகிறது. கடைசியாக, அவன் வீட்டுச் சாமான் வியாபாரி. ஆகவே மாஸ்கோ விலுள்ள வீட்டுச் சாமான் வியாபாரிகளில் அவனுக்கு நண்பர்கள் நிச்சயமா இருப்பாங்க. அவர்களையும் விசா ரித்தாகணும். இது இப்ப கௌரவப் பிரச்சினையானபடி யால், யானாக்கியைத் தேடிக் கண்டுபிடிப்பதில் நம் குழு வினர் கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டியதுதான்.''

''ரொம்ப சரி,'' என்று வழக்கம் போலத் தணிந்த குரலில் சொன்னான் சாமர்த்தியசாலி, பெருந்தன்மை யுள்ளவன் நோஷ்னித்ஸ்கி. ''சாயங்காலம் பூராவும் இசை நாடகங்களுக்குப் போக வேண்டியதுதான். 'ஸில்வா', 'வெளவால்' இரண்டையும் ஒன்று மாற்றி ஒன்றாகப் பார்க்க வேண்டியதுதான்... வேறு வழி இல்லை.''

''அவ்வளவு போதும்,'' என்று சுருக்கமாகக் கூறிய ஓஸிபவ், ஆலோசனை முடிந்துவிட்டதென்பதைக் குறிப் பதற்காக எழுந்து நின்றான். ''இன்னைக்கு 'அக்வேரியத்' தில் என்ன நடக்குது?''

நோஷ்னித்ஸ்கி தனது பத்திரிகையை எடுத்து, விளம் பரங்களைப் பார்த்துவிட்டு, தத்தியானா பாக், பிராவின், யாரோன் ஆகியோர் முக்கியப் பாத்திரங்களாக நடிக்கும் 'ஸில்வா' நாடகம் நடப்பதாகச் சொன்னான்.

அதே மாலை 'ஸில்வா' இசை நாடகம் பார்ப்பதற் காக, ஓஸிபவும் நானும் 'அக்வேரியம்' கோடைத் தோட்

டத்திற்குச் சென்றோம். எங்களது இருக்கைகள் மூன்றாவது வரிசையில் வலப்புறம் இருந்தன. சில வரிசைகளுக்குப் பின்னால் ஓஸிபவின் இரு துணைவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன் யாஷா சாக்ஸாகன்ஸ்கி என்ற ஒடிசலான ஜார்ஜிய இளைஞன். கறுத்த அரும்பு மீசையுடைய அவன், சொல் ஓவியங்களில் நிபுணன் என்று கருதப்பட்டான். மற்றவன் வான்யா பெஸ்ரூகவ்—எப்போதும் சிரிப்பும் குதூகலமுமாக இருப்பவன், குறும்புத்தனம் மிளிரும் அவனது சாம்பல் நிறக் கண்கள் முன்னும் பின்னும் பார்க்க வல்லவை என மூரில் சொல்வதுண்டு.

முதலாவது இடைநேரத்தில் ஓஸிபவும் நானும் 'அக்வேரியத்'திலுள்ள கட்டையான லின்டன் மரங்களினூடே நடந்து கொண்டிருக்கையில், சாக்ஸாகன்ஸ்கி எங்களிடம் வந்து சொன்னான்:

''இங்கே நிலைமை இப்படி இருக்கு: ஒரு டஜன் செந்தலையர் நிகழ்ச்சியைப் பார்க்கிறாங்க. இரண்டு பேரின் காதுகள் சரியாக உள்ளன, ஆனா அவர்களோட மூக்குகள் சரியாக இல்லை. நாம் விரும்பும் மூக்கு மூனு பேருக்கு இருக்கு, ஆனா காதுகள் சரி இல்லை. தொங்கும் உதடு ஒன்னுகூடக் காணோம். ஒரே ஒரு செந்தலையனது உதடு சிறிது துருத்தி இருக்கு... அவன் சுங்கான் புகைத்தது காரணமா இருக்கலாம். சுங்கான் புகைக்கையில் உதடு தொங்குறது சகஜந்தானே!''

இதைக் கேட்டதும் தெத்ஸ்கோஸேல்ஸ்கி நிலையத்தின் ஒய்வறை நினைவுக்கு வந்தது. ஆயினும் அது வீண் பதற்றந்தான். இங்கே விவகாரம் ஓஸிபவின் கையில் அல்லவா இருந்தது! அந்த வித்தியாசம் பளிச்செனப் புலப்பட்டது.

''யாஷா,'' என்று ஓஸிபவ் இடைமறித்தான், ''உங்க அறிக்கை கோகலின் 'திருமணம்' என்ற நாடகத்தில் வரும் மணமகளை நினைவுபடுகிறது. அந்த மூளைகெட்ட பெண்ணும் தன்னை மணக்க விரும்பியவனது மூக்கும் மற்றொருவனது உதடுகளும் இணைந்துவிடாதா என்று கனவு கண்டாளாம். தோழர் சாக்ஸாகன்ஸ்கி, நீங்க கணக்கெடுத்து வைத்திருக்கும் மூக்குகளைப் பற்றி எனக்கு அக்கறையே இல்லை. எனக்குத் தேவை ஒரே மூக்கு, அதாவது கிறிஸ்தோபர் யானாக்கியின் மூக்கு மட்டுந்தான். நான் அறிய

விரும்புறது: அந்த மூக்கு இங்கே இருக்கா இல்லையா என்பதுதான்.''

''இந்தக் கேள்விக்கு இரண்டாவது இடைநேரத்திற்குள் விடையளித்து விடுகிறேன்,'' என்று யாஷா உறுதி சொன்னான்.

''இரண்டாம் வரிசையில் இடப்பக்கம் சரி பார்த்துக் கொள்ளுங்க. நாங்க அதிகத் தொலைவில் இருக்கிறோம். அங்கு அடையாளப் பொருத்தமுள்ள யாரோ ஒருவன் இருப்பது போல எனக்குப் புலப்பட்டது... எப்படியிருந்தாலும், இரண்டாவது வரிசையையும் ஒரு கண் பார்த்துக் கங்க, யாஷா,'' என்றான் ஓஸிபவ்.

இரண்டாம் அங்கம் நடைபெறுகையில், மேடையை விட அதிகமாக இரண்டாவது வரிசையைத் தான் நான் பார்த்துக் கொண்டிருந்தேன் என்பது சொல்லாமலேயே விளங்கும். அங்கு யாரோ ஒருவனுடைய தீப்போன்ற செந்தலை, பிலியர்ட் பந்தைப் போல பளபளத்த ஒரு வழுக்கைத் தலைக்கும் ஒரு பெண்ணின் செழுமையான முடியின் அலங்காரத்துக்கும் இடையே தகதகத்தது. தொலைவாக இருந்ததால் என்னால் காது, மூக்கு, வாய் இவற்றை நன்றாகப் பார்க்க முடியவில்லை. ஆனால் பல் வலியால் அவதிப்படுபவனைப் போல, கையைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு யாஷா இருமுறை இரண்டாம் வரிசையின் அருகாக நடந்து சென்றதைக் கண்டேன்.

நாடகத்தின் இரண்டாம் அங்கத்தில், எட்வினும் ஸில்வாவும் ஒருவரையொருவர் அணைத்தவாறு பாடுகின்ற கட்டம் வந்தது. அந்தப் புகழ்பெற்ற இருவர் பாட்டில், ''மகிழ்ச்சி எப்படி நம்மிடம் புன்முறுவல் புரிந்ததே, அது நினைவிருக்கிறதா உனக்கு?'' என்ற முக்கியமான கேள்வி வெளிப்பட்டதும், மகிழ்ச்சி என் மீது உண்மையாகவே புன்முறுவல் புரிந்ததும் ஒன்றாக நிகழ்ந்தது. அதே கணம் யாஷா இடைவழியில் வந்து என் காதோடு காதாகச் சொன்னான்:

''யானாக்கி ஆறாவது வரிசையில் உட்கார்ந்திருக்கிறான் என்று நினைக்கிறேன். ஒன்று மட்டுந்தான் முரண்பாடாத் தெரியுது. மற்றவை ஒத்திருக்கின்றன... அவன் மாத்திரம் யானாக்கி இல்லை என்றால், நாளையே நான் வேலையிலிருந்து விலகிக் கொள்ளத் தயார்... இடை

வேளையின் போது அவனைக் காட்டுகிறேன்.''

இச்செய்தியை உடனே நான் ஓஸிபவிடம் சொன்னேன். அவன் முகத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. பெரிய ரசிகன் போல, இசைக்கேற்பத் தலையை அசைத்துக்கொண்டே மெதுவாகச் சொன்னான்:

''யாஷா திரும்மென்று முடிவு செய்திருப்பானோ என்னவோ. ஆயினும், எதுவும் சாத்தியந்தான்... இடை வேளையில் உறுதிப்படுத்திக் கொள்வோம்.''

இரண்டாம் அங்கம் முடிந்ததும் ஓஸிபவும் நானும் கைகோர்த்துக்கொண்டு, வெளிச்சம் நிறைந்த பாதைகள் வழியாக மெல்ல நடந்து, கச்சிதமாக உடையணிந்து கலகலப்பாக நெரிந்த மக்கள் கூட்டத்திற்கிடையே சுற்றி வந்தோம். மாஸ்கோ 'அக்வேரியம்' அரங்கில் அக்காலத்தில் வழக்கமாகக் காணப்படுவது போன்ற கூட்டம் அது. விலையுயர்ந்த மென்மயிர்த் தோல் கொண்ட கோடைக்கால மேலங்கிகளும், கச்சிதமான உடைகளும் அணிந்த இளம் பெண்கள் ஒய்யாரமாக நடை பயின்றனர். பிரமாதமாக ஒப்பனை செய்யப்பட்ட அவர்களது வெளிறிய முகங்களில் கயல் விழிகள் பளிச்சிட்டன. ஒரேயடியாகச் செவ்வண்ண மூட்டிய உதடுகள் கனன்றன. சிவந்த முகத்தினரான மளிகைக் கடைக்காரர்களும் மீன் வியாபாரிகளும், உருண்டை முகங்களும் திரண்ட மார்புகளுமாகக் காணப்பட்ட மனைவியரைக் கைலாகு கொடுத்து அழைத்து வந்தார்கள். அந்த மனைவியர் அணிந்திருந்த அச்சுப் போட்ட பாரசீகப் பட்டுச் சால்வைகளின் நீண்ட விளிம்புகள் சரசரவென்று தரையைப் பெருக்கின. நடுத்தர வயதுள்ள பருத்த உற்பத்தியாளர்கள் தங்களது பகட்டான விளிம்பற்ற மூக்குக் கண்ணாடியையும் தங்கப் பற்களையும் காட்டிக்கொண்டு நடந்தனர். அப்போதைய பாணியில் குறுகிய குட்டைக் காற்சட்டைகளும், கட்டம் போட்ட இறுக்கமான கோட்டுகளும் அணிந்த இளம் சவடால் பேர்வழிகள், வாலிபர்கள் போன்று குட்டையாகக் கத்தரித்த முடியும், கண்டோர் மயங்கக் குறு நெற்றிகளின் மீது புரண்ட மயிர்க் குஞ்சங்களுமாகத் திகழ்ந்த பிலுக்குக்காரிகளான இளமகளிரை மந்தை மந்தையாகப் பின்தொடர்ந்தனர்.

இத்தகைய பலரக மக்களுக்கிடையே, பளபளக்கும்

கருமுடியன் ஒருவன் மீது திடீரென்று என் பார்வை விழுந்தது. இளம் பொன்னிறக் கேசமும், வெண் பொன்னிற மேனியும், வெள்ளைக் கோட்டும், தோள்மீது அலட்சிய மாய்ப் போடப்பட்ட நீல நரியின் மென்மயிர்த் தோலுமாக விளங்கிய மங்கை ஒருத்தியுடன் அவன் உலவிக் கொண்டிருந்தான். இந்த மனிதனது முகம் அறிமுகமானது போலக் காணப்பட்டது. ஆனால் அவனை இதற்குமுன் நான் பார்த்ததே இல்லை என்பது உறுதி.

அவனுடனிருந்த பெண்ணின் சாயமேற்றிய கேசத்தை உற்று நோக்கினேன். பெராக்ஸைட் ஊட்டப்பட்டதால் உண்டான அதன் ஜீவகளையற்ற வெளிர்மையைப் பார்த்துக் கொண்டிருக்கையில், அந்த மனிதனின் முகம் ஏன் அவ்வளவு பழக்கமானதாகக் காணப்பட்டது என்பதை உடனடியாகப் புரிந்துகொண்டேன்: சதைப்பற்றுள்ள கிளி மூக்கு, வழுக்கையாகி வரும் தாழ்ந்த நெற்றி, அடர்ந்து இணைந்த புருவங்கள், சதுரமான இரட்டை நாடி, முக்கோண வடிவுடைய சிவந்த காதுகள்—இவை அனைத்தும் யானாக்கியின் சொல் ஓவியத்தில் குறித்துள்ள அங்க அடையாளங்கள்!

அவன் புகை பிடிப்பதைக் கவனித்ததும், விரைவாக அவனிடம் சென்று பற்றவைப்பதற்குத் தீப்பெட்டி கேட்டேன். சட்டைப் பையிலிருந்து தீப்பெட்டியை மெதுவாக எடுத்து, ஒரு குச்சியைக் கிழித்தான். அவனது கைகளைக் கவனித்ததுமே, எனது இதயம் படபடத்தது. மச்சங்கள் மிகுந்த அக்கரங்கள் மீது செம்மயிர் அடர்ந்திருந்தது. நிமிர்ந்து, அவனுடைய முகத்தைப் பார்த்தேன். உப்பிய பசிய கண்களும், சிவந்த இமை மயிரும் காட்சியளித்தன. ஆம், அவன் யானாக்கியே தான். முடிக்கு மட்டும் கறுப்புச் சாயம் ஏற்றியிருந்தான்!

பின்னுக்கு நகர்ந்த நான், யானாக்கியையோ, 'அக்வேரியம்' கோடைத் தோட்டத்தையோ, 'ஸில்வா' இசை நாடகத்தையோ, மறுநாள் விலகல் கடிதம் கொடுப்பது பற்றிய கவலையையோ மறந்தவன் போன்ற தோற்றத்துடன் பராக்குப் பார்த்துக்கொண்டு யாஷா அருகே நிற்பதைக் கவனித்தேன்.

என்னிடம் நெருங்கி வந்து கிசுகிசுத்தான்:

''சாயமேற்றிய அந்த வான்கோழியை நீங்களும் கவ

னித்ததில் எனக்கு மகிழ்ச்சி. அவன் யானாக்கி இல்லை என்றால் நான் ஒரு கழுதை!''

பாவம், அருமை யாஷா! இந்த நிகழ்ச்சிக்குச் சில ஆண்டுகளுக்குப் பின்னே, காச நோயினால் இறந்து போனான். தனியாகவே அவன் வாழ்ந்த ஒரு சிறிய அறையிலிருந்து (தான் நோயாளி என்பதை அறிந்த அவன், மணம் செய்து கொள்ளாமல் இருந்தான்) அவனது சவப் பெட்டி வெளியே எடுத்துச் செல்லப்பட்டபோது, அவனது சகாக்கள் பொங்கும் துயரத்துடன் உடன் சென்றார்கள். முன்கோபக்காரனாக இருந்த போதிலும் துணிவும், நேர்மையும், பரிவும் மிகுந்த இம்மனிதன், புலனாயும் கடினமான பணியில் கடைசி மூச்சுவரை மனப்பூர்வமாக ஈடுபட்டு உழைத்தான். எனவே அவர்களுக்கு அவன் மீது உண்மையான அன்பு இருந்தது...

அந்தக் கருந்தலை யானாக்கியை மீண்டும் ஒரு முறை பார்த்துவிட்டு, யாஷா சொல்லியது சரியே என்று எனக்குப் படுவதாக ஓஸிபவின் காதில் கிசுகிசுத்தேன்; அம்மனிதனுடைய கரிய தலைமயிர், விசித்திரமான ஊதா நிறத்தில் பளபளப்பதைக் கவனிக்கும்படி சொன்னேன்.

''இருக்கலாம்,'' என்றான் ஓஸிபவ். அவன் குரலில் அலட்சிய பாவம் தொனித்தாலும், என் கரத்தை இறுக்கமாகப் பற்றியிருந்தான். ''அந்தக் கயவன் தலைமயிருக்குச் சாயம் பூசியிருக்கலாம். அதனால்தான் இவ்வளவு துணிச்சலாக நடமாடுகிறான் போலும். ஆனாலும் விஷயத்தை இன்னும் நல்லா உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம். தெத்ஸ்கோஸ்லெல்ஸ்கி துறைத் தலைவன் வாங்கிக் கட்டிக் கொண்ட சமர்த்துப் பட்டம் எனக்கு வேணாம். இவன் உண்மையாகவே யானாக்கி என்பதும், முதல் வேட்டையிலேயே நாம் இவனை 'வலையில் மாட்டிவிட்டோம்' என்பதும் சந்தேகம் இல்லாமல் தெரிந்துவிட்டால், பிறகு நான் பரலோக வாழ்வை நம்புவதுடன், பெர்த்தில்லோன், ரெயிஸ் ஆகிய இரு கிழடுகளும் தங்களுடைய முறையைக் கேலி செய்ததற்குத் தண்டனையாக இவன் பிடிபடும் பொருட்டுத் தங்களுக்குள் பேசிக்கொண்டு மேலுலகிலிருந்து நமக்கு உதவினாங்க என்பதையும் நம்புவேன்.''

மூன்றாவது அங்கத்திற்காகத் திரை தூக்கப்பட்ட போது நானும் ஓஸிபவும் எங்களது இருக்கைகளில் அமர

வில்லை. சந்தேகப் புள்ளியான கருந்தலையன் இருந்த ஆறாவது வரிசைக்கு அருகே சுவரோரமாக நின்றுகொண் டோம். இதற்கு முன்பாக ஓஸிபவ் ஒப்பனை அறைக்குச் சென்றிருந்தான். அங்கிருந்து ஒரே திருப்தி ததும்பத் திரும்பிவந்து, 'வேடிக்கையான உளவியல் சோதனை ஒன்றை' நாம் காணப்போகிறோம் என்று என் காதில் கிசுகிசுத்தான்.

'ஸில்வா' என்ற இசை நாடகத்தின் உதவி கொண்டே சந்தேகப் பேர்வழியை உறுதி செய்துகொள்வது என மிகவும் தந்திரசாலியான என் நண்பன் முடிவு செய்தான் என்பது விந்தையாகத் தோன்றலாம். ஆயினும் உண்மை அதுவே. இசை நாடக நடிகர்கள், நடு நடுவே தங்களது சொந்தச் சரக்கையும் உட்புகுத்துவதில் வல்லவர்கள் என் பதை அறிந்திருந்த ஓஸிபவ், மூன்றாவது அங்கத்தின் ஒரு காட்சியில் சில வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளுமாறு நடிகர்களை இணங்கச் செய்துவிட்டான். இந்தக் காட்சி யில், திருவாட்டி வலப்பூக் இளமைப் பருவத்தில் கூத்து மேடைப் பாடகியாயிருந்ததாகவும், 'வானம்பாடி' என அழைக்கப்பட்டதாகவும் அறிந்ததும் எட்வினின் தகப்பன் தலையைப் பிய்த்துக்கொள்வதாக ஒரு கட்டம் வருகிறது. இந்தப் பாத்திரம் வீட்டுச் சாமான் வியாபாரியான யானாக்கியின் மகள் என்று இவற்றோடு சேர்த்துச் சொல் லும்படி அந்த நடிகையை ஓஸிபவ் கேட்டுக் கொண்டிருந் தான்.

இயல்பாகவே, இச்சிறு விவரத்தைப் பார்வையாளர் கள் கவனிக்கவே இல்லை. ஆனால் ஆறாவது வரிசையி லிருந்த கன்னங்கருந்தலையனுக்கோ, ஒரேயடியாகத் தூக்கிவாரிப் போட்டது. ஒருகால் தனக்குத்தான் சரியாகக் காதில் விழவில்லை போலும் என எண்ணி, உடனிருந்த பெண் பக்கமாகக் குனிந்து, ''என்ன பெயர் சொன் னாள்?'' என்று வினவினான்.

''அவனே தான்!'' என்று ஆறுதல் தோன்றப் பெரு மூச்சு விட்டவாறே கூறிய ஓஸிபவ், ''யாஷா தங்கமென் றால் தங்கம் தான். யானாக்கியின் சொல் ஓவியத்தை இவ்வளவு நன்றாகத் தயாரித்திருப்பதற்கு உன்னையும் பாராட்ட வேண்டும். வா, வாயிலில் அவனை வரவேற் போம்,'' என்றான்.

ஒரு மணி நேரத்திற்குப் பின், ஓஸிபவின் செயலகத்தில் ஓரேயடியாக பிரமை பிடித்துப் போய் உட்கார்ந்திருந்தான் கைதியான யானாக்கி. தலைக்குச் சாயம் பூசி இருந்துங்கூட, சொல் ஓவியத்தின் உதவியாலேயே தன்னை எப்படிப் பிடிக்க முடிந்தது என்பதை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

''இதோ பாருங்க, யானாக்கி,'' என்றான் ஓஸிபவ், ''பேராசிரியர் ரெயிஸ் உங்களை விட எவ்வளவோ கெட்டிக்காரர் என்பதும், சட்டத்தை மீறுபவர்கள் குற்றவியல் போன்ற அத்தனை மகத்தான விஞ்ஞானத்தை அவமதிக்கக் கூடாது என்பதும் இப்ப உங்களுக்கு விளங்கியிருக்கும் என்று நம்புறேன்.''

''விளங்குது, புலனாய்வாளரே, ஆனா உரிய சமயத்தில் விளங்காதது என் போதாத காலம்,'' என வருத்தத்துடன் பதிலளித்தான் யானாக்கி. ''என்னோட கடிதம் மிகவும் துடுக்கானது, நான் இப்படி ஒப்புக்கொண்டதை உங்களோட அறிக்கையில் குறிப்பிடும்படி கேட்டுக்கொள்கிறேன். காலஞ்சென்ற என் அப்பா, நான் சிறுவனாக இருந்த போது இப்படிச் சொல்றது வழக்கம்: 'கிறிஸ்தோபர், நீ விஞ்ஞானத்தை மதிக்க மாட்டேன் என்கிறாய். இது நன்மையில் போய் முடியாது'. ஆமாம், புலனாய்வாளரே, தெரியாமல் தான் கேட்கிறேன், அத்தகைய அறிவாளியான தந்தைக்கு இத்தகைய மடையனான மகன் எப்படிப் பிறக்க முடிந்தது? என்னைப் போன்ற அறிவிலிக்கு அத்தகைய தந்தை எப்படி வாய்க்க முடிந்தது? பரம்பரைக் குணம் பற்றிய நியதிகள் எங்கே போச்சு? கொஞ்சம் சொல்லுங்க. குற்ற ஆய்வியலும் இப்ப நான் பெரிசா மதிக்கிற பேராசிரியர் ரெயிசும் இயற்கையின் இந்த விந்தையான நிகழ்ச்சியை விளக்குவது எப்படி?''

''ரொம்ப நியாயமான கேள்விகள், ஆனா நீங்க உங்க குற்றத்திற்கும் வாய்த்துடுக்குக்கும் உரிய தண்டனையை அநுபவிச்சுட்டு வாங்கபிறகு, இவை பற்றி சர்ச்சை செய்ய நான் தயாராயிருக்கேன். இப்ப, உங்க ஏட்டையே திரும்பப் படிக்கிறேன், போய் வாங்க!''

இவ்வாறாக பெர்த்தில்லோன், ரெயிஸ் இவர்களது சொல் ஓவிய முறை மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

1956

திரு. குரோவரின் உண்மைக் காதல்

கலீனின் பிரதேச ஸ்தாரித்ஸ்கி மாவட்டத்தைச் சேர்ந்த குஞுகொவோ கிராமக் கூட்டுப்பண்ணை விவசாயிகளுக்கு நவம்பர் 13, 1938ஆம் ஆண்டு நிகழ்ந்த அதிசயமான சம்பவம் ஒருகால் இன்றும் நினைவிருக்கலாம். அன்று அந்தி சாயும் வேளை. மேகங்களைக் கிழித்துக்கொண்டு பளபளப்பாக வண்ணம் பூசிய வெளிநாட்டு சின்னஞ்சிறு விமானம் ஒன்று கூட்டுப்பண்ணை வயலில் நேராக இறங்கியது. விமானி வெளியே இறங்கினான். இதற்குள் விமானத்தைச் சூழ்ந்துகொண்ட கூட்டுப்பண்ணையாட்களை நோக்கி அவன் ருஷ்ய மொழியில் அழுத்தமான ஒலியழுத்தத்துடன் பேசத் தொடங்கினான்:

''வணக்கம்! நான் ஆங்கிலேயன். லண்டனிலிருந்து பறந்து வந்திருக்கிறேன். நான் திருமணம் செய்துகொள்ள நிச்சயித்திருக்கும் ருஷ்யப் பெண்ணைக் கூட்டிப்போவதற்கு வந்துள்ளேன்.''

''நடக்கிற கதைதான் போ!'' என்று பொறுமையின்றி கூறினாள் பண்ணைக் குழுத் தலைவி அத்தை ஸாஷா. அவளுடைய மகன் விமானப் படைப் பிரிவொன்றின் கமாண்டர். ''கொசு மாதிரி விமானத்திலே ஏறி வந்திருக்கிறே, நேரே லண்டனிலிருந்து! என்ன சாமர்த்தியம்! விமானங்களைப் பத்தி மத்தவுங்களுக்குத் தெரிந்தது எங்களுக்கும் தெரியாம இல்லை... சரி, திருவாளர் மண மகனே! கிராம சோவியத்துக்கு நாம போகலாம். விஷயத்தை அவுங்க கார்த்துக்கிறுவாங்க... சொந்த நாட்டிலே பெண்ணுக்குப் பஞ்சம் இருப்பது போல, நம் பெண்ணைக் கட்டிக்கிற வந்திருக்கிறானாம் விமானத்தில் ஏறி!..'' என்று விளாசினாள்.

கிராம அதிகாரிகளால் அழைக்கப்பட்ட மிலீஷியா அலுவலர்களிடம் அந்த வெளிநாட்டான் அதே கதையைத் திரும்பக் கூறினான்: ஒரு பிரிட்டிஷ் எண்ணெய் நிறுவனத்தில் பணியாற்றும் என்ஜினியர் அவன். பெயர் பிரயன் மான்டேகு குரோவர். முன்னர் க்ரோஸ்னியிலும் மாஸ்கோவிலும் வேலை பார்த்திருக்கிறான். லண்டனிலிருந்து தனது சிறிய விமானத்தில் புறப்பட்டு ஸ்டாக்ஹோம் வழியாக எங்கும் இறங்காமல் குரூகொவோ கிராமத்திற்குப் பறந்து வந்திருக்கிறான். சோவியத் யூனியனுக்குள் நுழைவதற்கான அநுமதிச் சீட்டு அவனிடம் இல்லை. வெகு காலமாகத் தான் காதலிக்கும் பெண்ணைப் பார்ப்பதற்காக வந்ததாகவும், அவளின்றி வாழும் வாழ்க்கை அருத்தமற்றது என்றும் கூறினான்.

மறுநாள் குரோவர் மாஸ்கோவிற்கு அழைத்துச் செல்லப்பட்டான். தான் பயணம் மேற்கொண்டதன் காரணங்களை புலனாய்வு அலுவலகத்தில் விவரமாய் எடுத்துரைத்தான். பொன்நிற முடியும், ஒளிவு மறைவின்றி நேராக நோக்கும் சாம்பல் நிறக் கண்களும் கொண்ட நெட்டை மனிதன் குரோவர்.

தன் பெயர் பிரயன் மான்டேகு குரோவர், வயது முப்பத்தேழு என்று தொடங்கினான். போல்க்ஸ்டன் நகரைச் சேர்ந்த அவன் நுழைவு அநுமதி இன்றி சோவியத் யூனியனுக்குப் புறப்பட்டு வந்துவிட்டதாகத் தெரிவித்தான். இப்படிச் செய்வது சட்டப்படிக் குற்றம் என்பதை அறிந்திருந்தும், துரதிர்ஷ்டமாகத் தனக்கு வேறு வழியில்லாமல் போயிற்று எனக் கூறினான்.

''விதி 59-3 'ஈ' பற்றி எனக்கு எல்லாம் தெரியும். அதை நான் மனப்பாடம் செய்திருக்கிறேன். எந்த தண்டனையையும் ஏற்கத் தயாராக இருக்கிறேன். இவ்விதியின் படி பத்தாண்டு சிறைத் தண்டனை எனக்குக் கிடைக்கலாம் என்பதை அறிவேன். ஆனால் சோவியத் குற்றச் சட்டத் தொகுதியில் 51ஆம் எண்ணிட்ட இன்னொரு விதி இருப்பதாகவும், அது முதற் சட்டத்தின் கடுமையை மட்டுப்படுத்துவதாகவும் பிரிட்டிஷ் வழக்குரைஞர் ஒருவர் என்னிடம் சொன்னார். என் விஷயத்தில் முதலாவதை விட இந்த இரண்டாவது சட்டமே செல்லுபடியாகும் என்று நான் நினைக்கிறேன்.''

வேற்றுமை உருபுகளிலும் வினைத் திரிபுகளிலும் சிற் சில இடங்களில் தடுமாறிய போதிலும் குரோவர் ருஷ்ய னில் தடங்கலின்றி பேசினான். கவர்ச்சிகரமான முகவெட் டும், மனோதிடத்தைக் காட்டும் வாயும், உறுதியான பற் களும் கொண்ட அவன் பதற்றமோ அவசரமோ இன்றி சொன்ன கதையைக் கேட்கக் கேட்க, புலனாய்வு அதிகா ரிக்கு அந்த அந்நியன் மீது மேன்மேலும் நம்பிக்கை வளர்ந் தது. ஆயினும் அவன் சட்ட விரோதமாக நாட்டு எல்லை யைக் கடந்து உள்ளே வந்திருந்தபடியால் வழக்கமான கேள்விகளை அவனிடம் கேட்பது அவரது கடமையாயிருந் தது. தான் கைது செய்யப்பட்டது முற்றிலும் நியாயமே என குரோவர் கருதியதும், தன்னைப் பொருத்தமட்டில் ''51 ஆவது விதி செல்லுபடியாகாவிட்டால்'' நேரக்கூடிய விளைவுகளை ஏற்றுக்கொள்ள அவன் தயாராக இருந்த தும் அவன் மீது சந்தேகங்கொள்ளவே இடமில்லாதபடி செய்துவிட்டன.

தனது காதல் குறித்துக் குரோவர் விவரித்தான்:

முப்பதுகளின் ஆரம்பத்தில் திறமை வாய்ந்த இளம் என்ஜினியராக இருந்த குரோவர், சொந்த நாட்டில் வேலை கிடைக்காததால், சோவியத் யூனியனில் க்ரோஸ்னி என்னும் இடத்தில் வெளிநாட்டு நிபுணனாகப் பணிபுரி கின்ற வாய்ப்பை ஏற்றுக்கொண்டான். நல்ல சம்பளம், மனத்துக்குப் பிடித்த வேலை, இவை அவனை சோவியத் யூனியனுக்குக் கவர்ந்திழுத்தன. தவிர, மர்மம் நிறைந்த, தனக்கு முற்றிலும் தெரியாத எந்த 'சோவியத் ரஷ்யா' வைப் பற்றி ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும், தெளி வில்லாமலும் எத்தனையோ விவரங்களை அவன் கேட் டும் படித்தும் இருக்கிறானோ அந்த நாட்டை நேரில் பார்க்கின்ற வாய்ப்பு அவனை ஆட்கொண்டது.

மாஸ்கோ வந்து சேர்ந்ததும், பிரெஞ்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், அமெரிக்கர்கள், சுவீடன்காரர்கள், பெல்ஜியர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோர் தங்கியிருந்த 'மெத்ரோபோல்' ஓட்டலில் தங்கினான். எத்தனை வித் தியாசமான கூட்டம் அவர்கள்! வணிகர்கள், சுற்றுலாப் பயணிகள், நிபுணர்கள், ராஜதந்திரிகள், சிறப்பு நிருபர் கள், தொழில் முறை உளவாளிகள் என வயதிலும் தொழி லிலும் அரசியல் நோக்கிலும் எத்தனை வகையுண்டோ

அத்தனை வகையினரும் அவர்களிடையே இருந்தனர். சிலர் சோவியத்தின் மீதுள்ள பகைமையை வெளிப்படையாகக் காட்டி, அதனது ஐந்தாண்டுத் திட்டங்களைக் கேலி செய்து பேசினர். மாறாக மற்றவர்கள், எந்தப் பணத்தைக் கொண்டு, எந்த முறைப்படி, எவர்களுடைய உழைப்பால் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பது விளங்காவிட்டாலும், போல்ஷெவிக்குகள் தங்கள் திட்டங்களை நிறைவேற்றி வருவதை ஒப்புக்கொண்டார்கள். மூன்றாவது குழுவினர் எந்திரத் தொழிலில், பரந்த நாட்டின் பிற்போக்கான நிலையை வியக்கத்தகும் குறுகிய காலத்திற்குள் அகற்ற உறுதி பூண்டு பாடுபட்டு வரும் சோவியத் மக்களின் முயற்சிகளைப் பெரிதும் மதித்துப் பாராட்டினார்கள்.

குரோவர் இந்த ஆட்களுக்கு அறிமுகமானான், அவர்களுடைய விவாதங்களைச் செவிமடுத்தான். பின்பு மாஸ்கோ நகர வீதிகளைச் சுற்றிப் பார்த்தான். செயிண்ட் வசீலி மாதாகோயில், செஞ்சதுக்கத்தின் பரந்த வெளி, தொன்மைமிக்க கிரெம்ளினின் கோபுரங்களும் மதில்களும், அர்பாத் வீதியின் அருகே வட்டக்கல் தளவரிசையிடப்பட்ட சந்துகள், நாற்சந்தி ஓரங்களில் நின்ற குதிரை வண்டியோட்டிகள், அந்நாள்களில் சிறப்பாக உடையணியாத போதும், மாஸ்கோ மகளிர்களின் கள்ளங்கபடற்ற, கவர்ச்சிகரமான முகங்களில் காணப்பட்ட, ருஷ்யர்களுக்கே உரிய தனிப்பட்ட வசீகரம் ஆகியன அவனைக் கவர்ந்தன.

காம்ஸமோல் சின்னங்கள் தரித்த இளைஞர்களை, குரோவர் தெருக்களில் சந்தித்தான். அந்த இளைஞர்கள் இன்முகமும் நற்பண்பும் வாய்ந்தவர்கள். அவர்களில் ஒருவரேனும் குரோவரைப் பார்த்து முறைக்கவோ, அவனைக் 'காமின்டர்ன் ஏஜெண்டு' ஆக்கி, ஆங்கில அரசமகுடத்தைக் கவர்ந்து வரும்படியோ, பிரிட்டிஷ் வெஸ்ட் மின்ஸ்டர் அப்பேயை வெடிவைத்துத் தகர்க்கவோ ஏவவில்லை. மாறாக, இன்ன இடத்திற்கு எப்படிப் போவது என இந்த அந்நியன் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் விருப்புடன் பதிலளித்தனர். மேலும், மிகுந்த நேசம் ததும்பும் புன்னகையுடன் அவர்களாகவே அவனை அவன் விரும்பிய இடங்களுக்கு அழைத்துச்சென்றனர்.

இவ்வாறு, இந்நாட்டையும் இந்தப் பண்டைய நகரையும் அதன் மக்களையும் பிரயன் குரோவர் மெல்ல மெல்ல நேசிக்கலானான்.

அவன் க்ரோஸ்னி சென்று வேலை தொடங்கியதும், மக்கள் ஒரே அன்பும் பரிவுமாக அவனை வரவேற்று மகிழவே, ஆண்டுக்கணக்காக அவர்களுடன் வாழ்ந்து வருவது போலச் சில மாதங்களுக்குள்ளேயே அவனுக்குத் தோன்றியது. இத்தனை பேர் அவனது நண்பர்களானதற்கு இதுவே காரணம். க்ரோஸ்னி நகரின் மருந்துக் கடை ஒன்றில் மருந்து தயாரிப்பவளாகப் பணிபுரிந்த யெலேனா கோலியஸ் என்ற பெண்ணின் அறிமுகத்திற்குப் பிறகு இந்த மனப்பதிவு இன்னும் வலுவானது. அவளோ மென்மொழியும், கருவிழிகளும் வாய்ந்த அழகி. அவளுடைய புன்னகையில் குறும்புத்தனம் சற்றே மிளிர்ந்தது. வாழ்க்கையில் மறைப்பதற்கோ வெட்கப்படுவதற்கோ அவளிடம் ஒன்றுமில்லை என்பது அவளது தெளிவான, நேர்கொண்ட பார்வையிலேயே தெரிந்தது. கண்டதுமே அவளிடம் காதல் கொண்டுவிட்டான் குரோவர்.

வார்த்தைகளைத் தவறாக உச்சரித்த போதும், யெலேனா சிறிது ஆங்கிலம் பேசினாள். தனக்கு ருஷ்யன் கற்றுக் கொடுக்க அவள் ஒப்புக்கொண்டால் அவளுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதாக குரோவர் கூறினான். இருவரும் சிறந்த மாணவர்களாயினர்.

ஓராண்டு கழிந்ததும், குரோவர் ஓரளவு ருஷ்யன் பேசினான். அதே வேளை யெலேனாவின் ஆங்கில உச்சரிப்பு குறிப்பிடத்தக்க அளவு திருந்தியது. அத்துடன் அவர்களுடைய உறவு மேலும் வளர்ந்தது. தன் மகளைப் போலவே மருந்து தயாரிப்பவரான யெலேனாவின் தந்தை, தன் மனைவியிடம் கவலையுடன், ''இந்த நெட்டைக்காலன் அநேக மாலை நேரங்களை நம் மகளுடன் செலவு செய்கிறான்,'' என்று முணுமுணுத்தார். யெலேனாவின் தாயோ மகள் பக்கம் சேர்ந்துகொண்டு பிரயன் குரோவர் மிக அருமையான பையன் என்று பயந்து கொண்டே சொன்னாள். இதைக் கேட்டதும் கிழவர் எரிச்சலுடன் இருமியவாறே, ''மணம் புரியத்தக்க பையன்கள் சோவியத் யூனியனில் ஏராளமாக இருக்கிறார்களே,'' என்று தர்க்கப் பொருத்தத்துடன் மறுத்துப் பேசினார்.

மகளைத் தாம் வளர்த்து ஆளாக்கியது லண்டனில் போய்க் காச நோயால் மடிவதற்காக அன்று எனச் சீறினார்.

யெலேனாவுக்குக் காச நோய் வந்து விடும் என்று ஏன் நினைக்கிறார் என்றும், எத்தனையோ லட்சம் பேர் லண்டனில் வாழ்கிறார்கள், அத்தனை பேருமா காச நோயால் வருந்துகிறார்கள் என்றும் அவர் மனைவி கேட்டதற்கு, ''ஆங்கிலேயர்களுக்கு அந்தப் பருவ நிலை பழகிப் போய்விட்டது. ஆனால் ஒரு ருஷ்யனுக்கு அங்கே கால் வைத்ததுமே காச நோய் பற்றிக்கொள்ளும்,'' என்றார்.

''இன்னொன்றையும் நினைவில் வைத்துக்கொள். இளைஞர்கள் காதலிப்பதற்கு ஒரு மொழியே போதுமானது—நாம் வாலிபத்தில் ஒரு மொழியில்தானே பேசிக் கொண்டோம்! இவர்களோ ஏற்கெனவே இரண்டு மொழிகள் பேசுகிறார்கள். இதெல்லாம் நல்லதற்கில்லை, ஆமாம், சொல்லிவிட்டேன்,'' என்று மேலும் கூறினார் அவர்.

க்ரோஸ்னியிலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்களுக்கு அப்பால் மூடுபனி அடர்ந்த லண்டன் நகரத்தில், மற்றொரு தாயின் இதயம் அதே சமயத்தில் கவலையால் சஞ்சலமடைந்து கொண்டிருந்தது என்பதை யெலேனாவின் பெற்றோர் கற்பனை கூடச் செய்திருக்க முடியாது. தன் மகனிடமிருந்து வந்த கடிதங்களைப் படித்த திருமதி குரோவர் அவற்றில் யெலேனா என்ற பெயர் அடிக்கடி வருவதைக் கவனித்துப் பதற்றமடைந்தாள்...

ஒரு முறை மகனது கடிதத்துடன் நிழற்படம் ஒன்றை திருமதி குரோவர் பெற்ற போது, படத்தில் மகனும் அவனது கோட்டைத் தோளில் போட்டவாறு யாரோ இளம் பெண் ஒருத்தியும் அருகருகே நிற்பதை நீண்ட நேரம் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். தன் மகனோடு நின்ற அந்த முகமறியாத பெண் மீது அவளுக்குப் பொறாமை மண்டிக் கொண்டுவந்தது. ருஷ்யனோ, ஆங்கிலேயனோ, நாட்டுப்புறத்தானோ, நகரவாசியோ, எந்த நிறத்தினனோ, பூமியின் எந்தப் பகுதியினனோ, உலகிலுள்ள தாய்மார் அனைவருக்கும் தங்கள் புதல்வர்களின் காதலிகள் மீது இத்தகைய பொறாமை மண்டுவது இயல்புதானே!

விரைவிலேயே ருஷ்ய ஆசிரியர்களால் எழுதப்பட்ட

நூல்களை மட்டுமே திருமதி குரோவர் எடுத்துப் படிக்கத் தொடங்கியது அருகிலிருந்த நூலகருக்கு வியப்பை ஏற் படுத்தியது. அந்தோ, இந்த நூல்கள் அவளது அச்சத் தைத் தணிக்கவில்லை: ஆன்னா கரேனினா, சந்தேக மின்றி நேர்மையாளனாகிய தன் கணவனைப் புறக்கணித் துவிட்டு வேறு எவனுடனோ உறவு வைத்துக்கொண் டாள். அது போதாதென்று, ரயிலுக்கடியில் விழுந்து தற்கொலையும் செய்துகொண்டாள். ஷோலகவினுடைய அக்ஸீனியா கணவனை விட்டுவிட்டு கிரிகோரி என்பவ னுடன் ஓடினாள், ஆனால் இவனுக்கும் எந்த மகிழ்ச்சியை யும் அவள் கொண்டுவரவில்லை. கன்சரோவ் எழுதிய 'மலைச்சரி'வில் வேரா மரியாதைக்குரிய திரு. ராய்ஸ்கி யின் காதலை ஏனோ உதறித் தள்ளிவிட்டு, மிகவும் சந்தேகிக்கத்தக்க புள்ளியான திரு. வோலகவ் என்பவ னுக்குத் தன் உள்ளத்தை அர்ப்பணித்தாள். மேலும், இறுதியாக பூஷ்கினுடைய தத்தியானா கூட, திரு. ஓனே கினுக்கு—அவர் எவ்வகையான காரணமும் அளிக்கா திருந்த போதிலும்—தானாகவே வலியக் காதல் கடிதம் எழுதுகின்ற அளவுக்கு அதிர்ச்சியான காரியத்தைச் செய்து, அந்த அருமையான இளைஞரை இக்கட்டான நிலைமை யில் சிக்க வைத்துவிட்டாள்...

அடேயப்பா, எத்தகைய மர்மம் நிறைந்த நாடு இந்த ருஷ்யா! இந்த ருஷ்யப் பெண்களின் நடவடிக்கைகள் ஒன் றும் பிடிபடவில்லை என்றாலும் அவர்களிடம் ஏதோ தனி வகையான கவர்ச்சியிருப்பதை மறுக்கவே முடியாது!..

''க்ரோஸ்னியில் எனது வேலை முடிந்ததும்,'' என மேலும் தொடர்ந்தான் குரோவர், ''மாஸ்கோ எண் ணெய்க் கல்லூரிக்கு நான் மாற்றப்பட்டேன். யெலேனா வும் மாஸ்கோவிற்கு வந்துவிட்டாள். 1934இல் எனது ஒப்பந்தம் முடிந்து நான் லண்டன் திரும்பினேன். மீண்டும் ருஷ்யா வர முயன்றேன், ஆனால் புதிய ஒப்பந்தங்களும் இல்லை, என்னிடம் நுழைவு அநுமதிச் சீட்டும் இல்லை. மேலும், யெலேனா இல்லாமல் என்னால் வாழ முடியாது என்பது தெளிவாகப் புலப்பட்டது...''

ஆகவே தான் தனது காதலிக்காகப் பறந்து செல்ல அவன் முடிவு செய்தான். லண்டனிலுள்ள விமானப் பயிற்சிக் கழகம் ஒன்றில் சேர்ந்து, சில மாதங்களில் விமானம் ஓட்டுவதற்குக் கற்றுக்கொண்டான். பழைய சிறு விமானம் ஒன்றை வாங்குவதற்குத் தேவையான நூற்று எழுபத்து மூன்று பவுன் சேரும் வரை சேமிக்கத் தொடங்கினான். 1938 நவம்பர் 3ஆம் தேதி பிராக்ஸ்பர்ன் விமானத்தளத்திலிருந்து புறப்பட்டு, ஆம்ஸ்டர்டாம், பிரெமென், ஹேம்பர்க், ஸ்டாக்ஹோம் ஆகிய இடங்களில் இறங்கி சோவியத் யூனியனுக்கு வருவது என்பது அவனது திட்டம். அவ்வாறே புறப்பட்டு வந்து ஸ்டாக்ஹோமிலிருந்து எங்கும் இறங்காமல் குளுகொவோ கிராமத்திற்குப் பறந்து வந்தான்.

இந்த அதிசய நிகழ்ச்சி பற்றிய செய்தி, அநேகமாக உலகப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வெளியாகியது. அன்றையச் செய்தித் தலைப்புகள் என் நினைவில் இருக்கின்றன: '20ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய காதல் கதை', 'காதலின் இறக்கைகளில்', 'ஆங்கிலேயனின் காதல் விளைத்த அற்புதம்', 'தொலை வெளியை வென்றது காதல்' என்பன சில.

கன்ஸெர்வடிவ் கட்சி உறுப்பினரான கெய்ஸெர், இவ் விஷயத்தை மக்கள் சபையில் கொண்டுவரப் போவதாக நவம்பர் 23ஆம் தேதி பிரிட்டிஷ் செய்தித்தாள்கள் அறிவித்தன. இதைப் பற்றி விசாரணை நடந்தது என்றும், சோவியத் அரசுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்துமாறு மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் தூதுவருக்கு அறிவிக்கப் பட்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் ஸர் நெவில் சேம்பர்லேன் தெரிவித்துள்ளார் என்றும் நவம்பர் 28இல் 'ராய்ட்டர்' செய்தி நிறுவனம் உலகிற்கு அறிவித்தது.

ஸ்டாக்ஹோமிலிருந்து மாஸ்கோ வரை அபாயகரமான விமானப் பயணத்தை குரோவர் மிகவும் மோசமான பருவ நிலைமைகளில் மேற்கொண்டதாக லண்டன் பத்திரிகை 'டெய்லி டெலகிராப் அன்ட் மார்னிங் போஸ்ட்' எழுதியது.

பாசிச ஜெர்மனியின் பல பத்திரிகைகள் குரோவருக்கு மரண தண்டனை தான் கிடைக்கும் என்று தொடர்ந்து கட்டுரைகள் எழுதின. ''காதல் என்பதன் பொருளைப்

புரிந்து கொள்ள கம்யூனிஸ்டுகளால் முடியாது. சோவியத் யூனியனில் தொழிற்சங்கக் குழுக்களின் உத்தரவுக்கிணங்கவே மக்கள் காதல் புரிகிறார்கள் என்பது நமக்குத் தெரியாததா? குரோவரையும் ஷேக்ஸ்பியர் வருணித்தவை போன்ற அவனது உண்மையான உணர்ச்சியையும் அவர்கள் எப்படிப் புரிந்துகொள்ளப் போகிறார்கள்? இல்லை, சிவப்பு மாஸ்கோ தற்கால ரோமியோக்களுக்கும் ஜூலியட்டுகளுக்கும் ஏற்ற இடமன்று!''

பிரிட்டிஷ் வழக்குரைஞர் ஒருவர் வேறொரு கருத்தை வெளியிட்டார்:

''ஆம், பிரயன் குரோவரைத் தண்டிப்பதற்கு மாஸ்கோவுக்கு எல்லாவகையிலும் சட்டபூர்வமான உரிமை உண்டு. காதலும் சட்டமும் — எத்தகைய தொன்மை வாய்ந்த, என்றும் தீராத பிரச்சினை! சோவியத் குற்றச் சட்டத்தின் விதி ஒரு புறம், உயிர்த் துடிப்புள்ள, காதல் பொங்கும் இதயம் மறுபுறம்! துன்பகரமான இப்போராட்டத்தைக் கண்டு எவ்வளவு கல்நெஞ்சு படைத்த நீதிபதியின் உள்ளமும் இளகாமல் இருக்க முடியுமா? குரோவரின் விசாரணை துன்பகரமாக முடியும் என நாங்கள் கருதவில்லை. விசாரணைத் தீர்ப்பை நம்பிக்கையுடன் எதிர் நோக்குகிறோம்...''

இதற்கிடையே, குரோவரின் வாக்குமூலத்தில் கூறப்பட்ட விஷயங்கள் உண்மைதானா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளும் பொருட்டு யெலேனா கோலியஸ் விசாரிக்கப்பட்டாள். இருவர் கூறியதும் முழுக்க ஒத்திருந்தன. அவன் சோவியத் யூனியனுக்குப் பறந்து வந்துள்ளான் என்றும் அவள் உடனே அவனைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவாள் என்றும் அப்போது அவளுக்கு அறிவிக்கப்பட்டது. இன்னும் சில நிமிடங்களில் யெலேனாவை அவன் பார்க்கலாம் என குரோவருக்குத் தெரிவிக்கப்பட்டதும் வழக்கமாய் அமைதியுடன் துலங்கும் அவன் முகம் வெளிறிப் போயிற்று. கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு, திடீரென ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். உதவியாளர் ஒருவருடன் அவனை அறை ஒன்றில் விட்டுவிட்டு, பக்கத்து அறைக்குச் சென்று அங்கே காத்திருந்த யெலேனாவை அழைத்து வர புலனாய்வு அதிகாரி சென்றார்.

அவள் அறைக்குள் வந்ததுமே குரோவர் பாய்ந்து சென்று அவளை ஆரத் தழுவிக்கொள்ள, இருவரும் புன்னகை பூத்தனர், ஏதோ இரகசியம் பேசினர், பின்னும் கண்ணீர் மல்க முறுவலித்தனர், மறுபடியும் ஏதோ குசுகுசுத்தனர்.

இந்த விவகாரத்தில் கடைசி வரை அந்த அதிகாரிக்குத் தெளிவாகாதது, யெலேனாவின் காதில் குரோவர் இரகசியமாய் என்ன சொன்னான் என்பது மட்டுமே.

ஒருகால், கருமேகம் சூழ்ந்திருந்த நவம்பர் மாதக் காலையில், பிராக்ஸ்பர்ன் விமானத் தளத்திலிருந்து புறப்பட்டதையும், ஸ்டாக்ஹோம் சேர்ந்து பின்பு அங்கிருந்து கிளம்பி, கொந்தளித்துக் கொண்டிருந்த பால்டிக் கடலுக்கு மேலே, மாஸ்கோ செல்லும் வான வழியில் பறந்ததையும் பற்றிச் சொல்லியிருக்கலாம்? தனது சின்னஞ்சிறு விமானம் நெடுந்தொலைவைக் கடந்தவாறு பறந்து செல்கையில் நவம்பர் மாதக் கடுங்குளிர் காற்று வேகமாக வீசி, அதை உலுக்கினாலும், சுக்கான் சக்கரத்தை இறுகப் பிடித்தவாறு, வழிகாட்டும் மலை விளக்கை நோக்கி வருவது போல அவளது பழுப்புநிற விழிகளை நோக்கி மேலே மேலே பறந்து வந்ததாகவும், உலகில் இந்த விழிகளே தனக்கு எல்லாம் எனவும், வாழ்க்கை, சுகம், காதல் ஆகிய எல்லாம் எனவும் கூறியிருக்கலாம்? அல்லது மீண்டும் அவளைக் காண முடியுமோ எனத் துடித்ததையும், எதுவரினும் வரட்டும் பரவாயில்லை, இப்போது அவளருகே அமர்ந்து, அவளது பிஞ்சுக் கையைப் பற்றி இருக்கையில் காணும் பேரின்பம் பற்றியும் சொல்லியிருக்கலாம்? யெலேனாவை முத்தமிட்டு, தன் மகனுக்கு இத்தகைய காதலைப் பரிசளித்த ருஷ்யப் பெண்ணுக்கு ஆங்கிலேய முதுமகளான தான் நன்றி செலுத்துவதாகவும், இந்தக் காதலின் பொருட்டு அவளுக்கு வாழ்த்துக் கூறுவதாகவும், அதே வேளை பெண்களின் இயல்புக்கேற்பச் சற்றே பொறாமைப் படுவதாகவும் அவனது தாயார் சொல்லச் சொன்னாள் என்பதை நவின்றிருக்கலாம்? அல்லது அவர்கள் உலகின் வெவ்வேறு பகுதிகளில் பிறந்து, வெவ்வேறு தாய்மொழிகளைப் பேசினாலும், காதல் என்னும் பொது மொழியைக் கண்டுகொண்டதாக உரைத்

திருக்கலாம்? என்ன மொழிந்தானோ? அவர்கள் இரு வருமே அறிவார்கள்.

இந்த வழக்கு டிசம்பர் 31, 1938இல் மாஸ்கோ நகர நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. 'போல்க்ஸ்டன் நகரில் 1901ஆம் ஆண்டு பிறந்தவனும், ரூஷ்ய சோவியத் குடியரசின் குற்றச் சட்டத்தொகுப்பின் விதி 59-3 'ஈ'யின் கீழ்க் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவனுமான பிரயன் மான் டேகு குரோவர் என்ற பிரிட்டிஷ் குடிமகனின் வழக்கு' விசாரணையைக் கவனிக்கும் பொருட்டு பிரிட்டிஷ் தூதராலய அலுவலர்கள் எல்லாரும் வந்திருந்தனர். ஒற்றைக் கண்ணாடியணிந்த ராஜதந்திரிகள், தங்கப்பிடி போட்ட கண்ணாடிகளுடன் விளங்கிய அவர்களின் மனைவிமார்கள், பிரிட்டிஷ், அமெரிக்கச் செய்தி நிருபர்கள், பற்பல தூதராலய ஆலோசனையாளர்கள் ஆகிய பலரும் நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர்.

அச்சிறிய, ஆடம்பரமற்ற நீதிமன்றக்கூடம் இதற்கு முன்பு ஒருபொழுதும் இத்தகைய கூட்டத்தைக் கண்டதேயில்லை. கட்டட வாயிலில் ராஜதந்திரிகளின் 'ரோல்ஸ் ராய்ஸ்', 'புயூக்' கார்கள் மினுமினுத்துக் கொண்டு நின்றன.

சுருண்ட பொன்நிற முடியும், இள நீலக் கண்களும், பெருந்தன்மை வாய்ந்த முகங்கொண்ட தலைமை நீதிபதியும், மக்கள் ஜூரர்களான இரு பெண்களும்—அவர்களில் மூத்தவள் நெசவுத் தொழிலாளி, இளையவள் மின் எந்திர நிலையத் தொழிலாளி—தலையில் சிவப்புக் குட்டையணிந்தவாறு, நீதிபதியின் அறையிலிருந்து வெளியே வந்து சிவப்புத் துணி விரித்த மேசையின் முன்பு அமர்ந்தார்கள். உடனே அமைதி குடி கொண்டது. அங்கிருந்த எல்லாரும் நீதிபதியையும், அந்தச் சிறு அறையையும், நீதிபதியின் மேசைக்கு உயரே இருந்த லெனின் படத்தையும், நீதிமன்றத்தின் எளிமையான, ஆடம்பரமற்ற சாதனங்களையும் மாறிமாறிப் பார்த்த வண்ணமிருந்தனர்.

தராசைக் கையிலேந்திய நீதித் தேவியான தெமீஸின்

சிலையோ, சிலுவையில் அறையப் பெற்ற ஏசுவின் உருவமோ, சலவைக்கல் தூண்களோ, காவலர்களின் அலுவல் உடுப்புகளோ, நீதியின் கம்பீரச் சின்னங்களோ இந்தக் கூடத்தில் எவையுமில்லை. கரும்பட்டு அங்கிகளும், கஞ்சி போட்ட வெண் கழுத்துப் பட்டைகளும், தங்கச் சங்கிலிகளும், மாவு தூவிய பொய் முடிகளுமாக நீதிபதிகள் காணப்படவில்லை. கரிய அங்கிகளும், கஞ்சி போன்று படபடப்பாக இருக்கும் சட்டை முகப்புகளும், மழமழப்பான முகங்களுமான பளபளக்கும் புகழ்பெற்ற ஜூரர்களோ, கேள்விகளில் கிண்டலும், தோற்றத்தில் கடுமையும், நாவில் நஞ்சுமான அரசு வழக்குரைஞரோ, கண் டிப்பு மிக்க அமீனாக்களோ, கூந்தலைச் சிங்காரித்துக் கொண்டு மினுக்கும் சுருக்கெழுத்துக்கார ஒய்யாரிகளோ, அங்கே இல்லவே இல்லை!

ஆனால் அந்த எளிமையான நீதிக் கூடத்தில், நீதிபதிகளின் உள்ளார்ந்த சிந்தனையைக் காட்டும் கண்களில், ஒளிவுமறைவற்ற, பரிவு திகழும் அவர்களது முகங்களில், ஆடம்பரமற்ற, சாதாரணமான நீதிமன்ற நடைமுறையில் ஓர் அதிசயமான, பொதுமக்கள் சம்பந்தப்பட்டவரை இதுவரை கண்டறியாத விசேஷத் தன்மை பொலிந்தது. இந்தத் தன்மையின் மீது மரியாதையும் நம்பிக்கையும் எல்லாருக்கும் இயல்பாகவே ஏற்பட்டன. மனித சமூக வரலாற்றில் முதன் முறையாக 'மக்கள் நீதிமன்றம்' என அழைக்கப்படும் தகுதியை இம்மன்றம் எவ்வாறு பெற்றது எனும் வினாவுக்கு விளக்கமான விடையையும் இத்தன்மை அளித்தது...

''நீதிமன்ற நிகழ்முறை தொடங்குகிறது,'' என்று அடக்கமான குரலில் தலைமை நீதிபதி அறிவித்தார். ''பிரதிவாதியின் வேண்டுகோளின் பேரில், மாஸ்கோ வழக்குரைஞர் சங்கத்தின் உறுப்பினரான பாரிஸ்டர் கம்மோதவ் அவர் தரப்பில் வாதிடுகிறார்...''

விசாரணை மூன்று மணி நேரம் நடந்தது. பிரதிவாதியின் வாக்குமூலத்தையும், அவனது தரப்பு வழக்குரைஞரின் வாதங்களையும் கவனமாகக் கேட்ட பின்னர் நீதிபதிகள் கலந்தாலோசிக்கச் சென்றனர். கூடத்தில் ஒரே அடங்கிய இரைச்சல். ருஷ்யப் பெண் ஒருத்தி மீது தான் கொண்ட காதல், அவள் தன்மீது கொண்ட காதல், இந்தக்

காதல் கரணியமாகத் தான் சட்டவிரோதமாய் சோவியத் யூனியனின் எல்லையைக் கடந்து, நாட்டிற்குள் நுழைய நேர்ந்தது ஆகியவற்றை சோவியத் நீதிபதிகளிடம் விவரித்த பிரயன் குரோவர், கடைசியில் கீழ்வருமாறு சொல்லி முடித்தான்:

''மேன்மைதங்கிய நீதிபதிகளே, உண்மையனைத்தையும் உங்களுக்குச் சொல்லிவிட்டேன். இனிச் சொல்லப் போவதை, மொழிபெயர்ப்பாளர் இருந்த போதிலும், நானே ருஷ்யனில் கூற விரும்புகிறேன். எனது அருமை யெலேனாவை நேசிப்பது போலவே, உங்கள் நாட்டையும் உங்கள் நாட்டு மக்களையும் நேசிக்கிறேன். நான் ருஷ்யாவில் சில ஆண்டுகள் வசித்தேன், ருஷ்யர்களுடன் பணியாற்றினேன், அவர்களுடனே ஓய்வு நேரத்தைச் செலவிட்டேன். உங்களுடைய பெருந்தொழில் முயற்சியாகிய மாகடலில் எனது உழைப்பு என்னும் சிறு துளியும் சேர்ந்திருக்கிறது. இதற்காக நான் பெருமைப் படுகிறேன்... ஆம், நான் ருஷ்யர்களுடன் வாழ்ந்தேன், உழைத்தேன், அவர்களுடன் பாடிக் களித்தேன். ஆகவே இம்மக்களுடன் உறவு கொள்வதை ஒரு கௌரவமாகவே கருதுகிறேன். நான் சொல்ல விரும்புவதெல்லாம் இவ்வளவுதான்.''

இதன் பிறகு நீதிபதிகள் தங்களுக்குள் கலந்தாலோசிக்கச் சென்றார்கள். நீதிமன்றக் கூடத்தில் அடங்கிய இரைச்சல் எழுந்தது. தீர்ப்பை எதிர்நோக்கி குரோவர் அமைதியுடன் இருந்தான். தன் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் இந்தச் சாதாரண ருஷ்ய மக்கள், தான் சொல்லியதைப் புரிந்துகொண்டார்களோ என்ற பயம் அவனுக்கு ஏற்படவில்லை. உலகிலுள்ள எல்லாவிதப் பிரச்சினைகளுக்கும் இது போன்ற எளிமையான ஆங்கில, ருஷ்ய, அமெரிக்க, ஜெர்மானிய மக்களே தீர்வு காண்பது என்று ஏற்படுமாகில், அச்சம் என்பதை எவரும் ஒரு போதும் அறியார் என எண்ணினான்...

மணி அடித்தது. நீதிபதிகள் திரும்பிவந்தனர். தலைமை நீதிபதி தீர்ப்பைப் படித்தார். ''சோவியத் யூனியனுக்குள் சட்டவிரோதமாகப் பறந்து வந்த பிரயன் குரோவர் சோவியத் எல்லையை மீறியிருக்கிறார். குடியரசின்

குற்றச் சட்டத் தொகுதியின் விதி 59-3 'ஈ' படி அவர் தண்டனைக்குரியவர் என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

''எனினும், குற்றத்திற்கான காரணங்களை நீதிமன்றம் கவனிக்காமல் இருக்க முடியாது. ஒரு சோவியத் பெண் மீது பிரதிவாதி உண்மையாகவே காதல் கொண்டிருக்கிறார் என்பதும், அப்பெண்ணும் அவரை அவ்வாறே விரும்புகிறாள் என்பதும் நன்கு மெய்ப்பிக்கப்பட்டு விட்டது என்று இம்மன்றம் கருதுகிறது. அவர்களுடைய காதல் காலம், பிரிவு ஆகிய சோதனைகளை வென்றுவிட்டது; அது போற்றுதற்குரியதே ஆகும். அதுதான் சோவியத் யூனியனுக்குப் பறந்து வரும்படி பிரதிவாதியைத் தூண்டியது. குற்றச் சட்டத் தொகுதி 51ஆவது விதியின்படி பிரயன் குரோவர் ஒரு மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும், இல்லாவிடில் 1,500 ரூபிள் அபராதம் செலுத்த வேண்டும் என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.''

இடிமுழக்கம் போன்ற கைதட்டும் ஒலியுடன் நீதிபதியின் தீர்ப்பைக் கூடியிருந்தவர்கள் வரவேற்றனர். மாஸ்கோ நீதிமன்றத் தீர்ப்பு பற்றி அன்று மாலை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட போது ஆங்கில மக்கள் அனைவரும் பலத்த கர ஒலியுடன் அதனை வரவேற்று மகிழ்ந்தனர்.

மூன்று நாள்களுக்குப் பிறகு குரோவரும் அவன் மனைவியெலேனாவும் தேவையான அனுமதிப் பத்திரங்களுடன் லண்டனுக்குப் புறப்பட்டார்கள்.

இச்செய்தி திரும்பவும் எல்லாப் பத்திரிகைகளிலும் இடம்பெற்றது. 'டெய்லி டெலகிராப் அன்ட் மார்னிங் போஸ்ட்' பத்திரிகை 1939 ஜனவரி 6ஆம் தேதிய இதழில் இந்தக் கதையின் நீதி சோவியத் அரசு மிகுந்த மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டிருக்க முடியும் என எழுதியது. லண்டன் போய்ச் சேர்ந்த குரோவருடைய அறிக்கையையும் இதே பத்திரிகை வெளியிட்டிருந்தது: ''சட்டவிரோதமாக நான் சோவியத் யூனியனுக்குள் நுழைந்தது பற்றிய விசாரணை முழு நேர்மையுடனும் நீதியுடனும் நடந்தது''.

இந்த வழக்கு இவ்வாறு முடிந்தது. இது நடந்து பதினேழு ஆண்டுகளாகி விட்டன. திரு. குரோவர், அவருடைய மனைவி, குழந்தைகள் இருப்பின் அவர்கள் ஆகிய

அனைவரின் நிலைமை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் அவர்களது முகங்கள், சந்திப்பு, உள்ளக்கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் பொங்க அவர்கள் தணிந்த குரலில் உரையாடியது, அவர்களது காதல் கதை ஆகிய அனைத்துமே என் நெஞ்சில் பசுமையாக நிற்கின்றன.

குற்ற இயல் நிபுணர் என்ற முறையில் நான் மற்றொன்றையும் சொல்லிவிட விரும்புகிறேன். அந்த இருவரது காதல், நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் சட்டபூர்வமாக உண்மையென நிலைநாட்டப்பட்டு விட்டதாலும், இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யாததாலும், அது சந்தேகத்திற்கிடமின்றி, மாற்ற முடியாதவாறு, என்றென்றைக்கும் நிரூபிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்பட வேண்டும் என்பதாகும்.

பிரயன் மான்டேகு குரோவருக்கும், அவரது மனைவிக்கும், அவர்களது குழந்தைகளுக்கும்—உறுதியான இயல்பும், ஒருவருக்கொருவர் நல்லெண்ணமும் வாய்ந்த அவர்களுக்குக் குழந்தைகள் இருக்கத்தான் வேண்டும்—நிறைய இன்பம் உண்டாக வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இறுதியாக, குற்ற இயல் நிபுணருக்கு வாழ்க்கையின் தீய அமிசங்கள் மட்டிலுமே எதிர்ப்படுகின்றன என வெகுவாகப் பரவியுள்ள கருத்து முற்றிலும் தவறானது என்பதையும் சொல்லிவிடுகிறேன்.

1956

குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்*

தாங்களாகவே மிலீஷியா நிலையங்களுக்கு வந்து தங்களது பல்வேறு குற்றங்களை ஒப்புக்கொள்வோர் பற்றிய செய்திகள் மேன்மேலும் கிடைக்கவே செய்கின்றன.

வேறுபட்ட வயதுகளும் தொழில்களும் பின்னணிகளும் கொண்ட மக்கள்—அநுபவம் வாய்ந்த கொள்ளைக்காரர்கள், இலாவகமான ஜேப்படித் திருடர்கள், பணத்தை மோசடி செய்பவர்கள், கொலைகாரர்கள்—கண்டுபிடிக்கப்படாத குற்றங்களைப் பற்றி அவர்களாகவே சொல்லி விடுகிறார்கள்.

உண்மையில், குற்றங்களை ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற முடிவிற்கு அவர்கள் எல்லாரும் எளிதிலும் விரைவிலும் வந்துவிடுவதில்லை. ஆனாலும் அவர்கள் அந்தவித முடிவிற்கு வந்து விடுகிறார்கள்.

மரக்கட்டைக் காலுடன் நகை வணிகன் ஒருவன் மிலீஷியா நிலையத்திற்கு வந்து, ஒரு பெரிய கடையின் தங்கம் மற்றும் மணிக்கற்கள் பிரிவில் வேலை செய்த தான், பொய்க் கணக்கு எழுதுவதும் திருடுவதுமாகப் பல ஆண்டுகள் வெகு சாமர்த்தியமாகப் பித்தலாட்டம் செய்து வந்ததாகக் கூறினான். எவ்வளவோ காலம் கடந்து விட்டது. அந்தக் கடையும் எப்போதோ மூடப்பட்டுவிட்டது. அவனோ கைது செய்யப்படவோ, சந்தேகிக்கப்படவோ இல்லை.

எனினும், ஒருநாள் மாலை அவன் மிலீஷியா நிலையத்திற்கு வந்து சேர்ந்தான். தயக்கத்துடனும் பெருங் குழப்பத்துடனும் அவன் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்

* இந்தக் கதை மார்ச் 16, 1937ஆம் நாளைய இஸ்வேஸ்தியா பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

டான். உட்புழை கொண்ட தனது மரக்காலைத் திருகிக் கழற்றி அதற்குள்ளிருந்து திருடப்பட்ட வைரங்களையும் தங்கத்தையும் அதிகாரியினுடைய மேசை மீது குவித்தான்.

எது அவனைத் திடீரென்று குற்றத்தை ஒப்புக்கொள்ள வைத்தது?

''உங்களுக்குப் புரியலையா? சோவியத் குடியரசுக்காகச் சண்டையிடுகையில் நான் இந்த மரக்காலைப் பெற்றேன், அதே சோவியத் குடியரசிலிருந்து நான் திருடிய நகைகளை ஒளித்து வைக்கிறதுக்காக இதைப் பயன்படுத்துவதில் நான் வெட்கப்படுறேன். மேலும், இவற்றை விற்பதும் அவ்வளவு சுலபமானதில்லை.''

இது வேறொரு நாட்டில் நடந்திருக்குமேயானால், நிருபர்கள் நிச்சயமாக இந்த மனிதனைப் பின்தொடர்ந்து சென்றிருப்பார்கள்; அவனுடைய எல்லா உறவினர்களுடனும் நண்பர்களுடனும் நிச்சயமாகப் பேட்டிகள் நடந்திருக்கும், அவனும் பெரிய கதாநாயகனாகி இருப்பான் எனினும், எங்கள் நாட்டில், இந்நிகழ்ச்சி குறித்து சிறப்பாக எவரும் வியப்படையவில்லை.

1937இல் சோவியத் யூனியனின் அரசு வழக்குரைஞர் பைலோருஷ்யாவிலிருந்து கீழ்வரும் கடிதத்தைப் பெற்றார். கிராமப்பள்ளி ஆசிரியன் யாசெங்கோ எழுதியிருந்தான்:

> ''...நான் இங்கு மிக வசதியாக வாழ்ந்து வருகிறேன், எதற்கும் என்னைச் சந்தேகிப்பது பற்றி எவரும் கனவுகூடக் காண முடியாது. இதற்கு மாறாக, நான் மனப்பூர்வமாக விரும்பப்பட்டேன், மரியாதை செய்யப்பட்டேன். ஆனால் என்னை நம்புங்கள், அது மட்டுமே விஷயங்களை மோசமாக்குகிறது. கடந்த ஆண்டில் நான் நேர்மையாக, கடினமாக உழைத்து ஒழுங்காக வாழ்ந்து வந்தேன். ஓராண்டாக நான் இங்கே இருந்து வருகிறேன், எத்தனையோ காலத்திற்கு என்னால் இருந்து வரவும்

முடியும். இப்போது இருப்பதை விட நான் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருந்ததில்லை. ஆகவேதான், தோழர் வழக்குரைஞர் அவர்களே, இதை நான் உங்களுக்கு எழுதுகிறேன். என்னுடைய பெயர் யாசெங்கோ அன்று, சிறையிலிருந்து தப்பிய பிறகு நான் இங்கே தங்கிவிட்டேன். வெகு காலத்திற்கு முன்னரே ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் பட்டம் பெற்றேன். இதுதான் நான் அநேகமாக மறந்து விட்ட தொழிலை மேற்கொள்ள உதவி செய்தது. உண்மையில், பொய் ஆவணங்களை நான் பயன்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் எனது பணியை நான் விரும்பத் தொடங்கிவிட்டேன், எஞ்சியுள்ள தண்டனைக் காலம் முடிந்ததும் எனது வாழ்க்கையை ஆசிரியப் பணிக்காக அர்ப்பணிக்க விரும்புகிறேன். தயவுசெய்து எங்கே எப்படி வருவதென்று எனக்குத் தெரிவியுங்கள்...''

சில நாள்களுக்குப் பிறகு சோவியத் யூனியனின் அரசு வழக்குரைஞருடைய அலுவலகத்திற்கு இந்தக் கடிதத்தை எழுதியவன் வந்தான். தன்னைப் பற்றி வெட்கத்தோடும், எளிமையோடும் பேசினான். அவனது கவர்ச்சிகரமான இளம் முகத்தில், துயரமான முறுவலிப்புக் காணப்பட்டது.

''என்னோட உணர்வுகளைப் பகுத்துப் பார்ப்பது மிகவும் சிரமமானதா இருக்கு,'' என்றான். ''ஆனாலும், ஒரு விஷயம் மட்டும் ரொம்பத் தெளிவா இருக்கு: கடந்த காலத்துக்குத் திரும்பிப் போறது முடியாது. நான் கொள்ளைக்காரனா, திருடனா, குற்றவாளியா இருந்தேன். ஆனா ஓராண்டா நேர்மையாக வாழ்றதுக்கு முயற்சி செய்தேன். இப்ப என்னாலே வேறுவிதமாக வாழ முடியாது என்பதைப் பார்க்கிறேன். ஆனா நான் முறையா வாழ்ந்தாகணும். நான் கொடுக்க வேண்டிய கடன் கொஞ்சம் இருக்கு... கொள்ளைக் குற்றத்திற்காக ஐந்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டேன். சில மாதங்களுக்குப் பிறகு தப்பிச்சுட்டேன். என்னோட கடனை முதல்லே

தீர்க்க முடிவு செய்தேன். சுத்தமான கைகளோட என் னோட புதிய வாழ்க்கைக்குப் போகத் தீர்மானித்துவிட் டேன்.''

பிறகு தான் பங்கு கொண்ட கொள்ளைகள், திருட்டு கள் பற்றிய முழு விவரத்தையும், எந்த ஆண்டு, எந்த மாதம், எந்த நகரில், எந்தத் தெருவில் இவை ஒவ்வொன் றும் நிகழ்ந்தன என்று தெரிவித்தான்.

ஒரே நகரத்தில் அதிக நாள்கள் தங்க அவன் விரும்ப வில்லை, ஆகவே சில ஆண்டுகளுக்குள் விரிவான பிரதே சத்தைச் சுற்றிவிட்டான்.

''நான் பைலோருஷ்யாவிற்கு வந்து ஆசிரியர் பணி யில் அமர்ந்த போது, அது மிகவும் சலிப்பூட்டுறதா இருக் கும்னு நெனச்சேன். ஏன்னா புதிய புதிய நகரங்கள், புதிய புதிய தட்பவெப்ப நிலைகள், புதிய புதிய முகங்கள் என்று ஓயாமல் மாறிய வண்ணம் இருந்து பழகிட்டேன். நான் எழுச்சியை விரும்பினேன், ஆனா இப்ப எனக்கோ பள்ளி, குழந்தைகள், பனி மூடிய வயல்கள், எங்கும் பேரமைதி, சிறு எண்ணிச்கையிலான மக்கள் ஆகியன உண்டு. பாருங்க, நான் எதிர்பார்த்திருந்ததற்கும் முற்றிலும் மாறா அது இருந்தது. முன்னர் நான் இவ்வளவு நிறைவுடன் இருந்த தில்லை என்பது உங்களுக்கு விந்தையாகப் படலாம், ஆனா அது உண்மை. புவியியல் சொல்லிக் கொடுப்பது தான் சங்கடமாக இருந்தது,'' என்று சொல்லி யாசெங் கோ புன்னகை செய்தான். ''கருங்கடலின் கரைப் பகுதி யைப் பற்றிப் பேசத் தொடங்கவுமே அங்கு நான் செய்த களவுகள் நினைவுக்கு வந்துவிடும். சைபீரியாவைப் பற்றிக் குழந்தைகளுக்குச் சொல்லும் போது ஓம்ஸ்கில் அடித்த கொள்ளையை நினைப்பேன்...''

தண்டனைக் காலத்தை முடிக்கும் பொருட்டு அவன் உழைப்பு முகாம் ஒன்றுக்கு அனுப்பப்பட்டான். இப்போது அவன், தனது புதியதும் கடைசியானதுமான ஆசிரியத் தொழிலை அங்கே செய்து வருகிறான்.

இவான் புரலோவ் தனது தன்வரலாற்றை, பீடிகை யோ விமரிசனமோ எதுவுமின்றி, காரியார்த்தமான முறை யில் சுருக்கமாக எழுதி அனுப்பியிருந்தான்:

''சோவியத் யூனியனின் அரசு வழக்குரை ஞருக்கு, நெடுநாள் குற்றவாளி இவான் புரலோவ் எழுதுவது

தன் வரலாறு

''1911இல் சராதவ் நகரில் பிறந்த இவான் புரலோவ் ஆகிய நான், சோவியத் யூனியனின் அரசு வழக்குரைஞர் ஆகிய உங்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், தற்போது என்னிடம் அடையாளச் சீட்டுகள் எவையும் இல்லை. இதன் காரணமாகச் சிறையில் தள்ளப்படுவோமோ என்று அஞ்சி, சோவியத் யூனியனின் அரசு வழக்குரைஞர் என்னும் மிக உயர்ந்த அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளத் தீர்மானித்தேன். நெடுநாள் குற்றம் புரிந்து வந்த திருடன் ஆன ஒருவனிடமிருந்து வரும் இந்த வாக்குமூலத்தைப் பற்றிக் கேள்விப்பட்டாலோ, நீங்கள் படித்தாலோ அதில் தனிப்பட்ட கவனம் செலுத்துவீர்கள் என்று நம்புகிறேன். உதவ வேண்டிய அவசியமான நடவடிக்கைகளை நீங்கள் எடுப்பீர்கள் என நம்புகிறேன்—எனக்கு என்று நான் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை, ஆனால் புதிய அரசியல் சட்டத்தைக் கண்டும், மாநாட்டில் தாங்கள் நிகழ்த்திய உரையைப் படித்தும் 'கயவர்களுக்குச் சீட்டுக் கிழிந்து விட்டது' என்ற சுருக்கமான முடிவிற்கு வந்துள்ள ஒரு திருடனுக்கு நீங்கள் உதவி செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

''எனது வாழ்க்கைச் சுருக்கமும், தவறுதலான வழியில் நான் சென்றதற்கான காரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன. எதன் மூலம் எனக்கு நல்லறிவும் நேர்மையாக உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற விருப்பமும் உண்டாயின என்பதை இந்த வரிகளைப் படித்து முடித்ததும் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

''முன்பே கூறியுள்ளபடி நான் சராதவ் நகரத்தில் பிறந்தவன். மாற்றாந்தாயால் வளர்க்கப்பட்டேன். என் அப்பாவும் நானும்

மாற்றாந்தாய் வீட்டில் வசித்தோம். அவள் வீட்டு வேலை செய்தாள். தந்தை வோல்கா படகுத்துறை வேலையாளாக இருந்து, 1921 இல் பட்டினி கிடந்து இறந்தார்...''

புரலோவின் நிர்க்கதியான பிள்ளைப்பருவம், அவன் திருடக் கற்றுக்கொண்டது, 'அந்தத் தொழிலில் மிகுந்த தேர்ச்சி' பெற்றது ஆகியன அக்கடிதத்தில் விவரிக்கப்பட்டிருந்தது.

''...வாழ்க்கையின் கோணல் பாதையில் சென்றேன். தெருவில் வசித்தேன், திருடர்களுடன் சகவாசம், அவர்களோடு சேர்ந்து குடிக்கும் பழக்கம்— இதுவே எனது வாழ்க்கையாகி விட்டது. சுகரேவ்ஸ்கி சந்தை, ஆடம்பரமான ரெஸ்டாரெண்டுகள், காஃபிக் கடைகள், திரைப்படம் என்று ஏராளமாகப் பணம் புரளும் இடங்களுக்கு அடிக்கடி சென்றேன். இவ்வாறே மாஸ்கோவில் ஒன்றரை ஆண்டு கழித்தேன். அங்கு மூர் ஆட்களால் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டேன். இப்போது நேராக உங்களுக்கே எழுதிக் கேட்பது என்று நிச்சயித்துவிட்டேன். அந்நியர்களிடையே எப்படியோ தண்டத்துக்குத் தின்று வாழ்ந்து வருகிறேன். பயனுற வாழ்வதற்கு வாய்ப்பு அளித்து எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று தலைமை அரசு வழக்குரைஞர் ஆகிய உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

''உழைத்து நேர்மையான வாழ்வு நடத்தும்படி, பயனுள்ள சோவியத் குடிமகனாக இருக்கும்படி, ஏதாவது ஒரு நகரத்திற்கோ, கிராமத்திற்கோ என்னை அனுப்புங்கள். நான் நடத்தி வந்துள்ள வாழ்க்கையைவெறுக்கிறேன். நேர்மையுடன் உழைத்து, சமூகத்திற்கு உபயோகமாக இருந்துகொண்டு, ஒருவன் சுகமே வாழ முடியும் என்பதை நான் உணர்ந்துகொண்டேன்.

''இதற்குக் கையொப்பமிட்டு, மனப்பூர்வமான உண்மையை உறுதிப்படுத்துகிறேன்,

இவான் புரலோவ்.''

தந்திரம் அல்லது கூச்சம் காரணமாகக் கடிதத்தின் முடிவில் தனது முகவரியைக் கொடுக்காமல், கீழேயுள்ளபடி எழுதியிருந்தான் புரலோவ்:

''இக்கடிதத்திற்குரிய பதிலை நீங்கள் இஸ்வேஸ்தியாவில் வெளியிட்டு, என் போன்றவர்கள் விஷயத்தில் உங்களது அபிப்பிராயம் என்ன, நீங்கள் வழக்கமாகச் செய்வது என்ன என்பதை விவரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். முக்கிய விஷயம்: சிறை செல்வது அவசியமா, அல்லது அது இல்லாமலேயே காரியம் நடக்குமா?''

இவான் புரலோவ், சோவியத் யூனியனின் அரசு வழக்குரைஞர் உங்களது கடிதத்திற்குப் பதிலளிக்க எனக்கு அதிகாரம் தந்திருக்கிறார்.

அரசு வழக்குரைஞரின் அலுவலகத்திற்கு எந்த நாள் வேண்டுமாயினும் நீங்கள் வரலாம். அதிகாரிகள் உங்களது விஷயத்தை விரிவாக விளக்கி உதவி செய்வார்கள்.

இவான் புரலோவ் உறுதியாக அலுவலகத்திற்கு வருவான் என்று நான் எண்ணுகிறேன். அவனைச் சுற்றிலும் நமது புதிய வாழ்வு மலர்ந்து கொண்டிருக்கிறது. மனிதர்களிடையே ஒரு புதிய உறவு முறை உருவாகி வருகிறது. தண்டனை கிடைக்குமோ என்ற பயத்தை விட, பழைய பழக்கங்களையும் விட, உலகில் மற்றெல்லாவற்றையும் விட இதுவே அதிக வன்மையுடையது. ஆகவே அவன் கட்டாயம் வருவான்.

1937

வேட்டைக் கத்தி

உயிரியல் பேராசிரியர் பூரவும், அவரது உதவியாளர் வோரனவும் ஓராண்டு காலத்திற்கு அறிவியல் ஆராய்ச்சி நடத்தும் பொருட்டு பாரெண்ட்ஸ் கடலிலுள்ள கல்கூயெவ் தீவிற்குச் செல்வதற்கான உத்தரவு இறுதியாகக் கையெழுத்திடப் பெற்று அறிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் அவர்களுடைய சகாக்கள் இந்த உத்தரவைப் படித்துச் சிரித்தார்கள். அந்தப் பேராசிரியருக்கும் அவரது உதவியாளருக்கும் ஒருவரையொருவர் காணவே பிடிக்காது என்பதை ஆசிரியர்களும் மாணவர்களும் மிக நன்றாக அறிவார்கள். அந்த இருவரும் ஆள்நடமாட்டமற்ற ஒரு தீவுக்கு அனுப்பப்படுவார்கள், அங்கே முழு ஆண்டுக்கு இருபத்தி நான்கு மணி நேரமும் சேர்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கும் என்ற செய்தியைப் படித்தவர்கள் மலைத்துப் போய், தோள்களைக் குலுக்கி முறுவலித்தார்கள். கடுங்குளிரில் இந்த இருவரது எரிச்சலும் தணிந்துவிடும் என்பதற்காக, வேண்டுமென்றே தயாரிக்கப்பட்ட திட்டம் இது என்று சிலர் கூறினர்.

''அங்கே நண்பர்களாகி விடுவார்கள். இணைபிரியாத் தோழர்களாகத் திரும்புகிறார்களா இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள்,'' என்றார்கள்.

ஆனால் மற்ற எல்லாரையும் விட மிகுந்த வியப்புற்றவர்கள் உத்தரவில் குறிக்கப்பட்டிருந்த இருவருமே. குளிர் காலத்திற்குத் தமக்குத் துணைவனாக வாய்த்திருந்த மனிதனின் பெயரைக் கண்ட மாத்திரத்தில் அடைந்த அதிர்ச்சியால் பேராசிரியர் இரவு முழுக்கத் தூங்கவே இல்லை என்று பல்கலைக்கழகத்தில் பேசிக் கொண்டார்கள். வோரனவின் தவிப்பும் எந்தவகையிலும் குறைந்து போய்விடவில்லை.

ஆயினும், உத்தரவு என்றால் உத்தரவுதான். பேராசிரியர் பூரவும், உதவிப் பேராசிரியர் வோரனவும் அடங்கிய பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழு, சில நாள்களுக்குப் பிறகு தொலைதூர பாரெண்ட்ஸ் கடலிலிருந்த ஒரு தீவிற்குப் புறப்பட்டுச் சென்றது. அங்கு இருவரும் சேர்ந்து நீண்ட ஆர்க்டிக் ஆண்டைக் கழிக்க வேண்டியிருந்தது.

அவர்களுடைய முதலாவது கடிதங்கள் ஒரு மாதத்திற்குப் பிறகு வந்து சேர்ந்தன. தங்களது முதல் மனப் பதிவுகளையும், பயண விவரங்களையும், எதிர்காலச் செயல் திட்டங்களையும் பற்றி எழுதியிருந்தார்கள்.

பேராசிரியர் தமது கடிதத்தில், ''இந்த ஆசாமி மட்டும் இங்கு இல்லாமல் இருந்தால் எல்லாம் நன்றாகவே இருக்கும். விலங்கியலாளரது அறிவியல் ஆராய்ச்சிக்குரிய விஷயமாவதற்கு இவன் எல்லாவகையிலும் தகுதியுள்ளவன். முன்போலவே இந்த இளைஞன் என்னை தொடர்ந்து உணர்ச்சிவயப்படுத்தி வருகிறான். இங்கிருப்பதனால் ஓயாமல் இவனை நான் பார்க்க வேண்டியதாயிருக்கிறது. இவன் மீதான எனது முன்னைய வெறுப்பு எவ்வளவு சரியானது என்பது திரும்பவும் உறுதிப்பட்டிருக்கிறது...'' என எழுதியிருந்தார்.

இது போலவே வோரனவும், ''இந்தக் கிழட்டுச் சிடுசிடுப்பாளரின் பொறுமையின்மை அளவு கடந்து போய் விட்டது'' என்றும், ''அல்லும் பகலும் இவரோடு இருப்பது பெருஞ்சித்திரவதையாக இருக்கிறது'' என்றும் குறை கூறி எழுதியிருந்தார்.

பல்கலைக்கழகத்தில் இக்கடிதங்களைப் படித்துச் சிரித்து, தனித்தனியே நல்ல மாதிரியான இந்த இருவரும், ஒருவரையொருவர் வெறுப்பதில் இவ்வளவு பிடிவாதமாக இருந்து வருவதை எண்ணி அவர்களால் வியக்காமலிருக்க முடியவில்லை.

சிறிதும் ஆதாரமற்ற இந்தச் சச்சரவு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது பற்றி அவர்கள் விவாதித்தனர். அந்த இருவரும் முடிவில் ஒத்துப் போய் விடுவார்கள் எனவும் ஒருவரையொருவர் நேசிக்கத் தொடங்கி விடுவார்கள் எனவும் நம்பிக்கைவாதிகள் கூறினர். அவநம்பிக்கைவாதிகளோ, முடிவு இதற்கு நேர்மாறாகத்தான் இருக்கும் என்று வாதித்தனர். இது பற்றி எத்தனையோ பந்தயங்

கள் கட்டப்பட்டன, இரண்டு பூசல்கள் கூட விளைந்தன.

எனினும், ஒரு மாதத்திற்குப் பிறகு, பேராசிரியர் பூரவ் உதவிப் பேராசிரியர் வோரனவால் கொலை செய்யப்பட்டு விட்டார் என்பதை அறிவிக்கும் சுருக்கமான தந்தி கல்கூயெவ் தீவிலிருந்து பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்தது.

வழக்கிற்குப் பொறுப்பான சிறப்புப் புலனாய்வாளர் அந்தத் தீவுக்கு நேரில் போக முடியுமா என்பதை முதலில் விவசாரித்தார். துரதிர்ஷ்டவசமாய், ஆண்டின் அந்நேரத்தில் வானிலை மற்றும் பிற நிலைமைகள் காரணமாக அங்கு செல்வது இயலாதிருந்தது என்று தெரிந்து கொண்டார்.

பின்னர் அந்தப் புலனாய்வாளர் அத்தீவின் அருகே சென்று கொண்டிருந்த பனி உடைக்கும் கப்பல் ஒன்றின் காப்டனுக்கு வானொலிச் செய்தி அனுப்பி, அவர் செய்ய வேண்டியவைகளை எடுத்துரைத்தார். கொலையுண்டவரின் பிணத்தை பனிக்கட்டி வைத்து மாஸ்கோ கொண்டு வந்து சேர்க்கும்படியும், சாட்சிகள் யாரேனும் இருந்தால் விசாரிக்கும்படியும், கொலை நடந்த இடத்தை முழுவதும் சோதனையிடும்படியும் அறிவுறுத்தப்பட்டார்.

தேவையான எல்லா முன்னெச்சரிக்கைகளுடனும் வோரனவை மாஸ்கோவுக்குக் கொண்டுவருமாறும் புலனாய்வாளர் மேலும் கோரியிருந்தார்.

அவரது உத்தரவுகளை நிறைவேற்றிய காப்டன், சில வாரங்களுக்குப் பின் புலனாய்வாளரின் அலுவலகத்திற்கு வந்தார். அவரோடு முப்பது வயதுக்கு மேலுள்ள ஒருவன் பறிகொடுத்தவன் போன்ற அரண்ட பார்வையுடன் வந்தான்.

அவன் தான் வோரனவ்.

கடுகடுத்தவாறு அவரை நோக்கி, ''தயவு செய்து உட்காருங்கள்,'' என்றார் புலனாய்வாளர்.

''நன்றி,'' அமைதியாக கூறினார் வோரனவ்.

விசாரணை தொடங்கிற்று. வோரனவின் வாழ்க்கைக் குறிப்பைப் புலனாய்வாளர் கவனமாகப் பார்வையிட்டார்.

பூரவைக் கொலை செய்த நாள்வரை அவருடைய முப்பத்திரண்டு ஆண்டுகளிலும் நேர்மையாகவும் நன்றாகவும் வோரனவ் வாழ்ந்திருக்கிறார். அவர் இளைஞர் எனி

னும் சந்தேகமின்றி திறமை வாய்ந்த விஞ்ஞானி. சொந்த மாகப் பல விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதியிருந்தார், வெற்றிப் பாதையில் உறுதியுடன் முன்னேறிக் கொண் டிருந்தார்.

''கடவுள் பெயரால், பேராசிரியரை ஏன் கொன்றீர் கள்?'' என்றார் சாதாரணமாக அமைதியும் நிதானமு மாகயிருக்கும் புலனாய்வாளர் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவராக, ''உங்களுக்குள்ளே என்ன ஆச்சு?''

ஆதரவற்றவாறு வோரனவ் தோள்களைக் குலுக் கினார்.

''பாருங்கள்,'' மன்னிப்புக் கேட்பது போன்ற தயக்கம் நிறைந்த குரலில், ''விஷயம் என்னவென்றால்... விஷயம் என்னவென்றால், நான் அவரைக் கொல்லவேயில்லை...'' என்றார்.

''ஆனால் அவர் கொல்லப்பட்டார் தானே?''

''ஆமாம்.''

''குற்றம் நடந்த இடத்தில் உங்கள் இருவரைத் தவிர வேறு யாராவது இருந்தார்களா?''

''இல்லை, நாங்கள் இருவர் மட்டுமே. அங்கே வேறு யாரும் இருந்திருக்கவும் முடியாது. அதைப் பற்றிச் சந் தேகமில்லை.''

''அப்படியானால் நீங்கள் ஏன் குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுக்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இதை ஒப்புக்கொள்ளுங்கள்: ஓரிடத்தில் இருந்த இருவரில் ஒருவர் கொல்லப்பட்டால், கொலை செய்தவர்...''

''...இரண்டாவது ஆளாகத்தான் இருக்க வேண்டும்,'' என்று வோரனவ் உடன் ஒப்புக்கொண்டு விட்டார். ''சந் தேகமில்லாமல் அப்படித்தான். ஆனால் நான் அவரைக் கொலை செய்யவில்லை. இதில் பயங்கரமான விஷயம் என்னவெனில், எனது புகலற்ற நிலைமையும், என்னைக் காப்பாற்ற இந்த உலகத்தில் வழியே இல்லை என்பதும் எனக்கு நன்கு தெரிந்துள்ளன. உண்மை, எதுவோ சொல் வார்களே, அதுபோல நான் கையுங்களவுமாய்ப் பிடிபட்டு விட்டேன். நான் உங்களுடைய நிலையில் இருந்தால் சந் தேகப்பட்டிருக்க மாட்டேன். எனக்குப் புரிகிறது. எந்த மோசமான விளைவுக்கும் நான் ஆயத்தமாகவே இருக்

கிறேன். ஆயினும் நான்..: நான் அவரைக் கொலை செய்ய வில்லை.''

வோரனவ் அழத் தொடங்கினார். அவர் பேசியது போலவே தேம்பியதும் விந்தையாயிருந்தது. இந்த உயர மான, நிதானமான, பண்பட்ட மனிதர் கோபமின்றி, புகலின்றி, பரிதாபமாக, குழந்தையைப் போலத் தேம்பி னார். பிறர் மனத்தை உருக்கும் எண்ணத்துடன் அவர் கண்ணீர் விடவில்லை. எனினும் கண்ணீரை மறைப்பதற் கும் அவர் முயலவில்லை. எப்படி எளிமையுடன், சூது வாது இல்லாது பேசினாரோ, அப்படியே அழுதார்.

''நிதானத்துக்கு வாருங்கள்,'' என்றார் புலனாய் வாளர். ''நீங்கள் அவரைக் கொன்றிருந்தால்—சாட்சியங் கள் எல்லாம் அப்படியே நிரூபிக்கின்றன—குற்றத்தை ஒப்புக்கொள்வதுதான் சிறந்தது. நீங்கள் கொல்லவில்லை யானால், உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். எனது வாதங்களை மறுக்க வேண்டும், உங்கள் செயல்களை விளக்க வேண்டும், உங்களுக்கு ஆதரவாக உள்ளவை அனைத்தையும் எடுத்துரைக்க வேண்டும்.''

இந்த அசாதாரணமான வழக்கில் வோரனவ் குற்ற வாளி என்பது முற்றிலும் தெளிவாகப் புலப்பட்டது. சாட்சியங்கள் எல்லாம் பூரவைக் கொன்றது வோரனவ் தான், வேறெவருமன்று என்பதையே நிரூபித்தன. ஆக வேதான் புலனாய்வாளர் மேற்கண்டவாறு கூறினார். ஆனால் இவ்வாறிருந்தும், புலனாய்வாளர் வியக்கும்படி வோரனவ், தனது குற்றமின்மையை நிரூபிக்க முற்படா தது மட்டுமன்றி, எவ்விதத் தூண்டுதலுமில்லாமலே குற் றத்தில் மேன்மேலும் தன்னைச் சிக்க வைக்கக் கூடிய தகவல்களைக் கொடுக்கலானார். தான் குற்றம் செய்ய வேயில்லை என விடாது சொல்லிக்கொண்டே தனது கட் சிக்குத் தீங்கு விளைக்கக் கூடிய புதிய சந்தர்ப்பங்களை யும், விஷயங்களையும், ஊகங்களையும் விரைந்து சொல் லிக்கொண்டே போனார்.

''நாங்கள் அத்தீவுக்கு வந்தபோது,'' அவர் கூறி னார், ''எங்களுடைய பகைமை முன்னிலும் மோசமானது. எங்களது உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள முயன்றோம். ஆனால் ஒவ்வொரு சொல்லிலும், நோக்கிலும், பாவனை யிலும் எங்களது வெறுப்பு நுழைந்தது. எப்பொழுதும்

உணர்ச்சிகளை அடக்கி வைத்திருப்பது மிகவும் சிரமமாயிருந்தது. துரதிர்ஷ்டவசமாக நிலைமையைச் சீர்படுத்த எதையும் செய்யவில்லை. பேராசிரியர்க்கு என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை என்பதை நான் உணர்ந்தேன். அதுபோலவே எனக்கும் அவரைக் காணப் பிடிக்கவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால், அவரைத் தாக்கவும், அடிக்கவும், கொல்லவுங்கூட எனக்குச் சில சமயங்களில் ஆத்திரம் வந்தது. இவ்வெண்ணங்கள் என்னை அலைக் கழிக்கத் தொடங்கின. அவை எனது நாட்குறிப்பிலும் இடம் பெற்றன. அதையும் கொண்டுவந்திருக்கிறேன். இதோ பாருங்கள்...''

இவ்வாறு கூறி பெரிய குறிப்பேட்டை வோரனவ் புலனாய்வாளரிடம் நீட்டினார். உண்மை, பிற குறிப்புகளோடு பேராசிரியர் பூரவைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணம் வோரனவின் மனத்தில் மிக அடிக்கடி வந்து கொண்டிருந்ததென்பது குறிக்கப்பட்டிருந்தது.

''எனக்கு உண்மையாகவே தெரியாது,'' அவர் தொடர்ந்தார். ''ஒருவேளை கடைசியில் என்னையே நான் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத நிலைமை வந்திருக்கக் கூடும். அந்த நிலையில், அவரை உண்மையாகவே நான் கொன்றிருக்கவும் கூடும். ஒருகால்! ஆனால் அவரை நான் கொல்லவில்லை. நடந்தது இதுதான்.

''தீவின் நடுவிலிருக்கும் ஏரியில் வாத்து வேட்டைக்குச் செல்ல அன்று காலை நாங்கள் முடிவு செய்தோம். நாய் இழுக்கும் ஸ்லெட்ஜில் அங்கே போனோம். அதை ஓட்டியவன், நேநெத்ஸ் இனத்தவனாகிய வாஸ்யா என்பவன். நடுவழியில் ஸ்லெட்ஜ் முறிந்து போயிற்று. செல்ல இன்னும் இரண்டு மைல் இருந்தது. எனவே கால்நடையாகப் போவதென்று முடிவு செய்தோம். ஸ்லெட்ஜைப் பழுது திருத்த வாஸ்யா அங்கேயே தங்கிவிட்டான்.

''நாங்கள் ஏரியை அடைந்து சுட ஆரம்பித்ததும் வாத்துகள் எதிர்க்கரையை நோக்கி நீந்திச் சென்றன. பேராசிரியர் நின்ற இடத்திலேயே இருப்பதென்றும், நான் மறுகரைக்குச் சென்று அங்கிருந்து சுடுவது என்றும் யோசனை கூறினேன். அவரும் ஒப்புக்கொண்டார். பின்னர் நான் அக்கரைக்குப் போனேன்.

''ஒரு மைலுக்கு அப்பால் நின்றுகொண்டு பார்க்கை

யில், மறுபுறத்தில் தனியாக நின்ற பேராசிரியரின் உருவம் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவர் அருகே யாரும் இல்லை, இருந்திருக்கவும் முடியாது. இதை நான் உறுதி யாகச் சொல்கிறேன். பிறகு கிட்டத்தட்ட அவர் நின்ற இடத்திலிருந்து ஒரு வெடிச்சத்தம் கேட்டது. நான் திடுக் கிட்டு நோக்கினேன். பேராசிரியர் விந்தையான முறையில் தள்ளாடி, பின்பு கீழே விழுந்ததைக் கண்டேன். என்ன நடந்தது என்பது தெரியாதவனாய், அவரிடம் திரும்ப ஓடினேன்.

''நான் போய்ச் சேர்ந்தபொழுது அவர் இன்னமும் உயிருடன் இருந்தார். ஆனால் உணர்விழந்து விட்டார். ஒரு வேட்டைக் கத்தி அவரது இடக் கண்ணுக்குள் பிடி வரை பாய்ந்திருந்தது. அந்தப் பிடி, சீழ் வடியும் பெரிய கட்டி போலக் கண் குழிக்கு வெளியே துருத்திக் கொண் டிருந்தது. அவரது வேட்டைத் துப்பாக்கி அருகே கிடந் தது...

''நான் நிலைகுலைந்து போனேன். அந்த அப்பாவி மனிதருக்காக என்ன செய்வதென்று தெரியவில்லை; அவரது கண்ணிலிருந்து கத்தியை உருவ முயன்றேன், ஆனால் முடியவில்லை, அது அபாரமான வலிவுடன் உள் ளே செலுத்தப்பட்டிருந்தது. பிறகு ஸ்லெட்ஜை விட்டு வந்த இடத்திற்கு திரும்ப விரைந்தேன். அப்போதுதான் வாஸ்யா பழுது திருத்தி முடித்திருந்தான். பேராசிரிய ருக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி நான் அவனிடம் சொன் னதுமே, அவன் என்னை ஸ்லெட்ஜில் ஏற்றிக்கொண்டு எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக நாய்களை ஓட்டினான். அந்த இடத்தை நாங்கள் அடைந்த போது பேராசிரியரின் உயிர் போய்விட்டது. அவரது சடலத்தை முகாமிற்கு எடுத்துச்சென்றோம். அங்கே மிகுந்த சிரமத் துடன் கண்ணிலிருந்து கத்தியைப் பிடுங்கி எடுத்தோம். அவ்வளவு தான்... நான் புகை பிடிக்கலாமா?''

''தாராளமாக.''

வோரனவ் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து, புகையை ஆவலோடு இழுத்தார். சிறிது நேர மௌனத்திற்குப் பின் மீண்டும் பேசினார்:

''ஆகவே, நான் குற்றம் செய்யவில்லை என வாதிப் பது கடினம் என்பதைக் காண்கிறீர்கள், அல்லவா? இவ்

வழக்கில் ஒவ்வொரு விஷயமும் நான் குற்றவாளி என்று தான் காட்டுகிறது என்பதை அறியக் கூடிய அளவுக்கு நான் போதுமான புத்திசாலி. குற்றம் செய்ததாக ஒப்புக் கொள்வதே ஒருகால் எனக்கு நன்மையாகலாம். இம்மாதிரிச் செய்வதைத் தானே, குற்றத்தை ஒப்புக்கொண்டு அதன் பொருட்டு மனமார வருந்துதல் என்றோ வேறு எவ்விதமாகவோ நீங்கள் குறிப்பிடுவது வழக்கம்!.. நான் வழக்குரைஞன் அன்று, ஆனால் இச்சொற்களை முன்னர் கேட்டிருக்கிறேன். எல்லாம் சரிதான். ஆயினும் நான் இவ்வாறு செய்ய முடியாது. நான் அவரைக் கொல்லவில்லை, கொல்லவேயில்லை... எனது குற்றமின்மையை நிரூபிக்க நான் வகையற்றவனாக இருக்கிறேன். உங்களிடம் எனக்கு ஒரே ஒரு வேண்டுகோள். இக்கடிதங்கள் நான் மணஞ்செய்து கொள்ளவிருக்கும் பெண்ணிடமிருந்து வந்தவை. இது நான் அவளுக்கு எழுதிய கடிதம். நீங்கள் தயவு செய்து இவற்றை அவளுக்கு அனுப்பிவைப்பீர்களா?''

''முடியாது, நான் அனுப்ப மாட்டேன்,'' எனப் பதிலளித்தார் புலனாய்வாளர்.''நீங்களே அவளிடம் கொண்டு போய்க் கொடுங்கள். நான் உங்களைக் கைது செய்யப் போவதில்லை, வோரனவ்,'' என்றார்.

சில வழக்குகளில், எதிர்பாராத தீர்மானம், திடீர்த் துலக்கம், முடிவான நிர்ணயம் ஆகியவை முறையான துப்புகள், சாட்சியங்களது கோவையின் விளைவாகவோ, ஏற்கெனவே தெளிவுபடுத்தப்பட்டு நிலைநாட்டப்பட்ட விஷயங்களின் தர்க்கரீதியான தொடர்ச்சியாகவோ, எல்லா நிகழ்ச்சிகளின் கூட்டு மொத்தமாகவோ ஏற்படுவதில்லை. ஒரே இருட்டும், கடுஞ்சிக்கலான விஷயங்களும் விவரங்களும் மனித உறவுகளும், எல்லாவிதமான சந்தர்ப்பச் சாட்சியங்கள், தற்செயல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் பிரம்மாண்டமான குவியல்களுமாகச் சில சமயங்களில் எதிர்ப்பட்டு, மிக அநுபவம் வாய்ந்த புலனாய்வாளன் கூட என்ன செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடும்படி செய்துவிடும். புலனாய்வாளனது இயற்கை உணர்வு, திறமை, விடாமுயற்சி, புரட்சிகரமான மனச்சான்று,

இரக்கம், சோவியத் நீதித் துறையில் வேலை செய்யும் அதிகாரிக்கேற்ற மனிதாபிமானம் ஆகியவையே இத்த கைய நேரங்களில் வழிகாட்டி நடத்திச் சென்று, முடிவில் அவன் உண்மையைக் கண்டு கொள்வதற்குத் துணை செய்கின்றன.

வோரனவை விடுதலை செய்ததன் வாயிலாகப் புல னாய்வாளர் தம்மை இக்கட்டான நிலைமைக்கு ஆளாக் கிக் கொண்டார். ஒரு புறம், வோரனவின் குற்றம் மறுக்க முடியாதது போலக் காணப்பட்டது. அது வழக்கின் சாட் சியத்திலிருந்து திருக்கரீதியாக வெளிப்படுவது போலிருந் தது. சாத்தியமான நிகழ்ச்சி விவரம் அது ஒன்றே என்று தோன்றியது. தவிர இதுவே ஆதாரபூர்வமான நிகழ்ச்சி விவரமாகவுமிருந்தது. வழக்கைப் பற்றி அறிந்தவர்களும், வழக்கில் சட்டரீதியான அக்கறை கொண்டவர்களுமான சமுதாய வட்டாரத்தினர் இந்த விவரத்தையே சரி என ஒப்புக் கொண்டிருந்தனர்.

மற்றொரு புறம், வோரனவ் விடுதலை செய்யப்பட் டது, புலனாய்வாளரின் உள்ளார்ந்த நம்பிக்கை ஒன்றின் ஆதாரத்திலேயே. அவர் வோரனவை நம்பினார். வோர னவின் கூற்றுக்கு எதிரான சாட்சியங்களும், அவர் குற்ற வாளி என உறுதிப்படுத்தும் சந்தர்ப்பங்களும் நிகழ்ச்சி களும் இருந்தபோதிலும் அவர் வோரனவை நம்பினார். அவரது நம்பிக்கைக்கு அடிப்படை, உள்ளத்தின் உள்ளே உருவாகும் மங்கலான, தெளிவற்ற துலக்கமற்ற ஆதாரங் கள் மட்டுமே. இந்த ஆதாரங்கள் வெளிப் பார்வைக்குத் தருக்கப் பொருத்தமாகத் தென்பட மாட்டா. இவற்றைச் சொற்களில் வெளியிடுவதும் கடினம். இவை ஒருபோதும் குறிப்பிடப்படுவதுமில்லை. புலனாய்வாளனின் திறமை, உளவியல் வகையிலும், தொழில்ரீதியாகவும் உள்ள அவ னது உள்நோக்கு, அவனது இயற்கை உணர்வின் தீவிரம் இவற்றின் பயனாகவே இந்த ஆதாரங்கள் உருவாகின்றன. பல ஆண்டுகள் சிந்தனை மிகுதியும் சலிப்பின்மையும் வாய்ந்த உழைப்பு, ஆழ்ந்து நோக்குவதில் பயிற்சி, துப் பறிவதில் அநுபவம், நிகழ்ச்சிகளையும் மனித இயல்பு களையும் பகுத்தாராயும் இடைவிடாப் பழக்கம் ஆகியவற் றின் விளைவே இந்த ஆதாரங்கள்.

வோரனவ் பேராசிரியரைக் கொலை செய்யவில்லை

என்று புலனாய்வாளர் உறுதியாக நம்பினார். ஆனால் இந்த நம்பிக்கைக்கு ஆதாரம் காட்டி, அதை மெய்ப் பிக்க வேண்டியிருந்தது. அதைவிட முக்கியமானது—பேரா சிரியர் பூரவின் மரணத்தின் புதிரை விடுவிக்க வேண்டியது.

ஏனெனில் வோரனவ் முற்றிலும் குற்றமற்றவன் என நிர்ணயிப்பதற்குப் புலனாய்வாளரின் நம்பிக்கை மட்டி லும், அது எவ்வளவுதான் பலமாக இருந்தாலும் கூடப் போதாது.

பேராசிரியர் பூரவின் பிரேதப் பரிசோதனையை நடத் தியவர் ஸெமியோனவ்ஸ்கி. வழக்கமான திறமையுடனும் நுட்பத்துடனும் அதை முடித்த பிறகு, தமது முடிவு களைத் தெரிவித்தார். அதில் இரண்டு முக்கிய விஷயங் கள் இருந்தன:

1. பேராசிரியர் பூரவின் மரணம், இடக் கண்ணுக்குள் வேட்டைக் கத்தி பாய்ந்த அடியால் உண்டான பெரிய காயத்தின் விளைவாகச் சம்பவித்தது.

2. மனித சக்திக்கு மேற்பட்ட வலுவோடு அந்த அடி கொடுக்கப்பட்டிருந்தது.

''‘மனித சக்திக்கு மேற்பட்ட வலு’ என்பதன் பொருள் என்ன?'' என்று புலனாய்வாளர் கேட்டார். ''இதை எவ்வாறு புரிந்துகொள்வது?''

''அதன் பொருளாவது,'' என நிபுணர் விடையளித் தார், ''எத்தகைய வலுவுடன் அந்த அடி கொடுக்கப்பட் டதோ, அது சாதாரண மனிதனின் சராசரி பலத்தையும் விடக் கூடுதலானது. அதனால் தான் ‘மனித சக்திக்கு மேற்பட்ட’ என்ற சொற்களை உபயோகித்துள்ளேன். எனினும் அச்சக்தி துல்லியமாக எத்தகையது என்பதை என்னால் கூற இயலாது...''

புலனாய்வாளர் தனது வேலையைத் தொடர்ந்து நடத் தினார். பேராசிரியரின் துப்பாக்கியைப் பரிசோதித்தார். அது ஒரு ‘வின்செஸ்டர்’ துப்பாக்கி. வழக்கிற்கு உப யோகமாக எதுவும் அதிலிருந்து கிடைக்கவில்லை. எந்தக் கத்தியினால் மரணம் விளைந்ததோ அதுவும் மிகச் சாதா ரணமானது தான்; மரப் பிடியுடைய மலிவான வேட்டைக் கத்தி.

ஆனால் கத்தியை மிக நுணுக்கமாகச் சோதித்து

அதைச் செய்த தொழிலாளியின் கவனக் குறைவால் கைப்பிடியில் ஏற்பட்டிருந்த ஒரு சிறிய குறையைக் கண்டு பிடித்தார். கத்தி அலகுடன் மரப் பிடியை இணைத்திருந்த உலோகக் கம்பியின் சிறு கூர் நுனி, சட்டெனப் பார்வைக்குத் தெரியவில்லை என்றாலும், பிடிக்கு வெளியே துருத்திக் கொண்டிருந்தது.

புலனாய்வாளர் தனது விரலால் அச்சிறிய உலோக முனையை வருடிப் பார்த்ததும், திடீரென்று துள்ளிக் குதித்தார். காரிருளில் தீப்பொறி போல அவரது மனத்தில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவசரமாக அழைக்கப் பட்ட நிபுணர்கள்—துப்பாக்கி செய்வோர், வேட்டைக் காரர்கள்—புலனாய்வாளரின் அலுவலகத்தில் கூடினர்.

''சொல்லுங்கள் எனக்கு,'' என வேட்டைக்காரர்களிடம் பேச்சைத் தொடங்கினார் புலனாய்வாளர். ''மரப் பிடி வைத்த வேட்டைக் கத்தியை இடைவாரில் செருகிக் கொண்டிருக்கும் ஒரு வேட்டைக்காரனின் தோட்டா எப்படியோ சிக்கிக்கொண்டது என வைத்துக்கொள்வோம். தனது தோட்டா முன்னே போகாமல் ரவைக் குழாய் நமத்துப் போய்ப் பருத்தோ, நெளிசல் கண்டோ இருந்தால், அல்லது மட்டரகமானதாக இருந்தால் தோட்டா செம்மிக்கொள்ளும் அல்லவா? அப்போது வேட்டைக் காரன் என்ன செய்திருப்பான்?''

நிபுணர்கள் ஒருவரையொருவர் வியப்புடன் பார்த்த வாறு தங்களுக்குள் கிசுகிசுக்கத் தொடங்கினார்கள்.

கடைசியில் அவர்கள் ஒருமித்த முடிவுக்கு வரவும் அவர்களில் ஒருவர், ''இவ்வாறு நேர்ந்தால், அந்த வேட்டைக்காரன் தனது வேட்டைக் கத்தியை எடுத்து தோட்டாவின் குழல் பகுதியை கவனமாக மெல்லத் தட்டி, தோட்டாவை உள்ளே செலுத்தப் பார்த்திருப்பான்,'' என்றார்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன்,'' எனக் கூறி முறுவலித்தார் புலனாய்வாளர். ''நல்லது, இப்போது இந்தக் கத்தியைப் பாருங்கள். தயவுசெய்து, மரக் கட்டைக்கு வெளியே துருத்திக் கொண்டிருக்கும் சிறிய உலோக முனையையும் கவனியுங்கள். இப்போது, இந்தக்

கத்தியால் தோட்டாவை உள்ளே செலுத்த ஒரு வேட்டைக்காரன் முயன்றால் என்ன நேருமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

கத்தியையும், உறுதியான உலோக முனையையும் நன்கு உற்றுப்பார்த்த நிபுணர்கள் ஒருமித்த முடிவுக்கு வந்தனர்.

''இந்தக் கம்பி கூர்மையாயும் வலுவாயும் இருப்பதால், சுடுமுள்ளின் வேலையைச் செய்து விடும். தோட்டாவின் குழல் பகுதியை இந்தக் கத்திப் பிடியால் தட்டினால் அது துப்பாக்கியை வெடிக்க வைத்துவிடும்,'' என்றனர்.

பின்னர் புலனாய்வாளர் துப்பாக்கி செய்பவர்கள் பக்கம் திரும்பி, ''தோட்டா ரவைக் குழாய்க்குள் முழுதும் செல்லவில்லை என்றும், வேட்டைக்காரனின் கவனக் குறைவால் துப்பாக்கி வெடித்துவிட்டதென்றும் வைத்துக் கொள்வோம். அப்போது வெடி அதிர்ச்சியின் முழு வேகமும் எப்பக்கத்தில் தாக்கும்? அந்த வேகத்தின் வன்மை எவ்வளவு இருக்கும்? சொல்லுங்கள்,'' என்றார்.

''வெடி அதிர்ச்சியின் வேகம் பின்புறமாகத் தாக்கி, கத்தியைப் பிடித்திருக்கும் கையை உடனடியாக முகத்தின் மேல் சாடி விடும். வெடியின் வன்மை மிக அதிகமாக, ஐந்து முதல் ஏழு வரை வளிமண்டல அழுத்தத்திற்குச்* சமமாக இருக்கும்...''

புலனாய்வாளர் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். அவர் மனத்தில் உதித்த எண்ணம் சரியாகிவிட்டது.

அந்நேரத்தில் ஸெமியோனவ்ஸ்கி அலுவலகத்துள் நுழைய, புலனாய்வாளர் கத்தியை அவரிடமும் காட்டி நிபுணர்களின் கருத்தைத் திரும்பச் சொன்னார்.

''இதெல்லாம் மிகவும் சாமர்த்தியமாகவும் நம்பக் கூடியதாகவும் இருக்கிறது, உண்மைதான்,'' என்று மெதுவாகச் சொல்லத் தொடங்கினார் ஸெமியோனவ்ஸ்கி, ''ஒரு சிறிய விவரம் மட்டும் விலக்காக இல்லாதிருப்பின், அதை முற்றிலும் உண்மை என்றே நம்பலாம். பேராசிரியர் தனது இடக் கண்ணில் பட்ட அடியால் இறந்து போனார். நீங்கள் சொல்வது போல நடந்திருந்தால், தனது வலக்

---

* ஒரு வளிமண்டல அழுத்தம்—ஒரு சதுர அங்குலத்திற்குப் பதினைந்து பவுண்டு கனம் கொண்டது. (மொ-ர்.)

கையால் அவர் தனது வலக் கண்ணைத்தான் காயப்படுத்திக் கொண்டிருக்கலாமே தவிர இடக் கண்ணை காயப்படுத்திக் கொண்டிருக்கவே முடியாது.''

அப்போதே அதே இடத்தில் பேராசிரியரின் கை நீளம், உயரம், வெவ்வேறு அங்கங்களுக்கிடையே உள்ள அளவுப் பொருத்தம் ஆகியவற்றைக் கணக்கிட்டு, வெடி அதிர்ச்சியால் அத்தகைய தாக்குதல் நேர்ந்திருக்குமாயின் பேராசிரியரின் வலக் கை, வலக் கண்ணைத்தான் காயப்படுத்தி இருக்குமே தவிர, இடக் கண்ணை ஒருபோதும் காயப்படுத்தி இருக்க முடியாது எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

புலனாய்வாளருக்கு மிகத் தெளிவாகவும், சரியாகவும் காணப்பட்ட கூற்று தவிடுபொடியாகத் தொடங்கியது.

ஆனால் அவரோ விடாப்பிடியான மனிதர். தமக்குப் புலப்பட்ட எண்ணம் சரியே என உறுதியுடன் நம்பிய அவர் தமது ஆய்வைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

''பேராசிரியர் உடல் நலம் வாய்ந்தவர் தானே?'' என இறந்தவரின் உறவினர்களைக் கேட்டார்.

''ஆமாம், உடலாலும் உள்ளத்தாலும் நலமாகவே இருந்தார்,'' என அவர்கள் பதிலளித்தனர்.

''அவரிடம் தனிப்பட்ட விசேடம் ஏதேனும் இருந்ததா? அவர் உடலில் ஏதாவது குறைபாடுகள் உண்டா?''

''கிடையாது, தனிப்பட்ட விசேடமோ, உடலில் குறைபாடோ எதுவுமே அவரிடம் இல்லை.''

''அவர் அறுவைமருத்துவரின் கத்தியை எப்போதேனும் உபயோகித்தது உண்டா?'' எனத் தொடர்ந்து வினவினார்.

''ஆமாம், அவர் அடிக்கடி வீட்டில் அத்தகைய கத்தியால் வேலை செய்வதுண்டு.''

''எந்தக் கையால் அவர் கத்தியைப் பிடித்துக்கொள்வார்?'' என்று புலனாய்வாளர், தனது கடைசி நம்பிக்கையும் வீணாகிவிடக் கூடாதே என்ற பயத்தால் நடுங்கிக் கொண்டு கேட்டார்.

''ஏன், பேராசிரியர் இடக் கைப் பழக்கமுள்ளவர்,'' என்று அமைதியான பதில் கிடைத்தது.

மகிழ்ச்சி மிகுதியால் கூச்சலிடாமல் தன்னைக் கட்டுப்

படுத்திக் கொள்வது புலனாய்வாளருக்குப் பெரும்பாடாகி விட்டது. இறுதியாக, ஒன்று மட்டும் உண்மை, தீர்வு, தெளிவு, விளக்கம் எல்லாம் ஒருங்கே கிடைத்துவிட்டன. அவர் இடக் கைப் பழக்கமுள்ளவரா! புலனாய்வாளர் ஸெமியோனவ்ஸ்கியைப் பார்க்க விரைந்தோடினார். மீண்டும் ஒரு முறை ஸெமியோனவ்ஸ்கி உட்கார்ந்து கணக் கிட்டுப் பார்த்ததில், பேராசிரியர் இடக் கையால் தோட் டாவை உட்செலுத்த முயன்றிருந்து அது வெடித்திருந் தால், அவர் தனது இடக் கண்ணைத் தவிர வேறெங்கும் காயப்படுத்திக் கொண்டிருக்க முடியாது என்பது திட்ட வட்டமாகத் தெரியவந்தது.

வெடி அதிர்ச்சியின் வேகத்தால் பேராசிரியரின் இடக் கை அவர் முகத்தின் மீதும், இடக் கண்ணின் மீதும் எப் படிச் சாடப்பட்டது என்பதை விளக்கிக்காட்டும் நிழற் படச் சுருள் ஒன்றை ஸெமியோனவ்ஸ்கியும் புலனாய்வாள ரும் பிறகு தயாரித்தனர்.

கடைசியில் எல்லாம் தெளிவாகி விட்டது போலத் தெரிந்தது. உண்மை துலக்கப்பட்டு விட்டது, பேராசிரி யர் பூரவின் மரணம் விளக்கப்பட்டு விட்டது, வோரன வின் குற்றமின்மை நிரூபிக்கப்பட்டு விட்டது. இத்தகு நிலையில் 'இவ்வழக்கில் குற்றத்தை உறுதிப்படுத்துவதற் குரிய சாட்சியம் இல்லை' என்று காரணத்தைக் காட்டி வழக்கைத் தள்ளுபடி செய்துவிடலாம். வழக்கு விவரங்க களை ஆவணக் காப்பகத்திற்குள் வைத்துவிடலாம். புல னாய்வாளர் அடுத்து மேற்கொள்ள வேண்டிய வழக்கு களை விசாரிக்கத் தொடங்கலாம். சிக்கலான மாய வழி போன்ற விஷயங்களிலும் மனித உறவுகளிலும் தட்டித் தடுமாறுவதும், அவ்வப்போது இடறி விழுந்த போதிலும் மேன்மேலும் செல்வதும், தவறுகள் செய்வதுடன் கூடப் புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பதுமாக அவர் மீண் டும் கும்மிருட்டில் சுற்றியலைந்திருக்கலாம்.

ஆமாம், இவ்வாறெல்லாம் செய்திருக்கலாம் தான்... ஆனால் அந்தச் சனியன் பிடித்த கத்தி எங்கிருந்து வந் தது?

வழக்கின் விவரத்தை அறிந்த பேராசிரியரின் சகோ தரர் குறிப்பிட்டார்:

''நீங்கள் சொல்வது சரி என்றும் எனது சகோதரர்

தனது சொந்தக் கவனக்குறைவால் மரணமடைந்தார் என்றும் நான் ஒப்புக்கொள்ளத் தயார். ஆனால் அந்தக் கத்தி எங்கிருந்து வந்தது? அவரிடம் அம்மாதிரிக் கத்தியே இருந்ததில்லை என நான் உறுதியாகச் சொல்வேன். ஆய்வுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருள்களில் அம்மாதிரிக் கத்தியே கிடையாது. இது எனக்கு நன்கு தெரியும். அது யாருடைய கத்தி? யாருடையது? இக்கேள்விக்கு நீங்கள் விடை கூறும் வரை, வழக்கு முடிந்து விட்டதாக நான் கருத முடியாது.''

ஒருவகையில், பேராசிரியர் பூரவின் சகோதரர் சொல்லியது சரியே. அவர் கேட்ட கேள்விக்குப் பதில் தர வேண்டியது அவசியமாயிருந்தது.

பேராசிரியர் அந்தக் கத்தியை எங்கிருந்து பெற்றார் என்பது வோரனவுக்குத் தெரியவில்லை.

''அது பேராசிரியர் பூரவின் கத்தியென்றுதான் நான் நினைக்கிறேன். அவர் அக்கத்தியை அடிக்கடி உபயோகித்து வந்ததை நான் பார்த்திருக்கிறேன்,'' என்றார்.

அப்போது புலனாய்வாளர் ஆய்வுக்காக உடனெடுத்துச் செல்லப்பட்ட பொருள்களின் பட்டியலைப் படித்துப் பார்த்தார். அறிக்கைகள், ரசீதுகள், பட்டியல்கள், பில்கள் ஆகியனவற்றின் பெருங்குவியலில் குண்டுகள், துப்பாக்கிகள், கூடாரங்கள், டப்பியிடப்பட்ட பொருள்கள், பைனாக்குலர்கள், சமையல் பாத்திரங்கள், தெர்மாஸ் புட்டிகள், கோடரிகள், போர்க்குகள், சிறு குறடுகள், சம்மட்டிகள், உலோகக் குவளைகள், மண்ணெண்ணெய் அடுப்புகள், வெப்பமானிகள், பீங்கான் பாத்திரங்கள், இன்னும் எத்தனையோ வகையான பொருள்களின் பெயர்கள் காணப்பட்டனவே தவிர, 'வேட்டைக் கத்தி— 4 ரூபிள்' என்ற குறிப்பு புலனாய்வாளர் துருவித்துருவித் தேடியும் கிடைக்கவில்லை.

அந்த ஆய்வுக்குழு அர்கேஞ்சல்ஸ்க் நகரத்தில் சில நாள் தங்கிவிட்டு, பிறகுதான் பாரெண்ட்ஸ் கடலுக்குப் புறப்பட்டுச் சென்றது என்ற விஷயம் புலனாய்வாளரின் நினைவுக்கு வந்தது. அரசு வழக்குரைஞரிடம் சென்று ஒருநாள் தம்மை அர்கேஞ்சல்ஸ்கிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

''எதற்காக?'' என்றார் அவர்.

''கத்திக்காக,'' என்று புன்னகையுடன் பதிலளித்தார் புலனாய்வாளர்.

மறுநாள் காலையில் அவர் அர்கேஞ்சல்ஸ்கை அடைந்ததும் நேராகக் கடைகளுக்குத்தான் சென்றார். விலையுயர்ந்தவையும், மலிவானவையுமான பல இடங்களில் தயாரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான வேட்டைக் கத்திகள் அவருக்குக் காட்டப்பட்டன. ஆனால் எம்மாதிரிக் கத்தியை அவர் தேடி வந்தாரோ அதைத்தான் காணவில்லை. விற்பனையாளர்கள் சந்தடி செய்யும் இந்த வாடிக்கையாளரைப் பார்த்து மலைத்துப் போய்விட்டனர், கடை மேலாளர்கள் தோள்களைக் குலுக்கினர், காசாளப் பெண்கள் இகழ்ச்சி தோன்ற இளித்தனர். ஆனால் ஒரு கடையிலாவது புலனாய்வாளர் தேடி வந்தது போன்ற கத்தியைக் காணோம்.

எங்கெல்லாமோ சுற்றியலைந்து விட்டு புலனாய்வாளர் மாலை நேரத்தில் த்வினா கரையிலிருந்த சிறு கடை ஒன்றுக்குள் நுழைந்தார். அது வேட்டை, விளையாட்டுப் பொருள்கள் விற்பனை செய்யும் கடை. அங்கு வந்ததுமே முதலில் அவர் கண்ணில் பட்டது மரப் பிடியுடைய வேட்டைக் கத்திதான். பேராசிரியரின் மரணத்துக்குக் காரணமாயிருந்த கத்தியின் அச்சு.

''இந்தக் கத்தி விலை என்ன?'' என்று புலனாய்வாளர் பதற்றத்துடன் கேட்டார்.

''மூன்று ரூபிள் எழுபத்தைந்து கோபெக்,'' என விற்பனையாளன் பதிலளித்தான்.

புலனாய்வாளர் கடை மேலாளரை அழைத்து விசாரித்தார். ஒரே கூட்டுறவு நிலையந்தான் அத்தகைய கத்திகளைத் தயாரிக்கிறது என்றும், தயாராகும் கத்திகளை எல்லாம் அந்தக் கடை ஒன்றுக்குத்தான் அனுப்பி வருகிறது என்றும் தெரிந்து கொண்டார். ஆய்வுக்குழு அர்கேஞ்சல்ஸ்கில் தங்கியிருந்த காலத்திலும் இக்கத்திகள் விற்பனையிலிருந்தன என்றும் தெரிய வந்தது.

''ஏராளமான கத்திகளை நாங்கள் விற்பனை செய்துள்ளோம். ஆனால் வாங்கியவர்கள் அத்தனை பேரையும் நாங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டுமா?'' என்றார் மேலாளர்.

புலனாய்வாளர் மாஸ்கோ திரும்பினார். பேராசிரியர் பூரவின் குறிப்புப் புத்தகத்தில் நூற்றுக்கணக்கான குறிப்பு களுக்கிடையே 'அர்கேஞ்சல்ஸ்க், வேட்டைக் கத்தி— ரூ 3, கோ 75' என்ற குறிப்பைக் கண்டுபிடித்தார்.

''தோழர் வோரனவ், அமருங்கள். இதுவே கடைசி முறையாக நான் உங்களை அழைப்பது. வழக்கை முடிப் பதற்குரிய உத்தரவைத் தயவுசெய்து படியுங்கள். ஒரு நகலைப் பெற்றதற்குக் கையெழுத்திடுங்கள். இதோ, இங்கே...'' என்று உணர்ச்சியின்றிக் கூறினார் புலனாய் வாளர்.

வோரனவ் பேனாவை எடுத்தார். திடீரென்று எல் லாம்—பேனா, மைக்கூடு, மேசையின் மறுபுறம் அமர்ந் துள்ள புலனாய்வாளரின் முகம் ஆகியன எல்லாமே— சுழல்வது போல அவருக்குத் தோன்றியது...

புலனாய்வாளரின் சொற்கள் முடிவில் அவர் உணர் வில் பதிந்தன. இந்தப் பயங்கர அநுபவம் இப்போது பழங்கதையாகி விட்டது; தான் நிரபராதி என்பது மெய்ப் பிக்கப்பட்டு, உறுதியாகி விட்டது; உண்மை கண்டுபிடிக் கப்பட்டு விட்டது எனப் புரிந்துகொண்டார். அத்துடன் எதிரே அமர்ந்திருக்கும் வறண்ட மனிதரே தனது உயிரை யும் தன்மானத்தையும் காப்பாற்றியவர் என்பதையும் புரிந்து கொண்டார்.

1938

வாசக நண்பர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் ராதுகா பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது. கடிதங்களைத் தயை செய்து Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41, பி.சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098

ஷோ-ரூம்
136, மவுண்ட் ரோடு, சென்னை—600002

கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001
1, ஏ. திருவனந்தபுரம் சாலை,
வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி—627003

விற்பனை நிலையம்
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்

''...பல்வேறு பட்ட பாத்திரங்களோடும், சிக்கல்களோடும், துன்ப நிகழ்ச்சிகளோடும் புலனாய்வாளன் இடையறாது தொடர்புகொள்ள நேர்கிறது. மறு நாளே தனது மேசைமீது எத்தகைய வழக்கு வந்து விழும் என்பதை எந்தப் புலனாய்வாளனாலும் முன்கூட்டிக் கூற முடியாது. கொள்ளையோ, பெறாமையால் விளைந்த கொலையோ, பணக் கையாடலோ, லஞ்சமோ, எதைப் பற்றிய வழக்காயினும் சரியே, குற்றம் இழைத்த மனிதர்களே அதில் எல்லாவற்றிலும் முக்கியம் வாய்ந்தவர்கள், அவரவர் சுபாவம் தனி, உணர்ச்சிகள் தனி, விதி தனி. புலனாய்வாளன் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தின் ஆழத்திலும் புகுந்து பார்க்க வேண்டும். ஆகவேதான் ஓர் எழுத்தாளனுக்கும் ஒரு புலனாய்வாளனுக்கும் இடையே பொதுவானவை அதிகம் இருக்கின்றன...''

லெவ் ஷெய்னின்